

கல்கி
KALKI 30-3-58
30 நயா பைசா



உங்களுக்கு
முற்றிலும் புது
மாதிரியான
இரு பவுடர்கள்
"GOKUL"
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
TOILET POWDER
ஸாண்டால்
சந்தனத்துடன் கூடிய
டால்கம் பவுடர்...
ஸாண்டல் வுட்
டாய்லட் பவுடர்
சுத்தமான தனி சந்தனத்தை
மென்மையாக்கப்பட்டது...
டி.எஸ்.ஆர். & கோ
கும்பகோணம்
A. K. GOPAL & CO

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


ஓய்வு நேரத்தில் கைத்தறி ஆடை அணிந்து
வசதியாக இளைப்பாறுங்கள்...
வேலை நேரத்தில்—சலவைக்கும் நீடித்த உழைப்புக்
கும் ஏற்ற கைநெசவுப் பட்டுகளை அணியுங்கள்...
இந்தியக் கைத்தறித் துணிகள்—பற்பல
வகைகளில். பாணிகளில், வண்ணங்களில் வருகின்றன!
கைத்தறித்
துணிகள்
அகில இந்தியா கைத்தறி போர்டு
ஷாஹிபாக் ஹவுஸ், விட்டட் ரோடு, பம்பாய்.
ALL INDIA HANDLOOM BOARD
DA 571346 TM



மலர் 17 | இதழ் 35

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — *பாரதியார்*

ஹேவிளம்பி | பங்குனி மீ 17உ

வங்கத்தில் எதிரொலி!

வங்கப் பிரதமர் ஸ்ரீ பி. ஸி. ராய் ஆட்சிமொழியைப் பற்றி வங்க சட்ட சபையில் துணிச்சலும் தீர்க்கதரிசனமும் வாய்ந்ததோர் பிரசங்கம் புரிந்திருக்கிறார்.

"இந்தி ஆட்சிமொழியாக ஏற்க வேண்டுமென்றால், அது அந்தத் தகுதி பெறு மளவுக்கு வளர்க்கப்பட வேண்டும். அதுவரையில் எவ்வித காலவரம்புமின்றி ஆங்கிலமே ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்று ஒரு சட்டம் இயற்ற வேண்டும்" என்று பேசியிருக்கிறார்.

இதை ஆதரித்து ஸ்ரீ பி. ஸி. கோஷ் இன்னும் சற்று வேகத்தோடு பேசியிருக் கிறார். ஸ்ரீ பி. ஸி. கோஷ் யார் என்பதைக் கல்கி நேயர்கள் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். பாரதம் சுதந்திரம் பெற்றவுடன், வங்கத்தில் நிலவிய நிலைமை நேயர் களுக்கு நினைவிருக்கலாம். அந்த நெருக்கடியான நிலைமையில் ராஜ்யத்தின் முதன் மந்திரிப் பதவியை ஏற்றுத் திறம்பட நிர்வகித்தவர்.

ஸ்ரீ பி. ஸி. கோஷ் பழம் பெரு தேசபக்தர். காந்திமகானிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். காந்தி மகானின் நிர்மாணத் திட்டங்களில் பற்றுக் கொண்டு பணியாற்றி யவர். காங்கிரஸ் செயற்குழுவில் அங்கத்தினராக இருந்தவர். சுதந்திரப் போராட்ட காலங்களில் ஜவாஹர்லால் நேருவுக்கு உறுதுணையாக இருந்து பணிபுரிந்தவர். காங்கிரஸில் ஊழல் மலிந்தவுடன் மனம் பொறுக்காமல், பி. சோ. கட்சியில் சேர்ந் தார். அவர் இப்பொழுது பி. சோ. கட்சியின் தலைவராக வங்க சட்ட சபையில் பணியாற்றி வருகிறார். பி. ஸி. கோஷ் எந்தக் கட்சியிலிருக்கிறாரோ அந்தக் கட்சி சிறப்படைகிறது. கட்சியினால் அவர் சிறப்படைவதில்லை. வங்க மக்களிடையே ஸ்ரீ கோஷுக்கு மிக உயர் தரமான தியாகசீலர் என்ற தனிப்பெரும் மதிப்புண்டு.

"இந்தியைப் பலாத்காரமாகத் திணிப்பதால் பாரதத்தின் ஒற்றுமை குலைந்து விடும். அதுமட்டுமின்றி, பாரதத்தின் ஒற்றுமையைக் குலைத்தவர்களில் மிக முக்கிய மானவர் பண்டித ஜவாஹர்லால் நேருதான் என்று சரித்திரத்தில் பொறிக்கப்பட்டு விடும்!" என்று எச்சரிக்கை செய்தார் ஸ்ரீ பி. ஸி. கோஷ்.

அவர் மேலும் கூறியதாவது: "மற்ற மொழிகள் பேசுபவர்களின்மீது இந்தியைத் திணிப்பது அறிவுடையார்கள்மீது அறிவில் தாழ்ந்தவர்கள் ஆதிக்கத்தைத் திணிப்ப தாகுமே தவிர, வேறல்ல. கடந்த நூறு ஆண்டுகளில் இந்திமொழி பேசும் பகுதி களில் தாதாபாய் நௌரோஜி, மகாத்மா காந்தி, ரவீந்திரநாத் தாகூர், ஜகதீச சந்திர போஸ் போன்ற ஒரு மேதையாவது உதித்ததுண்டா?"

இந்தித் திணிப்பைக் கண்டிப்பதில் வங்கத் தலைவர்கள் பேசியது போல் தமிழ் நாட்டுத் தலைவர்கள் பேசியதில்லை. இதிலிருந்து வங்கத்தில் இந்திமொழி திணிப் பைப் பற்றி எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் தீவிர வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது என்பது புலனாகும்.

* * * *

சமீபத்தில் மக்கள் சபையில் ராஜாஜியின் இந்தி எதிர்ப்பைப் பற்றி நேருஜி குறிப்பிட்டுப் பேசினார். அதிலிருந்து இந்தப் பிரச்னையைக் கொஞ்சமும் நேருஜி புரிந்துகொள்ளவில்லை என்பது புலனாகிறது. முக்கியமாக, ராஜாஜி பாரதத்தின் ஐக்கியத்தை மறந்துவிட்டுப் பேசுகிறார் என்று குறை சொல்லுகிறார்.

ராஜாஜி மொழி சம்பந்தமாக எத்தனையோ பிரசங்கங்கள் செய்திருக்கிறார். அதில் ஏதாகிலும் ஒரு பிரசங்கத்தைப் பிரதமர் நேருஜி சரியாகப் படித்திருந்தாரானால் ராஜாஜியின் இயக்கம் பிரிவினை இயக்கமல்ல, ஒற்றுமை இயக்கம் என்பதைச் சந்தேகமறத் தெரிந்து கொண்டிருப்பார்.

இந்தியைத் திணிப்பதே, இந்திய ஒற்றுமைக்குப் பெரும் கேடு விளைவிக்கும். இதை, ராஜாஜி பலமுறை விளக்கிப் பேசியிருக்கிறார். எனினும் ராஜாஜியைப் பற்றிச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் இவ்வாறு நேருஜி பேசியது பற்றி மிகவும் வருந்துகிறோம்!

ஆனால் பாரத நாட்டில் மற்றப் பகுதிகளிலுள்ளவர்கள் ராஜாஜியின் கருத்துக்களை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்களென்பது வங்கத் தலைவர்களின் பேச்சுக்களிலிருந்து நன்றாகப் புரிகிறது.

வங்க சட்டசபை அங்கத்தினர்கள், கல்கத்தாவில் கூடிய ஆட்சிமொழி மகாநாட்டில் உண்டான சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, நல்லதோர் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனர். சென்னை சர்க்கார் செய்யத் தவறிய காரியத்தை வங்க சட்டசபை அங்கத்தினர்கள் செய்திருக்கின்றனர்.

வங்க சட்ட சபையில் நடந்தவாறு சென்னை சட்ட சபையிலும் பேச்சுக்களும் தீர்மானங்களும் நடைபெற்றிருந்தால் இந்தித் திணிப்பாளர்களின் போக்கு நிச்சயமாக மாறுபட்டிருக்கும்.

மொத்தத்தில் ''ஆங்கிலமே ஆட்சிமொழியாக இருக்க வேண்டும்'' என்று சொல்வோர் பாரதத்தின் ஒற்றுமையைக் கருதியே சொல்கிறார்கள். இன்றைய விஞ்ஞான உலகில் பாரதம் மேல்நாடுகளுக்குச் சமமாகக் குறுகிய காலத்திலேயே முன்னேற வேண்டும் என்று நேருஜி துடிக்கிறார். இந்தியைப் புகுத்தினால் முன்னேற்றத்துக்குப் பதில் பின்னேற்றம்தான் ஏற்படும் என்பதை அவர் அறியவில்லை.

டாக்டர் லோஹியா ஆங்கில எதிர்ப்பை மேற்கொண்டு விட்டார். அவருடைய போக்கு அனைவரும் அறிந்ததே.

ஆங்கிலத்தை அகற்றுவதனால் நஷ்டம் ஆங்கிலேயருக்கில்லை. நஷ்டம் நமக்குத்தான்.

லோஹியாவின் இயக்கத்துக்கும் பண்டித நேரு அவர்களின் நோக்கங்களுக்கும் முரண்பாடு வெகு அதிகம். லோஹியா அவர்களின் நாடகம் கோமாளி நாடகமாகும்.

பாரதநாட்டின் ஒற்றுமையையும் முன்னேற்றத்தையும் விரும்புபவர்களுக்கு ஆங்கிலத்தை ஆதரிப்பது தவிர வேறு வழியில்லை.

நல்ல முடிவு

மத்திய அரசாங்கத்தின் அலுவல்களிலும் கோட்பாடுகளிலும் பொதுமக்களின் கண்டனத்துக்குள்ளாகிய பல அம்சங்கள் இருப்பினும் ஒன்றிரண்டு பாராட்டுதலுக்கும் உரித்தாக உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் எடுத்துக் காட்ட விரும்புகிறோம். அது முறையே யாகும்.


சமீபத்தில் நடந்த பட்ஜெட் விவாதத்தின் போது, தமது புதுப் பதவியை ஏற்பதற்கு முன், வர்த்தக மந்திரி என்ற முறையில் திரு மொரார்ஜி தேசாய் இந்தியத் தேயிலை வியாபார சம்பந்தமாக அரசாங்கத்தின் கொள்கையை விளக்கினார்.

இந்திய ஏற்றுமதி வர்த்தகத்தில் தேயிலை முக்கியமான இடம் பெற்றிருப்பதாலும், அதன் மூலம் கணிசமான அளவு அன்னிய செலாவணி சம்பாதிக்க முடிவதாலும், இந்த வியாபாரத்தைத் தேசிய வர்த்தக ஸ்தாபனமாகிய 'ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷ'னுக்கு ஒப்படைத்து விட்டால் என்ன என்று ஒரு அங்கத்தினர் ஆலோசனை தெரிவித்தார். இந்த ஆலோசனையை நிராகரித்துப் பேசுகையில் மந்திரி மொரார்ஜி தேசாய் கூறியது கவனிக்கத் தக்கது.

''தேயிலை ஏற்றுமதி வர்த்தகத்தைத் தேசிய வர்த்தக ஸ்தாபனம் ஏற்றுக் கொண்டு நடத்தினால், அந்த ஸ்தாபனத்தையே மூடிவிட வேண்டிய நிலைமை ஏற்படுவதுடன், சர்க்கார் கூட ஆட்டங் கண்டுவிடக் கூடும்'' என்று அவர் ஆணித்தரமாகத் தெரிவித்தார். இதைச் செய்ய முடியுமானால் முன்னமேயே அரசாங்கம் செய்திருக்குமென்றும், செய்வது உசிதமல்லவென்று கருதியதாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெளிவாகக் கூறினார்.

தேயிலை ஏற்றுமதி வர்த்தகம் சிக்கல் மிகுந்தது; நுட்பம் நிறைந்தது. தோட்டங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட தேயிலைகளைத் தரம் பிரித்து ஏலத்தில் விட்டு, ஏற்றுமதி ஸ்தாபனங்கள் சரக்கைக் கிடங்குகளில் அடைத்து, கப்பல் வசதி கிடைக்கும்போது வெளிநாட்டுக்கு அனுப்புகின்றனர். இவ்வித ஏலங்கள் கல்கத்தாவிலும் கொச்சியிலும் வாரந்தோறும் நடைபெறுகின்றன. வசதியுள்ள சில தோட்டக் கம்பெனிகள், தாங்களே சரக்குகளை நேரடியாக இங்கிலாந்தில் லண்டன் மார்க்கெட்டுக்கு அனுப்பி அங்கே விற்றுவிடுவதும் உண்டு. இவ்வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் பெரும்பான்மையினர் ஆங்கிலேயர்கள் என்ற காரணத்தைக் கொண்டு மட்டும் இதை அவர்களிடத்திலிருந்து பறித்துவிட வேண்டும் என்பது மடமையே யாகும். நுணுக்கம் நிறைந்த இந்த வியாபாரத்தில் நீண்ட நாளைய அனுபவமும் திறமையும் மிகவும் அவசியம். அவ்வளவு திறமையும் அனுபவமும் ராஜ்ய வர்த்தக ஸ்தாபனத்துக்கு இருக்கிறதா என்பது சந்தேகம். இல்லை என்றே சொல்லி விடலாம். ஏற்கனவே அவர்கள் மேற்கொண்டு நடத்தி வரும் மாங்கனீசச் சத்து, இரும்புச் சத்து முதலிய இனங்களில் அவர்களுடைய நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லை என்று குறை கூறப்படுகின்றன. மாங்கனீசத்தில் நமது நாட்டின் ஏற்றுமதி வியாபாரம்கூட, இப்போது பாதிக்கப்பட்டுள்ளது என்று எண்ணவும் இடமிருக்கிறது. இதற்குக் காரணம் இந்த ஸ்தாபனத்தை நிர்

பாலைவனத்தில் புயல!



எகிப்தும்-ஸிரியாவும் இணைந்து புதுக் குடியரசு ஏற்படுத்தியதிலிருந்து மற்ற அரபு நாடுகளிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

வகிக்கும் அதிகாரிகளுக்குப் போதிய அனுபவமில்லாமையே என்று எடுத்துக் காட்டப்படுகிறது. நிலைமை இவ்வாறு இருக்கையில் சிக்கல் மிகுந்த மற்றொரு ஏற்றுமதிப் பொருளை அவர்களிடம் ஒப்படைப்பது விரும்பத்தக்கதல்ல. இதை நன்கு அறிந்து கொண்டு, இப்போதிருக்கும் ஸ்தாபனங்களிடமே தேயிலை ஏற்றுமதியை விட்டு வைத்திருப்பதற்காக, மத்திய சர்க்கார் வர்த்தக மந்திரியைப் பாராட்டுகிறோம்.

வேண்டாம் இந்த வரி!

ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார்கோயில் ஆண்டி என்று ஒரு கூற்றுண்டு. அதே போல, கார்ப்பரேஷன் வருமான வரி இலாகாவுக்கு இளைத்தவர்களாகக் கிடைத்தவர்கள் சென்னை வாசிகளில் மாதச் சம்பளம் பெற்று ஜீவனம் நடத்தும் ஊழியர்கள்.

இவ் வருஷத்திய கார்ப்பரேஷன் பட்ஜெட் மாறுதல்களில் மாதச் சம்பளதாரர்களின் தொழில் வரி இரண்டிலிருந்து இரண்டரை மடங்காக உயர்த்தப்பட்டு, அதன் மூலமே ரூ. 7 லக்ஷம் அதிகம் வசூலித்துப் பற்றுக் குறையைச் சரிக்கட்டத் திட்டம் போடப்பட்டுள்ளது. இந்த அதிகப்படியான விகிதத்தை "நன்கு ஆராய்ந்து ஆலோசித்த பிறகுதான் அத்தியாவசியமானது என்று கருதிய பின்னரே தொழில் வரி விதிக்கத் தீர்மானிக்கப்பட்டது" என்று சென்னைக் கார்ப்பரேஷன் விளக்கம் கொடுத்திருக்கிறது.

இதிலுள்ள அடிப்படையான அநீதியை விளக்கத் தேவையில்லை. மாதச் சம்பளம் வாங்கி ஜீவிப்பவர்களின் நிலை தற்போதையப் பொருளாதார நிலையில் பரிதாபகரமானது என்பதுஎல்லோரும் உணர்ந்ததே.எப்படியோ உயிர் வாழும் ஜந்துக்களில் ஒரு பிரிவினராக அவர்களையும் கருதுவதுதான் நியாயம். அவர்கள் மீது மேலும் வரிச் சுமையைத் திணிப்பது வருந்தத் தக்கது.

மேலும் தனது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளச் சென்னைக் கார்ப்பரேஷனுக்கு இதர வகைகளுள்ளன என்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். சென்னை அரசாங்கம் புதிதாக விதித்துள்ள தமாஷா வரி மூலம் வசூலாகும் தொகையில் கணிசமான ஒரு பகுதி கார்ப்பரேஷனுக்குக் கிடைக்கும். எவ்வளவு இது என்று நிர்ணயமாகச் சொல்ல முடியாவிட்டாலும், இதன் அம்சம்

குறிப்பிடத்தக்க அளவுக்குக் கணிசமாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அதிகப்படி வருமானத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் பற்றுக்குறையான 6·22 லட்சம் பாதியாகக் குறையலாம். தொழில் வரி விதிக்கும் பிரச்னையையே கைவிட்டு விடலாம்.

அதைவிட முக்கியமான அம்சம் மோட்டார் வாகன வரி வசூலிலிருந்து சென்னை கார்ப்பரேஷனுக்குக் கிடைக்கும் அம்சம். இவ்வரி இப்போது சென்னை அரசாங்கம் வசூலிக்கிறது. சுமார் 65 லட்சம் ரூபாய் வரையில் இந்த இனத்தின் மூலம் சென்னை அரசாங்கம் வசூலிக்கிறது. இதில் சென்னைக் கார்ப்பரேஷனுக்கு அளிக்கப்படுவது ஐந்து லட்சத்துக்கும் குறைவே.

இந்த விவரத்தைச் சென்னை சட்டசபையில் பட்ஜெட் விவாதத்தின் போது சென்னை அரசாங்கம் அறிவித்தது. இது எவ்வளவு குறைவானது என்பதைப் பற்றியும் இதைவிடக் கணிசமான அளவு கார்ப்பரேஷனுக்கு அளிக்கப்படவேண்டுமென்றும் பல தடவை சென்னை அரசாங்கத்துக்குக் கோரிக்கைகளும் மனுக்களும் அனுப்பப்பட்டன.

இக்கோரிக்கைகள் முற்றிலும் நியாயமானவைகளே. சென்னைக் கார்ப்பரேஷன் தன்னுடைய எல்லைக்குள்ளிருக்கும் சாலைப் பராமரிப்புக்காக மட்டும் வருஷந்தோறும் சுமார் 50 லட்சத்துக்கு மேல் செலவு செய்கிறது. மோட்டார்களும் லாரிகளும் மிகவும் பெருகிவிட்டிருக்கும் இக்காலத்தில் இவற்றால் ரஸ்தாக்களுக்கேற்படும் சேதம் கொஞ்சநஞ்சமன்று. எனவே ரஸ்தாக்களை மராமத்து செய்து சரியான நிலைமையில் வைத்துக் கொள்ளுவதில் ஏற்படும் செலவில் கணிசமான தொகையைச் சென்னை அரசாங்கம் கார்ப்பரேஷனுக்கு அளிக்க வேண்டியது முறையே. இவ்விஷயத்தில் கார்ப்பரேஷன் மக்கம் குன்றாது வருவாயை அதிகரித்துக் கொள்ளவேண்டிய முயற்சிகளைத் தொடர்ந்து செய்வது நல்லது; செய்தே ஆகவேண்டும்.

சக்கரவர்த்தித் திருமகன்

இவ்விதம் அட்டைச் சித்திரத்தில் ஓவியர் மணியம் பழம் பெரு சிற்பத்திலிருந்து பெயர்த்தெழுதிய ஸ்ரீராமனையும் அவனுடைய அருமை பக்தனையும் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். இவ் விதழ் வெளியாகும்போது தமிழ் மக்கள் ஸ்ரீராம நவமியைச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். அவர்களுடன் நாமும் சேர்ந்து கொண்டாடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

உலகத்தில் ஒருவருடைய கதையைத் திரும்பத் திரும்பப் படிப்பதில் மனம் சலிப்பதில்லை என்றால் அது ஸ்ரீராமபிரானின் கதைதான். பாரத நாட்டு மக்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துபோன மகாபுருஷன் அவன். அரச போகத்தில் வாழ்ந்த ராஜகுமாரன் எல்லா இன்பங்களையும் துறந்து தந்தையின் வாக்கை நிறைவேற்றக் கானகத்துக்குக் காலால் நடந்த கதையும், சீதா பிராட்டி அசோக வனத்தில் துயருற்ற வரலாறும் மக்கள் உள்ளங்களை நெகிழ்விப்பதாகும். அதைப் படித்துப் படித்து உள்ளம் கனிந்து தூய்மை பெற்று வந்திருக்கிறார்கள். காந்தி மகான் வாழ்நாள் முழுதும் ராம நாமத்தை ஜபித்தே ஆத்ம சக்தி பெற்று வந்தார்.

இதை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கவிச் சக்கரவர்த்தி கம்பன் உணர்ந்து "மும்மைசால் உலகுக் கெல்லாம் மூலமந்திரம்" என்று ராம நாமத்தைப் போற்றிப் பாடியிருக்கிறான்!

இப்படி ராம கதையில் மெய்யுருகிக் கவிதாலோகத்தில் சஞ்சரித்து, தமிழை உலக இலக்கியங்களுள் முதன்மையுறச் செய்த கவிச் சக்கரவர்த்தி கம்பனின் திருநாள் வழக்கம் போல் காரைக்குடியில் கம்பன் கழகத்தார் ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

ஆனால் நம் நாளில் தமிழ் நாட்டுப் பெண்களும் ஆண்களும் குழந்தைகளும் படித்துப் படித்துச் சுவைக்கும்படியாகச் சக்கரவர்த்தித் திருமகனைப் பற்றிக் கூறியவர் ராஜாஜி.

ராஜாஜி அவர்களின் "சக்கரவர்த்தித் திருமகனும்" "வியாசர் விருந்தும்" மற்றொரு மலிவுப் பதிப்பு சென்னை கோகலே மண்டபத்தில் மார்ச் 30-ம் தேதி காலை 9-30 மணிக்கு வெளியிடுகிறார்கள். இவை சம்பா வெளியீடுகளாகும். இவற்றின் விற்பனை உரிமை பாரதி பதிப்பகத்தாருக்கு உரியது.

இந்த வெளியீட்டு விழாவுக்கு, கன்னட இலக்கிய ஆசிரியர் ஸ்ரீ மாஸ்தி வெங்கடேசய்யங்கார் தலைமை தாங்குகிறார். இந்த வைபவத்தில் திரு. ம. பொ. சி. திரு கி. வா. ஜ. முதலிய அறிஞர்கள் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். ராஜாஜியும் கலந்து கொள்கிறார்.

பிரார்த்தனைக் கூட்டம்

— கிண்டி ராஜபவனம் —

காந்தி மண்டபத்தில்

மார்ச் 28-ந் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணிக்கு
இந்தி பிரசார சபா வித்யாலய மாணவிகள் துதி கீதங்கள் பாடுவார்கள்.
நாகஸ்வர இன்னிசை, தக்கர்பாபா வித்தியாலய மாணவர்கள்,
சாரதா வித்தியாலய போதனமுறை பயிற்சிப் பள்ளி மாணவிகள்
நூற்புயக்ஞம், கீதை பாராயணம், ராமநாம பஜனை

அருள்வாக்கு

வேதங்களில் கூறப்பட்டுள்ள அனுஷ்டானங்கள் மூலம் ஈசுவர பூஜை செய்யப்பட வேண்டுமென்று ஸ்ரீ பகவத்பாதர் ஆணையிட்டிருக்கிறார். ஈசுவரபூஜையே வேறொரு பலனுக்கான சாதனமாகும். இதைவிட இன்னும் சிரேஷ்டமான ஆக்ஞையை நிறைவேற்றுவதற்கான சாதனமும் இது. இதைக் காட்டிலும் மேலான ஆக்ஞை எது? பரமாத்ம உணர்வில் ஒருவன் ஸ்திரமாக லயித்திருக்கட்டும் என்று கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீ பரமேசுவரனைப் பூஜிப்பதின் பலனாகத்தான் இந்தப் பேருண்மையை அறிய முடியும். ஸ்ரீ பகவத்பாதர் இயற்றியுள்ள சோபான பஞ்சக ஸ்தோத்திரத்தின் கடைசி அடி ''அத பர பிரமாத்மனா ஸ்தீயதாம்'' என்ற வார்த்தைகளுடன் முடிவடைகிறது.

''சத் வித்வான் உபாச்ரயதாம்'' ('சத்'தை அறிந்தவனை நாடு) பிரதி தினம் தத்பாதுகே சேவ்யதாம், (தினசரி அவன் திருவடிகளை வணங்கு) 'பிரம்மைகாக்ஷரம் அர்த்யதாம்' (பிரம்மாக்ஷரத்தைப் போதிக்க அவனை நாடு) 'ஸ்ருதி ஸிரோவா க்யம் சமாகர்ண்யதாம் (ஸ்ருதிகளின் மணிமுடியான உபநிஷத் வாக்கியங்கள் பக்தியுடன் கேட்கப்படட்டும்) இந்த ஆக்ஞைகளை நிறைவேற்றினால், 'அத பரபிரம்மாத்மனா ஸ்தீயதாம்' என்ற வார்த்தையிலுள்ள நிலைக்கு ஒருவன் படிப்படியாகப் போகலாம்.

லோக சிந்தனைகளை யெல்லாம் துறந்து பரம ஞானத்திலேயே ஒருவன் ஈடுபட வேண்டுமென்பது ஸ்ரீ பகவத்பாதரின் பரம ஆக்ஞை. ஈசுவர ஆராதனை இதற்குப் பூர்வாங்க சாதனமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பொருள்களால் ஈசுவரோபசாரம் செய்வதைக் காட்டிலும் வேதங்கள் விதித்துள்ள கர்மாக்களைச் செய்து 'ஜனார்த்தன ப்ரீயதாம்' என்ற வார்த்தைகளுடன் ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்து, ஈசுவர ஆராதனை செய்வது மிகவும் சிலாக்கியமானது. 'அத பர பிரம்மாத்மனா ஸ்தீயதாம்' என்ற வார்த்தைகள் ஈசுவரார்ப்பணத்தின் பூர்த்தியைக் கூறுகின்றன.

இந்தப் பூர்வாங்க சாதனைகளின் விளைவாக அனுசந்தானத்திற்குச் சக்தியை அடைவதற்குக்கூட ஸ்ரீ பகவத் பாதரின் கிருபா கடாட்சத்துக்கு நாம் பிரார்த்திக்கவேண்டும். இந்தப் பிரார்த்தனையின் பயனாக நமது வாழ்க்கையின் லட்சியத்தை உணர்ந்துகொண்டு தினசரி ஸ்ரீ பகவத்பாதருக்கு நாம் கனகாபிஷேகம் செய்வோம்.

—ஸ்ரீசங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்

புதிய தலைவர்

—கொழும்பு, மார்ச் 21உ.

இவ்வாரம் நடைபெற்ற இலங்கை தமிழ் அரசுக் கட்சி காரியக் கமிட்டிக் கூட்டத்தில் திருகோணமலைத் தொகுதி பார்லிமெண்ட் அங்கத்தினரான திரு என். ஆர். ராஜவரோதயம் தமிழ் அரசுக் கட்சியின் அடுத்த வருடத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இவர் தமிழரசுக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதில் இத்தனை ஆண்டுகளாக இல்லாத ஒரு தனி விசேஷமே இருக்கிறது. கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒரு தமிழ்ப் பிரமுகர் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவது இதுவே முதன் முறையாகும்.

இலங்கையில் தமிழ் மக்கள் பெரும்பான்மையோர்களாக வசிப்பது வடக்கு, கிழக்கு, மத்திய மாகாணங்களில்தான். இந்திய வம்சாவளியினர்களான சுமார் பத்து லட்சம் தமிழ் பேசும் மக்கள் மத்திய மாகாணத்தில் வசிக்கிறார்கள். வடக்கு கிழக்கு மாகாணங்கள் பல நூற்றாண்டுகளாகத் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களாயிருந்து வந்துள்ளன. ஆயினும் தமிழ் அரசுக் கட்சி ஏற்பட்டதிலிருந்து அதன் தலைமைப் பதவியை வகித்தவர்களெல்லாம் வட மாகாணத்தைச் சேர்ந்தவர்களாகவே இருந்து வந்துள்ளனர். இதைக் கிழக்கு மாகாணத்தவர்கள் வெளிப்படையாக ஆட்சேபித்ததில்லையென்பது உண்மையென்றாலும் உள்ளூற அவர்களுக்குச் சிறிது மனத்தாங்கல் இருந்திருக்கலாம். இதற்கு இடமில்லாமல் செய்யவும் வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் மக்களிடையே நேச உறவை மேலும் வளர்க்கவும் திரு ராஜவரோதயத்தின் தேர்தல் பெருதவி புரிவதாயிருக்குமென்று கருதப்படுகிறது.



திரு என். ஆர். ராஜவரோதயம்

தமிழ் அபிமானமும் விரிந்த நோக்கமும்கொண்ட திரு ராஜவரோதயம் பண்பு மிக்க ஒரு தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்தவர். மக்களின் அன்புக்கும் அபிமானத்துக்கும் அவர் பாத்திரமானவரென்று பார்லிமெண்ட் சபைக்கு இரண்டாவது தடவையாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதே போதிய சான்றாகும். அவருக்கு எதிரிகள் யாருமே யில்லை. எல்லோருக்கும் நல்லவராக விளங்கும் திரு ராஜவரோதயம் சிறந்த ஆஸ்திகர். சரித்திரப் பிரசித்தி பெற்ற கோணேசர் ஆலயப் புனருத்தாரண சபையின் காரியதரிசியாக அவர் பலரும் மெச்சும்படி பணியாற்றி வருகிறார். திருகோணமலையிலுள்ள பிரிட்டிஷ் கடற்படைத் தளம் இலங்கையின் கைக்கு மாறியது முதல் திருகோணமலையின் முக்கியத்துவம் பன்மடங்கு அதிகரித்து வருகிறது. இலங்கையில் சமஷ்டி அரசியல் ஏற்படும் பட்சத்தில் தமிழ் ராஜ்யத்துக்குத் திருகோணமலையே தலைநகரமாயிருக்குமென்று பலர் வெளிப்படையாக இப்பொழுது பேசிக்கொள்ளுகிறார்கள். இதுமாதிரியான சந்தர்ப்பத்தில் திருகோணமலையைச் சேர்ந்த திரு ராஜவரோதயம் அவர்கள் தமிழ் அரசுக் கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பது விசேஷ முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இவருடைய தலைமையில் தமிழரசுக் கட்சி புதிய ஊக்கமும் உற்சாகமும் பெற்றுத் திகழும் என்று எல்லாரும் எதிர்பார்க்கிறார்கள்: அவர்களுடைய நம்பிக்கை நிச்சயம் வெற்றிபெறும்.

நிற்க. தமிழ் அரசுக் கட்சி காரியக்கமிட்டி இம்மாதம் ஒரு பெரிய போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டிருக்கிறது. சிங்கள ஸ்ரீ எழுத்துப் பொறித்த அரசாங்க பஸ்களை எதிர்த்து மார்ச்சு 29-ந் தேதி சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்துவதென்றும் அரசாங்க பஸ்களில் இருக்கும் சிங்கள ஸ்ரீ எழுத்தை நீக்கி விட்டு, தமிழ் ஸ்ரீ எழுத்தை அதில் பொறித்து அனுப்புவதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. சென்ற வருடம் மோட்டார் வாகனங்களின் இலக்கத் தகடுகளில் சிங்கள ஸ்ரீ எழுத்தை அரசாங்கம் பொறித்த பொழுது அதை எதிர்த்துத் தமிழ் அரசுக் கட்சி சத்தியாக்கிரகம் நடத்தியது. சிங்கள ஸ்ரீ எழுத்துக்குப் பதிலாகத் தமிழரசுத் தலைவர்கள் தமிழ் ஸ்ரீ எழுத்தைப் போட்ட பொழுது சட்டப்படி அவர்கள்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால் நிலைமையை நெருக்கடியாக்க விரும்பாத பிரதம மந்திரி சத்தியாக்கிரகிகள் மீது எவ்விதமான நடவடிக்கையும் எடுக்காமல் ராஜதந்திரத்துடன் நடந்துகொண்டார். இதன்பயனாக, சத்தியாக்கிரகப் போராட்டம் அர்த்தமில்லாமற் போய் விட்டது.

பஸ் சேவை முழுவதையும் அரசாங்க தேசிய உடைமையாக்கிய பின்னர் தமிழ்ப் பகுதிகளுக்குப் புதிய பஸ்களை அனுப்புவதாயின் தற்சமயமுள்ள சட்டத்தின்படி சிங்கள ஸ்ரீ எழுத்துப் பொறித்த பஸ்களையே அனுப்ப வேண்டியிருக்குமென்று அரசாங்கம் கூறுகிறது. சென்ற வாரம் சிங்கள எழுத்துப் போட்ட பல புதிய பஸ்களை அரசாங்கம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்திருக்கிறது. இதை எதிர்த்து மார்ச்சு 29-ந் தேதி ஒரு போராட்டம் நடத்தத் தமிழ் அரசுக் கட்சியினர் திட்டமிட்டிருக்கிறார்கள்.

— ரஜனி

வள்ளுவர் வாசகம்

ராஜாஜி

23

பேசும் தமிழில் 'அடக்கம்' என்றால் அநேகமாகப் பணிவைத் தான் குறிக்கும். வள்ளுவர் குறளில் அடக்கம் என்பது, மெய்யும் மொழியும் மனமும் தீநெறியில் செல்லாமல், அடங்கி நிற்றல். அந்த அடக்கத்தினின்று, நடத்தையில் பணிவும் தானாக உண்டாகும்.

அடங்காமல் செல்லும் தன்மை கொண்ட மனத்தையும் புலன்களையும் அடக்கியாள்வது அறிவுடையோனுடைய கடமை. இந்தத் தன்னாட்சியின் பயனுக்குத்தான் வள்ளுவர் உபதேசத்தில் அடக்கம் என்கிற அழகான பெயர்.

அடக்கம் மனிதனுக்கு இறவாப் பேறு தரும். மனத்தையும் மெய் மொழிகளையும் அடக்கி யாளாமல் விட்டு விட்டோமானால், அந்த வாழ்க்கை இருள் அடர்ந்து பாதை விளங்காத வாழ்க்கையாகி விடும்.

"உன்னைக் கெடுக்கும் விஷயங்களைக் கண்டாயானால், ஆமை தன் தலையையும் கால்களையும் தன் முதுகோட்டுக்குள் இழுத்துக் கொள்வதைப் போல் மனத்தையும் மெய் மொழிகளையும் உள் இழுத்து அடக்கிக் கொள்" என்பது கீதாசாரியனுடைய உபதேசம். அதுவே வள்ளுவருடைய உபதேசம்.

"ஆன்மாவைக் கொன்றவர்கள் தம் வாழ்க்கையைக் காரிருள் சூழ்ந்த உலகமாக்கிக் கொள்வார்கள்."—இது உபநிஷத் வாக்கியம். ஆன்மாவைக் 'கொல்வது' என்றால், 'ஆன்மா என்று ஒன்றில்லை' என்று வாதிப்பதும், உடலும் அதைப் பற்றிய அறிவுமே எல்லாம் என்று நடந்து கொள்வதும் ஆகும். ஆன்மாவுக்கு உரிய சக்தியைப் பயன்படுத்திக் கொள்ளாமல், புலன்களைத் தம் பாட்டுக்குச் செல்லும்படி விடுவது ஆன்மாவைக் கொன்றபடியே ஆகும்.

அடக்கம் அமரருள்
உய்க்கும்; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

['ஆர்' என்பது நிறைவைக் குறிக்கும். உய்த்தல்-கொண்டு போய்ச் சேர்த்தல்]

மெய் மொழி மனங்களின் அடக்கம் துறவிகளுக்கு மட்டுமல்ல, இல்லறம் நடத்துபவர்களுக்கும் வேண்டும். தீநெறி விஷயங்கள் அவர்களைத்தான் அதிகமாகத் தாக்கும். பொருளாசையும், செருக்கும், கோபமும் இல்லற வாழ்க்கையில் இருப்பவர்களை அதிகமாகப் பாதிக்கும். அவற்றுக்கு இடம் தராமலிருக்க வேண்டும்.

* * *

செல்வத்துக்குள் சிறந்த செல்வமாகும், மெய் மொழி மனம் இவற்றை அடக்கியாளும் பயிற்சியைப் பெறுதல். இதைத் தான் கீதையில் பலவாறாக யோகம் என்று குறிப்பிட்டுச் சொல்வது.

செல்வத்தைக் காப்பது போல் அடக்கத்தைக் காப்பாயாக—என்கிறார் முனிவர்.

காக்க பொருளா
அடக்கத்தை : ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு.

அடக்கமே பெருஞ் செல்வமாகக் கருத வேண்டும். அடக்கம் என்றால் பணிவுமட்டுமல்ல, மெய் மொழி மனம் இவற்றை யடக்கியாளும் பயிற்சி. பாமரர்கள் தம் சொத்தை எவ்வளவு விழிப்போடு காக்கிறார்களோ, அந்த விழிப்போடு, உன் அடக்கத்தைக் காப்பாயாக! ஏனென்றால் உயிருக்கு அதை விடப் பெருஞ் செல்வம் இல்லை.

அடக்கமாகிய செல்வத்தை உடலில் குடியிருக்கும் திருடர்களாகிய பொருளாசை, செருக்கு, கோபம் திருடிச் செல்லக் காத்திருக்கிறார்கள். அந்தத் திருடர்களின் மோசத்துக்கு இடம் கொடுக்காமல் கண் விழித்திருப்பாய். வேறு செல்வமெல்லாம் செல்வமல்ல.





மாற்றிக் கொள்வார்களா?

வடகோவான் என்ற இடத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் வினோபா அவர்கள் மொழிப் பிரச்னையைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, காந்தியும், திலகரும், இந்தியை இந்நாட்டில் பரப்புவதற்கு முயற்சி செய்ததாகவும், ஆதலால் இந்தி பொது மொழியாக வருவது பொருத்தமே என்றும் கூறியிருக்கிறார்கள்.

போர்ச் செயல் பின்னணியாக உடைய பகவத்கீதையே, காந்தியடிகளின் இன்னாசெய்யாமை (அஹிம்சை) என்னும் அறத்தை வளர்க்க உறுதுணையாக இருந்தது. திலகர் கீதைக்கு விளக்கம் கண்ட போதும் நாட்டு மக்களுக்கு நல்லுணர்வை ஊட்டும் நூலாக விளக்கம் கண்டார். போர் செய்யத் தூண்டுதலாக இருந்த இந்நூலே, இரு பெரியார்களுக்கும், காலத்துக்கேற்பக் கருத்து மாற்றத்தை உண்டாக்கி இருக்கும்பொழுது, காந்தியடிகள் வழிவந்த வினோபா அவர்களும், காலத்துக்கேற்பத் தம் கருத்தை மாற்றிக் கொண்டால் என்ன?

இந்த நாட்டின் ஒற்றுமைக்கே பல காலம் பாடுபட்டு மறைந்த காந்தியடிகளின் வழி வந்த வினோபா அவர்கள், காந்தியடிகளின் கொள்கைகளைப் பின்பற்றி நடப்பது உண்மையானால், இந்த நாட்டின் ஒற்றுமைக்கே பங்கம் விளைவிக்க வந்திருக்கும், "இந்தி மொழியைப் பொது மொழியாக்க வேண்டும்" என்ற முன்யோசனையில்லாத கருத்தை, மாற்றிக் கொள்வார்களென்று நம்புகிறேன்.

காஞுடிகாத்தான்
18—3—58
வீர வெங்கடாசலம்

வினோபாஜியின் கருத்து

இந்திய ஆட்சி மொழியைக் குறித்து ராஜாஜிக்கும், வினோபாஜிக்கும் கடுமையான அபிப்பிராய பேதம் இருப்பதாகப் பத்திரிகைகளில் படித்தேன். தென்னாட்டில் பூமிதான யாத்திரையின் போது ராஜாஜியை வினோபா ராஜரிஷி என அழைத்தார். அப்படிப்பட்ட தலைவரின் புத்திமதிகளா நாட்டுக்கு உகந்தவை அல்ல என்று மறுப்பது! தவசிரேஷ்டரான வினோபாவுமா இந்தக் குறுகிய மொழி அபிமானத்தால் பாதிக்கப்படுவது! வினோபாஜி மொழி வரம்புக்கப்பால் உயர்ந்து, பாரதத்தின் ஐக்கியத்துக்கு எம்மொழி சிறந்ததென உணர்ந்து தம் கருத்தை விரைவில் மாற்றிக் கொள்வாராக.

கொழும்பு
18—3—58
மூ. கணேசலிங்கம்

வங்கத்தில் ராஜாஜி

வங்க மக்கள் ராஜாஜியின் சொற்பொழிவைக் கேட்டு "சமத்கார்" "சாணக்ய" "கௌடில்ய" என்று கையெடுத்துக் கும்பிட்டு ஆர்ப்பரித்தனர்.

"ஹிந்தியைத் தேசமொழியாக்க நேருஜிக்கே இஷ்டமில்லை. இது எனக்குத் தெரியும். ஆனால் அவருடைய சகாக்கள் சொல்வதை அவர்கேட்க வேண்டியிருக்கிறது" என்பதைப் பட்டவர்த்தனமாகக் கூறினார் ராஜாஜி.

"ஹிந்தியை ஆட்சி மொழியாக்காமல் எதிர்க்கும் போரில் நாம் வெற்றி பெறுவோமோ என்பதை நாம் சிந்திக்க வேண்டாம். நாம் சொல்வது உண்மை. சத்தியமே ஜயம். முயற்சியைக் கைவிட வேண்டாம்" என்று சொன்னார். "கண்ணன் காட்டிய வழியின்" ஆசிரியரிடமிருந்து வரும் பொன்னுரை வாசகத்தை வங்க மக்கள் பின்பற்றுவர். தமிழர்கள் வங்க மக்களுக்குச் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபிக்க வேண்டும்.

டம் டம்
15-3-58
சுந்தரேசன்

ஆட்சிமொழிப் பிரச்னை

மத்திய அரசாங்க ஆட்சி மொழியாக ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று ராஜாஜி கூறுவதைத் திரித்து, தமிழ் நாட்டில் சிலர், 'ராஜாஜி தமிழ் ராஜ்ய அரசாங்க ஆட்சி மொழியாவதை எதிர்க்கிறார்' என்று விஷமப் பிரசாரம் செய்வது வருந்தத்தக்கது. சென்ற வாரம் 'கல்கி'யில் ராஜாஜி அவர்கள் எழுதியுள்ள கட்டுரையில் இதைத் தெளிவுபடுத்தி யிருப்பதை வரவேற்கிறேன். ராஜ்ய அளவில் தமிழ் எல்லாக் காரியங்களுக்கும் உபயோகிக்கப்பட வேண்டும். எங்கெங்கு தமிழ் உபயோகிக்க இயலாதோ அங்கு, அதாவது, யூனியன் விவகாரங்களுக்கு மட்டும் ஆங்கிலம் தொடர்ந்து உபயோகிக்கப்பட வேண்டும் என்றே ராஜாஜி கூறுகிறார் என்பது தெளிவு. இப்போதையச் சர்ச்சை ஹிந்திக்கும் ஆங்கிலத்துக்குமேயன்றி, தமிழுக்கும் ஆங்கிலத்துக்கும் அல்ல. ஏற்கனவே ஆட்சி மொழி ஸ்தானத்தில் இருந்து வளம் பெற்ற மொழியான ஆங்கிலத்தை மத்திய அரசாங்க ஆட்சிகளுக்கு மட்டும் உபயோகிக்க வேண்டுமெனக் கேட்கப்படுகிறது. அதுவன்றி ஆங்கிலத்தின்மேல் உள்ள தனி பிரியத்தினால் அல்ல.

காரைக்குடி
15—3—58
பி. எஸ். தேசிகன்

தழைக்கும் தமிழகம்!

சென்ற 16-3-58 கல்கி இதழில் பாரதம் போற்றும் திரு ராஜாஜி அவர்கள் எழுதிய "ஹிந்தி" என்ற கட்டுரையை வாசித்து எல்லையிலா இன்பம் கொண்டேன். பக்கம் ஒன்றாக இருப்பினும் பல கோடி மக்களின் மனத்தைக் கவரும் சொல் நயம் பெற்ற இந்தக் கட்டுரையை அறிவில் சிறந்த சுரசியலார் நன்கு உணர்ந்து நடப்பார்களானால் நம் தமிழ் மொழியும் தழைத்தோங்கும்!... தமிழகமும் தழைத்தோங்கும்!

புவனகிரி
18—3—58
வை. சண்முகசுந்தரம்



வெற்றி முரசம்!

கல்கி 16-3-58 இதழில் வெளி வந்த தலையங்கம் மிகவும் பிரமாதம். அதைப் படித்தவர்கள் பாராட்டாமல் இருக்க முடியாது. பாரதியார் கண்ட கனவுகள் நினைவில் வரும் இந் நாளில் பாரதத்தில் மட்டும் என்ன, தமிழர் வசிக்கும் இடமெல்லாம் வெற்றி முரசம் கொட்டச் செய்ய வேண்டும். தமிழகத்தின் தவப் புதல்வர் ராஜாஜி போன்ற தலைவர்கள் வெற்றிமுரசம் கொட்ட எங்கள் இலங்கைக்கும் தேவை. அப்பொழுது தான் தனிச் சிங்களச் சட்டத்தை இயற்றிய இலங்கை சர்க்காரும் தமிழர்களின் உணர்ச்சியை அறிய முடியும். ராஜாஜி நீடூழி வாழ்க.

கண்டி
17—3—58 டி. கே. எஸ். துரை

மாணவிகள் நன்றி

நெடுநாட்களாகக் 'கல்கி' புத்தகத்தை வாரம் தவறாமல் இரவல் வாங்கிப் படித்து வந்த எங்கள் இல்லத்தில், 8—12—57 'கல்கி' இதழ் வாங்கப்பட்டவுடன் எங்கள் தகப்பனாரைக் காரணம் வினவினோம். அதற்குஅவர், ''ஸ்ரீ சந்தானம் அவர்கள் எழுதும் 'பொருளாதாரமும் பொதுமக்களும்' என்னும் கட்டுரை இவ்வாரம்முதல் 'கல்கி' இதழில் வெளி வருகிறது; அதன் முக்கியத்வமும் உபயோகமும் படித்தால்தான் புரியும்'' என்று சொன்னார். இரண்டு மூன்று வாரம் தொடர்ந்து படித்ததும் எஸ். எஸ். எல். ஸி. படித்த எங்களுக்கு அதில் ஊக்கம் ஏற்பட்டது. முன்பு 'கல்கி' அவர்கள் எழுதிவந்த ''பார்த்திபன் கனவு'' ''பொன்னியின் செல்வன்'' முதலிய தொடர் கதைகளைப் படிக்க எவ்வளவு உற்சாகமும், ஆர்வமும் காட்டி வந்தோமோ, அதைப் போல் இந்தக் கட்டுரைகளைப் படிப்பதிலும் எங்களுக்கு உற்சாகமும் ஆர்வமும் ஏற்பட்டிருக்கின்றன. எங்களைப் போன்ற மாணவிகள் சுலபமாகப் புரிந்து கொள்ளும் முறையில் முக்கியமான விஷயங்களை எங்களுக்கு அளிக்க முன்வந்துள்ள ஸ்ரீ சந்தானம் அவர்களுக்கு எங்கள் மரியாதை மிக்க நன்றி.

சென்னை—1 குமாரி எம். வி. அபயாம்பாள்
14—3—58 குமாரி எம். வி. ஜானகி

சிறு சேமிப்புத் திட்டம்

நல்ல திட்டங்களை வகுத்து, நாடாளத் தெரியாத இன்றைய அரசாங்கம், சிறு சேமிப்புத் திட்டம் என்ற பெயரில் மக்களிடமிருந்து பணம் வசூலிக்கிறது. பொது மக்கள் தங்கள் தகுதிக்கேற்பப் பணம் போடுவார்கள். ஆனால் அரசாங்க அலுவலாளர்கள் கட்டாயத்தின் பெயரில் பணம் வசூலிப்பதாகத் தெரிகிறது. அரசாங்கத்துக்குப் பயந்து பொதுமக்கள் பணம் கொடுக்கிறார்கள். பணம் பறிக்கச் செல்வோரின் செயல்கள் மக்களைப் பயத்துக்குள்ளாக்குகின்றன. இது அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டியவரி பாக்கியைப் பறிப்பது போல் இருக்கிறது. இந்தச் செய்கை ஜனநாயக சர்க்காருக்கு அழகல்ல!

செங்கோட்டை
15—3—58 முழுமதி

திருத்தி வெளியிடுவார்களா?

அரசாங்க ஊழியர்கள், அவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள இலாகாத் தேர்வுகளில் தேர்ச்சியுற்றால்தான் மேல் பதவிகளுக்குத் தகுதி வாய்ந்தவர்களாகின்றனர். இவர்கள் தேர்ச்சி பெறுவதற்கு இடையூறாக இருப்பது நல்ல புத்தகங்கள் கிடைக்காமையே. பழைய புத்தகங்கள் கிடைத்தாலும், பிரிக்கும் போதே நூற்றுக்கணக்கான திருத்தச் சீட்டுகள் கண்முன் தோன்றி அலுப்பை ஏற்படுத்துகின்றன. அத்துடன் எல்லாத் திருத்தங்களும் செய்யப்படாத பழைய புத்தகங்களை வைத்துக் கொண்டே தேர்வு எழுதவேண்டியிருக்கிறது. உதாரணம் தேவையானால் 'சென்னை ஸ்டாம்பு மானுவல்' ஒன்றே போதும்.

உயர் பதவி ஊழியர்கள் நிறையத் தேவைப்படும் இந்நாளில், ஊழியர்கள் உயர் பதவிக்குத் தகுதியுற அவசியமானவைகளைச் செய்ய அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது. ஆகையால், தேர்வுகளுக்குத் தேவையான அத்தனை புத்தகங்களையும் அரசாங்கம் ஒரு முறை திருத்தி வெளியிட முன்வருமா?

திருக்கோவிலூர்
17—3—58 ரா. ராஜசேகரன்

''ஆகாசவாணி நிகழ்ச்சிகள்''

சென்னைநிலைய இரு டிரான்ஸ்மீடர்களில், மதராஸ் 2, சக்தி வாய்ந்ததும், நீண்ட தூரத்தில் உள்ளோர் கேட்க வசதியுமுள்ள, சிற்றலையில் ஒலி பரப்பி வருகிறது. ஞாயிறு போன்ற விடுமுறை தினங்களில் காலை நடைபெறும் கச்சேரிகள் மதராஸ்—1 லும், கன்னட, மலையாள நிகழ்ச்சிகள் மதராஸ்—2லும் நடைபெறுகின்றன. இம்மாதிரி நிகழ்ச்சிகள் மதராஸ் 2 லிருந்து ஒலிபரப்பப்பட்டால் என் போன்று தொலை தூரத்தில் உள்ளவர்கள்

அனுபவிக்க ஏதுவாக இருக்கும். பெங்களூர், திருவனந்தபுரம், கோழிக்கோடு, திருச்சூர், விஜயவாடா, ஹைதராபாத் நிலையங்களில் அந்தந்தப் பிராந்திய நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப் படுகையில், தமிழ் நாட்டு நிலையமாக மதராஸ்—2 ஒலிபரப்பினால் என் போன்ற தமிழர்கள் அடையும் ஆனந்தம் எல்லையில்லாததாகும் அல்லவா!

தவிர, மார்ச்சு 15-ம் தேதியிலிருந்து 31-ம் தேதி வரை உள்ள நிகழ்ச்சிகள் அடங்கிய ''வானொலி''யைப் பார்த்தபோது அதிர்ச்சியடைந்தோம். திருச்சியில் நடைபெறப் போகும் அருணகிரிநாதர் இசைவிழா நிகழ்ச்சிகளைத் திருச்சி நிலையம் அஞ்சல் செய்கிறது. பல வித்வான்கள் பங்கு பெறும் இந்தக் கலை விழாவை நேரில் பார்க்க இயலாவிடினும் வானொலிப் பெட்டியின்மூலம் கேட்டு மகிழலாம் அல்லவா? ஆனால் மதராஸ் நிலையத்தில் பிற நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருக்கின்றன. மதராஸ்—2 ல் இதை அஞ்சல் செய்தால் எத்தனை கலை அன்பர்கள் இங்கு அதைக் கேட்டுச் சந்தோஷமடைவார்கள்!

கல்கத்தா
14—3—58 ஜி. இராமநாதன் பி. எஸ்ஸி.

இரத்தின சான்திரம்

திருச்சி வானிலையத்திலிருந்து 25-2-58 அன்று திரு டி. எஸ். வைத்தியநாதன் என்ற நிபுணர் 'நவரத்தினங்கள்' என்ற தலைப்பின் கீழ் வைரங்களைப் பற்றி அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார். அதில் வைரத்தின் வரலாறு, அது உண்டாகும் விதம், வைரம் வைத்தியத்துக்கு எவ்வாறு பயன்படுகிறது என்று அவர் கூறியுள்ளவை வியக்கத்தக்கன. சிலப்பதிகாரம், இரத்தினப் பரீட்சை, அநுபவ தேவரகசியம் என்ற நூல்களிலிருந்து மேற்கோள்கள் பல அப்பேச்சில் இடம் பெற்றிருந்தன.

இப்பேச்சைக் கேட்டபோது நம் நாட்டில் முன்பு வளர்ச்சியுற்றிருந்த கணக்கற்ற கலை நூல்களை நாம் இழந்துவிட்டமையைக் குறித்து மன வேதனை உண்டாயிற்று. சோதிடம், வாகடம், பிராணிகள் சாஸ்திரம், இரத்தின சாஸ்திரம், கூல சாஸ்திரம், அழகுக் கலைகள், கட்டட சாஸ்திரம் முதலிய பல நூறு துறைகளில் நம்மிடம் நூல்கள் இருந்தன. தமிழ்க் காவியங்களில் சிலப்பதிகாரம், சிந்தாமணி, பெருங்கதை, திருவிளையாடற் புராணம் என்ற நூல்களிலும் மறைந்து கிடக்கும் பற்பல தமிழ்த் தனிச் சுவடிகளிலும் எல்லையற்ற கலை நுட்பங்கள் பொதிந்து கிடக்கின்றன. இவற்றை ஆராய்ந்து வெளியிடத் தனிப் பெரும் முயற்சி இன்று மிக இன்றியமையாதது. இந்தக் கருத்தைத் தூண்டுவித்த திரு வைத்தியநாதன் அவர்களுக்கு உலகம் கடமைப்பட்டுள்ளது. அவர்கள் தொடர்ந்து பேசும் ரேடியோப் பேச்சுக்களைக் கூர்ந்து கவனிப்போமாக.

அடையாறு
18-3-58 ரா. விசுவநாதன்



கல்கத்தா மகாநாடு

எஸ். வி. எஸ்.

கல்கத்தாவில் ஆட்சி மொழி மகாநாடு நடைபெறப் போவதாகச் செய்தி வந்ததுமே சென்னை நகர மக்களுக்கு அளவு கடந்த உற்சாகம் ஏற்பட்டு விட்டது. அதிலும் நம் தலைவர் ராஜாஜி இந்த ஆட்சிமொழி மகாநாட்டில் கலந்து கொள்கிறார் என்றவுடன் தமிழ் நாட்டு மக்கள் இந்த இயக்கம் வெற்றி பெற்று விட்டதாகவே நினைக்க ஆரம்பித்து விட்டனர். இந்த மகாநாடு நடைபெறுவதற்கு ஒரு வாரத்துக்கு முந்தியே சென்னையில் சாலைகளிலும் வீடுகளிலும் மின்சார ரயில் வண்டிகளிலும், ரயில் வண்டி நிலையங்களிலும் சந்தித்த நண்பர்கள் எல்லாம் ஒரே ஒரு கேள்விதான் திரும்பத் திரும்ப என்னைக் கேட்டார்கள்.—''என்ன ஸார், நீங்கள் கல்கத்தா போகிறீர்கள், இல்லையா?'' அவர்கள் கேட்ட தொனியிலிருந்து கல்கத்தாவில் ஆட்சி மொழி மகாநாடு நடைபெறவிருந்த மார்ச்சு 8, 9 தேதிகளில் நான் சென்னையிலிருந்தால், என்னைச் சும்மாவிட மாட்டார்கள் என்று தோன்றியது. இந்த நண்பர்களிடம் தப்பித்துக் கொள்ளும் நோக்கத்துடன் மார்ச்சு 5ம் தேதி மாலை கல்கத்தா மெயிலைப் பிடிக்க ஓடினேன்.

மனிதனுடைய வாழ்க்கையில் அவ்வப்பொழுது எதிர்பாராத இன்பங்கள் நேர்கின்றன. அதைப் போல், அன்று நான் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் போய் ரயில் புறப்படுவதற்கு இரண்டு நிமிஷங்களுக்கு முன் சென்னையிலிருந்து வேறு யாராகிலும் நண்பர்கள் வருகிறார்களா என்று ரயில் பெட்டி ஒவ்வொன்றாகத் தேடிக் கொண்டு போனேன்.

''இத்தனை நாழிகையாகி விட்டதே! எங்கே வராமலிருந்து விட்டீர்களோ என்று பயந்தேன். வந்து விட்டீர்களா? ரொம்ப சந்தோஷம்!'' என்ற குரல் கேட்டுத் திரும்பினேன். நண்பர் திரு அ. சுப்பையா, திரு அமிர்த கணேசன், பேராசிரியர் டாக்டர் எம். ரத்தினசுவாமி மூவரும் நின்று கொண்டிருந்தனர்.

சென்னையில் டிசம்பர் மாதம் நடைபெற்ற ஆட்சிமொழி மகாநாட்டை வெற்றிகரமாக நடத்தியவர்கள் இவர்கள் என்பது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். ஆட்சி மொழி இயக்கத்தின் காரியதரிசிகளாகத் திருவாளர்கள் அ. சுப்பையாவும் அமிர்தகணேசனும், மகாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக டாக்டர் எம். ரத்தினசுவாமியும் பணியாற்றியது நினைவிருக்கலாம்! இவர்களும் கல்கத்தா மகாநாட்டுக்கு வருகிறார்கள் என்றவுடன் என் உற்சாகம் எப்படியிருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை!

கல்கத்தா ரயில் நிலையம்

கல்கத்தா ரயில் நிலையத்துக்குள் ரயில் நுழைந்தபோது, எனக்குப் பெருத்த ஏமாற்றமாகப் போய் விட்டது! பிளாட்பாரத்தில் மகாநாட்டைச் சேர்ந்தவர்கள், கல்கத்தா நண்பர்கள் எல்லோரும் வந்திருப்பார்கள்; முகமலர்ச்சியுடன் வரவேற்கக் காத்திருப்பார்கள் என்று நினைத்தால் அங்கு பிளாட்பாரத்தில் ஒருவரையும் காணோம். எங்களை வரவேற்கத்தான் ஒருவரும் வரவில்லை என்றால், மற்றப் பிரயாணிகளையாகிலும் வரவேற்க அவரவர்கள் நண்பர்கள் உறவினர்கள் வந்திருக்கலாம் அல்லவா? அவர்களையும் காணோம். பிளாட்பாரத்தில் சிவப்புச் சொக்காய்கள் அணிந்த கூலிகளைத் தவிர வேறு ஒருவரையுமே காணோம்.

கல்கத்தா இந்தியாவிலேயே மிகப் பெரிய நகரம். அதை முதன் முதலில் பார்க்கப் போகும் எனக்கு இப்படி வெறிச்சோடிய

பிளாட்பாரத்தைப் பார்த்தால் எவ்வளவு ஏமாற்றமாக இருந்திருக்கும் என்பதை நேயர்கள் ஊகித்துப் பார்த்துக் கொள்ளலாம். மெள்ள போர்ட்டரிடம் சொல்லி, என் சாமான்களை யெல்லாம் கீழே இறக்கி வைத்து, சற்று நேரம் நின்றேன்! அவ்வளவுதான்! ஒரு பெரும் படை எடுத்து வருவதுபோல் எங்கள் பிளாட்பாரத்தை நோக்கிப் பெருந் திரளாக மக்கள் ஓடி வந்தார்கள்! ஏன் இப்படி ஓடி வருகிறார்கள் என்று கூர்ந்து பார்த்தபோது, வந்தவர்களுக்கு எவ்வித துராக்கிரமமான நோக்கமுமில்லை என்பது தெரிந்தது. ஏனெனில் அப்படி வந்தவர்களில் சிலர் ஆட்சி மொழி மகாநாட்டைச் சேர்ந்தவர்கள்; இன்னும் சிலர் என்னை வரவேற்க வந்த சில நண்பர்கள். மற்றவர்கள், மற்றப் பிரயாணிகளைப் பார்க்க வந்தவர்கள் என்பது தெரிந்தது. இத்தனை நாழிகை இவர்கள் எங்கே யிருந்தார்கள்? ஏன் இப்படி ஓடி வந்தார்கள் என்று நான் திணறிக் கொண்டிருந்தபோது, என்னைப் பார்க்க வந்த நண்பர்கள் விஷயத்தை விளக்கி விட்டார்கள்.

''இந்த மெயில் சாதாரணமாக வேறொரு பிளாட்பாரத்தில் வருவது வழக்கம். அங்கு தான் நாங்கள் நின்று கொண்டிருந்தோம். ஆனால் இந்தப் பிளாட்பாரத்தில் வண்டி வந்தான பிறகு, மெள்ள, 'இங்கு வண்டி வந்து நிற்கிறது' என்று ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கிறார்கள். எப்படி யிருக்கிறது பார்த்தீர்கள் அல்லவா, நிர்வாகம்?''

பாரததனை, இன்று ஊழல எவவளவு நன்றாக இணைத்து வைத்திருக்கிறது என்று நினைத்துக் கொண்டேன்!

பிறகு சற்று நேரத்துக்கெல்லாம் கல்கத்தா மகாநாட்டின் காரியதரிசி திரு கே. கே. சின்ஹா என்னை முகமலர்ச்சியுடன் வரவேற்றார். தம்முடன் வந்து தங்குமாறு கேட்டுக் கொண்டார். ஆனால் கல்கத்தாவுக்கு ஒரு தமிழர் போய் விட்டால் நண்பர் திரு ப. ந. தியாகராஜனிடமிருந்து தப்பமுடியாது என்று ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்தேன். பெரிய பெரிய தலைவர்கள் எல்லாரும் அவர் கையில் சிக்கித் திணறியிருக்கிறார்கள் என்றால் என்னைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

என்ன செய்தி?

''ஸார், மிஸ்டர் தியாகராஜன்! நான் பத்திரிகை பார்த்துச் சரியாக இரண்டு நாட்கள் ஆகின்றன. நான் ஏதோ கவனிக்கவில்லை என்று உலகம் ஏதாகிலும் என் மேல் கோபமாக இருக்கிறதா என்ன? உங்களுக்கு ஏதாகிலும் விஷயம் தெரியுமா?' என்று நண்பர் தியாகராஜனைக் கேட்டேன்.

''உலகம் உங்கள்மேல் கோபம் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. எப்பொழுதும் போல்தான் இருக்கிறது! ஆனால் இன்று கல்கத்தாவைப் பொறுத்தவரையில் இரண்டு முக்கியமான செய்திகள் உண்டு!'' என்றார்.

''என்ன?''

''இன்று காலை சீக்கியர்களின் தலைவர் மாஸ்டர் தாராசிங் வந்தார். அவருக்கு அமோகமான வரவேற்பு கல்கத்தா நகரச் சீக்கியர்கள் அளித்தார்கள்!'' என்றார்.

''மாஸ்டர் தாராசிங் இங்கே எதற்கு வந்தார்?'' என்றேன்.

''ஆட்சி மொழி மகாநாட்டில் கலந்து கொள்வதற்குத்தான்!'' என்றார்.

''அவர் வேறு கலந்து கொள்கிறாரா?'' என்று நான் வியப்புடன் கேட்டேன்.

''இந்திக்குக் கடுமையான எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் இந்த அகாலி சீக்கியர்கள்தானே? அவர்கள் பஞ்சாபில் பெரும் போராட்டமே நடத்தி வருகிறார்களே!'' என்றார்.

''தெரியும்! தெரியும்!! அடுத்தாற்போல் வேறொரு செய்தி இருக்கிறது என்றீர்களே, அது என்ன?'' என்று கேட்டேன்.

''இன்று ராஜாஜி டம்டம் விமான நிலையத்தில் வந்திறங்குகிறார் என்ற செய்திதான். பத்தாண்டுகளுக்குப் பிறகு ராஜாஜியைப் பார்க்கப் போகிறோம் என்பதில் அளவு கடந்த குதூகலத்தில் கல்கத்தா நகரமே துள்ளிக் குதிக்கிறது!'' என்றார்.

கல்கத்தாவில் ராஜாஜி, வங்க கவர்னரின் விருந்தினராகத் தங்குகிறார் என்பது ஏற்கெனவே எனக்குத் தெரியும். ஆகவே ''நான் இரவு ராஜாஜியைப் பார்க்கப் போக வேண்டும். பிறகு நான் ராஜபவனத்தில் ராஜாஜியுடன் தங்கி விடுவேன். ராஜாஜிக்குச் சற்று உதவியாக இருக்கலாம் என்பது உத்தேசம்'' என்று என் திட்டத்தைத் தெரிவித்தேன்.

* * *

அன்றிரவு நான் கல்கத்தா ராஜபவனம் சென்றபோது ஆட்சி மொழி மகாநாடு ஆரம்பமாகி விட்டாற்போன்றதோர் உணர்ச்சிதான் ஏற்பட்டது.

அதற்குக் காரணம், வங்க மகாநாட்டைச் சேர்ந்தவர்கள் சிலர், மகாநாட்டில் கொண்டு வர இருக்கும் தீர்மானங்களைப்பற்றி ராஜாஜியுடன் கலந்து பேச வந்திருந்தனர்.

பல தீர்மானங்களைப்பற்றி நுட்பமாக ஆராய்ந்து அவர்களுக்கு விளக்கிச் சொல்ல வேண்டிய பொறுப்பு ராஜாஜிக்கு ஏற்பட்டது. இரவு பதினொரு மணி யாகியும் எடுத்த வேலை முடியவில்லை. இதற்கு மேலும் தாமதித்தல் கூடாது என்று பாக்கி வேலையை மறு நாளைக்குத் தள்ளிப் போட்டு விட்டு அன்றிரவு நண்பர்கள் விடைபெற்றுக் கொண்டார்கள்.

அன்புத் தொல்லை!

மறு நாள் காலையிலும் தீர்மானங்களை உருவாக்கும் வேலை தொடர்ந்து நடைபெற்றது. ஆனால் எனக்கு வேறு ஒருவேலை தான் சரியாக இருந்தது.

என் அறையிலிருந்த டெலிபோன் மணி ஓயாமல் அடித்துக் கொண்டிருந்தது. மணி யடிக்கிறதே என்று எடுத்தால் ''என் பெயர் பி. எஸ். கே. ராய். நான் இங்கு பெரிய பள்ளிக்கூடம் நடத்திக் கொண்டிருக்கிறேன். அதற்கு ராஜாஜிதான் இங்கு கவர்னராக இருந்தபோது அஸ்திவாரம் போட்டார்! அவர் அஸ்திவாரம் பதித்த வேளை பள்ளிக்கூடம் வளர்ந்து மிகச் சிறந்த பணியாற்றி வருகிறது. ராஜாஜி இப்பொழுது இந்தப் பள்ளிக்கூடத்தைப் பார்த்தால் மிகுந்த சந்தோஷப்படுவார். அதனால் அவரை

அழைக்க விரும்புகிறேன்! அவரை எப்பொழுது பார்க்க முடியும்?'' ' என்று கேட்டார்.

''ராஜாஜிக்குத் தற்சமயம் எங்கும் வெளியில்வர சௌகரியப்படாது. மகாநாடு சம்பந்தமான வேலைகளே சரியாக இருக்கும். அதனால் நீங்கள் பார்க்கக்கூட நேரம் ஒதுக்க முடியவில்லை. தயவுசெய்து மன்னிக்கவும்!'' என்று சொல்லிக் கீழே வைப்பேன். அடுத்த கணம் மறுபடியும் டிரிங் டிரிங் என்று சத்தம் கேட்கும்; இது மற்றொரு சங்கத்தைச் சேர்ந்தவராக இருப்பார். ''என் பெயரை ராஜாஜிக்குச் சொல்ல வேண்டியது தான் தாமதம், உடனே என்னைப் புரிந்து கொண்டு விடுவார். அவரை நான் எங்கள் சங்கத்தில் அழைக்க விரும்புகிறேன்'' என்று அந்த மனிதர் அன்யோன்யம் பாராட்டுவார். இவரிடம் ஒரு மாதிரி சமாதானம் சொல்லிக் கீழே வைத்தால் மீண்டும் 'டிரிங் டிரிங்' என்று சத்தம் கேட்கும்!

''நான் ராஜாஜியைத் தரிசிக்க வேண்டுமென்று வெகுதூரத்திலிருந்து வந்திருக்கிறேன். அவர் பாத தூளியைச் சிரசில் தரித்துக் கொள்ள வேண்டும் என்று வந்திருக்கிறேன். ராஜபவன் வாசலிலேயே நிற்கிறேன். ராஜாஜி வெளியில் போகும்போது, ஒருகணம் வண்டியை நிறுத்தினீர்களானால் நான் அவரை வணங்கிக் கொள்வேன்!''

இப்படி ஒரு கணம் விடாமல் போன் வந்து கொண்டிருந்தால் ஒரு மனிதன் என்ன செய்ய முடியும்? இவ்வளவும் ராஜாஜியிடம் வங்க மக்கள் எவ்வளவு மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள் என்பதைக் காண்பிக்கின்றன. அந்த அன்பின் காரணமாக அவர்கள் கோரிக்கைக்கு ராஜாஜி இணங்கக் கூடிய நிலையில் இல்லை என்று சொல்வது எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.

மகாநாடு

அன்று பிற்பகல் நான்கு மணிக்கு மகாநாடு ஆரம்பமாகியது. இந்த மகாநாட்டுக்குத் தேசத்தின் பல பகுதிகளிலிருந்தெல்லாம் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். கல்கத்தா நகரப் பெருமக்கள் ஏராளமாக வந்திருந்தார்கள். இந்த மகாநாட்டுக்கு வருவதற்குக் கட்டணம் வைத்திருந்தார்கள். ஆனால் கட்டணம் வைத்தும் மண்டபம் நிரம்பி வழிந்ததால், வெளியில் வாசலில் தெருவெல்லாம் ஏராளமான மக்கள் நெருக்கி நின்று மகாநாட்டு நடவடிக்கைகளைக் கேட்டுக் கவனித்து வந்தனர்.

முதல் நாள் மகாநாட்டுக்குத் தலைமை வகித்தவர் டாக்டர் ராதா பினோதபால் என்ற வழக்கறிஞர். கல்கத்தா நீதி மன்றத்தில் நீதிபதியாகவும் இருந்திருக்கிறார். கல்கத்தா சர்வகலாசாலையின் துணை வேந்தராக இருந்திருக்கிறார். யுத்தத்தை மூட்டி வளர்த்த அச்சு நாடுகளின் தளபதிகளை விசாரிக்க ஜப்பான் தேசத்தில் நடைபெற்ற நீதி விசாரணையில், டாக்டர் பால் ஒரு நீதிபதியாகப் பணியாற்றி யிருக்கிறார். அத்துடன் மற்ற நீதிபதிகளெல்லாம் இந்தத் தளபதிகள் குற்றவாளிகள், தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்று தீர்ப்புக் கூறியபோது நீதிபதி பால் மாறுபட்ட கருத்தைத் தெரிவித்தார். இவர்கள் தாமாகக் குற்றம் செய்யவில்லை என்று கூறினார். அப்போது அவருடைய புகழ் உலகமெல்லாம் பரவியது. அவர் இந்த மகாநாட்டுக்குத் தலைமை வகித்தது மிகப் பொருத்தமாகவும் சிறப்பாகவும் அமைந்தது.

டாக்டர் பால் அவர்கள் நிகழ்த்திய தலைமையுரை மிக அருமையாக இருந்தது. கருத்தாழம் கொண்டதாக இருந்தது. 1949-ம் ஆண்டிலேயே ஆங்கிலத்தைப் பற்றி மிகத் தெளிவாகப் பேசியிருப்பது யாவருக்கும் பெருவியப்பாக இருந்தது.

அவர் இந்த இயக்கம் ஏன் என்பதைப் பற்றிக் கூறிய மொழிகள் மிகவும் உணர்ச்சியும் வேகமும் கொண்டதாக இருந்தன.

''பொறுப்பற்ற அதிகாரம் ஓரிடத்தில் குழுமி விட்டால் அது சமுதாயத்துக்குப் பெரும் தீங்கு விளைவிக்கக் காரணமாகி விடுவதைப் பார்த்திருக்கிறோம்; அதேபோல் பொறுப்புணர்ச்சியின்றிச் சும்மா சோம்பி உட்கார்ந்திருப்பதும் பேர் அழிவுக்குக் காரணமாகி விடும். அதனால்தான் நாட்டிலுள்ள பெரியோர்கள் எல்லாம், ஓய்வுபெற்று நிம்மதியாக இருக்க வேண்டிய தலைவர்கள், ஆங்கிலமே ஆட்சி மொழியாக வேண்டும் என்ற இந்த இயக்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள்'' என்று கூறினார்.

''நமது தலைவர்கள், தேச ஒற்றுமை என்ற பெயரிலும் நாட்டுக்கொரு பொது மொழி என்ற பெயரிலும் செய்யும் காரியங்கள் பெரிய சர்ச்சையைக் கிளப்பிவிட்டு, நம்மை

இங்கே கூடும்படி செய்துவிட்டன. அவர்கள் செய்யும் காரியங்களைப் பார்த்துக் கொண்டு, நடக்கிறது நடக்கட்டும் என்று சும்மா இருந்து விட்டால் பெரும் ஆபத்துகள் விளையும். அந்த அழிவைப் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. அந்த அழிவுக்குள் நாமே அகப்பட்டுக் கொள்வோம்.''

' உலகில் குறுகிய தேசிய நோக்கங்களோடு, சர்க்கார் நடத்தும் காலம் மலையேறி விட்டது. நாம் உலக மக்கள், உலகப் பிரஜைகள் என்ற எண்ணத்தோடு செயற்பட வேண்டிய காலம் வந்து விட்டது !—'' என்று சொன்னார்.

''பொது மொழி ஒன்று மட்டும் மக்களை இணைத்துவிடுவதில்லை. பலமொழிகள் இருப்பதாலும் வெவ்வேறு தேச மக்களாகப் பிரித்து விடும் என்றும் சொல்வதற்கு இல்லை. பொது மொழி யில்லாத பல மொழிகள் பேசும் மக்கள்சேர்ந்து ஒரு நாடாக இருக்க முடியும். இதை ஆட்சி மொழிக் கமிஷனே ஒப்புக் கொண்டிருக்கிறது. பெல்ஜிய நாட்டில் எல்லாரும் பெல்ஜிய மொழி பேசுவதில்லை. கானடா நாட்டில் எல்லாரும் ஒரே மொழி பேசுவதில்லை. ஐக்கிய தென்னாப்பிரிக்காவிலும் எல்லாரும் ஒரே மொழி பேசுவதில்லை.''

இப்படிப் பல விஷயங்களை அழுத்தம் திருத்தமாகச் சொன்னார் திரு பால்.

அவருக்கு அடுத்தாற்போல் பிராங்க் அந்தோனி பேசினார். பிராங்க் அந்தோனி ஆங்கில - இந்திய வகுப்பைச் சேர்ந்தவர். மக்கள் சபையில் பிரதிநிதியாக இருக்கிறார். இந்தி பேசப்படும் பகுதி என்று சொல்லப்படும் மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். இவரது தாய்மொழி ஆங்கிலம். ஆனாலும் இந்திப் பிரதேசத்தில் வளர்ந்தவர். அதனால் அவருக்கு இந்தி நன்றாகத் தெரியும். அவர் பேசுகையில் ஆட்சி மொழிக் கமிஷன் சிபாரிசுகளைப் பரிசிலனை செய்ய நியமிக்கப்பட்டுள்ள பார்லிமெண்டரி கமிட்டியின் லட்சணத்தைப் பற்றி ஒரு வாங்கு வாங்கினார்! இக் கமிட்டியில் பெருவாரியான பேர்கள் இந்தி பேசும் பகுதியைச் சேர்ந்தவர்கள். இந்தக் கமிட்டித் தலைவராக உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஸ்ரீ பந்த் விளங்குகிறார். இவர்களிடமிருந்து எப்படி நியாயம் கிடைக்கமுடியும் என்றார்.

மேலும், இந்தியை ஆட்சி மொழியாகச் செய்ய வேண்டும் என்ற வெறியில் அவர்கள் சாதாரணப் பாமர மக்களுக்குப் புரியும் இந்தியையும் கடுமையான இந்தியாகச் செய்து வருகிறார்கள். இதற்கு ஒரு ரசமான உதாரணத்தையும் குறிப்பிட்டார். குளிர்ந்த தண்ணீர் என்பதற்குச் சாதாரண இந்தியில் 'டண்டா பானி' என்று பெயர். ஆனால் இப்பொழுதெல்லாம் டண்டா பானியை 'சீதல ஜல்' என்று பாமரர்களுக்குப் புரியாத வார்த்தையாகச் செய்து விட்டார்கள். இந்தி வெறி இப்படிப் போனால் பாமர மக்களோடு தொடர்பு கொண்ட மொழியாக அதை எப்படிக் கருத முடியும்?

இதுமட்டுமன்றி, பம்பாயில் இந்தி வெறியர்கள் பள்ளிக்கூடங்களில் ஆங்கிலம் கற்றுக் கொடுக்காமல் இருப்பதற்கான பலவித இடையூறுகள் செய்து வருகிறார்கள். இது சம்பந்தமாக பம்பாய் நீதி மன்றத்தில் வழக்காடிய போது பம்பாய் நீதிபதி சாக்ளா அவர்களே ஆங்கிலமும் இந்திய மொழிகளில் ஒன்று எனத் தீர்ப்பளித்ததைக் குறிப்பிட்டார். மொத்தத்தில் இந்தி வெறியர்கள் எவ்வளவு அட்டகாசம் செய்கிறார்கள் என்பது பிராங்க் அந்தோனியின் பேச்சில் பிரதிபலித்தது.

அடுத்தாற்போல் பஞ்சாப் சீக்கியர்களின் தலைவர் தாராசிங் பேசினார். பஞ்சாபில் நிலவும் நிலைமையை நேயர்கள் உணர வேண்டும்.

பாரத சர்க்கார் ஒவ்வொரு ராஜ்யத்துக்கும் தங்கள் தங்கள் மொழிகளை வளர்த்துக் கொள்ளப் பூரண உரிமை அளித்திருக்கிறார்கள். அம்முறையில் பஞ்சாப் சர்க்கார் குருமுகி லிபியில் பஞ்சாபியைக் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தார்கள். இதை இந்தி வெறியர்கள் (ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர்கள்) கடுமையாக எதிர்த்துக் கிளர்ச்சி செய்து வந்தார்கள். குருமுகி லிபியே கூடாது என்றார்கள். தேவநாகரி லிபியில் இந்தியைத் தான் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்தார்கள். இந்த வெறியின் காரணமாக, சீக்கியர்களின் கோவில் குளங்களை அசுத்தப்படுத்துவது, புனித நூல்களைக் கிழித்தெறிவது முதலிய இழி தொழில்களில் ஈடுபட்டார்கள். பாரத சர்க்காரும், பாரதப் பிரதமர் நேருஜியும் ஆரியசமாஜிகளின் இந்த அக்கிரமமான போக்கையும் நிலைமையும் எவ்வளவோ கண்டித்துப் பேசியிருக்கிறார்கள்; எழுதி யிருக்கிறார்கள். அறிவு புகட்டி யிருக்கிறார்கள். நேருஜியின் வார்த்தைக்கு மதிப்பு வைக்காமல் வெறியர்கள் வெறியாட்டங்களை நிகழ்த்தி வருகிறார்கள்.

நமது தலைவர் நேருஜியினாலும், பாரத சர்க்காரினாலுமே இந்தி வெறியர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றால், அவர்கள் மூளைக்குள் வெளிச்சம் போட முடியவில்லை என்றால், இவர்களை இப்படியே வளர விட்டால் இந்தி பேசாத மற்ற மொழிகள் பேசும் பகுதிகளில் என்ன அக்கிரமம் செய்ய மாட்டார்கள்? ஆகவே பஞ்சாப் விவகாரம், இந்தி மொழி பேசாத மற்ற மொழிப் பிரதேசங்களுக்கு எச்சரிக்கையாகத் திகழ்கிறது. அதனால் வங்க மகாநாட்டில், மாஸ்டர் தாராசிங் பஞ்சாப் நிலவரத்தை அப்படியே எடுத்துரைத்து, பொதுமக்களுக்குப் புது விழிப்பை உண்டாக்கி விட்டார்.


கடைசியில் ராஜாஜி பேச எழுந்தார். அவர் பேசுவதற்கு முன் ஒரு அன்பரிடம் இந்திய தேசப்படத்தைக் கொடுத்து, ''இதை மேடையில் ஒரு பக்கம் எல்லாருக்கும் தெரியும்படி மாட்டுங்கள்'' என்றார். அவர் ஒரு ஆணியில் மாட்டினார். இந்தி பேசும் பகுதி கறுப்பாகவும், மற்றப் பகுதி சிவப்பாகவும் வர்ணம் பூசப்பட்டிருந்த அந்தப் படத்தைப் பார்த்ததும் படபடவென்று கரகோஷம் வான்அதிர எழுந்தது. அதைக்கண்ட ராஜாஜி ''இந்தி பேசும் பகுதி கண்ணுக்குப் பளீர் என்று தெரிவதற்காகத்தான் கறுப்பு வர்ணம் பூசப்பட்டிருக்கிறதே தவிர, வேறு ஒரு அர்த்தமும் செய்து கொள்ளாதீர்கள்'' என்றார். அப்பொழுது எழுந்த சிரிப்பும் கரகோஷமும் முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாக எதிரொலித்தது. (தொடரும்)

பைலட் பேனாவின் அற்புத மதிப்பிற்கு இதோ ஒரு அத்தாட்சி

சாதாரண பேனாவைவிட, பவுன்டன் பேனாவை உபயோகித்தால் உன் வேலை பாதி நேரத்தில் முடியுமே" என்றார் என் ஆபீஸர். "மட்டக் காகிதத்தில் நல்ல பேனாவால் எப்படி எழுதுவது என்றேன். முதலில் 'பைலட்'டை வாங்கு. அது எந்த காகிதம் மீதும் எழுதும்" என்றார். "அவர் யோசனையை உடனே கேட்டதால் தான் நான் இப்பொழுதெல்லாம் சீக்கிரமாகவே வீடு திரும்பி விடுகிறேன்"

"நான் இப்பொழுதெல்லாம் அநாவசியமாக நீண்டநேரம் வேலை செய்வதே கிடையாது. இதற்கான பெருமை எல்லாம் 'பைலட்'டையே சாரும்" என்கிறார்—சக்ரபாணி.





அநேகமாக மட்ட ரக காகிதத்தை உபயோகித்தே எழுத்து வேலை நடக்கிறது. குறைந்த விலையானாலும் பைலட் பேனா எந்தவிதமான காகிதம் மீதும்-உப்புத்தாள் உள்பட-எழுத வல்லது. அதன் உறுதியான நிப்பு, இறகு பேனா போல் மிருதுவாக எழுதுகிறது.

பைலட்

மட்டமான காகிதம் மீதும் மிருதுவாக எழுதுகிறது பைலட்

நிர்வாக ஆபீஸ்:
பைலட் பென் கம்பெனி (இந்தியா)
பிரைவேட் லிமிடெட்
கத்தோலிக் சென்டர்
அரமனைக்காரன் தெரு, மதராஸ்-1.

தொழிற்சாலை மற்றும் ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:
கதிர்வேடு கிராமம், போலால்,
புழலேரி, செங்கற்பட்டு ஜில்லா.

PP/238 a

விற்பனை மற்றும் ஸர்வீஸ் செய்பவர்கள்:
ஜெம் அண்டு கம்பெனி, 325/326, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு, மதராஸ்-1



இந்தப் படத்தில் இரண்டு கதா நாயகர்கள்; இரண்டு கதா நாயகிகள். படம் முழுவதும் நால்வரும் மாறி மாறி வந்து பங்கு கொள்ளுகின்றனர்.

விடுமுறையில், பிறந்த நாட்டை நோக்கி வரும் சிப்பாய்க்கு ரயிலில் ஒரு ராணுவ அதிகாரியின் நட்புக் கிடைக்கிறது அவரும் அவன் பிறந்த ஊரைச் சேர்ந்தவர். வண்டி புறப்படும் சமயத்தில் விடுமுறை ரத்தாகி விட்டதாக அவசரச் செய்தி வரவே, சிப்பாய் அந்த ராணுவ அதிகாரியிடம் ஒரு பெட்டியையும் விலாசத்தையும் கொடுத்து, பெட்டியை அங்கே சேர்த்து விடும்படி கேட்டுக் கொள்கிறான். ஆனால் அவர் ஊருக்குப் போனதும் விலாசத்தைத் தவறவிட்டு விடுகிறார். சிப்பாயின் தமக்கையையும் அவள் பெண் அல்லியையும் தேடுகிறார். பயன் இல்லை. அல்லி இன்னாரென்று தெரியாமல் அவளிடம் இரக்கமும் அன்பும் கொண்டு ராணுவ அதிகாரி தம் தந்தையையும் மீறி மணந்து கொள்ளுகிறார்.

படத்தின் ஒரு கதாநாயகன் கதை இப்படிப் போகிறது. இன்னொரு கதாநாயகனான சிப்பாயின் கதை வேறொரு திசையில் திரும்பி விடுகிறது. போர்க்களத்தில் குண்டுபட்டுப் படுகாயமுற்று ஆஸ்பத்திரியில் இருந்த சிப்பாய்க்கு அவன் தமக்கையின் கடிதம் வருகிறது. தம்பியிடமிருந்து பணம் வராததால் அவள் வீடு ஜப்தி செய்யப்படும் நிலைமை ஏற்படுகிறது. கடிதத்தைப் படித்த சிப்பாய், வேறு வழியின்றி, ராணுவத்திலிருந்து திருட்டுத்தனமாகத் தப்பி, பிறந்த மண்ணுக்கு வந்து சேருகிறான். வீடு ஜப்தி செய்யப்பட்டு விட்டதும், தமக்கை இறந்து விட்டதும் அவனுக்குத் தெரிய வருகின்றன. அப்பொழுது அவனுக்கு ஓர் ஏழை அநாதைப் பெண்ணின் அன்பு கிடைக்கிறது.

ராணுவ அதிகாரி மூர்த்தியாக ஜெமினி கணேசன் வருகிறார். அவரது உடையும், நடையும் பேச்சும், பாவனையும் அந்தப் பதவிக்கு மிகவும் பொருத்தமாயிருக்கின்றன. சிப்பாய் பாண்டியன் கொடுத்த பெட்டியுடன் மதுரை நகர் முழுவதும் சுற்றி, பாண்டியன் குடும்பத்தைப் பற்றிப் பலரிடம் விசாரித்த மூர்த்திக்கு அல்லியைப் பார்த்ததும் அவளை மட்டும் விசாரிக்கத் தோன்றாததற்குக் காரணம் திரைக்கதை செய்துவிட்ட சதி தான்! அவள் பெயரை அறிந்த பிறகும்கூட மூர்த்தி அவளிடம் பாண்டியனைப் பற்றிப் பிரஸ்தாபிக்காததற்குக் காரணம் என்னவாயிருக்கும்!

சாவித்திரி அல்லியாக நடிக்கிறார். மிகவும் நன்றாக நடித்திருக்கிறார். ஆரம்பத்தில், சுவாமி ஊர்வலத்தில் அவர் ஆடும் நடனத்திலிருந்தே அவர் நடிப்பு நன்றாய்க் களை கட்டி விட்டது. முதலில் இளமைத் துடுக்குடன் இருந்த அல்லி படத்தின் பிற்பகுதிகளில் பணிவும் பதவிசும் கொண்ட பத்தினியாக மாறி விடுகிறாள். சாவித்திரி எல்லாக் கட்டங்களிலும் குறை கூற இடம் வைத்துக் கொள்ளவில்லை.

சிப்பாய் பாண்டியன் பாகத்தைச் சிவாஜி கணேசன் ஏற்று எல்லோரையும் உணர்ச்சிப் பிரவாகத்தில் ஆழ்த்தி விடுகிறார். தமக்கை மகள் அல்லியைத் தேடி அலுத்த சிப்பாய் பாண்டியனின் நிராசையையும் விரக்தியையும் அவர் முக பாவம் நன்கு வெளிப்படுத்துகிறது. அன்பு காட்டிய மருக்கொழுந்திடம் தன் கதையைச் சொன்னபோதும், கடைசியில் அல்லி யாரென்று தெரிந்து உள்ளம் குமுறிய போதும் சிவாஜி கணேசன் தமக்கே உரிய உருக்கமான நடிப்புத் திறமையை நன்கு வெளிப்படுத்துகிறார். கடைசியில், மூர்த்தியைத் தீர்த்துக் கட்டும் தீர்மானத்துடன் கையில் துப்பாக்கியுடன் விரைந்தபோதும், அவனுடன் போரிட்டபோதும் அவர் நடிப்பு மெச்சத்தக்கதாயிருக்கிறது. "பெண்ணின் பெருமை"க்குப் பிறகு இரண்டு கணேசர்களும் சேர்ந்து தோன்றும் படம் இதுதான். இந்தப் படத்தில் இருவருக்கும் நல்ல பாகங்கள், பொருத்தமான பாகங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இருவரும் நன்றாக நடித்திருக்கின்றனர். பாண்டியனும் மூர்த்தியும் துப்பாக்கிப் போர் நடத்தியபோது மூர்த்தியிடம் துப்பாக்கி ரவைகள் தீர்ந்து விடுகின்றன. மூர்த்தி மார்பைத் துப்பாக்கிக்கு நேராகக் காட்டுகிறான். அப்பொழுது ஜெமினி கணேசனின் நடிப்பு சிறந்து விளங்குகிறது. சிவாஜி கணேசனின் சிறு ஆவேசச் சொற்பொழிவுக்குப் பின்பு இருவரும் நண்பர்க



ளாகித் தழுவிக் கொள்ளுகின்றனர். அப்பொழுது இரண்டு கணேசர்களுக்கும் 'சபாஷ்' போடத் தோன்றுகிறது.

அநாதைப் பெண் மருக்கொழுந்தாக நடிக்கும் எம். என். ராஜம் இந்தப் படத்தில் முக்கியமாகத் திகழ்கிறார். அழுத்தமாகப் பேசிப் பொருத்தமாக நடிக்கிறார். அவர் நடிப்பு யாருடைய உள்ளத்திலும் சுலபமாக இடம் பெறுகிறது. அவர் வரும் கட்டங்களை எதிர்பார்க்கத் தோன்றுகிறது. ஆனால் அவருக்கு, பாத்திரத்துக்குப் பொருத்தமான 'மேக்கப்' செய்யப்படவில்லை. உழைத்து ஊதியம் பெறும் ஓர் அநாதைப் பெண்ணுக்கு அத்தனை 'ஸ்டைல்' தேவையில்லை.

நன்றி விசுவாசமுள்ள வேலைக்காரனாக வரும் டி. எஸ். பாலையாவின் இணையற்ற நடிப்பைப் பார்க்கும் போது 'பாலையா பாலையாதான்!' என்று சொல்லத் தோன்றுகிறது. நன்றாக வாரப்படாத அவரது கிராப்புத்தலை, சோர்ந்துவிட்ட மீசை, பாத்திரத்துக்கு ஏற்ற பேச்சு, வேலைக்காரனுக்குரிய சாதாரண உடை இவை யாவும் அவருடைய நடிப்புடன் சேர்ந்துகொண்டு அமர்க்களப் படுத்துகின்றன. 'டாண் டாண்' என்று அவரது பேச்சில் விழும் ஹாஸ்யங்கள் நன்றாயிருக்கின்றன. நல்லவனாக இருந்த அவர் எஜமானனின் பேச்சைக் கேட்டு இழி நிலைக்கு மாறாமல் இருந்திருந்தால் பாத்திரத்தின் குணசித்திரம் பாழாகியிருக்காது.

மூர்த்தியின் தந்தையாக வரும் தங்கவேலு தான் படத்தின் வில்லன். நல்லவர்களுக்குக் கெடுதல் செய்வதுதானே வில்லனின் முக்கியமான குண விசேஷம்! அதைப் படம் முழுவதும் கையாண்டு தங்கவேலு எல்லோரையும் சிரிக்கவும் வைக்கிறார்; கடைசியில் எல்லோரையும் பைத்தியமாக அடிக்கிறார்!

வேண்டாத பகுதிகள்

பாண்டியன் ரிக்ஷாக்காரனாக மாறியதும் அவனது சகாக்களும் பல பெண்மணிகளும் சேர்ந்து ஒரு பெருங் குழு நடனம் நடத்துகின்றனர். அத்தனை பெண்மணிகள் எங்கிருந்து வந்தார்கள்? நம்நாட்டு ரிக்ஷா ஸ்டாண்டுகளில் அத்தகைய நடனம் நடக்கக் கூடியதுதானா? ஏழைகள் புரியும் களி நடனமாகவே அது இல்லை. அலங்காரத்துடன் தோன்றும் மேற்படி பெண்மணிகள் அணிந்திருக்கும் உடைகளைப் பார்த்தால் கைத்தறிப் புடவைக் கண்காட்சியைப் பார்ப்பதுபோல் இருக்கிறது. இந்தக் காட்சி தேவையேயில்லை.



பாண்டியனும் அல்லியும் பேசிக் கொண்டிருப்பதை அரைகுறையாகக் கேட்டுவிட்டு மூர்த்தி அவர்கள்மீது தகாத உறவு முறையைக் கற்பித்துக் கொண்டு ஓடியிருக்க வேண்டாம். அது நல்ல கதைப் போக்கைக் கெடுக்கிறது.

கலைப்பித்தனாக வரும் சந்திரபாபு பலவித நடனங்களையும் ஆடிக் காட்டுகிறார். கணத்துக்குக் கணம் மாறும் அவரது முக பாவங்களை மறக்கவே முடியாது. அவர் ஒரு பிறவிக் கலைஞர். ஆனால், பச்சைக் கொத்துமல்லியின் வாசனையை மெச்சிப் பன்னீர் ரசத்தில் போடலாமே தவிர, பால் பாயசத்தில் போடமுடியாதல்லவா? ''பதிபக்தி''யுடன் தொடர்பேயில்லாத அந்த நிகழ்ச்சியைப் புகுத்தினதன் காரணம் புரியவில்லை.

கதை, வசனம் எழுதியவர் எம். எஸ். சோலைமலை. வசனம் நன்றாயிருக்கிறது.

இரண்டாம் கல்யாணத்தின் போது மூர்த்தி மாடியிலிருந்து விசியெறிந்த மாலை கீழே நின்ற அல்லியின் கழுத்தில் விழுவதாகக் காட்டியிருப்பது நன்றாயிருக்கிறது. அல்லியும் மூர்த்தியும் 'மருதாணி'யில் கைகளைப் பதிந்து சுவரில் வைப்பதும், பிறகு வெள்ளையடிக்கும் போது அவைகள் மறைந்து போவதும் மனத்தை உருக்குகின்றன. டைரக்டர் ஏ. பீம்சிங்கின் திறமையைப் பாராட்ட வேண்டியதுதான்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் இயற்றியிருக்கும் பாடல்களில் ''வீடுநோக்கி ஓடுகின்ற நம்மையே'' என்ற பாட்டும், ''இரைபோடும் மனிதருக்கே'' என்ற பாட்டும், ''சின்னஞ் சிறு கண் மலர்'' என்ற பாட்டும் நன்றாயிருக்கின்றன.

போன் : 55704 தந்தி : "RAJWASTE"

கே. ஏ. ராஜா

வேஸ்ட் பேப்பர் வியாபாரி

காரியாலயம் : 64, ஆச்சாரப்பன் தெரு, சென்னை - 1
கிளை : 8, வரதா முத்தியப்பன் தெரு, சென்னை - 1
பிரிக்குமிடம் : 16, புட்டிசாஹிப் தெரு, சென்னை - 1

கீழ்க்கண்ட ஸ்தாபனத்திற்கு மூலப்பொருள் சப்ளை செய்பவர்கள் :

மெஸர்ஸ். ரோடாஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

டால்மியாநகர், பீஹார்

உபயோகமற்ற காகிதங்களை விற்பனை செய்ய விரும்பும் காரியாலயத்தினரும், மற்றவர்களும் எங்களுடன் தொடர்பு கொள்ளலாம்

எமது நியாயமான விலையைக் கருதி எங்களிடம் தொடர்பு கொள்ளுங்கள்



பாவுஸேரி பெனிபிட் சிட் பண்டு

(பிரைவேட்) லிமிடெட்

5. சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி
தபால் பெட்டி நெ. 414 ... ம த ரா ஸ் - 5
தந்தி : 'EVERMANS' ... போன் : 85834

சேரக் கடைசி தேதி 9 - 4 - 1958 ... முதல் ஏலத் தேதி 11 - 4 - 1958

25 மாதங்கள் | **மாதாந்திர சீட்டுகள்** (2 - வது வெள்ளிக்கிழமை ஏலங்கள்) | 25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	E	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	F	ரூ. 15/-	ரூ. 375/-
D	ரூ. 25/-	ரூ. 625/-	G	ரூ. 10/-	ரூ. 250/-

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப்படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது.

(போர்டார் உத்திரவுப்படி) எம். வி. சுப்பிரமணியம், மானேஜிங் டைரக்டர்

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

டெல்லி கிளை ஆபீஸ் : 8. 6, பிளாக் III ஆஸப் அலி ரோடு, புது டெல்லி - 1	பெங்களூர் கிளை ஆபீஸ்: "ஜெனகத் பில்டிங்ஸ்" விக்டர் ஜுப்லி பார்க் ரோட், பெங்களூர்-2	பம்பாய் கிளை ஆபீஸ் : "விஜயவிஹார்" 17-A, லயான் - மாதுங்கா எஸ்டேட் (கிங் ஸர்க்கிள் ரெயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில்) பம்பாய் - 22

கைப் பிடித்த கை

வாசவன்



அப்பொழுதுதான் வண்டிக் கூலியில் ஓர் அணாவைப் பிடிவாதமாகக் குறைத்துக் கொடுத்துவிட்டு, வண்டியிலிருந்து இறக்கிய பரங்கிக் காய்களை ராகம் போட்டு எண்ண ஆரம்பித்தார் அருணாசலம்.

பந்தல் முகப்பில் சரிந்து கொண்டிருந்த வாழை மரங்களை நிமிர்த்தி வைக்கும் பணியில் நாலைந்து பேருடன் ஈடுபட்டிருந்தான் அருணாசலத்தின் மூத்த மகன் ராமசாமி.

கடைக்குட்டிக் கண்ணனுக்கும் வேலை இல்லாமல் போகவில்லை. எப்படியோ புத்திசாலித்தனமாய் வாழை மரத்திலிருந்து ஒரு பட்டையை உரித்துக் கொண்டு தெருமுனைக்கு ஓடிப் போய்த் தரையில் வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தான்.

'ஒற்றைக் கை' மனுஷியான மங்களத்துக்கும் வீட்டுக்குள் ஆயிரம் வேலைகள் இருந்தன. உக்கிராண அறையில் சாமான் அடுக்குகளில் இனம் தெரியும்படியாக 'லேபிள்' எழுதி ஒட்டுவது, இரவல் வாங்கி வந்த பாத்திரங்களில் உடையவர்களின் பெயரைச் சுண்ணாம்பால் எழுதுவது, குறுக்கும் நெடுக்குமாக வந்து கேட்பவர்களுக்குப் பதில் சொல்வது என்ற தினுசில் ஒரு கணமும் உட்கார நேரமில்லாமல் ஓடியாடிக் கொண்டிருந்தாள்.

காலையிலிருந்தே தூர தேசத்திலிருந்து பந்துக்கள் வந்து கொண்டிருந்தனர். அவர்கள் பேச்சுக்களும், காரியங்களில் கலந்து கொள்வதைப் பறையறிவிக்கும் அவர்களுடைய ஆரவாரமும் சேர்ந்து வீட்டைக் கல்யாண களையைத் துளிர்க்க வைத்தன.



இரண்டு மணிக்கெல்லாம் வரும் வடக்கத்தி ரயிலில் மாப்பிள்ளை வீட்டார் வந்து இறங்கி விடுவார்கள். அவர்களுக்கென ஏற்பாடு செய்திருந்த ஜாகை எதிர்ச்சாரியில் சிவன் கோயிலை அடுத்து இருந்தது. அந்தத் திசையை நோக்கியபடியே ஒரு தினுசாய்ப் பரங்கிக் காய்களை எண்ணி முடித்துத் தலைநிமிர்ந்த அருணாசலம், ''எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன், ஐயா! மாப்பிள்ளை ஜாகையை இன்னொரு தடவை போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள்'' என்று கூறிய தவசிப் பிள்ளையை நோக்கினார். திருப்தியுடன் அவன் முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு எதிர்ச்சாரியை நோக்கிக் கிளம்பினார்.

வாழைமரம் முகப்பில் நிமிர்ந்து நின்றது. ராமசாமிக்கு அதிலே பரம திருப்தி. நெற்றியில் வழிந்த வியர்வையை அவன் ஆயாசத்துடன் துடைத்துவிட்டுக்கொண்டபொழுது,



மங்களம் இரைக்க இரைக்க அங்கே ஓடி வந்தாள். ''ராமு! இப்படி நின்று கொண்டிருந்தால் எப்படி? மாப்பிள்ளை அழைப்புக்கு மேலமங்கலத்தான் கார் கொண்டு வருகிறானா இல்லையா என்று கேட்டுவிட்டு வா'' என்று அவளும் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

ராமசாமி வியர்வையில் நெஞ்சோடு ஒட்டிக் கிடந்த பனியனை இழுத்துச் சரிப்படுத்திக் கொண்டு கிளம்பினான்.

மங்களம் ஒரு முறை பெருமிதத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தாள். எல்லாம் திருப்தியாகவே நடந்திருக்கின்றன. ஒரே வாரத்துக்குள் எத்தனை காரியங்கள் மளமளவென்று நடந்து விட்டன? ஜானகி அதிர்ஷ்டக்காரிதான்! கண் நிறைந்தவன், கை நிறையச் சம்பாதிப்பவன் அவள் செய்யாத தபசுக்குப் பரிசாகக் கிடைத்திருக்கிறான். நாளைக்குப் பொழுது விடிந்ததும் கொட்டும் பனி என்பதையும் பார்க்காமல் முப்பத்து முக்கோடி தேவர்களும் ஜானகியை வாழ்த்தி இந்த வீட்டு வாசலில் வந்து காத்துக் கொண்டு



நிற்க வேண்டும். என்ன இருந்தாலும் ஜானகி கொடுத்து வைத்தவள். அவளைப் போல இருக்கக் கூடாதோ மூத்தவளும்?

மங்களத்தின் மனம் பிசைந்தது. பசுமையான பந்தல் வாழை அவள் கண்களில் அசைந்தது. நாளைக்கோ நாளைக் கழித்தோ கருகி விடப் போகிற அந்தப் பசுமை, மங்கள விழைவினைக் குறிக்கும் சின்னமாய் வாசலில் இலைக் கரம் நீட்டிச் சிரிக்கிறது. அதைப்போல வாடிப் போன வாழ்க்கையை உள்ளில் வைத்து, வெளியில் இளமை பூரித்து நிற்கும் மீனாக்ஷி, மங்களத் தோரண வாயிலுக்குள் இனியொரு தடவை நுழைவாளா?

மங்களத்தின் கண்கள் கசிந்தன.

''பெரிய மாப்பிள்ளை வருவாரோ?''

எங்கேயோ உடைந்து கொண்டிருந்த மங்களம் மூச்சைப் பிடித்துக்கொண்டு நிதானத்துக்கு வந்தாள். பட்டாமணியம் பரமசிவம் எதிரே நின்று கொண்டிருந்தார்.

மங்களம் அசட்டுச் சிரிப்பு சிரித்தாள். ''மச்சினி கல்யாணத்துக்கு வராமல் இருப்பாரோ? வந்து விடுவார். உள்ளே போய்ச் சந்தனம் வாங்கிக் கொள்ளுங்கள்.''

பரமசிவம் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு நகர்ந்தார். வருகிறவர்கள் வந்த ஜோலியைக் கவனிப்பதில்லை. உதட்டைப் பிதுக்க அவர்களுக்கு ஒரு பேச்சு வேண்டும். கல்யாணம் முடியுமட்டும் ஓய்ந்து மாளாத இந்தப் பேச்சுக்கு, மீனாக்ஷி கழுத்தில் கட்டிக் கொண்டிருக்கிற தாலிதானா உருள வேண்டும்?

மங்களம் அயர்வுடன் உள்ளே திரும்பினாள். தவசிப்பிள்ளை சமையல் விஷயமாக ஏதோ கேட்கப் பின்னால் ஓடி வந்தான். பால்காரன் வெள்ளை, தண்ணீரை எங்கிருந்தோ தேடிப் பிடித்துக் கொண்டு வந்து ஊற்றி விட்டதாக வீராயிப் பாட்டி புகார் கொண்டு வந்தாள். மங்களம் ஒன்றையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. மடமடவென்று மாடிப்படியில் ஏறிப் போனாள். தலைப் பின்னல் தளர்ந்து குழைவதாகச் சிணுங்கிய ஜானகியையும் தள்ளி விட்டு மேலே போனாள்.

அவள் நினைத்தது வீண் போகவில்லை. கதவு மூடித்தான் இருந்தது. கை ஓயுமட்டும் கதவைத்தட்டினாள். தாள் நீங்கிக் கீச்சிடவில்லை.

சோர்வுடன், ''மீனாக்ஷி'' என்று கத்தினாள்.

பதிலாகக் கிடைத்தது நீண்டு விண்டதொரு விம்மல் சத்தம்தான்.

''அசட்டுப் பெண்ணே! கதவைத் திற.''

உள்ளிருந்து பதில் வந்தது. ''திறக்க மாட்டேன்'' என்று.

''ஏன்?''

''நான் வாழ்கிறவர்கள் முகத்தில் விழிக்க வேண்டாம்.''

''விழித்தால்...?''

''என் நிழல் அவர்கள் மேலேயும் விழுந்து விடுமல்லவா?''

''யார் சொன்னார்கள் அப்படி?''

''ஜானகி சொன்னாள். அவள் வாழ வேண்டும் என்பதில் எனக்கு நிறைய ஆசை இருக்கிறது. கல்யாணம் முடியும் வரையில் என் நிழலை இந்த அறைக்குள்ளேயே அடைத்து வைத்துக் கொள்கிறேன்.''

''சீ, இதென்ன முரண்டு? கதவைத் திறக்கப் போகிறாயா, இல்லையா?''

''முன்பே சொல்லி விட்டேன். 'அம்மா! நீ என்னை வற்புறுத்தினாயானால் என்னை முடித்துக் கொள்ள இங்கே உத்தரமும் ஒரு முழக் கயிறும் இருக்கின்றன.''

மீனாக்ஷியின் குணம் பெற்றவளுக்குத் தெரியாதா? அவளுக்குப் பேசுவது எல்லாமே தீர்மானம்தான். அதை நிறைவேற்றிக் கொள்ளவோ, தாங்கிக் கொள்ளவோ அவள் உள்ளத்துக்கு வலுவிருந்தது. மங்களம் உண்மையிலேயே அதிகம் பயந்து போனாள். ''மீனு! இந்த வீட்டிலே ஒரு சமயத்தில் இரண்டு காரியங்கள் நடக்க வேண்டாம். நடக்கிற காரியத்தை உன் தங்கைக்காக விட்டுக் கொடு.''

''நான் யார் பாதையிலும் வழிமறித்துக் கொண்டு நிற்கவில்லை. என் பாதையிலும் யாரும் வரவேண்டாம்.''

மங்களம் விதியை நினைத்து நொந்தவளாய்த் திரும்பி நடந்தாள்.

ஜானகி இன்னும் மெத்தைக் கைப்பிடியின் அருகில் சிணுங்கிக் கொண்டு நின்றிருந்தாள்.



அவளுக்குக் கொஞ்சம் வாய் அதிகம். எதையும் வைத்துப் பேசும் பக்குவம் அவளுக்கு வரவில்லை: விளைவு விபரீதமாகும்பொழுது விழுந்து விழுந்து அழுவாள். குழந்தை. பச்சைக் குழந்தை!

மங்களம், ஜானகியின் முன்னால் வந்து நின்றாள். காரிய நெருக்கடியிலும் புன்னகை பூக்கும் அவள் அதரங்களில் கோபம் காய்த்திருந்தது.

"மீனாட்சியை என்ன சொன்னாய்?"

"நான் என்ன அம்மா சொன்னேன்? அக்கா வாழ்க்கைக்காக ஏங்குபவளாம். சந்தோஷமாக இருக்கிறவர்களைப் பார்த்தும் புழுங்குபவளாம். இப்படித்தான் சொன்னாள் ஓதுவார் வீட்டுக் குருவம்மாள். எனக்கு ஆச்சர்யமாயிருந்தது. எங்கேயாவது தங்கையைக் கண்டு அக்கா கரித்துக் கொட்டுவாளா? இதை மீனாட்சியிடமே தெரிந்து கொள்ள விரும்பினேன்."

மங்களத்துக்கு உண்மை புரிந்தது. வழக்கம் போல ஜானகி வாயால் கொட்டி விட்டாள் என்பது தெரிந்தது!

அறைக்குள், குமைந்த இருளில், முள்ளாகக் குத்திய கட்டிலில் முகம் புதைத்து விசித்துக் கொண்டிருந்தாள் மீனாட்சி.

தங்கையின் கல்யாணத்தில் ஓடியாடி உற்சாகமாக வேலைகளைச் செய்ய வேண்டியவளல்லவா அவள்? கொண்டவன் பெருமை இருந்திருந்தால் ஓட்டக் குதிரையாகி, அந்தக் கல்யாண வீட்டை ஒன்பது வளையம் சுற்றி வந்திருப்பாள்.

அவள் வாழ்க்கையில் மூளிபட்ட குதிரை. அறையில் புழுங்கிச் சாக வேண்டிய நிலை இன்று நேற்று வந்ததா? விளையாட்டுப்போல ஏழு வருஷங்களாகி விட்டன.

மீனாட்சி கல்யாண வயதை அடைந்த பொழுது குடும்பத்துக்கு அவள் ஒரு பிரச்னையாக நின்றாள். நிலம் நீச்சென்று ஊரையெல்லாம் வளைத்துப் போட்டிருந்த அருணாசலம் இந்த விஷயத்தில் திணறினார். மங்களமோ 'என் மகளுக்கென்று ஒருவன் பிறக்கவேயில்லையா?' என்று அம்பிகையின் முன்னால் நின்று உருகினாள். "எப்பொழுது உங்கள் வீட்டிலே எங்களுக்குக் கல்யாணச் சோறு?" என்று ஊர்வாசிகள் கேட்டனர். மீனாட்சி மட்டும் தனக்கு ஒருவன் முன்பே பிறந்திருக்கிறான் என்று தீர்மானமாக நம்பினாள். உள்ளத்து உணர்வில் அந்த ஒருவனைத் தேடித் தபசும் இருந்தாள்.

நீண்ட நாட்கள் பெற்றோரின் பொறுமையைச் சோதித்த பிறகு, அவளது தவம் பலித்து விட்டது.

அவர்கள் இனத்தில் கல்லூரியில் கால் வைப்பவர்கள் அபூர்வம். அந்தப் பையன் கால் வைத்ததோடு கவுன் மாட்டிப் பட்டமும்

பெற்றவனாக இருந்தான். தகுதிக்கு அது ஒன்றே போதாதா? ஓய்ந்து போயிருந்த அருணாசலம் எழுந்து உட்கார்ந்தார். பையனை வரும்படி எழுதச் சொன்னார்.

சாமிநாதன் பட்டணத்திலிருந்து வந்தான. அழகையும், இளமையையும், சுபாவத்தையும் கூடவே அழைத்துக் கொண்டு வந்தான். பிள்ளை பெண்ணைப் பார்த்தான். பெண் பிள்ளையைப் பார்த்தாள். செய்த தபசுக்குக் கிடைத்த அந்த ஒருவன் இவன்தான் என்னும் உணர்வு அவள் பெண்மையில் பொங்கியது. உணர்வில் கலந்தவர்கள் உணர்வில் கலந்தார்கள்; உயர்வில் கலக்கும் பெரியவர்கள் உயர்வில் கலந்தார்கள். எல்லாக் கலவையும் கலந்த சாமிநாதன் அத்தராக மணம்வீசினான்.

காரியம் மளமளவென்று நடந்தது. மன நிறைவோடு மஞ்சள் கயிற்றைப் பாக்கியமாகப் பெற்றாள் மீனாட்சி.

அன்றிரவு பாலும் பழமும் கொண்டு அறைக்குள் நுழைந்த மீனாட்சியின் கையைப் பிடித்தான் சாமிநாதன். மெய்ம்மறந்து புளகமுற்றாள் மீனாட்சி. அவன் சிரித்தான். அது பிணைப்பில் மோதி வரும் கிணுகிணுத்த சிரிப்பல்ல; இதயத்தை நொறுக்கி வரும் வெறிச் சிரிப்பு.

சிரிப்பதற்காகச் சிரிக்காமல், சிரிக்க வேண்டாததற்காக ஏன் சிரிக்கிறான்? மீனாட்சிக்குப் புரியவில்லை.

சாமிநாதன் இன்னும் சிரித்துக் கொண்டே இருந்தான். அந்தச் சிரிப்பில் ஆயிரம் ஆசைகளை வைத்துக் கனத்துப் போயிருக்கும் மீனாட்சியின் இதயம் சுழன்றது. இன்ப மணம் கமழும் ஊதுபத்தி, மலர்விரித்த மஞ்சம், தின்பண்டங்கள் அனைத்தும் சுழன்றன.

மீனாட்சியின் இமைகள் படபடத்தன. ''ஐயோ, சிரிக்காதீர்கள்!''

சிரிப்பு நெஞ்சுக்குள் மோதி உடைந்தது. தேவையில்லாத அமைதி அசந்தர்ப்பமாகச் சூழ்ந்தது. மீனாட்சிக்கு இன்னும் நடுக்கம் குறைந்தபாடில்லை.

''மீனாட்சி......!'' என்று முதல் முறையாக அழைத்தான்.

மீனாட்சி நீர் வீழ்ந்த விழிகளைத் தூக்கிப் பார்த்தாள்.

''நான் உனக்குச் சரியான கணவனல்ல, மீனாட்சி! நான் உன்னை ஏமாற்றி விட்டேன். நீ ஏமாந்து போனாய்! உன் பைத்தியக்காரத் தனத்தைக் கண்டு நான் சிரிக்காமல் இருக்க முடியுமா?'' என்றான்.

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? உங்கள் கைப்பிடிக்க நான் எத்தனையோ காலம் தவம் இருந்தேன்'' என்று தேம்பினாள்.

''பைத்தியக்காரி! இந்த அழகான உடம்புக்குள் விஷத்தை நிறைத்து வைத்திருக்கிறேன். நான் கேடு கெட்டவன். என்னைத் தொட்டால் பாவம்...'' என்று சற்று விலகி நின்றுகொண்டு மீனாட்சியைப் பார்த்தான். அவளிலிருந்து அவன் பார்வையை மீட்டுக் கொள்ள முடியவில்லை. விழிகளின் வெடிப்புக்குள் அவளை வைத்து விழுங்கி விடுவதைப் போலப் பார்வை அகன்றது.

மீனாட்சி அலறினாள். ''ஐயோ! என்னை அப்படிப் பார்க்காதீர்கள்!''

''மீனாட்சி! முதலில் உன்னில் உன்னைத்தான் பார்த்தேன். இப்பொழுது உன்னில் நீ தெரியவில்லை. உலகாண்ட நாயகி மீனாட்சி தேவியே தெரிகிறாள். மீனாட்சி மீனாட்சியாக இல்லை. காளியாகி விட்டாள். கையிலே திரிசூலம் ஏந்தி என்னை விழுங்க வருகிறாள். ஐயோ, அதோ பார்! அவள் கபாலம் ஏந்திய கரங்களை...மீனாட்சி!...என்னைக் காப்பாற்று. இனி உன் வழிக்கு வரமாட்டேன். அந்த மகா காளியைப் போகச் சொல்!'' என்று கண்களை மூடிக்கொண்டு கதறினான்.

''இல்லை; நான் உங்கள் மனைவி. என்னை உங்கள் மனைவியாக நினைத்துப் பாருங்கள். நான் உங்களுக்குத் தெரிவேன்!'' என்று அவனை உலுக்கினாள்.

கண் திறந்தான். பெரும் புயல் அடங்கிச் சிறு தென்றல் தவழ்ந்தது. துடித்த இதயத்தின் துவண்ட ஓலம் பிரயாசையுடன் பாய்ந்து வந்தது. ''மீனாட்சி! ஏதோ ஒரு வெறியில் இளமைக் கிளர்ச்சியில் என்னையே நான் ஏமாற்றிக் கொண்டு உன்னையும் ஏமாற்றி விட்டேன். உன் அருள் முகம் என்னைக் கரம் கூப்பச் சொல்கிறது. உன்னை அணைக்க நடுங்குகிறதே என் கரம்?''

மீனாட்சி விசும்பினாள்.

''மீனாட்சி! உன் தூய வடிவம், என்னை நெருப்பிலிட்டுத் தகிக்கிறது. என் தாழ்ந்த வடிவிலிருந்து கிளம்பி உன்னை எட்டிப் பார்ப்பதற்குள் என் மனம் ஒடுங்கிப் புலம்புகிறது. நான் வேதனையை வெல்ல வேண்டுமானால் உன்னிலிருந்து பிரிந்து எங்கேயோ ஓடியாக வேண்டும். என்றாவது ஒரு நாள் வருவேன். அப்பொழுது இந்த உடல் அழகு அழிந்து போகும். உன் அழகு சுடர் விடும்'' என்று கூறிவிட்டு, விசுக்கெனப் பாய்ந்து தாளைத் திறந்து கொண்டு வெளியே ஓடினான்.

மீனாட்சி சூடிக் கழிக்காத மலராகப் பொத்தென்று தரையில் வீழ்ந்தாள். நெஞ்சு வெடிப்பில் கண்ணீர்த் துளிகள் பாய்ந்தன.

சிறிது நேரத்தில் மங்களம் ஓடி வந்தாள். சுருண்டு கிடந்த மகளைத் தட்டி எழுப்பினாள். ''என்னடி நடந்தது? மாப்பிள்ளை வெறி பிடித்தவர்போல வெளியே ஓடுகிறாரே!'' என்று கேட்டாள்.

சொல்ல என்ன இருக்கிறது? தாயைக் கட்டிக் கொண்டு அழுது தீர்த்தாள் மீனாட்சி. ''கண்ணைக் கொடுத்து மீண்டும் பிடுங்கிக் கொண்டு விட்டதே தெய்வம்'' என்று அவள் புலம்பினாள்.

நள்ளிரவு வரை குதூகலித்திருந்த வீடு, நள்ளிரவுக்குப் பின் துக்க வீடாக மாறியது. அருணாசலம் ஊருக்கும் உலகத்துக்கும் பயந்து இருட்டறைக்குள் கிடந்து புழுங்கினார். உறவினர் சிலர் ஒப்புக்காக வெளியே போய்த் தேடிவிட்டு உதட்டைப் பிதுக்கினர். மங்களம் கண்ணீரில் மிதக்க நேர்ந்த மகளின் தலை எழுத்தை நொந்து, அவள் கண்ணீரைத் துடைக்க மதுரை மீனாட்சியை அழைத்தாள்.

பொழுது விடிந்தது. வந்திருந்தவர்கள் விடைபெற்றுக் கொண்டார்கள். மீனாட்சிக்கு மட்டும் பொழுது விடியவே இல்லை. சூழ்ந்து விட்ட துக்கக் கண்ணீர் விடைபெற்றுக் கொள்ள விடாப்பிடியாக மறுத்தது.



விரைவில்
வருகிறது
விஜயாவின்
கடன் வாங்கி
கல்யாணம்
டைரக்ஷன்: பிரசாத்
தயாரிப்பு: நாகிரெட்டி & சக்ரபாணி


அவனுக்கு
ஜான்ஸன்ஸ்
பேபி பவுடரே
ஏற்றது
Johnson's
BABY
POWDER
Johnson & Johnson

மீனாட்சியைப் பொறுத்தமட்டில் ஐந்து வருடங்கள் கழிந்தன. சாமிநாதனைப் பற்றி எதுவும் தெரியவில்லை. 'என்றாவது ஒரு நாள் வருவேன்' என்று சாமிநாதன் சொல்லிப் போன வார்த்தைகளைப் பற்றுக் கோடாகக் கொண்டு வாழ்க்கையை ஓட்டி வந்தாள்.

இந்தச் சமயத்தில்தான் அரியலூரில் ரயில் விபத்து நடந்தது. தமிழ்நாட்டின் நெஞ்சிலேயே விழுந்த அந்த ரயில் மாண்டவர்களின் பெயரைப் பத்திரிகைக்குக் கொடுத்தது. அந்தப் பெயர் ஜாபிதாவிலே சாமிநாதன் பெயரும் இருந்தது. 'இன்ஷியல்' கூடவா சரியாக இருக்க வேண்டும்? அருணாசலம் பதறினர். மங்களம் வயிற்றில் அடித்துக் கொண்டாள். மீனாட்சி மோதிக் கொண்டாள். ஒன்றும் புரியாத ஜானகியும் ஊர் கூட்டி வைத்து அழுதாள்.

அழுத கண்ணீரைத் துடைக்கு முன்பே அருணாசலம் அரியலூருக்கு ஓடினர். அடையாளம் தெரிந்து கொள்ள முடியவில்லை. அயர்வுச் சுமையோடு வீடு திரும்பினர்.

மீனாட்சி பூவையும் பொட்டையும் அழிக்கத் தயாராகி விட்டாள். தாலியைக் களைய முயன்ருள். அருணாசலம் குறுக்கே விழுந்து, ''மீனாட்சி! இறந்தவன் நம் சாமிநாதன்தான் என்று தெரியாத வரையில் துக்கம் கொண்டாடுவது அபத்தம். நீ என் சொல்லை மீறினயானல் நானும் மீறுவதற்கு ஒன்று இருக்கிறது. அது என் உயிர்'' என்று புலம்பினர்.

அருணாசலம் தம் உயிரைக் காட்டி மகளின் தாலியைக் கழற்றவிடாமல் செய்தது, கண்ணுக்குத் தெரிந்தது. அவள் மனம் வைதவ்யம் பூண்டு விட்டது யாருக்குமே தெரியாது.

ஜானகிக்குக் கல்யாணம் நிச்சயமானதும், பிறருடைய பார்வையிலிருந்து தன்னை இன்னும் வெகு தூரத்துக்கு விலக்கிக் கொண்டாள் மீனாட்சி. என்றாலும் ஓதுவார் வீட்டுக் குருவம்மாள் வாயில் விழாமல் அவள் தப்பிக்க முடியவில்லையே!

வெளியிலிருந்து சன்னமாக, பீதியுடன் ஒரு குரல் ஒலித்தது: ''மீனாட்சி..........!'' அழைப்பவள் ஜானகி.

''ஏன்?''

''நான் ஏதாவது தவருகச் சொல்லி இருந்தால் மன்னித்து விடு, அக்கா. உன் தங்கையின் கல்யாண விசேஷத்தில் கலந்து கொள்ளாமல் நீ ஒதுங்கி யிருக்கலாமா......?''

''கூடாதுதான். நடக்கக் கூடாததுதானே நடந்திருக்கிறது?''

''கதவைத் திற, மீனாட்சி!''

''ஏன், வந்திருப்பவர்கள் 'வாழாவெட்டி' என்று பேசித் தீர்க்கவா? அதைக் கேட்டு நீ இன்னும் என்னைக் கேலி செய்யவா? தொலைந்து போ!''


வெளியிலிருந்து பிறகு பேச்சு இல்லை.

மீனாட்சி தனக்குள் ஒடுங்கிக் கொண்டாள். இன்று தன் பேச்சில் ஒலித்த அபஸ்வரம் அவளுக்குப் புரிந்தது. ''வாழாதவர்கள், வாழப் போகிறவர்களைக் கரித்துக் கொட்டுவார்கள்'' என்ற ஓதுவார் வீட்டுக் குருவம்மாளின் கூற்றை நிஜமாக்குவதைப் போல அசட்டுத்தனமாகப் பேசி விட்டேனே?

பெரியவர்:—ஏன், பையா! உன் வீடு எங்கே இருக்கிறது?

பையன்:—பள்ளிக்கூடத்துக்கு அருகில் இருக்கிறது.

பெரியவர்:—அந்தப் பள்ளிக்கூடம் எங்கே இருக்கிறது?



பையன்:—என் வீட்டுக்கு அருகில்.

பெரியவர்:—இரண்டும் எங்கே இருக்கின்றன?

பையன்:—எதிரும் புதிருமாக இருக்கின்றன!

மாப்பிள்ளை அழைப்பு, சாப்பாடு எல்லாம் முடிந்துவிட்டன. மீண்டும் ஒரு முறை மகளை அழைக்க வந்து கதவில் முட்டிக் கொண்டு திரும்பினள் மங்களம்.

பாதி ஜாமம் இருக்கும். இரண்டு கிழங்கள் வெளியே ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தன. பேச்சு மீனாட்சியைப் பற்றியதாக இருந்ததால் அவள் காது வளைந்து கொடுத்தது.

ஒரு கிழம்: ''மூத்தவள் கண்ணீர் விட்டுக் கொண்டு அறையில் கிடக்கிறாள். இந்த நிலையில் இளையவள் கல்யாணமாகிச் சந்தோஷமாக வாழ்வாளா?''

மற்றொரு கிழம்: ''எங்கே வாழப் போகிறாள்? பெரியவள்தான் வயிறு எரிந்து கொண்டிருப்பாளே!''

காதைப் பொத்திக் கொண்டாள் மீனாட்சி. கிழங்கள் மட்டுமென்ன இந்த உலகமே இப்படித்தான் பேசும்; அவப்பெயர் சூட்டும். ஏழு வருஷங்களாகக் கண்ணீரைச் சிந்திக் கொண்டு யாரை எதிர்பார்த்தாளோ, அவன் வரவில்லை. அரியலூர்க் கண்டத்துக்கு அவன் தப்பித்திருக்க வேண்டும் என்று ஏன் கற்பனை கட்டிக் கொள்ள வேண்டும்? நிச்சயம் இல்லாத ஒன்றுக்காக இந்த உடம்பை ஏன் மூடிக் கழற்றாமல் வைத்திருக்க வேண்டும்? பிறருடைய உதட்டளவு அநுதாபத்துக்கு ஓர் இலக்காக ஏன் இருக்க வேண்டும்? ஏன் இருக்க வேண்டும்?

என்றும் இல்லாத துணிவு பிறந்தது அவளுக்கு. காய்ந்த கண்களை ஒருமுறை தடவிப் பார்த்தாள். வாழ வேண்டும் என்ற நிலையில் ஏமாற்றம் ஏற்படும்பொழுதுதானே இந்தக் கண்ணீரை முகத்தில் எழுதி ஆர்ப்பாட்டம் செய்கிறது மனம்? இப்பொழுது அவளுக்குச் சிறிதும் ஏமாற்றம் இல்லை; அதனல் துக்கமும் இல்லை; கண்ணீரும் இல்லை.

படுக்கையை விட்டு எழுந்தாள் மீனாட்சி. கதவைத் திறந்தாள். வெளியே அந்தக் கிழங்கள் கண் மூடிவிட்டன. மங்களம் ஒரு

மூலையில் சுருண்டு கிடந்தாள். இரவின் பயங்கர ஆளுகையில் மனித வர்க்கத்தின் ஆற்றாமை இருளில் ஒழுகிக் கிடந்தது. அறையை விட்டு வெளியே வந்தாள். தனக்கு வேண்டியவர்களைக் கடைசியாக ஒரு முறை பார்க்க வேண்டும் என்று மனம் பாசத்தால் அழுதது. ஒரு கணம்தான் அது. அந்த நிலையில் தன் அறியாமையை நினைத்துச் சிரித்தாள். எதுவும் இல்லை என்று போகும் நிலையில் இருப்பது எது நிஜம்?

மாடியை விட்டு இறங்கிக் கொல்லைவழியாக வெளியே வந்தாள். இரவுப் பெருமூச்சின் நெடுங்கதையைக் கூறி மரங்கள் கிளைகளை அசைத்தன. இருள் படிந்த தெருவைக் குறுக்கே வைத்து, கொடிப் பாதையில் நடந்தாள். அவள் நிர்மாணித்துக் கொண்டிருந்த வரம்புக்கு வாய் திறந்து காத்துக் கொண்டிருக்கும் சர்க்கார் கிணறு அதிக தூரம் இல்லை. ஆனால் அந்தத் தூரமே நீண்டு கொண்டு போவது போலத் தோன்றியது.

நடுவே காய்ந்து கிடந்த வாய்க்காலைத் தாண்டி வண்டிப் பாதையை மிதித்தாள்.

இருளைக் கிழித்து வந்தது ஒரு குரல்: ''ஏதாவது வைத்திருந்தால் புத்திசாலித்தனமாகக் கொடுத்து விடு. உயிருக்கு உலை தேடிக் கொள்ளாதே!''

அதைத் தொடர்ந்து அவள் கையைப் பிடித்தது ஒரு கை.

'வீல்' என்று அலறினாள் மீனாட்சி.

''ஹா, நீ பெண்ணா! என்னை மன்னித்து விடு, தாயே! ஆண் என்று நினைத்து உன்னைத் தொட்டு விட்டேன்!'' என்று பிடித்த கரத்தை நழுவ விட்டது அந்த உருவம்.

மீனாட்சியின் நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது. 'உறுதியைச் சோதிக்க ஆண்டவன் திருவிளையாடல் புரிகிறானா?'

''நீ எங்கே போகவேண்டும், தாயே? நான் அழைத்துக் கொண்டு போய் விடட்டுமா?'' என்றது அந்த உருவம் கனிவுடன்.

அப்பொழுது இருளை ஊடுருவிப் பிளந்தது ஒரு மின்னல்.

''நீங்களா?'' என்று வீறிட்டாள் மீனாட்சி.

''மீனாட்சி!...நீயா?'' அவனும் கத்தினான்.

அவன் சாமிநாதன்!

''மீனாட்சி! உன் புருஷன் அன்று இரவில் வேதாந்தம் பேசிவிட்டு ஓடினான். இன்று பார்த்தாயா அவன் எப்படி ஒரு பக்காத் திருடனாகி விட்டான் என்பதை!''

''பண்புள்ள திருடர் என்பதையும் கண்டேன்.'' அவளால் மேலே பேச முடியவில்லை.

''பண்புள்ள மனிதனாகத்தான் இருக்க நினைத்தேன். வழி விடவில்லை சூழ்நிலை. உன்னைக் கைப்பிடிப்பதற்கு முன்னால் வேலை கேட்கப் போன இடத்தில் வலுவில் திருடனாக்கப்பட்டேன். தண்டிக்கவும் பட்டேன். சிறையை விட்டு வெளியே வந்தேன். 'வேலை, வேலை' என்று மறுபடியும் அலைந்தேன். வேலை கிடைக்கவில்லை. பசியும் இல்லை என்றால் எத்தனை நன்றாக இருக்கும்? பசித்தது. அது அறிவையே மேய்ந்து விட்டது. திருடினேன்; தின்றேன்; பிடிபட்ட நேரத்தில் சிறை சென்றேன். இப்படித் திருடனாகி விட்ட என்னை, பட்டாமணியத்தின் மகன் விஷயம் தெரியாமல் உனக்கு மாலையிடச் செய்தான். களங்கமற்ற உன் முகத்தைக் கண்டதும் என் பாவச் செய்கை என்னை உறுத்தியது. உன் பெண்மையில் சுடர்விட்ட ஒழுக்கம், என்னை விரட்ட, உன்னை விட்டு ஓடினேன்.

''அன்றிலிருந்து ஒரு வேலை பார்த்து அமர்ந்து உன்னை அழைத்துக் கொள்ளலாம் என்று முயலாத நாளே இல்லை. என் வரையில் வேலையே அஸ்தமித்துப் போய் விட்டது. மீண்டும் திருட்டு வாழ்க்கையை ஆரம்பித்தேன். அந்தக் கேடு கெட்ட வாழ்க்கையிலும் ஒரு வரம்பு கட்டிக் கொண்டேன். பசித்தால் தவிரத் திருடுவதில்லை. பெண்களிடமும், பலவீனர்களிடமும் என் நிழலைக் கூடக் காட்டுவதில்லை. திடீரென்று உன்னைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை பிறந்தது. தவறிய மனிதனான நான் நேராக வீட்டுக்கு வந்து உன்னைப் பார்க்கும் அருகதையை இழந்து விட்டேன் அல்லவா? நாளாக நாளாக எப்படியாவது பார்த்து விட வேண்டுமென்று எண்ணினேன். அதனால் இந்தப் பகுதிக்கு வந்த பொழுது ஜானகிக்குக் கல்யாணம் என்பதைக் கேள்விப் பட்டேன். மாப்பிள்ளை அழைப்பின்போது உன்னைத் தெருவிலேயே சிரமமில்லாமல் பார்த்து விடலாம் என்று எண்ணிச் சிவன் கோயில் புதரில் ஒளிந்திருந்தேன். ஆனால் அந்த ஊர்வலத்தில் நீ இல்லை. மாய்ந்த மனத்துடன் திரும்பி வந்து இந்த இடத்தில் படுத்துக் கொண்டேன். பசி வயிற்றைப் பிசைந்தது. காலடி ஓசை கேட்டது. பசியாற்றிக் கொள்ள வகை தேடி எழுந்தேன். என் திருட்டிலே நான் கைப் பிடித்த கையையே பிடித்தேன்! நான் போகிறேன். வேலை கிடைத்தால் உன்னை அழைத்துக் கொள்கிறேன். அதுவரையில் பொறுத்துக் கொண்டிரு. முதலில் நீ வீட்டுக்குத் திரும்பு.'' அவனுடைய நீண்ட நேரப் பேச்சில் மரங்கள்கூட மலைத்து நின்றன.

''முடியாது.''

''முடிய வேண்டும், மீனாட்சி! நீ எங்கே போகிறாய் என்பது எனக்குத் தெரியும். அதற்கு இனி அவசியமில்லை. நான் வாழ விரும்புகிறேன்.''

''வாழுங்கள்.''

''நீ தற்கொலை செய்து கொண்ட விட்ட பின்பு எனக்கு ஏது வாழ்க்கை? இந்த நேரத்தில் நீ இங்கே வந்ததற்குக் காரணம் வேறு எதுவாகவும் இருக்க முடியாது. நீ வீட்டுக்குப் போ.''

''நீங்கள் விரும்பாத வாழ்க்கையும், வீடும் எனக்கு வேண்டாம், களவை விட்டு விட்டு என் கணவராக வீடு திரும்புங்கள். இல்லாவிட்டால் கணவர் என்ற முறையில் நீங்கள் கட்டளை இட்டாலும் என் முடிவை மாற்றிக் கொள்ள முடியாது.''

ஒரு கையில் பிடித்திருந்த கத்தியை வீசி எறிந்தான். மற்றொரு கையில் மீனாட்சியின் கையைச் சேர்த்தான். ''மீனாட்சி! என் கண் ஒளிபெற்று விட்டது. நாம் குறைவிட்ட பாதிக் கல்யாணமும் இந்தக் கல்யாணத்தோடு சேர்ந்து நடக்கட்டும். வா, வீட்டுக்குப் போகலாம்'' என்று ஆசைக் குரல் விடுத்தான் சாமிநாதன்.

இந்தப் பாதி ஜாமத்தில் ஒரு வழியாக மீனாட்சியின் பொழுது விடிந்தது!

பாவை விளக்கு

அகிலன்



அத்தியாயம் 28

வீடும் வேட்டையும்

"ஏன், நீயும் தெய்வானையாகி விடுகிறதுதானே?" என்று சௌந்தரம் கௌரியைப் பார்த்து உதிர்த்த சுடுசொல், கௌரியின் நெஞ்சில் முன்புறம் பாய்ந்து பின்புறம் வந்தது. பசுவாக இருந்த கௌரி புலியாக மாறினாள். உமாவிடமிருந்த குழந்தையைப் பிடுங்கித் தன் தோளில் சாய்த்துக் கொண்டு, ''ஏன், அப்படி இருந்தால் தான் என்ன கெட்டுப் போகும்?'' என்று கேட்டாள்.

அத்துடன் கௌரி விடவில்லை. சௌந்தரத்தம்மாளின் வீட்டுக் கூடத்தில் மாட்டியிருந்த பெரியதொரு திருத்தணி முருகன் படத்தைச் சுட்டிக் காட்டினாள். வள்ளி ஒரு பக்கமும் தெய்வயானை மறு பக்கமுமாக, இள முருகனுக்கு இருபுறங்களிலும் நின்று கொண்டிருந்தார்கள்.

''இந்த முருகனின்பெயர் தானே உங்கள் தம்பிக்கும் வைத்திருக்கிறீர்கள்? எனக்கொன்றும் தெய்வயானையாக இருப்பதில் கஷ்டமில்லை. இன்றைக்கே உங்கள் மருமகனை எங்களுக்குக் கொடுக்கிறீர்களா? மாம்பலத்திலிருந்து வடபழனி பக்கத்தில்தானே இருக்கிறது? கல்யாணத்தை விரைவில் முடித்து விடுவோம்.''

நறுக்குத் தெறித்தாற் போல் நாலு வார்த்தைகள் சொல்லி விட்டுத் தணிகாசலத்திடம் வேகமாக வந்தாள் கௌரி. தன்னுடைய சூடான பதிலை அவனிடம் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டாள்.

''உமாவிடம் சேர்ந்து நீயும் துடுக்குத் தனமாய்ப் பேசுகிறாய். நாம்தான் ஒதுங்கிப் போக வேண்டும். தப்பு நம்மிடம் இருக்கிறது'' என்றான் தணிகாசலம்.

அன்றிலிருந்து அவன் யாரிடமும் சொல்லாமல் வீடு தேடும் படலத்தில் இறங்கினான். மாம்பலத்தை விட்டு வெகு தூரத்துக்குப் போகவும் அவனுக்கு மனமில்லை. தொழிற்சாலையில் இரவு—பகல் மாறி மாறி அவன் உழைத்தாக வேண்டும். அதுவும் இப்போது அருகில் இருந்தது. வேறு பகுதிகளுக்குச் சென்று குடியேறினால், காருக்குக் காத்து நிற்பதிலேயே, மனிதனுடைய வாழ்நாளில் அரைக்கால் பகுதி வீணாகிவிடும்.

வீட்டுக்காக வேட்டையாடி — வேட்டையாடிக் களைத்துப் போனான் தணிகாசலம். ஓய்வெடுத்துக் கொள்வதற்கும் எழுதுவதற்கும் வசதியில்லாத படி இரண்டு அறைக் கூடங்கள் கிடைத்தன. அவற்றை விட்டால் பெரிய பெரிய தனி வீடுகள் கிடைத்தன. இரண்டுங்கெட்டான் நிலையில், தணிகாசலத்தின் வருவாய்க்கும் வசதிக்கும் ஒட்டுப் போடும்படியாக எந்த இரண்டுங் கெட்டான் வீடும் கிடைக்கவில்லை. பலரிடம் சொல்லிப் பார்த்தான்; தானும் பல இடங்களில் அலைந்தான்; பலனில்லை. ஐந்தாறு மாதங்களாக இந்த ரகசியமான வீடுவேட்டை நடந்து வந்தது. இந்த ஐந்தாறு மாதங்களாக, சௌந்தரத்தம்மாளுக்கும் கௌரிக்கும் நேரடியான மோதுதல்கள் ஏற்படவில்லையானாலும், மறைமுகமான புகைச்சல் வளராமல் இல்லை. கௌரிக்குச்சாடையாகப் பேசத் தெரியாது. சௌந்தரத்தம்மாளுக்கோ பெரும்பாலும் நேரடியாகப் பேசத் தெரியாது. ஆனால் கௌரிக்குச் சுற்றி வளைத்துப் பேசும் பேச்சுக்களைப் புரிந்து கொள்ளும் திறமையும் இல்லை. சௌந்தரத்தம்மாளின் ஒப்பற்ற சாடைப் பேச்சுக்கள் இதனால் விழலுக்கு இறைத்த நீராகின. கல்யாணி அம்மாளிடம் ஏனோ சௌந்தரத்தம்மாளுக்குப் பயம். அதனால் அவளிடம் மாத்திரம் சிரித்துப் பேசிக் கொள்வாள். அளவுக்கு மீறிப் போனால் உமா எங்கே தன்மீது திருப்பிக் கொள்வாளோ என்ற அச்சமும் சௌந்தரத்தம்மாளுக்கு உண்டு. அப்போதைக்கு உமா மாதம் தவறாமல் சம்பளம் வாங்கிக் கொண்டு வந்து சௌந்தரத்திடம் கொடுத்தாள். 'எதிர்காலத்தில் கலைக்





டரின் மனைவியாகப் போகிறவள்! கொஞ்சம் கொஞ்சமாகத்தான் அவளைத் தன்னுடைய வழிக்குக் கொண்டு வர வேண்டும்.'

இதற்கிடையில் ஏதாவது ஒரு சாக்கை வைத்துக் கொண்டு அங்கே ரவியின் பெற்றோர் வந்து போய்க் கொண்டிருந்தார்கள். நேரே உமாவிடம் அவர்கள் தங்கள் பையனைப் பற்றி ஒன்றும் சொல்வதில்லை. அவள் காதுகளில்படும்படியாக அவன் எழுதி வரும் கடிதங்களைச் சொன்னார்கள். "காந்திகூட அங்கே போய் ஒரு வெள்ளைக்காரியிடம் அகப்பட்டுக் கொள்ளப் பார்த்தார். பையன் ரவி இருக்கிறானே, தங்கக் கம்பி!" என்று சொல்லி, ரவியின் தகப்பனார் அந்தத் தங்கக்கம்பிக்கு மெருகேற்றி வந்தார்.

கூடை கூடையாக ஆஸ்திரேலிய ஆப்பிள்கள் திராட்சைக் கொத்துக்கள், பங்கனபள்ளி மாம்பழங்கள், நாக்பூர் ஆரஞ்சுகள், சாத்துகுடிப் பழங்கள் மாம்பலத்தில் வந்து இறங்குவதுண்டு. உமா அவற்றைக் கையால்கூடத் தொடுவதில்லை. பையன்பாழு நின்று அழிந்து போக, ரவியின் வீட்டார் திரும்பிய பிறகு, அவைகளையே ரயிலேற்றித் தன் பெண் ருக்மிணிக்கு அனுப்பி வந்தாள் சௌந்தரத்தம்மாள்.

வீடு மாற்றத்தை அறவே மறந்த பிறகு ஒரு நாள் மாலையில் கால் ஆறத் தெருவோரத்தில் நடந்து வந்து கொண்டிருந்தான் தணிகாசலம். அவன் வீட்டுக்கு மூன்றாவது தெரு அது. ஒரு வீட்டின் மாடியில், 'வாடகைக்கு விடப்படும்' என்ற அட்டை தொங்கியது. அதைப் பார்த்தவுடன், தணிகாசலத்தின் கால்கள் தயங்கின. 'கேட்டுப்பார்ப்போமே' என்று ஒரு நப்பாசை. சென்று வீட்டுக்காரரிடம் விசாரித்தான்.

"இப்படித்தான் தினம் தினம் கேட்டுவிட்டுப் போகிறார்கள். யாரும் திரும்பித்தான் வருவதில்லை" என்று முணுமுணுத்துக்கொண்டே, அவனை மாடிக்கு அழைத்துச் சென்று, வீட்டைத் திறந்து காட்டினார் அவர்.

கிட்டத்தட்ட அவர்கள் குடியிருந்ததில் முக்கால் பகுதி இருந்தது வீடு. அமைப்பும் அதை ஒட்டியே இருந்தது. விசாலமான முன் அறையைக் கண்டவுடன் வாடகையை விசாரித்தான் தணிகாசலம். "நூறு ரூபாய் மாத வாடகை; ஒரு வருஷத்து வாடகை முன் பணம் தர வேண்டும்" என்றார் அந்த வீட்டுக்கார மனிதர்.

மயக்கம் வந்து விடாமல் இருப்பதற்காகப் பக்கத்துச் சுவரைப் பிடித்துக் கொண்டான். 'தினம் பத்து மணி நேரம் தொழிலகத்தில் உழைத்தால் கிடைக்கும் சம்பளம் இது' என்று





நினைத்துக்கொண்டு ''வருகிறேன்'' என்று கூறி வெளியில் வந்தான்.

''உங்களுக்காக ஆயிரம் முன் தொகை வந்தால் தருவேன். வாடகையில் காலணாக் குறையாது'' என்று விட்டுக்கொடுத்தார் அவர்!

அவருடைய பணத் தொந்தியின் ரகசியத்தைப் புரிந்து கொண்ட தணிகாசலம் அதற்கு மேல்மூச்சுவிடவில்லை. உமாவின் அருமை அந்த நேரத்தில் அவனிடம் விசுவரூபம் எடுத்தது.

திரும்பவும் அவன் தெருவுக்கு வந்த போது, அங்கே அவன் வருவதைப் பார்த்தபடி சண்பகம் நின்று கொண்டிருந்தாள். சண்பகம் உமாவுக்கும் சௌந்தரத்தம்மாளுக்கும் தூரத்து உறவு. ஆனால் சௌந்தரத்தம்மாளிடம் நெருங்கிப் பழக்கம். எப்போதாவது மேலே வந்து தணிகாசலத்தின் வீட்டாரிடம் இரண்டு வார்த்தை பேசி விட்டுத் திரும்புவாள். திரும்புகிற சாக்கில் தணிகாசலத்தின் அறையை எட்டிப் பார்க்கத் தவறுவதில்லை. உமாவைப் பற்றித் துப்பறிய வருகிறாளோ என்று கூட அவன் பலமுறை சந்தேகப்படுவது வழக்கம். சண்பகத்தின் கண்கள் சந்தேகத்தைத் தூண்டும் கண்கள்.

சண்பகத்தின் வயதை அவளைப் படைத்தவனால்கூட இன்னதென்று கண்டு பிடிக்க முடியாது. 'மேக்அப்' இல்லாத சமயத்தில் அவளைக் காண்பது அரிதாகையால், அவளுக்கே தன் வயது மறந்து போயிருக்கும்.

நடுத்தெருவில் அவளிடம் அகப்பட்டுக் கொண்ட அப்பாவி வேறு வழியின்றித் தான் பார்த்து வந்த வீட்டைப் பற்றிச் சொன்னான். பேசுகிறவர்களிடம் எதையாவது பதில் சொல்லித் தொலைக்க வேண்டுமே! அப்போது பார்த்து வந்த வீடு தனக்குப் பிடிக்கவில்லை என்றான்.

''முன்பே நீங்கள் வீடு பார்த்துக் கொண்டிருப்பதாய்க் கேள்விப்பட்டேன். ஏன், என்னிடம் ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா? நீங்கள் இவ்வளவு சிரமப்பட்டிருக்க வேண்டாம்.''

தணிகாசலம் மௌனம் சாதித்தான்.

''வாருங்கள்; இப்போதே ஒரு வீட்டைக் காண்பிக்கிறேன். உங்கள் மனத்துக்குப் பிடித்தால் பாருங்கள்.''

தணிகாசலத்துக்கு அவள் மூலம் ஒரு வீடு கிடைத்தால் அதையும் விட்டுவிட மனமில்லை. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவளோடு ஒன்றாக நடந்தான். அரபிக் குதிரைமாதிரி, உயர்ந்தமிதியடிகளை மாட்டிக் கொண்டு, அவள் 'டக் டக்' கென்று கை வீசிச் சென்றாள். தணிகாசலம் புதுப் பெண்ணைப் போல் நாணிக் கோணிக் கொண்டு அவளைப் பின்பற்றினான். அவள் உடுத்தியிருந்த 'ரப்பர் ஷீட்' புடவை நழுவி விடாமல் இருப்பதற்காக, இடுப்பைச் சுற்றிலும் அவள் 'பின்'களைக் குத்தியிருந்தது அவன் கண்களை உறுத்தியது. 'நாகரிகம் நழுவிக் கொண்டே போகிறது போலும்!' என்று மனத்துக்குள் நினைத்தபடி அவன் தன்னுடைய வாய்க்குப் பூட்டுப் போட்டுக் கொண்டான்.

சண்பகம் வேறு எங்கும் செல்லாமல் அவனைத் தன் வீட்டுக்கே அழைத்துக் கொண்டு சென்றாள். அவர்கள் குடியிருந்த அதே தெருவின் மறு மூலையிலிருந்தது அந்த வீடு. உள்ளே கட்டியிருந்த முரட்டு நாய்க் குட்டியும், பையன் ஒருவன் வாசித்துக் கொண்டிருந்த வாய் ஆர்மோனியமும் அவனை வரவேற்றன. நாய்க் குட்டியின் அன்பணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, அந்த 'மௌத் ஆர்கன்' பையனைப் பார்த்து, ''எங்கே ஜிம், நம்ப பாப்பா?'' என்று கேட்டாள்.

பாப்பா என்றவுடன் அவளுடைய குழந்தை என்ற எண்ணம் தணிகாசலத்துக்கு. அவள் தன் அப்பாவை அழைத்த அருமை அது என்று அவன் கண்டானா?

''பாப்பா கிண்டிக்குப் போயிருக்கார். வேண்டுமானால் பாரேன்! 'சாம்பியன் கிங்' ஜயிக்காதென்று நான் சொன்னேன், அவர் கேட்கவில்லை.''

பையனிடம் ஏதோ அவள் தனியாகக் கூப்பிட்டுச் சொன்னாள். பையன் ஒரு பையைத் தூக்கிக் கொண்டு ஓட்டலுக்குப் பலகாரம் வாங்கி வருவதற்காகக் கிளம்பினான். பையனுடைய தலை மறைந்த பின்பு தன் வீட்டின் பின் பகுதிக்குத் தணிகாசலத்தை அழைத்துச் சென்றாள் சண்பகம். ''இந்தச் சமையற்கட்டும், நாலு அறைகளும் சும்மாத் தான் இருக்கின்றன. வீட்டில் எங்கள் மூன்று பேர்களைத் தவிர, ஒரு சமையற்காரி. நீங்கள் இங்கே குடி வந்தால் எங்களுக்கும் துணையாக இருக்கும்.''

தணிகாசலத்துக்கு அந்த இடம் தன் சக்திக்கு மீறிய விவகாரமாய்த் தெரிந்தது. மேலும் அவனுடன் வந்து அவள் அறைகளைச் சுற்றிக் காட்டிய விதம், அவளது அடக்கமற்ற தன்மையைச் சொல்லாமல் சொல்லிக் காட்டியது. சண்பகத்தின் ஆதி - அந்தம் எதுவுமே தெரியாது அவனுக்கு. மணமானவளா, ஆகாதவளா, விதவையா ஒன்றையும் அவன் உமாவிடம் கேட்டதில்லை. சுற்றிப் பார்த்துக் கொண்டே வந்து, 'எப்படி இந்த இடத்தைக் கழித்துக் கட்டுவது?' என்ற தீவிரமான யோசனையில் இறங்கினன் தணிகாசலம்.

கூடத்துக்கு வந்து அவர்கள் உட்கார்ந்தார்கள். காப்பி பலகாரங்கள் வந்து சேர்ந்தன. ''சரி! நீ போய்க் காப்பி சாப்பிட்டு வா!'' என்று அவனைத் திரும்பவும் அனுப்பினள் சண்பகம். பையன் அங்கிருந்து பறந்தான்.



நெய்யால் செய்த அல்வாதான் அது. ஆனல் தணிகாசலத்துக்கு அது விளக்கெண்ணெயால் செய்தது போல் குமட்டிக் கொண்டு வந்தது. எண்ணெய் வழியும் முகத்தோடு குனிந்து கொண்டே சாப்பிட்டான். பலகாரங்கள் தொண்டையை விட்டு இறங்கவில்லை.

''என்ன சொல்லுகிறீர்கள்? நீங்கள் இப்போது இருக்கிற வீட்டை இதன் காலில் கட்டி அடிக்கலாம்.''

''அடிக்கலாம்தான். ஆனல்...''

''ஆனல் என்ன? ஒரு 'ஆன'லும் இங்கே வேண்டாம்.''

எல்லாவற்றையும் மென்று விழுங்கி, காப்பி குடித்த தெம்பினல் தன் முடிவைத் தயங்கியபடி கூறினன் அவன்: ''வீடு அருமையான வீடுதான்; அழகான பெரிய வீடு; ஆனல் நாங்கள் இதற்கு லாயக்கில்லை. இத்தனை பெரிய வீடு எங்களுக்கு எதற்கு?''

சண்பகம் இதை ஒப்புக் கொள்ளவில்லை. வேண்டுமென்றே ஒப்புக் கொள்ள மறுத்தாள். சிரித்தபடியே, ''நீங்கள் வாடகையை நினைத்துப் பயப்படுகிறீர்கள்; நான் ஒன்றும் உங்களைப் பற்றி விவரம் தெரியாதவள் அல்ல! உங்களால் முடிந்ததைக் கொடுங்கள். உமாவுக்கு என்ன கொடுக்கிறீர்களோ அதைக் கொடுங்களேன்! நான் வேறு, உமா வேறென்று நினைக்காதீர்கள்.''

தணிகாசலம் சரேலென்று அந்த இடத்தை விட்டு எழுந்தான். அவன் எழுந்த முறையும், அவன் முகத்தின் மாறுதலும் சண்பகத்துக்கு அவன் மனநிலையைக் காட்டிக் கொடுத்தன. இனிமேல் அவனிடம் நயந்து பேசிப் பலனில்லை என்பதைக் கண்டவுடன், அவனிடம் தன் உண்மையான சொரூபத்துடன் தோன்றினள்.

''உங்களுக்குப் பிடிக்காவிட்டால் வேண்டாம். ஆனல் உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும்...''

''என்ன?''

''நீங்கள் இனிமேல் அந்த வீட்டில் குடியிருப்பது உங்களுக்கும் நல்லதில்லை, உமாவுக்கும் நல்லதில்லை. எல்லா விஷயமும் எனக்குச் சௌந்தரத்தம்மாள் சொல்லியிருக்கிறர்கள். உங்கள் நன்மைக்காகத்தான் நானே உங்களுக்கு உதவி செய்ய முன்வந்திருக்கிறேன்.''

''சௌந்தரத்தம்மாள் உங்களிடம் என்ன சொன்னர்கள்?'' என்று கேட்டான் தணிகாசலம்.

''வெளிப்படையாய்ச் சொன்னல் அவர்களுக்குத்தானே வெட்கம்? உங்கள் மேல் எங்களுக்குக் கொஞ்சம்கூட வருத்தமில்லை. நீங்கள் பாவம், ரொம்பவும் நல்ல மனிதர். ஆண் பிள்ளையிடம் நாங்கள் கோபித்துக் கொள்ளலாமா? அந்தத் தறுதலைப் பெண் உமாவுக்கு இங்கிதம் தெரிந்திருக்க வேண்டும். கௌரியை எதிரில் வைத்துக்கொண்டே உங்களிடம் எத்தனை கொட்டம் அடிக்கிறள்? ஆனல் ஒன்று. நீங்கள்தான் இனி ஒதுங்கிப் போக வேண்டும். உமா இனிமேல் ஒரு இடத்தில் வாழப் போகிறவள். நான் அப்படி இல்லை. இன்றைக்கும் - என்றைக்கும் என்னை யாரும் எதுவும் சொல்ல முடியாது. நீங்கள் வீடு மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியந்தான். எப்போது நீங்கள் இங்கு குடிவந்தாலும் எனக்கு ஆட்சேபணை யில்லை. அப்பாவும் என் காரியத்தில் குறுக்கே நிற்கமாட்டார். நான் வாழ்ந்து கெட்டவள். —நீங்கள்

போய் ஒரு முறைக்குப் பலமுறை நன்றாய் யோசனை செய்து பாருங்கள்!''

சண்பகத்தின் வார்த்தைகளில் உண்மையிலேயே யோசனை செய்ய வேண்டிய பகுதிகள் நிறைய இருந்தன. அதிலும் கடைசியாக அவள் கூறிய செய்திகளைப் புரிந்து கொண்டு அவனால் ஒரே சமயத்தில் சீரணிக்க முடியவில்லை. மெல்ல மெல்ல அவற்றைஅசை போட்டுக்கொண்டே தெருவில் நடந்தான்.

அத்தியாயம் 29

விலகும் நினைவு

குழந்தை கல்யாணி வளர்ந்து வந்தாள். வாழைக் குருத்தைப் போல் பசுமையின் தளதளப்போடு, புதுமையின் மினுமினுப்போடு, கைகளும் கால்களும் கடைந்தெடுத்த தந்தச் சிற்பமென வளர்ந்து வந்தாள். பிறந்த மூன்றாவது மாதத்தில் குப்புறப் படுத்துக் கொண்டாள். நான்காவது மாதத்தில் கால்களை உதைத்துக் கொண்டு மார்பால் நகர்ந்தாள். பிறகு மண்டியிட்டு மாடி முழுவதும் தவழ்ந்து திரிந்தாள். அப்புறம் தள்ளாடித் தள்ளாடித் தளர் நடை பயின்றாள்.

கல்யாணியின் மழலையைக் கொட்டி வைப்பதற்கு அந்த மாடியில் இடமில்லை. சிரிப்பைச் சேர்த்து வைப்பதற்கு அவளைப் பெற்றவர்களுக்குத் தெரியவில்லை. கல்யாணியின் நடையில் ஒரு அழகு, பேச்சில் ஒரு அழகு, சிரிப்பிலும், சிணுக்கத்திலும் பிடிவாதத்திலும் கூட அழகு.

அந்த வீட்டில் அவள் சென்ற பக்கமெல்லாம் அழகைச் சிந்திக் கொண்டே சென்றாள். வழக்கமாகத் தன் வேலைகளில் முழுகி, சுற்றுப்புறத்தை மறக்கும் தணிகாசலம் கூட, கல்யாணியைக் கண்டு விட்டால் தன் வேலைகளை மறந்து விடுவான். காலையில் பொழுது விடிந்தவுடன் அவளைத் தொட்டிலிலிருந்து தூக்கி, அவளுக்கு ஒரு முத்தம் கொடுத்துக் கீழே இறக்கி விட்டால், அவளுடைய பரபரப்பும் சுறுசுறுப்பும் தனக்கு வந்து விட்டதுபோல் உணர்ந்து மகிழ்ந்து போவான்.

கல்யாணிக்கு வயதுக்கு அதிகமான வளர்ச்சி; வயதுக்கு அதிகமான அறிவு. தன் தந்தையிடமும் உமாவிடமும் மாறி மாறி ஒட்டிக் கொண்டாள். தணிகாசலத்துக்குக் கல்யாணியிடம் தனிப்பட்ட பற்றுதல் விழுந்ததற்கு என்ன காரணம் என்று சொல்ல முடியாது. ஒன்று, அவளுடைய சின்னஞ் சிறு உயிரின் துடிதுடிப்பில் அவன் இனம்புரியாத புதுமையைக் கண்டிருக்கலாம்: மற்றொன்று, அவளை எப்பொழுதும் உமா தூக்கி வளர்த்து, அவளிடம் தணிகாசலத்துக்குள்ள பாசத்தைத் தூண்டி விட்டதனால் இருக்கலாம். அன்பு செலுத்துவது கூடத் தன்னையறியாத தீவிரமான மனப்பழக்கம் தானே?

கல்யாணியின் தளர்நடைப் பருவத்தில்தான், உமாவின்பாடு அவள் வீட்டில் இக்கட்டான நிலைமைக்கு வளர்ந்தது.

''மாமா! உங்களுக்கு விஷயம் தெரியுமோ? இப்போதெல்லாம் நாள் தவறினாலும் சண்பகம் எங்கள் வீட்டுக்கு வருவது தவறுவதில்லை. அத்தையும் அவளும் சேர்ந்துகொண்டு அப்படி என்னதான் பேசுவார்களோ? இந்தக் குழந்தையை நான் தூக்கி வைத்திருப்பது அவளுக்குப் பிடிக்கவில்லை. கரித்துக் கொட்டுகிறாள். கௌரியிடம் சொல்லிக் குழந்தைக்குச் சுற்றிப் போடச் சொல்ல வேண்டும். சண்பகத்தின் கண் இருக்கிறதே அது பொல்லாத கண்!''

''சண்பகத்தின் கண் பொல்லாத கண்தான்; நீயும் அப்படியே குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு சுற்றிப் போட்டுக் கொள்'' என்று நகைத்தான் தணிகாசலம்.

அந்தச் சம்பவத்தை அவன் யாரிடமும் சொல்லவில்லை. சண்பகமும் அதன் பிறகு அவன் வீட்டுப் படியை மிதிக்கவில்லை. எப்போதாவது வழியில் தெரு-வில் எதிர்ப்பட்டால் ஒன்று, தன் முகத்தைத் திருப்பிக் கொள்ளுவாள்; அல்லது கண்களை உருட்டி விழித்து, 'உன்னைச் சமயம் வரும்போது என்ன செய்வேன், பார்!' என்று எச்சரிப்பாள்.

தணிகாசலத்தை அப்போது அவசரமாக ஒரு நெடுங்கதை கேட்டிருந்தார் பத்திரிகை ஆசிரியர். அந்தக் கதையை உமாவின் உதவி இல்லாமலே அவன் எழுதத்திட்டமிட்டிருந்தான். சிறிதுசிறிதாக உமாவின் உதவியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டுமென்று அவனுக்கு எண்ணம். தான் தனியாக இருந்து எல்லாக் காரியங்களையும் செய்து கொள்ளத் திட்டமிட்டான். அத்துடன் உமாவைப்போல் ஒரு கதாபாத்திரத்தை அந்தக் கதையில் சேர்க்க விரும்பினான். உமாவை வைத்துக் கொண்டு எழுதினால் கதையைச் சரிவர எழுத முடியாது.

எடுத்ததற்கெல்லாம் அவள் எரிந்து எரிந்து விழுவாள்.

பாட்டி பேரனை வைத்துக் கொண்டு கதை சொல்லும்போது, ''ஒரே ஒரு ஊரில் உன்னைப் போல் ஒரு குறும்புக் காரப் பையன் இருந்தான்'' என்று கதையை ஆரம்பித்தால், பாட்டியின் கதி என்ன ஆகும்?

இரண்டாவது காரணத்தை விட, முதல் காரணமே மிகவும் முக்கியம். எப்படியாவது அவன் உமாவின் உழைப்பை எதிர்பார்க்கும் நிலையி



லிருந்து விலகிக் கொள்ள வேண்டும். நாளைக்கே வேறு வீடு பார்த்துக் கொண்டு சென்றால், பிறகு கை ஒடிந்தது போல் கவலைப்படக் கூடாது.

''உமா! இந்தக் கதையை அவசரமாக நானே எழுதப் போகிறேன். நீ குழந்தையைப் பார்த்துக் கொள், போதும்'' என்றான் தணிகாசலம்.

சந்தேகக் கண் கொண்டு அவனை உற்று நோக்கினாள் உமா.

''ஆமாம்! கல்யாணி நான் எழுதும் வேளைகளில் எனக்குத் தெரியாமல் பூனைக் குட்டிபோல் மேசைக்கடியில் புகுந்து கால்களைக் கட்டிக் கொள்ளுகிறாள். அப்படியும் கவனிக்காவிட்டால் 'நறுக்'கென்று என் விரல்களைக் கடிக்கிறாள். குழந்தையாம் குழந்தை! சுவையான கட்டத்தை அனுபவித்து எழுதும் போது சுரீர் என்று வலித்தால் எனக்கு எப்படியிருக்கும், நீயே சொல் உமா!''

''இந்த மழுப்பல் ஒன்றும் என்னிடம் வேண்டாம். நான் ஏன் எழுதக் கூடாது? இதைச் சொல்லுங்கள்.''

''சொல்லி எழுதினால் அதை மறுபடியும் திருத்த வேண்டும். நானே எழுதினால் இரட்டிப்பு வேலை இல்லை.''

''அவ்வளவும் பொய்! உங்கள் போக்கு எனக்குத் தெரியாதென்று நினைக்கிறீர்கள். எதற்காக என்னை ஏமாற்றுகிறீர்கள்? பழகப் பழகப் பாலும் புளிக்கும். இப்போதெல்லாம் என்னைக் கண்டாலே உங்களுக்குப் பிடிப்பதில்லை. நான் ஒரு வேண்டாத சுமை என்ற எண்ணந்தானே?-சரி, உங்கள் இஷ்டம்!''

நூறு சமாதானங்கள் சொல்லியும் அவள் கேட்கவில்லை. அதற்காகத் தணிகாசலமும் விட்டுக் கொடுக்கவில்லை. குழந்தை வளர்ப்பு வேலையை அவளுக்குக் கொடுத்து, தன் வேலையைத் தானே வைத்துக் கொண்டான்.

'''என் குழந்தை' 'என் குழந்தை' என்று வாயால் தம்பட்டம் அடித்துக் கொள்ளுகிறாயே! உன் குழந்தையாகவே அவளை வைத்துக் கொள்ளேன்.''

''வாடா, ராஜாத்தி! இவரைப் போல் மனிதர் அண்டாத பிராணிகளின் சகவாசம் நமக்கு வேண்டாம்!'' என்று அங்கே வந்த கல்யாணியைத் தூக்கிக் கொண்டு நடந்தாள் உமா.

பையன் பரமசிவத்துக்கு விவரம் தெரிந்து விட்டதால், ரொட்டி, மிட்டாய், சாக்லெட் போன்ற லஞ்சப் பொருள்களால் அவனைத் திசை திருப்ப முடிந்தது. கல்யாணி அவ்வளவையும் வாங்கி ஒரு கை பார்த்து விட்டு அதற்கு மேலும் தன்னைத் தூக்கிக் கொள்ளச் சொல்லி, விடாமல் அடம் பிடிப்பாள்! உமாவுக்கும் அவளுக்குந்தான் சரி.

* *

வேலை அவசர வேலையாக இருந்தாலும், தணிகாசலம் அதை நிதானமாகவே மேற்கொண்டான். கலைப் பணியில் அவசரமிருந்தால் அதில் அழுத்தம் தென்படாது. அவன் அதை ஒப்புக் கொண்ட வேளை பார்த்து, அவனுடைய தொழிற்சாலையிலும் அவசர 'ஆர்டர்'கள் வந்து குவிந்தன. நாட்டைப் புது முறையில் மாற்ற விரும்பிய அரசாங்கம் தொழிற்சாலைகளுக்குத் திடீரென்று பல புதிய வேலைகள் கொடுத்தது. தொழிலாளர்கள் இரவு பகலாக இரட்டிப்பு வேலைகளை மேற்கொண்டார்கள். 'ஓவர் டைம்' என்பது தினசரிப் பல்லவியாக மாறியது. தணிகாசலம் மாத்திரம் எப்படி அதிலிருந்து தனிச் சலுகை பெறுவது? அது நன்றாக இருக்குமா?

வீட்டிலும் அவனுக்கு 'ஓவர் டைம்'; தொழிற்சாலையிலும் 'ஓவர் டைம்'. ஆனால் மனிதர்கள் படுத்துகிற இந்தப் பாட்டுக்கெல்லாம் இயற்கை என்னவோ மசிந்து கொடுப்பதில்லை. சூரியனும் சந்திரனும் 'ஓவர் டைம்' உழைத்தால் இந்த உலகம் என்ன கதிக்கு ஆளாகும்?

தொழிற்சாலையிலிருந்து திரும்பியவுடன் களைப்புத் தீருவதற்கு முன்பே அவன் பேனாவைக் கையிலெடுத்ததைக் கண்டு கௌரி கண் கலங்கினாள். கல்யாணியம்மாள் கண்டித்தாள்: "சுவரை வைத்துக் கொண்டு சித்திரம் எழுத வேண்டும், தம்பி! நல்ல ரத்தம் இருக்கும்போது இப்படியெல்லாம் உடம்பை அலட்டிக் கொண்டால் நாளைக்கு வருவதையும் நினைத்துப் பார்!"

"ஒன்றும் வந்து விடாது; எழுதினால் என் களைப்புத் தீரும். நீங்கள் கொஞ்சம் வெளியில் போகிறீர்களா?"

"ஏன்? உமாவை எதற்காக விரட்டி அடித்தாய்? புண்ணியத்துக்கு உழுத மாட்டை எவனோ பல்லைப் பிடித்துப் பதம் பார்த்தானாம்! உன்னைப் பார்ப்பதற்கே அவள் இப்போதெல்லாம் பயந்து நடுங்கிச் சாகிறாள்!"

'பயப்படுவது நல்லதுதான்' என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டு அவர்களை மெல்ல வெளியேற்றினான்.

எப்படி எழுதியும் அவனால் பத்திரிகையின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியவில்லை. பழைய காலத்தைப்போல் காட்டுக்குப் போய் ஒதுங்கிக் கொண்டு ஓலையில் கருக்கி எழுதுகிற யுகமா இது? ஒரு நாள், அவன் இரவெல்லாம் பகலாக்கி விட்டுத் தொழிற்சாலையிலிருந்து திரும்பி வந்தபோது, அவனுக்காக அறைக்கு வெளியில் பத்திரிகை அலுவலகப் பையன் காத்து நின்றான்.

அவன் கொண்டு வந்த கடிதத்தைப் படித்து விட்டு, கௌரியும் கல்யாணி அம்மாளும் தணிகாசலத்தை வெறுத்தெடுத்துக் கொண்டிருந்தார்கள்.

"தம்பி! நீ செய்வது கொஞ்சங்கூட நன்றாயில்லை. இவ்வளவு பெரிய வேலையை இழுத்துப் போட்டுக் கொண்டு, அவனை ஆகாதென்று அடிக்கிறாய் பார், அது நன்றாயில்லை!"

பத்திரிகாசிரியர் உடனே கதைப் பகுதியைப் பையனிடம் கொடுத்தனுப்பும்படி எழுதியிருந்தார். "அவசரம்! அவசரம்! அவசரம்!" என்று மூன்று அவசரங்களையும், மூன்று ஆச்சரியக் குறிகளையும் போட்டு, "கதைக்காக அச்சகம் காத்திருக்கிறது; உங்களால் இதழ் தாமதமானால் நன்றாயிருக்காது" என்று நாசூக்காக எச்சரித்திருந்தார்.

இரவெல்லாம் இயந்திரங்களோடு எண்ணெயாக வழிந்தவனுக்கு, இந்தக் கடிதத்தைக் கண்டவுடன் ஒன்றுமே ஓடவில்லை. கண்கள் பார்க்க மறுத்தன; உடலில் உட்கார்ந்து எழுதும் தெம்பில்லை; மூளை ஒத்துழையாமை இயக்கம் நடத்தியது. பையனோ வாசலில் உட்கார்ந்து கொண்டிருக்கிறான்.

குளித்து விட்டு வந்து ஒரு வாய்க் காப்பியை ஊற்றிக் கொண்டான். தொடர்கதை வந்த முதல் இதழை அந்த அறையெங்கும் தேடினான். அந்தப் பொல்லாத இதழ் கிடைக்கவில்லை.

"ஏ, கௌரி! இங்கே வா, இந்த வீட்டில் எந்தப் பொருளும் போட்ட இடத்தில் இருப்பதில்லை. எங்கே முதல் இதழ்?" என்று கேட்டான்.

கௌரியும் தன்னால் முடிந்தவரையில் தேடிப் பார்த்தாள். நன்றாக இருந்த



அறையைக் குப்பை கூளமாகக் கலைத்துப் போட்டபின், "இப்போதுதான் ஞாபகம் வருகிறது; மூன்றாவது வீட்டில் இரவல் வாங்கிக்கொண்டு போனார்கள்" என்று நிதானமாகக் கூறினாள்.

"போய் வாங்கிக் கொண்டு வா!"

"நான் எந்த வீட்டுக்கும் போய் வழக்கமில்லையே, என்ன செய்வேன்."

"பிறகு ஏன் கொடுத்தாய்?"

"நீங்கள் ஏன் எழுதுகிறீர்களாம்?"

பையன் வெளியில் இல்லாவிட்டால், இப்படிக் கௌரி கேட்டதற்காக, அவள் கன்னத்தை நோக வைத்திருப்பான் தணிகாசலம். இரவெல்லாம் தான் கஷ்டப்பட்டுத் திரும்பியது தெரியாமல் தன்னிடம் அவள் விளையாடுகிறாளே என்று அவனுக்குக் கோபம். வேற்று மனிதன் இருப்பதால், மரியாதைக்

காகக் கோபத்தை அடக்கிக் கொண்டு, கௌரியைத் தனியே அழைத்தான்.

ஜன்னலருகில் அவளை நிறுத்திக் கொண்டு, ரகசியமான குரலில், ''உனக்கு என் கதாநாயகனின் பெயர் தெரியுமா? போன இதழில் எந்த இடத்தில் கதையை நிறுத்தினேன் ஞாபகம் இருக்கிறதா?'' என்று கேட்டான்.

கௌரியால் சிரிப்பை அடக்க முடியவில்லை. கை கொட்டிச் சிரித்தாள். வயிறு வலிக்கும் மட்டும் சிரித்தாள். சிரித்தாளே தவிர, கதாநாயகனின் பெயரை மட்டும் அவளால் சொல்ல முடிந்தது. அந்த வாசகியால் கதையை நிறுத்திய இடத்தைச் சொல்ல முடியவில்லை. அவள் கதை படித்து ரசித்த லட்சணம் அப்படி இருந்தது!



கல்யாணி அம்மாளின் காதுக்கு இந்த விஷயம் எட்டியவுடன் அவள் கீழே இறங்கிச் சென்றாள். சௌந்தரத்தம்மாளையும் வைத்துக் கொண்டு மேலே நடந்ததைக் குறிப்பிட்டாள். பரபரவென்று உமாவைப் பிடித்துஇழுத்து வந்து தணிகாசலத்தின் அறையில் தள்ளினாள். ''தம்பி! உன் கோபத்தை இவளிடம் நாளைக்கு வைத்துக் கொள்ளலாம். முதலில் கதையைக் கொடுத்து எழுதச் சொல்லு'' என்றாள்.

உமாவும் தன் பங்குக்குச் செய்ய வேண்டிய பரிகாசத்தை மறக்கவில்லை. கேலி செய்தபின், நெட்டுருப் போட்டவள் போல் முதல் பகுதிக் கதையை மளமளவென்று சொல்லத் தொடங்கினாள்.

''போதும் : நிறுத்து!—எழுது!''

கதையைப் பத்திரமாக வாங்கிக் கொண்டு சென்றான் பையன். அதன் பின் விளைவுதான் விபரீதமாக இருந்தது.

விபரீதம் கீழ் வீட்டிலிருந்து முளைத்தது. இத்தனை நாட்கள் தணிகாசலம் உமாவின் உதவியை நாடாமலிருந்தது சௌந்தரத்தம்மாளுக்கு நல்ல சகுனமாகத் தோன்றியது. அவளும் சண்பகமும் இதனால் ஓரளவு ஆனந்தப் பட்டார்கள். தணிகாசலத்துக்கு 'யோக்கியன்' என்ற நற்சான்றுப் பத்திரம் வழங்கக் கூட அவர்கள் தயாராக இருந்தார்கள். இப்படி இருக்கும்போது, மறுபடியும் உமா அவனிடம் சென்றால், அதற்கு என்ன அர்த்தம்?

''அதுவும் தாயார்க்காரியே வந்து அழைத்துக் கொண்டு போனாளா? இப்படியும் ஒரு அக்கிரமம் உலகத்தில் நடக்குமா?'' என்று சண்பகம் சௌந்தரத்தம்மாளிடம் நீட்டி முழக்கினாள். ''இன்னும் எத்தனை நாட்கள் நீங்கள் இதையெல்லாம் சகித்துக் கொண்டிருக்கப் போகிறீர்களோ, தெரியவில்லை?''

சௌந்தரத்துக்கு அது சகிக்கவில்லை. லண்டனிலிருந்து ரவி திரும்பி விடப் போகிறான் என்ற செய்தியும் அவளுக்கு எட்டியது. உமாவை உட்கார வைத்துக் கொண்டு ஒரு நாள் அவளிடம் கரைவாய்க் கரைத்தாள். எத்தனை விதங்களாகச் சொல்லலாமோ அத்தனை விதங்களாகச் சொன்னாள். எல்லாவற்றையும் விட வலிமை மிக்க கடைசி ஆயுதம் ஒன்று அவளிடம் தயாராக இருந்தது. அதையும் சமயம் தெரிந்துபிரயோகித்து விட்டாள்.

''உமா! நீ அந்தக் குடும்பத்தைக் கெடுக்கிறாய். உன்னைப்போல் ஒரு பெண்ணுக்குத் துரோகம் செய்கிறாய். கௌரி படிக்காத பட்டிக்காட்டுப் பெண். அவளுக்கு நீ வஞ்சனை செய்கிறாய்; அவளை நீ ஏமாற்றுகிறாய்; அவளுக்குக் கிடைக்க வேண்டிய வாழ்வைத் தட்டிப் பறிக்கிறாய். நம்முடைய குடும்பங்களில் பிறந்த எந்தப் பெண்ணும் உன்னைப் போல் நடந்து கொண்டதில்லை. உன்னுடைய நன்மைக்குத்தான் நானும் சண்பகமும் பாடுபடுகிறோம்.''

இவ்வளவு கூரான ஆயுதம், குறிப் பார்த்து எறியப்படும்போது, தன் குறியிலிருந்து தவறுமா என்ன?

தணிகாசலத்துக்கு ஒருநாள் பாதி விடுமுறை. தொழிற்சாலையிலிருந்து திரும்பி, இலக்கிய நண்பர்களுடன்

அரட்டை அடித்து விட்டு, உல்லாசமாக வீட்டுக்கு வந்தான். அவனுடைய அறைக் கதவு பாதி திறந்தும் பாதி திறவாமலும் இருந்தது. உள்ளே. புத்தம் புதுத் தகரம் பளபளக்கப் பெரிய தொரு படத்தை வைத்து உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றாள் உமா. அப்போதுதான் அந்தப் படத்துக்குக் கண்ணாடிச் சட்டம் போட்டுக் கொண்டு வந்திருக்க வேண்டும். படம் அவள் பக்கம் திரும்பி யிருந்ததால் என்ன பட மென்று தெரியவில்லை.

படத்தை மேசையின் மீது வைத்து. குனிந்தபடியே மீண்டும் நோக்கினாள் உமா. மெல்ல அதை மேலே எடுத்துத் தன் மார்பகத்துடன் அணைத்துக்கொண் டாள். கண்களை விட்டுப் படம் நகர்ந்த போது, கண்ணீர்த் துளிகள் சொட்டுச் சொட்டாக அதில் உதிர்ந்தன. தணிகா சலம் அதற்குமேல் தாமதிக்கவில்லை. விரைந்து சென்று உமாவிட மிருந்து அந்தப் படத்தைப் பிடுங்கினான்.

படத்தைத் தன் பக்கமாகத் திருப்பிப் பார்த்தான். வைத்த கண் வாங்காமல் அதைப் பார்த்தான். சட்டென்று உமா வைப் பார்த்தான். மீண்டும் படத் தைப் பார்த்தான். அதைப் பார்த்த வுடன் தான் திடீரென்று ஒரு மலை உச்சி யில் ஏறி நிற்பது போலவும், அந்த மலையின் அடித்தளமே கிடு கிடு வென்று நடுங்குவது போலவும் தோன்றியது. அவளுடைய கண்ணீரால் அந்தப் படத் துக்கு அபிஷேகம் செய்திருந்தாள் உமா.

"என்ன உமா, இது?"

"இதை உங்களிடம் என் கடைசிப் பரிசாகக் கொடுத்து விட்டு, இனி என் றைக்குமே உங்களிடமிருந்து விலகிக் கொள்ள வந்திருக்கிறேன்."

ஐந்து நிமிஷங்கள் சென்றபிறகும் அவனுக்கு அவள் என்ன சொல்கிறாள் என்று விளங்கவில்லை. அவனுக்கு எல் லாமே ஒரே இருள்மயமாக இருந்தது.

"இந்தப் படத்தைக் கொடுத்திருப்ப தன் நோக்கமென்ன? 'விலகிக் கொள்ளு கிறேன்' என்பதின் நோக்கமென்ன? ஒன்றுக்கொன்று நேர் எதிரிடையாகப் பேசுகிறாயே!" என்று மிகுந்த வியப் புடன் கேட்டான் தணிகாசலம்.

"அதைச் சொல்லிவிட்டுப் போகத் தான் வந்திருக்கிறேன்" என்று சொல்லி, போவதற்கு முன்பு, சொல்வ தற்கு உட்கார்ந்தாள்.

அந்தப் படத்தையும் அவளையும் மாறி மாறிப் பார்த்தான் தணிகாசலம். அவன் நின்றுகொண்டிருந்த தரையின் நடுக்கம் இன்னும் ஓயவில்லை. (தொடரும்)



மபத்லால் வாயில்கள்
வெண்மையானது, சாயமேற்றியது
பிரிண்ட் செய்தது
மெர்ஸிரைஸ்ட்
தி மபத்லால் பைன்
ஸ்பின்னிங் அண்ட் மானுபடிகோ. லிட்.
நவசாரி
2 x 2 புல் வாயில்
பான்லி புல் வாயில்
லெனோஸ்
ஆர்கண்டிகள்
இண்டிஷியா வாயில்

விளையாட்டு மன்னர்கள்-12


கிரிக்கெட் நிபுணர் குமார்



சென்னை கிரிக்கெட் ரஸிகர்களுக்கு இந்த மாதம் மூன்று நாட்கள் நல்லதோர் ஆட்டத்தைக் காணும் வாய்ப்பு கிடைத்தது. இலங்கையிலிருந்து வந்த பிரபல கிரிக்கெட் ஆட்டக்காரர்களும் சென்னை கிரிக்கெட் குழுவினரும் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் அருமையாக ஆடினர். பிரபல கிரிக்கெட் ஆட்டக்காரர் திரு எம். ஜே. கோபாலனின் பெயரில் வழங்கப்பட்டு வரும் வெற்றிக் கோப்பையைப் பெறுவதற்காகவே இவ்விரு கட்சியினரும் போட்டியிட்டனர்.

இலங்கை கிரிக்கெட் குழுவினர் நான்கு தடவைகள் சென்னை கிரிக்கெட் கோஷ்டியைத் தோற்கடித்து வெற்றிமாலை சூடியவர்கள். பந்தைத் தேக்கி, ஓட்டங்கள் ஏறாமல் தடை செய்வதில் அக்குழுவினர் கெட்டிக்காரர்கள் என்று பெயர் பெற்றவர்கள். இத்தகைய பிரசித்தி பெற்ற இலங்கை கிரிக்கெட் ஆட்டக்காரர்களை முதல் தடவையாகச் சென்னை கிரிக்கெட் கோஷ்டியினர் ஜெயித்தார்களென்றால் அது பெருமைப்படக்கூடிய காரியந்தானே?

இந்த அபார வெற்றிக்கு மூல காரணமாக விளங்கியவர் இளைஞர் திரு வி. வி. குமார். குமார் தமது பந்து வீசும் திறத்தினால் இலங்கை கிரிக்கெட் குழுவினரின் 'விக்கெட்டு'களையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அனாயாசமாக வீழ்த்திக் கொண்டே இருந்தார். இரண்டு 'இன்னிங்'ஸிலும் சேர்த்து அவர் பன்னிரண்டு ஆட்டக்காரர்களின் விக்கெட்டுகளை எடுத்தார். அன்று ஜயமடைந்தவர்களுக்கு வெற்றிக் கோப்பை வழங்கிய திரு சி. ராமசாமி அவர்களே, ''சென்னை கிரிக்கெட் குழுவினரின் வெற்றிக்கு இளைஞர் திரு குமாரே கதாநாயகனாக விளங்கினார்'' என்று பாராட்டினார்.



திரு வி. வி. குமார் பந்தை வீசுவதில் மட்டுமல்ல; பந்தை வேகமாக அடிப்பதிலும் சமர்த்தர் என்பதை இரண்டு தடவைகள் 'பவுண்டரி' அடித்து நிரூபித்தார். கடைசியில் நாலு ரன்களுக்குப் பந்தைச் சாதுர்யமாக அடித்து வெற்றிக் கொடியை நாட்டியவரும் அவரே.

''நீராழம் கண்டாலும் நெஞ்சாழம் காண இயலாது'' என்று ஒரு பழமொழி உண்டு. அதைப் போல அடக்கமே உருவான திரு குமாரிடம் உள்ள ஆட்டத் திறமை அவர் பந்து வீசுவது வரை தெரியாமல் இருந்தது.

இளைஞர் திரு குமார் சென்னையில் 1935-ம் வருஷம் பிறந்தார். மயிலாப்பூர் பி. எஸ். ஹைஸ்கூலில் கல்வி கற்று, விவேகானந்தா கல்லூரியில் பி. எஸ்ஸி. பட்டமும் பெற்றார். பதினான்காவது வயதிலேயே கிரிக்கெட் ஆட்டத்தில் முழு மூச்சோடு இறங்கி, பந்தை வீசுவதில் அபாரத் தேர்ச்சி பெற்றார். விவேகானந்தா கல்லூரிக்குக் கிரிக்கெட்டில் கிடைத்த பல வெற்றிகளுக்குத் திரு குமாரின் ஆட்டமே அஸ்திவாரமாக அமைந்தது. இவருக்கு டேபிள் டென்னிஸ், டென்னிஸ், பூப்பந்தாட்டம் முதலியவற்றிலும் நல்ல பயிற்சி உண்டு. 1954–55 வருஷங்களில் சென்னை சர்வகலாசாலை சார்பில் கட்டாக்கிலும், பரோடாவிலும் நிகழ்ந்த கிரிக்கெட் விளையாட்டுக்களில் கலந்து கொண்டிருக்கிறார். ரஞ்சி கிரிக்கெட் ஆட்டத்திலும் சென்னை கோஷ்டியில் ஆடித் தமது பந்து வீசும் திறமையைக் காட்டியிருக்கிறார். இப்பொழுது சென்னையில் பண்டஸ் கிரிக்கெட் கிளப்பில் இவர் ஆடி வருகிறார்.

துருதுருப்புடனும், சதா புன்சிரிப்புத் தவழும் முகத்துடனும் திகழும் திரு வி. வி. குமார் 'பிலிப்ஸ் இந்தியா' கம்பெனியில் பணியாற்றி வருகிறார்.

இளைஞர் திரு குமார் இடைவிடாப் பயிற்சியினாலும், தேர்ச்சியினாலும் கிரிக்கெட் பந்து வீசுவதில் இந்தியாவில் தலைசிறந்து விளங்கும் திரு குப்தே போல் விரைவில் திகழ வேண்டும்; சென்னை கிரிக்கெட் குழுவினருக்கு இனியும் வெற்றிக்கு மேல் வெற்றி தேடித் தரவேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

— குண்டுமணி



கன்னியும் கமலமும்

வீர அலெக்ஸாந்தர் உறக்கம் பிடியாமல் தன் பாசறைக்கு வெளியே ஜீலம் நதிக்கரையில் உலாவிக் கொண்டிருந்தான். நதிக் கரையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் ஒழுங்காக அடிக்கப்பட்டிருந்த கூடாரங்கள் பரவிக் கிடந்தன. எப்பொழுதும் அவன் உடம்பில் அணிந்திருக்கும் கவசத்தைக் கூட அப்பொழுது விலக்கி விட்டுச் சாதாரணமான உடையிலேயே இருந்தான்.

இரவு மிக மனோரம்யமா யிருந்தது.—முழுமதியின் அமுதகலசம் ஆகாய வீதியில் பாலை அள்ளித் தெளித்து விட்டிருந்தது. அவ்வமுத வொளியில் வெள்ளி உருக்காய்த் தவழ்ந்து, நெளிந்து, சலசலத்து ஓடியது ஜீலத்தின் நீர்ப் பரப்பு. நதியின் இரு கரைகளிலும் ஒளிர்ந்து, பசுமையைப் பரப்பியது அகன்ற புல்வெளி.

கைகளைப் பின்னால் கட்டி, மெல்ல நடை போட்டபடியே அன்றையப் பகல் நிகழ்ச்சிகளில் ஆழ்ந்து போயிருந்தான் அலெக்ஸாந்தர். மகா மேதாவியான அரிஸ்டாடிலின் அன்புக்குரிய சிஷ்யனும் மாணவனுமாய்த் திகழ்ந்த அவன், மிக இளைய வயதிலிருக்கையிலேயே உலக மகா சாம்ராஜ்ய மொன்றை ஸ்தாபித்து, அதன் மாபெரும் சக்கரவர்த்தியாகத் தன்னைக் கற்பித்து மகிழ்ந்தவன். அக் கற்பனையைச் செயல் முறையிலும் காட்டத் தொடங்கி விட்டான். அதன் விளைவே அவனுடைய இந்தியா விஜயம். பல வருடங்களாகவே, வெகு தொலைவில், புகழ் மண்டிக் கிடக்கும் இந்திய நாட்டைப்பற்றியும், அந்நாட்டின் பொன் விளையும் பூமி வளத்தைப் பற்றியும், அரம்பையர் போன்ற அழகிகளைப் பற்றியும், வீரம் செறிந்த மன்னர்களைப் பற்றியும், செல்வம் கொழிக்கும் நகரங்களைப் பற்றியும் விதம் விதமான செய்திகளை அவன் கேள்விப்பட்டிருந்தான்.

அதிலிருந்தே அவ்வதிசயமான நாட்டையும் அதன் வளப்பத்தையும் நேரில் கண்டு மகிழ்ந்து, அந் நாட்டைத் தனக்கு உரியதாக்கிக் கொள்ள வேண்டுமென்று முடிவு கட்டியிருந்தான். ஆனால் அவனுடைய நெடு நாளைய எண்ணங்கள் அன்றையப் பகலின் நிகழ்ச்சிகளால் கலகலத்துப் போயிருந்தன. சிந்தனையில் ஆழ்ந்திருந்த அவன், நடந்து கொண்டே நெடுந்தூரம் முன்னேறி விட்டான். அங்கே அவன் கண் முன்னே இந்திர ஜாலம் போல் விரிந்தது, ஒரு





காட்சி; சடக்கென்று நிறை அம் மகாவீரன், தன் நினைவுகளிலிருந்து விடுபட்டவனாய், அதிசயத்துடன் தன்னைச் சுற்றிலும் பார்வையைச் செலுத்தினான்.

அவ்விடத்தில் நதியின் போக்கில் ஒரு வளைவு. அவ்வளைவில் இயற்கையாய் அமைந்திருந்தது ஒரு பூங்கா. மலர்கள் மண்டிக் கிடந்த அவ்விடத்தில் தென்றல், தன் மென் கரங்களில் சுமந்து வந்த நறுமணத்தை நுகர்ந்த அலெக்ஸாந்தர் அடித்த சிலையாய் நின்றான் ஒரு கணம்.

அடுத்த கணம், ''யார் அங்கே?'' என்று இனிய குரலில் தேனையும் பாலையும் அவன் செவிகளில் ஒருங்கே பிழிந்தது திவ்யமான மதுரகண்டம் ஒன்று.

திடுக்கிட்ட வீரன் மின்வெட்டெனத் திரும்பினான். அவ்விடத்தில் நதியின் வலது பாரிசத்தில், பூங்காவிலிருந்து வரிசையாய் அமைக்கப்பட்டிருந்த கற்படிகளொன்றில் அமர்ந்து, நதியின் பளிங்கு போன்ற ஜலத்தில் தனது கால்களை விட்டுத் துழாவி விளையாடிக் கொண்டிருந்தாள், வனப்பு மிகுந்த பொற்பாவை பொருத்தி.

நிழலும் ஒளியும் கோலமிட்டுக் கொண்டிருந்த அவ்விடத்தில் தெரிந்தும் தெரியாமலும் தோற்றமளித்த அந்தப் பாவையைத் தனது கற்பனையின் விளைவாய்த் தோன்றிய கன்னியென்றே எண்ணிய அலெக்ஸாந்தர், அவளை வெறித்து நோக்கினான்.




'மகா வீரரே! தங்கள் வரவு நல்வரவாகுக' என்று ஒருபுன்னகையை உதிர்த்தபடியே எழுந்து நின்ற அந்தப் பெண், அலட்சியமாக அவனை நோக்கினாள்.

கனவில் நடப்பவளைப் போல் அவளை அணுகிய அலெக்ஸாந்தர், தன்னை மயக்கமுறச் செய்யும் அந்த மென்மையான நறுமணம் அவளிடமிருந்து வருவதை உணர்ந்து கொண்டான்.

பொற்சிலையாய்க் காட்சியளித்த அம்மின்னற் கொடியின் மென்கரத்தில் ஏந்தியிருந்த சிந்தூர வர்ணமான பெரிய மலரொன்றை அவன் விழிகள் அதிசயத்துடன் நோக்கின. அம்மலரிலிருந்து பரவிய மணம் அவனைப் போதையில் ஆழ்த்தியது.

''பெண்ணே! நீ யார்? இந்த அற்புதமான மலர் ஏது?'' என்று பேராவலுடன் வினவினான். அவனருகே வந்து நின்றாள் அவள். கலீரென்ற அவள் சிரிப்பு, வெள்ளி மணியின் நாதம் போல் அவ்விடத்தில் எதிரொலித்தது. பயமென்பதையே அறியாத அலெக்ஸாந்தர் தன் உடம்பை ஒரு முறை சிலிர்த்துக் கொண்டான்.

''மகா வீரரே! இன்று பகலில் தன்னுடைய கோரிக்கையினால், உலக மகா வீரராகிய தங்களைக்கூட அதிசயிக்கச் செய்த மகா மன்னன் புருஷோத்தமனின் தங்கை



புதிய கவர்னர் திரு விஷ்ணுராம் மேதி அவர்களுக்குச் சென்னை நகரசபை மார்ச் 9-ந் தேதி வரவேற்பளித்துக் கௌரவித்தது. வரவேற்புப் பத்திரம் அடங்கிய வெள்ளி ஸ்தூபியைச் சென்னைமேயர் திருமதி தாராசெரியன் சென்னை கவர்னருக்கு வழங்கும் காட்சியைப் படத்தில் காணலாம்.

மதூலிகை நான். இந்த மலரின் பெயர் சிந்தூரக் கமலம். எங்கள் தெய்வத்தின் திருவடிகளில் இதை வைத்து வழிபடுவோம் நாங்கள்...... —இதைச் சொல்லி விட்டுத் தன் விழிகளை மலர விழித்தாள் அவள்.

''வாருங்கள், இங்கேயே நிற்கிறீர்களே!'' என்று அழைத்தாள் அவனை.

கனவில் நடப்பதைப் போன்று அவளைத் தொடர்ந்து நடந்தான் அவன். கிரேக்க நாட்டு அழகுத் தெய்வமான வீனஸின் சிலைகளை அவன் பன்முறை கண்டிருக்கிறான். செம்பொன்னில் செதுக்கிய வீனஸின் சிலையொன்று உயிர் பெற்று நடந்து வருவதைப் போன்றிருந்தது. அவன் முன்னால் அவள் நடந்து சென்றது.

ஆனால் ஒரே ஒரு வித்தியாசம். அவன் கண்டிருந்த சிலைகளின் கூந்தல் பொன்னிறமாகவும், விழிகள் நீலமணிகளாகவும் ஒளிரும். இந்தியா தேசத்துப் பெண்ணழகியான மதூலிகையின் அலைகள் போன்ற கூந்தல் கருமையொளி பாய்ந்தும், விழிகள் மைவண்ணமாயுமிருந்தன.

பூங்காவுக்குள் நுழைந்த அவ்வழகி, மலர்ச் செடிகளால் சூழப்பட்டிருந்த கோபுரம் போன்ற ஒரு கட்டடத்தை நோக்கிச் சென்றாள். அதற்கெதிரே யிருந்தது வட்ட வடிவமான தடாகமொன்று. அந்தத் தடாகத்தில் சிறிதும் பெரிதுமான பல நூற்றுக் கணக்கான சிந்தூரக் கமலங்கள் சந்திரனை நோக்கி முகம் கூம்பியிருந்தன. ஆயினும் அவற்றினின்றும் எழுந்த பரிமளம் அவ்விடம் முழுதும் வியாபித்து, உள்ளத்தையும் உடலையும் ஒருங்கே பரவசப்படுத்தின.

கோபுரத்தை நோக்கிச் சென்ற கட்டழகி அங்கேயிருந்த கதவைத் திறந்தாள். பின்னாலேயே வந்த அலெக்ஸாந்தர் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டான்.

அங்கே காணப்பட்டது வட்டவடிவமான ஒரு அறை. அவ்வறையின் நடுவே பொற் கமலமொன்றின்மீது கம்பீரமாய் நின்றது அழகுப் பிம்பமான தெய்வச் சிலையொன்று. அச்சிலையின்மீது விலை மதிப்புள்ள ரத்னாபரணங்கள் மின்னிக் கண் பறித்தன. இருபுறமும் சுடர் விட்டெரிந்தன தூங்காமணி விளக்குகள். அத்தெய்வச் சிலையின் பாதங்கள் அருகில் சிந்தூரக் கமலங்கள் சிறு குன்றைப் போல் குலுங்கிக் கிடந்தன.

மீண்டும் அவற்றின் பரிமளத்தில் மயங்கிய அலெக்ஸாந்தர் சிலையை நோக்கியபடியே, ''இது என்ன?'' என்று கேட்டான்.

மதூலிகை அவனை நோக்கிப் புன்முறுவலுடன் பதிலளித்தாள்: ''இதுதான் நாங்கள் வழிபடுகிற தெய்வமாகிய சிந்தூரக் கன்னி. புரு வம்சத்தின் அதிதேவதை இவள். இவளுடைய பூஜைக்குரிய மலர்களே இவை'' என்று கீழே குவிந்து கிடந்த மலர்களைச் சுட்டிக் காட்டினாள்.

சிலை எதிரில் நின்ற அலெக்ஸாந்தர் அன்பும் ஆனந்தமும் ஒருங்கே மிளிரும் அச்சிலையின் மலர் விழிகளினின்றும் தன் பார்வையை அகற்ற முடியாமல் நின்றான். அவனை நோக்கியபடியே அவன் எதிரே இன்னொரு சிலை போல் நின்றாள் மதூலிகை.

* * *

அன்று பகல் க்ஷத்திரிய மன்னனாகிய புருஷோத்தமன் மகா அலெக்ஸாந்தரால் முறியடிக்கப்பட்டான். அவனுடைய யவன வீரர்கள் வெற்றிக் களியாட்டத்தில் மூழ்கிக் கிடந்தார்கள். பொன்னும் மணியும், உயர்தரமான மது வகைகளும் சக்கரவர்த்தியால் அவர்களுக்கு வாரி வழங்கப்பட்டன. யவன வீரர்களின் கூடாரங்களின் மேல் நூற்றுக் கணக்கான கொடிகள் பறந்து கொண்டிருந்தன.

எல்லாவற்றுக்கும் நடுநாயகமாக இருந்த தன்னுடைய விசாலமான அகன்ற கூடாரத்தின் நடுவில் பொற்சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தான் அலெக்ஸாந்தர். சூழ நின்றனர் அவனுடைய தளபதிகள்.

அவர்கள் எதிரே கம்பீரமே வடிவாய்த் தனது கைகளை மார்பில் கட்டியபடி முற்றிலும் நிராயுதபாணியாய், அலட்சியமாய் நின்றான் புரு வம்சத்தின் சிங்கமாகிய புருஷோத்தமன். உயிரைத் திருணமாய் மதிக்கும் ஆணவம் அவனுடைய ஒவ்வொரு அங்க அசைவிலும் நிரம்பி வழிந்தது.

''மன்னா! நீ இப்பொழுது என் கைதி!'' என்றான் அலெக்ஸாந்தர் அகம்பாவத்துடன்.

நெருப்புப் போல ஒளி வீசிய தனது விழிகளை அவன் முகத்தில் பதித்தான் புரு. ஆணியடித்தாற் போல் பேசினான்:

''யவன வீரா! எங்கள் மன்னர்களோ, அல்லது அவர்கள் வம்சத்தவர்களோ, என்றுமே, எவருக்கும் கைதியாகவோ அடிமையாகவோ இருந்ததும் கிடையாது! இருக்கப்


வசீகரிக்கும்
மென்மை!
அதனுடைய மென்மையான நறுமணம் நீங்கள் இருப்பதை ரகசியமாகத் தெரிவிக்கிறது. வெல்வெட் போன்ற அதனுடைய வழவழப்பு உங்கள் சருமத்தோடு கொஞ்சி விளையாடுகிறது. உங்களை மயக்கி வெறியூட்டும் பிரஞ்சு வாசனைக் கலவை சேர்ந்த உயர்ந்த டால்கம்!
லெக்மி
டால்கம் பவுடர்
லெக்மி பிரைவேட் லிட்.
ஒரு டாடா தயாரிப்பு
பாம்பே ஹவுஸ், ப்ரூஸ் தெரு, பம்பாய்-1.
LKM 51 TM.
EVEREST

போவதும் கிடையாது!'' அதிசயத்துடன் அவனை நோக்கினான் அலெக்ஸாந்தர்.

''அப்படி யென்றால்?......''

''அப்படி யென்றால் நான் என்றைக்கும் ஒரு ராஜ்யத்தின் மன்னன்தான்!'' வெண்கலம் போன்ற தொனியில் வெளி வந்த இவ்வார்த்தைகளைக் கேட்ட யவனமாவீரன் துள்ளி யெழுந்தான்.

''சபாஷ்! இதல்லவா வீரம்?'' என்றான். அப்படியே முன்னே பாய்ந்து தன்முன்னே நின்ற புருஷசிங்கத்தைக் கட்டி யணைத்துக் கொண்டான்.

சூழ்ந்து நின்ற தளபதிகள் அனைவரும் சந்தோஷத்துடன் ஆரவாரித்தனர்.

அடுத்த விநாடி இரு மகா வீரர்களும் தோளின் மீது கை போட்டுக் கொண்டு குதூகலத்துடன் கூடாரத்துக்கு வெளியே வந்தனர்.



ஒரு தமிழ் நாட்டுக் குழந்தை பஞ்சாபி மொழியில் பேசி முதற் பரிசைத் தட்டிக் கொண்டு போனால் அது நமக்கு ஆச்சரியமும் பெருமையும் அல்லவா? சமீபத்தில் ராமகிருஷ்ண மடத்தார் நடத்திய விவேகானந்தர் ஜயந்திக் கொண்டாட்டத்தில் குமாரி லக்ஷ்மிகிருஷ்ணமூர்த்தி பஞ்சாபிப் போட்டியில் பங்கெடுத்து முதற் பரிசு பெற்றிருக்கிறாள்.

* * *

''அப்படிப்பட்ட மகா வீரனுடைய தங்கையா இவள்? அண்ணனுடைய கம்பீரமும் அலட்சியமும் இவளிடமும் அதேஅளவில் குடி கொண்டிருக்கின்றன!'' என்று எண்ணமிட்ட அலெக்ஸாந்தர் அவளை நன்றாய் ஊடுருவிப் பார்த்தான்.

ஒரு அரசிளங் குமரிக்குரிய ஆடையணிகளோ, அலங்காரங்களோ, ஏதும் அவளிடம் காணப்படவில்லை. செப்புச் சிலை போல் இருந்த அப்பேரழகி, வெண் பட்டாடை ஒன்றும் கச்சு ஒன்றுமே அணிந்திருந்தாள். மோதிரச் சுருளிட்டு அலையலையாய்ப் படிந்த அவளுடைய நீண்ட கூந்தல் தோளில் விழுந்து கணுக்கால் வரையில் புரண்டது. சிறு நெருப்புப் பொறி போல் பளிச்சிட்ட சிந்தூரம் ஒன்று அவள் பிறை நுதலில் மின்னியது. பருவத்தின் பூரிப்பும் இளமையும் அவளுடைய ஒவ்வொரு அங்கத்திலும் நிரம்பி வழிந்தன. ஆனால் அப்பருவத்துக்குரிய நாணமோ, தயக்கமோ எதுவும் அவளிடம் காணப்படவில்லை. அதற்கு மாறாக, ராஜ வம்சத்துக்கே உரித்தான ஒரு கம்பீரமும், உலகத்தையே துச்சமாக மதிக்கும் ஒரு அலட்சிய பாவமும் அவ்வழகியிடம் காணப்பட்டன.

இளம் காளையான அலெக்ஸாந்தர் இதுகாறும் போர்த் தொழிலையும் உலக மகா சாம்ராஜ்யத்தையும் தவிர வேறெதைப் பற்றியும் கனவிலும் நினையாதவன். பெண்களுக்கு இதுகாறும் அவன் தன் வாழ்க்கையில் இடம் கொடுத்ததே இல்லை.

அப்படிப்பட்டவனின் இரும்பு மனம் இப்பொழுது தன்னெதிரே நின்ற அழகியை நோக்கும் பொழுது விவரிக்க முடியாத ஒரு இன்ப உணர்ச்சியால் நிறைந்தது.

குனிந்து ஒரு மலரை யெடுத்து அவனிடம் நீட்டினாள் மதூலிகை.

''பெற்றுக் கொள்ளுங்கள்; இது எங்கள் தேவியின் பிரசாதம்.'' விவரிக்க முடியாத ஒரு உணர்ச்சியுடன் தன் இரு கைகளையும் நீட்டி அம்மலரைப் பெற்றுக் கொண்ட யவன வீரன் அதன் பரிமளத்தை ஆனந்தத்துடன் நுகர்ந்தான்.

''விடியும் வேளையாகி விட்டது. தங்களுடைய வீரர்கள் உங்களைத் தேடிக் கொண்டு வந்து விடுவார்கள். தாங்கள் போய் வாருங்கள்'' என்று கூறி விட்டுக் கலகல வென்று நகைத்த மதூலிகை நதிக்கரையை நோக்கி நடக்கலானாள்.

சொப்பனத்தில் நடப்பது போல் மீண்டும் அவளைத் தொடர்ந்தான் அலெக்ஸாந்தர்.

நதிக்கரையை அடைந்ததும் அங்கேயே அந்தப் பெண் நின்று விட்டாள். பிறகு அவனிடம், ''அதோ காண்கிற வழியாகச்செல்லுங்கள். அரைமணியில் தங்கள் பாசறையில் போய்ச் சேர்ந்துவிடும்!'' என்றாள்.

யவன வீரன் அவ்வழியே நடக்கலானான். சற்றுத்தூரம் சென்ற பின்பு திரும்பிப் பார்த்தான். அதேவிடத்தில் செப்புச் சிலைபோல் அசையாமல் நின்று கொண்டிருந்தாள் மதூலிகை.

''வீனஸ்ஸைக் காட்டிலும் அழகாயிருக்கிறாளே, இவ்விந்தியப் பெண்!'' என்று அதிசயித்தபடியே கையிலிருந்த மலரை ஒரு தடவை முகர்ந்தான் அலெக்ஸாந்தர். பாசறையை அவன் அடையும்பொழுது விடி வெள்ளி முளைத்து விட்டது.

* * *

அடுத்த மூன்றாவது தினம் பிற்பகல். அன்று புரு வம்ச மன்னனாகிய புருஷோத்தமனின் மாளிகையில் அலெக்ஸாந்தருக்காக ஒரு பெரும் விருந்து நடைபெற்றது.-யவன வீரன் மறுதினம் காலையில் தன்னுடைய படை வீரர்களுடன் கிளம்பப் போகிறான்.

வீரத்தை வீரமே போற்றும் என்றபடி, யவன மகாவீரனைப் பெரிதும் கௌரவித்த புருஷோத்தமன், யானையும், குதிரையும், பொன்னும் மணியும் அலெக்ஸாந்தருக்குப் பரிசாக அளித்தான்.

மன்னவனின் மாளிகையில் இரு வீரர்களும் பிரியும் முன்பு வார்த்தையாடிக் கொண்டிருந்தனர். வெளியே திரண்டிருந்த யவன வீரர்கள் தங்கள் நாடு திரும்பப் போகும் உற்சாகத்தில் மூழ்கியிருந்தனர்.

“மகாவீரரே! தங்கள் முகத்தில் ஏன் வாட்டம்?” என்று மிகுந்த அன்புடன் கேட்டான் புருஷோத்தமன்.

ஒரு விநாடி தயங்கிய அலெக்ஸாந்தர்,— “மன்னா! நீங்கள் கேட்பது உண்மையே! இரண்டு தினங்களாக என் உள்ளதை ஒரு கவலை வாட்டுகிறது” என்று கூறினான்.

“என்ன கவலை அது? என்னால் அது நிவர்த்திக்கக் கூடியதா?”

“ஆம், உங்களால் நிவர்த்திக்க முடியும். இரண்டு தினங்கள் முன்பு கட்டழகியான உங்கள் சகோதரியைத் தற்செயலாய் நதிக் கரையில் சந்தித்தேன். என்னுடைய வாழ்க்கையில் இதுவரையிலும் நான் பெண்களைக் குறித்துச் சிந்தித்ததேயில்லை. ஆயினும், இப்பொழுது நான் உங்கள் சகோதரியைத் திருமணம் புரிந்து கொண்டு என்னுடைய சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினியாக்கிக்கொள்ள விரும்புகிறேன்; உங்களுடைய சம்மதமிருந்தால்” என்றான் அலெக்ஸாந்தர்.

இதைக் கேட்ட புருஷோத்தமனின் நெற்றி சிந்தனையினால் சுருங்கியது.

“ஆம்; மதூலிகை சொன்னாள் உங்களைச் சந்தித்ததைப் பற்றி. சிந்தூரக் கன்னி பீடத்துக்கு அழைத்துச் சென்று சிந்தூர மலர் கொடுத்ததையும் சொன்னாள். ஆயினும், மதூலிகை உங்கள் மனைவியாவது என்பது முடியாத காரியம்!”

யவனசக்கரவர்த்தி புரு மன்னனை நிமிர்ந்து நோக்கினான். ஏமாற்றம் அவன் விழிகளில் பிரதிபலித்தது.

“ஏன்? ஹிந்துப் பெண்ணான உங்கள் சகோதரி பிற மதத்தனாகிய என்னை மணப்பது உங்களுக்குச் சம்மதமில்லையா?”

“இல்லையில்லை! ஆனால் தவிர்க்க முடியாத வேறொரு காரணத்தினால் நீங்கள் மதூலிகையை மணக்க முடியாது.”

“ஏனென்று கூற முடியாதா?”

ஒரு விநாடி யோசித்தான் புருஷோத்தமன். பிறகு வருத்தம் தோய்ந்த குரலிற் பேசினான்:

“மகாவீரா! அதை நான் கூறுவதில் பலனில்லை. இன்றிரவு சிந்தூரத் தடாகக் கரையில் மதூலிகை உங்களை வந்து காண்பாள். அவள் மூலமாகவே அதைத் தெரிந்து கொள்ளுங்கள்” என்றான்.

அலெக்ஸாந்தர் தன்னெதிரே யிருந்த வீர மன்னனைக் குழப்பத்துடன் நோக்கினான். அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. புருஷோத்தமன் மீண்டும் தொடர்ந்தான்:

“நண்பா! என் சகோதரி மதூலிகை மகா அலெக்ஸாந்தரின் மனைவியாவதில் அவள் சகோதரனாகிய என்னைக் காட்டிலும் மகிழ்ச்சியடையக் கூடியவர் வேறு யாருமே யிருக்க மாட்டார்கள். இதில் ஜாதியோ, மதமோ, ஏதும் குறுக்கிடவில்லை. ஆனாலும், அது முடியாது என்பதை அவளே உங்களுக்குத் தெரிவிக்கட்டும்” என்றான்.

அலெக்ஸாந்தர் மௌனமாகப் போவதற்கு எழுந்தான். புருஷோத்தமனும் அவனை வழியனுப்புவதற்கு எழுந்தான்.

அன்றிரவு தேய்மதியின் வெளிச்சத்தில் நிழல் அதிகமாகவும் ஒளி குறைவாகவுமிருந்தமையால் ஜலத்தின் நீர்ப்பரப்பு கருமை தோய்ந்து பளபளத்துக் கொண்டிருந்தது.

முன்பு சென்ற அதே பாதை வழியாக நடந்து கொண்டிருந்தான் அலெக்ஸாந்தர். அவனுடைய இருதயத்தில் ஏமாற்றத்தினால் உண்டான பாரம் ஏறியிருந்தது.

மலர்ப் பூங்காவில் நுழைந்து சிந்தூரக் கமலங்கள் நிரம்பிய தடாகக் கரையையடைந்தான்.

“வாருங்கள்!” என்று வரவேற்றபடியே நிழலிலிருந்து வெளிப்பட்டாள் மதூலிகை. பிறகு சிந்தூரக் கன்னியின் பீடத்தை நோக்கி நடந்தாள். ஒன்றும் பேசாமல் மௌனமாக அவளைப் பின்தொடர்ந்தான் அலெக்ஸாந்தர்.

தேவியின் சன்னிதானத்தில் போய் நின்ற மதூலிகை ஒரு அபூர்வமான ஒளி தன் விழிகளில் ஒளிர, தன்னெதிரே நின்ற யௌவன வீரனைக் கனிவுடன் நோக்கினாள். முன்பு கண்ட அலட்சியமும் கம்பீரமும் அவளுடைய பார்வையிலிருந்து மறைந்துவிட்டன.

“மகாவீரரே! எங்கள் வம்சத்தின் ஒவ்வொரு தலைமுறையிலும் ஒரு கன்னிகையைச் சிந்தூரக் கன்னியின் சேவைக்காக அர்ப்பணித்துவிடுவது வழக்கம். துரதிருஷ்டவசமாக என் தந்தைக்கு நானும் என் சகோதரரும் இரண்டே குழந்தைகள். வேறு பெண் இல்லாமையால் சிந்தூரக் கன்னியின் சேவைக்கு மிகச் சிறு வயதிலேயே நான் அர்ப்பணிக்கப்பட்டேன். ஆகவே வாழ்நாள் முழுதும் மணமின்றிக் கன்னிகையாகவே நான் கழிக்க வேண்டும். தங்களை நேற்று முன்தினம் இரவு சந்தித்த பொழுது இத்தகைய ஒரு எண்ணம் தங்கள் மனத்தில் உண்டாகக் கூடுமென்று நான் கனவிலும் சிந்திக்கவில்லை. முன்யோசனையின்றி நான் தங்களை எதிர்ப்பட்டதின் விளைவாகத் தங்களுக்கு அனாவசியமான மனக்கஷ்டத்தையும் ஏமாற்றத்தையும் உண்டுபண்ணி விட்டேன். அதன்பொருட்டு உங்கள் மன்னிப்பைக் கோருகிறேன்” என்று மிகுந்த அனுதாபத்துடன் பேசினாள். இவ் வார்த்தைகள் அலெக்ஸாந்தரின் உள்ளத்தைத் தொட்டன.

“மதூலிகா! நானும் யோசியாமல் கேட்டு, உன் மனத்தைப் புண்படுத்தியதற்கு என்னை மன்னித்துவிடு. ஆனால், ஒன்றை மட்டும் நிச்சயமாய் நம்பு. வீர அலெக்ஸாந்தரின் மனம் இதுவரையில் பெண்களை நாடவில்லை உன்னைத் தவிர. நீயோ தேவ அர்ப்பணம் செய்யப்பட்ட மலராகி விட்டாய்! ஆகவே உனக்கு இடம் கொடுத்த இருதயம் என்றும் உனக்குத்தான். நான் போகிறேன்” என்று கூறி விட்டுத் திரும்பினான்.

சட்டென்று குனிந்த மதூலிகை கீழே கிடந்த மலர்க்குவியலிலிருந்து சிந்தூரக் கமலமொன்றை யெடுத்து நீட்டினாள். அதைப் பெற்று முகர்ந்த மகாவீரன் அங்கிருந்து வேகமாய் நடக்கலானான். பார்த்துக் கொண்டே நின்ற கன்னியின் விழிகளில் பனி படர்ந்தது.

இரண்டாவது ஐந்துவருஷத் திட்டம்

க. சந்தானம்

இரண்டாவது ஐந்து வருஷத் திட்டம் 1956-ம் வருஷம் ஏப்ரல் 1-ம் தேதியில் ஆரம்பமாயிற்று. அதற்கு இரண்டு வருஷங்கள் முன்னதாகவே மத்தியராஜ்ய அரசாங்கங்களுடன் கலந்து திட்டக் கமிஷன் அதைத் தயாரிக்கத் தொடங்கியது. ஒவ்வோர் கிராமத்து ஜனங்கள்கூடித் தங்கள் கிராமத்துக்குத் திட்டம் போட்டு, கிராமத் திட்டங்களை ஒரு தாலூக்காவின் பிரதிநிதி கமிட்டி பரிசீலனை செய்து, பொதுவாகத் தாலூக்காவின் முன்னேற்ற இனங்களையும்சேர்த்து ஜில்லா காரியாலயத்துக்கு அனுப்பியது. அங்கே ஒரு ஜில்லாக் கமிட்டி அவற்றைத் திரட்டி ஜில்லாவின் முன்னேற்றத் திட்டங்களையும் சேர்த்து ராஜ்ய அரசாங்கத்துக்கு அனுப்பியது. ராஜ்ய சர்க்கார்கள் அவைகளைப் பரிசீலனை செய்து அவற்றுள் முக்கியமான பாகங்களை எடுத்துக்கொண்டு ராஜ்யத்துக்கு அவசியமான திட்டங்களையும் சேர்த்துத் திட்டக் கமிஷனுக்கு அனுப்பினர். அந்தத் திட்டங்களின் மொத்தக் கொள்முதல் ரூபாய் 6000 கோடிக்கு மேலாயிற்று. நாட்டின் சக்தியையும், மத்திய சர்க்காரின் தேவைகளையும் கவனித்து முடிவில் பிரதேசங்கள் கோரிய மொத்தத் திட்டத் தொகை மூன்றில் ஒரு பங்காகக் குறைக்கப்பட்டது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தால் பாரதத்தின் மொத்த வருமானம் நூற்றுக்கு 18 விதம் வளர்ந்த போதிலும், ஜனத்தொகையின் வளர்ச்சியால் தனி நபரின் சராசரி வருமானம் 11 சதவிகிதம்தான் உயர்ந்தது. 25 வருஷங்களில் பாரதப் பிரஜையின் சராசரி வருமானம் இருமடங்காக வேண்டுமென்பது திட்டக் கமிஷனின் லட்சியம். அதற்குப் பின்வரும் மதிப்புகள் போடப்பட்டிருக்கின்றன.

	1951-56	56-61	61-66	66-71	71-76
			(கோடிகள்)		
திட்ட முடிவில் தேசிய வருமானம் ரூ.	10,800	13480	17260	21680	27270
செலவு, முதலீடு ரூ. (கோடி ரூ.)	3,100	6200	9900	14800	20700
திட்ட முடிவில் ஜனத்தொகை	38·4	40·8	43·4	46·5	50
திட்டமுடிவில் சராசரிநபர்வருமானம் ரூ.	281	331	396	466	545


திட்டச் செலவு, முதலீடு தொகைகளில் அரசாங்கச் செலவும் தனி முதலாளிகளின் முதலீடும் சேர்ந்திருக்கின்றன.

இரண்டாவது திட்ட காலத்தில் மத்திய, ராஜ்ய சர்க்கார்கள் மொத்தம் ரூ. 4800 கோடி செலவு செய்வதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதன் விவரம் :

இனம்	கொள்முதல் கோடி
1. விவசாயமும், சமுதாய அபிவிருத்தியும்	568
2. நீர்ப்பாசனம், மின்சாரம்	913
3. தொழில் வளர்ச்சி	890
4. போக்குவரத்து	1385
5. சமூக சேவை	945
6. வேறு பல திட்டங்கள்	99
மொத்தம்	4800

இதில் ராஜ்ய அரசாங்கங்களின் திட்டங்களில் ரூ. 2240 கோடியும் மத்திய சர்க்காரின் திட்டங்களில் ரூ. 2560 கோடியும் செலவழிக்கப்படும். புதியதாக அமைக்கப்பட்ட ராஜ்யவாரியாகச் செலவழிக்கப்படும் தொகைகள் :

பிரதேசம்	கோடிகள்
ஆந்திரப் பிரதேசம்	175·36
அஸ்ஸாம்	57·94
பீகார்	194·22
பம்பாய்	350·13
கேரளம்	87·07
மத்திய பிரதேசம்	190·89
மதராஸ்	152·25
மைசூர்	146·38
ஒரிஸ்ஸா	99·97
பஞ்சாப்	162·68
ராஜஸ்தானம்	105·27
உத்தரப் பிரதேசம்	253·10
மேற்கு வங்காளம்	153·67
ஜம்மு, காச்மீரம்	33·92
	2162·85



மொத்தம் வேண்டிய ரூ. 4800 கோடிக்குப் பின்வரும் வருவாய்கள் எதிர்பார்க்கப்படுகின்றன:

மத்திய, ராஜ்யஅரசாங்க வருமானத்திலிருந்து	1150
மார்க்கெட் கடன்கள்	700
சிறு தொகைச் சேமிப்பு	500
ரயில்வே மிச்சம்	150
பிராவிடெண்ட் பண்ட் முதலிய டிபாசிட்டுகள்	250
வெளிநாடுகளிலிருந்து	800
துண்டு	1200
	4750

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பலனாகப் பின்கண்ட அபிவிருத்திகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

உணவு தானியங்களில் 100 லக்ஷம் டன்; பருத்தி 13 லக்ஷம் பேல்கள்: கரும்பு 13 லக்ஷம் டன் வெல்லம் கொடுக்கக்கூடியது; எண்ணெய் வித்துக்கள் 15 லட்சம் டன்; சணல் 10 லட்சம் பேல்கள்; புதிய நீர்ப்பாசனம் 210 லட்சம் ஏக்கராக்கள்; மின்சாரம் 35 லட்சம் கிலோவாட்; இரும்பு மண் 82 லட்சம் டன்; நிலக்கரி 220 லட்சம் டன்; எஃகு 30 லட்சம் டன்; அலுமினியம் 17·5 ஆயிரம் டன்; இயந்திரக் கருவிகள் ரூ. 225 லட்சம்; ரயில் என்ஜின்கள் 225; சிமின்ட் 87 லட்சம் டன்; ரசாயன உரங்கள் 16·7 லட்சம் டன்: சர்க்கரை 6 லட்சம் டன்; காகிதம் 1·5 லட்சம் டன்; சைக்கிள் 4·5 லட்சம்; தையல் மிஷின் 1·1 லட்சம்; மின்சார விசிறிகள் 3·25 லட்சம்: ரயில் போக்குவரத்தில் பிரயாணிகள் 15 சதவிகிதமும், சாமான்கள் 51 சதவிகிதமும் விருத்தி எதிர்பார்க்கப்படுகிறது. புதிய தள ரஸ்தாக்கள் 20,000 மைல்கள் போடப்படும். கடலோரக் கப்பல் போக்குவரத்தில் 34 சதவிகிதம், வெளி நாட்டுக் கப்பல்களில் 68 சதவிகிதம் அதிகரிக்கலாம். துறைமுகங்களில் கையாளப்படும் சரக்குகள் 30 சதவிகிதம் அதிகமாகும். தபாலில் 36 சதவிகிதம், தந்தியில் 28 சதவிகிதம் டெலிபோன்களில் 67 சத விகிதம் கூடுதலாகும். ஆரம்பப் பள்ளியில் படிக்கும் குழந்தைகள் 51 சத விகிதத்திலிருந்து 63 சத விகிதத்துக்கு அதிகரிக்குமென்று கருதப்படுகிறது. வைத்தியசாலைகளில் 26 சதவிகிதம், ஆஸ்பத்திரி படுக்கைகளில் 24 சதவிகிதம் பெருக வேண்டும் என்ற உத்தேசம்.


பாரதத்தின் ஜன நெருக்கத்தாலும், அது ஆண்டுதோறும் அதிகரித்து வருவதாலும் வேலை யில்லாமல் தவிப்போரின் சங்கியை அதிகரிப்பது சகஜமே. விவசாயத்தில் ஈடுபட்டிருப்போருக்குச் சாதாரணமாக வருஷத்தில் 6, 7 மாதமே வேலை யுண்டு. மீதிக் காலத்தை வீணாக்காமல் இருப்பதற்காகவே காந்தியடிகள் ராட்டினத்தில் நூல் நூற்கும் தொழிலைப் புனருத்தாரணம் செய்யப் பிரதாப பிரயத்தனம் செய்தார். அப்படியே இதர கிராமத் தொழில்களையும் வளர்க்கத் தனி ஸ்தாபனம் ஏற்படுத்தி அரும்பாடு பட்டார். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் அவ்விதத் தொழில்களை விருத்தி செய்ய ரூ. 44 கோடி செலவிடப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 200 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இம்மாதிரி சில மாதங்கள் வேலையில்லாதிருப்போரைத் தவிர, வருஷம் முழுதும் வேலையும், கூலியும் இல்லாமல் லட்சக்கணக்கான இந்தியர்கள் இருக்கிறார்கள். வேலை செய்யக்கூடிய பிச்சைக்காரர்களையும் சேர்த்தால் கோடிக்கணக்கில் இருக்கலாம்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் 53 லட்சம் பேர்கள் வேலையில்லாமல் இருந்தனர் என்று ஸ்தூலமாகத் திட்டக்கமிஷன் சார்பில் மதிப்பிடப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வயதாகி வேலை தேடுவோரின் சங்கியை 100 லட்சம் என்றும் கணக்கிட்டிருக்கின்றனர். இரண்டாவது திட்டம் பூரணமாக நிறைவேறினால் அதன் மூலம் 79 லட்சம் நபர்களுக்கு வேலை கிடைக்கக் கூடும். அப்பொழுதும் 74 லட்சம் பேர்கள் வேலையில்லாமல் இருப்பார்கள். இதிலிருந்து இந்தியப் பொருளாதார நிலைமை எவ்வளவு சிக்கலாக இருக்கிறதென்று விளங்கும்.

1952-ல் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஓர் முக்கியமான புது அம்சம் புகுத்தப்பட்டது. அதைச் சமுதாய அபிவிருத்தி (கம்யூனிட்டி பிராஜக்ட்), தேசிய விஸ்தரிப்பு (நாஷனல் எக்ஸ்டென்ஷன்) என்று பெயரிட்டிருக்கின்றனர். இரண்டும் ஒரே நோக்கமும், ஒரேவிதக் காரியங்களும் கூடியவை. சமுதாய அபிவிருத்தித் திட்டத்தில் வேலைகள் அதிக தீவிரமாகவும், செலவு தொகை அதிகமாகவும் இருக்கும். சாதாரணமாக 66,000 ஜனங்கள் அடங்கிய கிராமங்களை ஒரு வட்டாரமாகச் செய்து அதில் விவசாயத்தைச் செம்மைப்படுத்துவது, கல்வி சுகாதாரங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வது, குடிசைத் தொழிலை விருத்தி செய்வது முதலிய நிர்மாண வேலைகள் செய்யப்படுகின்றன. தாசில்தார் அந்தஸ்தில் ஒரு முக்கிய உத்தியோகஸ்தரும், சமூகக் கல்வி, விவசாயம் கூட்டுறவு முதலிய உதவி உத்தியோகஸ்தர்களும், பத்துகிராம சேவகர்களும் ஒவ்வோர் வட்டாரத்திலும் இந்த வேலைகளைச் செய்து வருகின்றனர்.

முதல் திட்ட முடிவில் 300 சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களும், 900 தேசிய விஸ்



தரிப்பு வட்டாரங்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. ஒரு தேசிய விஸ்தரிப்பு வட்டாரம் மூன்று வருஷங்கள் வேலை செய்த பிறகு, அது சமுதாய அபிவிருத்தி வட்டாரமாக மாற்றப்பட்டு மீண்டும் மூன்று வருஷங்கள் வேலைசெய்யும். பின்னர் அது ராஜ்ய அரசாங்கத்தின் சாதாரண நிர்வாகத்தில் சேர்க்கப்பட்டு முன் செய்த வேலைகள் தொடர்ந்து நடக்கும்படி ஏற்பாடு செய்யப்படும்.

இரண்டாவது திட்ட காலத்தில் தேசிய விஸ்தரிப்பு வட்டாரங்கள் 3800 ஸ்தாபிப்பதற்கும், 1120 பழைய விஸ்தரிப்பு வட்டாரங்களைச் சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களாக மாற்றுவதற்கும் யோசனை செய்யப்பட்டிருக்கிறது. முதல் திட்டத்தில் இவைகளுக்காக ரூ.46 கோடி செலவிடப்பட்டது. இரண்டாவது திட்டத்தில் ரூ. 200 கோடி இதற்காகச் செலவழிப்பதென்று திட்டம் போடப்பட்டிருக்கிறது. ஒரு சமுதாய அபிவிருத்தி வட்டாரத்துக்கு மூன்று வருஷச்செலவு ரூ. 12 லக்ஷம், தேசிய விஸ்தரிப்பு வட்டாரத்துக்கு அதே காலத்துக்குச் செலவு ரூபாய் 4 லக்ஷம். இந்தச் செலவில் பெரும்பாகம் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பாகும். இரண்டாவது திட்ட முடிவில் பாரதத்தின் 60 சதவிகிதம் கிராமங்களில் தேசிய விஸ்தாரமும், 40 கிராமங்களில் சமுதாய வட்டாரமுமாக நாடெங்கும் கிராம நிர்மாண வேலைகள் படர்ந்திருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பூர்ணமாக நிறைவேற்றப்பட்டால், அதனால் இந்தியா தீவிரமாக முன்னேறும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதற்குப் பல இடையூறுகள் இருக்கின்றன.

மொத்தச் செலவு தொகை ரூ. 4800 கோடியில் 800 கோடிக்கு வெளிநாட்டாரின் உதவி எதிர்பார்க்கப்பட்டிருக்கிறது. 1200 கோடி துண்டு விழலாமென்றும், அதற்காகப் பாரத சர்க்கார் புதிய நோட்டுகளை வழங்கிச் சமாளித்துக் கொள்ளலாமென்றும் திட்டம் போடப்பட்டிருக்கிறது. ஆனால் வெளிநாடுகளிலிருந்து அவ்வளவு உதவி கிடைக்குமாவென்பது சந்தேகத்தில் இருக்கிறது. சமீப காலத்தில் விலைகள் உயர்ந்து வருவதால், இப்பொழுது துண்டுக்காகப் புதிய நோட்டுக்களை வழங்கினால் மிதமிஞ்சிய பணப் பெருக்கு உண்டாகி விலைகள் மீண்டும் உயர்ந்து ஒரு பீடாசக்கரத்தில் நாட்டை மாட்டிவிடக் கூடும். இதைத் தடுப்பதற்கு மத்திய அரசாங்கத்தாரும், திட்டக் கமிஷனும் பல முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். பாரத மக்களும் ஒத்துழைத்தால்தான் இந்த நெருக்கடி தீரும். உணவுப் பொருள்களையும் இதர உற்பத்தி சாமான்களையும் பெருக்கினால் நாணயப் பெருக்கும் தானே குறைந்துவிடும். தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யாமலும், சர்க்கார் சேவகர்கள் தங்கள் வேலைகளைத் திறமையாகவும் துரிதமாகவும் செய்தும், போக்குவரத்துச் சாதனங்களைச் செலுத்துவோர் வியாபாரத் தடங்கலை நீக்கியும் உதவி புரிய வேண்டும். இல்லாவிட்டால் திட்டத்தைக் குறைத்துப் பொருளாதார முன்னேற்றத்தின் வேகத்தைக் குறைக்க வேண்டியிருக்கும்.

தமிழ் கூறும் நல்லுலகம்

சில்யாண் தென்னிந்தியர் சங்கத்தின் அங்கத்தினர்கள், வாணி வித்தியாசாலாவின் உதவி நிதிக்காக 1958-ம் ஆண்டு மார்ச்சு 8உ கல்யாண் உம்ரிகர் ஹாலில் இரவு எட்டு மணிக்கு, காலஞ் சென்ற சென்னை திரு டி. கே. கோவிந்தன் அவர்கள் தீட்டிய "மனோரதம்" என்னும் தமிழ் நாடகத்தைப் பம்பாய், மத்திய அரசினர் சுங்க இலாகா, உதவி கலெக்டர் உயர் திரு கே. சரவணை அவர்கள் முன்னிலையில் சிறப்பாக நடித்துக் காட்டினார்கள்.

பெருந்திரளான மக்கள் கூடிப் பலத்த ஆரவாரத்துடன் தமிழின் இன்பத்தையும் கதைச் சுவையையும் அனுபவித்தனர். இடமின்றிப் பார்க்காததினால் பலர் வருந்தினர்.

இந் நாடகத்தைச் சிறப்பாக டைரக்ட் செய்த திரு ஜி. நாராயணசாமியின் விடா முயற்சியும் ஊக்கமும் தவிர, சங்க நிர்வாகத்தினரும், இதரர்களின் சலிப்படையாத உழைப்புமே இந் நாடக வெற்றிக்கு முக்கிய காரணம் ஆகும்.

★

"ஸ்ரீரங்கம் பாபூஜி ஞாபகார்த்த சங்கத்தின் பத்தாவது ஆண்டு விழா வெகு விமரிசையாக 16—2—1958 ஞாயிறன்று கொண்டாடப் பட்டது. திருச்சி பிரின்ஸிபல் ஸபார்டினேட் ஜட்ஜ், திரு. ஆர். நரசிம்மன் பி.ஏ.,பி.எல். அவர்கள் தலைமை வகித்தார். திரு. என். ரங்கராஜ பட்டர், சங்கத் தலைவர் அனைவரையும் வரவேற்றார். தமிழ்ச் செல்வன் திரு. ஐயன் பெருமாள் கோனார் அவர்கள் 'கவிச்சுவை' என்பது பற்றி அழகாகச் சொற்பொழிவு ஆற்றினார். பூனா கலாமந்திரம் போன்ற பல இடங்களிலிருந்து வந்த வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டன. காரியதரிசி திரு. எஸ். ரங்கராஜன் வந்தனோபசாரம் கூற விழா இனிது முடிந்தது.

★

பம்பாய் சுப்பிரமண்ய சமாஜத்தார் சமீபத்தில் ஆறுபடை வீடுடைய ஆறுமுகனை ஆராதித்து ஆறுதலையடைந்தார்கள். மணி விளக்குகளும் அணி அலங்காரங்களும் அணிவித்துத் துதி பாடினார்கள். பிரதிதினமும் எம்பார் விஜயராகவாச்சாரியாரின் சுவை மிகுந்த ஹரிகதை பல ஆயிரக்கணக்கான மக்களைக் கூட்டியது. கடைசி நாள் நடந்த வள்ளித் திருமணம் கனஜோராக அமைந்திருந்தது; சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போல் இருந்தது.



வினை விதைத்தவன்...!

கிருஷ்ணா

ரகுநாதனுக்கு வேதனை பிடுங்கித் தின்றது. நினைக்க நினைக்க எரிச்சலாக வந்தது. ஆத்திரம் தீரப் பெட்டியை 'டபார்' என்று அடைத்து மூடினான். பையினுள் இருந்த காக்கி உடைகளை எடுத்து மாட்டிக் கொண்டான். 'உம்! தம்பி சுந்தரமும் தான் காக்கி உடை மாட்டிக் கொள்கிறான். அதற்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது! அந்த வித்தியாசம் தானே இப்பொழுது பெற்ற தாயின் உள்ளத்தைக் கூட வேறுபடுத்தி விட்டது!'

ஷெல்பில் இருந்த ஸ்பானர், ஸ்க்ரூடிரைவர் முதலிய உபகரணங்களை எடுத்துச் சட்டைப் பையினுள் திணித்துக் கொண்டு, கை துடைக்கும் நீல நிறத் துணியையும் எடுத்து நிஜார் பையினுள் அவசரமாக அடைத்துக் கொண்டு தொழிற்சாலைக்குக் கிளம்பினான் ரகுநாதன்.

''ரகு! என்னடா இது கோபம், காப்பி கூடச் சாப்பிடாமல்?'' என்று கேட்டுக் கொண்டே கையில் காப்பியுடன் வந்த தாயைக் கண்டதும், ஒரு விநாடி நின்றான்.

''இல்லை. எனக்கு ஒன்றும் வேண்டாம். நேரமாகிவிட்டது!'' என்று சுவரைப் பார்த்துப் பதில் சொல்லிக் கொண்டே விடு விடுவென்று வாசற்படிகளில் இறங்கினான். அதே சமயம் வாசலில் ஒரு ஸ்கூட்டர் வந்து நின்றது. அதனின்றும் ஒரு குதிப்புடன் கீழே இறங்கினான் சுந்தரம். பளபளவென்று ஒளி வீசும் பூட்ஸுகள், முழங்கால் வரை விழும் அழகாக மடித்து விடப்பட்ட ஸ்டாக்கிங்ஸ், மடிப்புக் கலையாத சுத்தமான காக்கி நிஜார், ஷர்ட், இடுப்பைச் சுருக்கி மார்பையும் தோள்களையும் விரிவாகக் காட்டிய வார்பெல்ட், கையில் அழகான கடிகாரம், வலது கையில் சுழலும் தோல் பிரம்பு — இவை தான் அவனுடைய தோற்றத்தை அழகுபடுத்திக் கொண்டிருந்தன.

கீழே இறங்கிய சுந்தரம் தன் எதிரில் நிற்கும் அண்ணனை நோக்கினான். அவன் உதடுகளில் அன்பு நிறைந்த ஒரு புன்னகை மிளிர்ந்தது. ரகு அதைப் பொருட்படுத்தவில்லை. தனக்கும் தம்பிக்கும் உள்ள வித்தியாசத்தையே கவனித்தான். தன்னைப் பார்த்துக் கொண்டதும் அவனுக்குத் தன்மீதே ஒரு அருவருப்பு ஏற்பட்டது.

பரட்டைத் தலை; கிரீஸும், பிசுக்கும் படிந்த உடை; வார் பிய்ந்த பழைய செருப்பு; சொரசொரப்பான கன்னம்-ரகுவின் உருவம்.

பிரம்பைச் சுழற்றிக் கொண்டு கம்பீரமாக நிற்கும் சுந்தரம் எங்கே? 'ஸ்பானர்' 'ஸ்க்ரூடிரைவ'ரோடு காட்சியளிக்கும் ரகு எங்கே?

''உம்!'' என்று சுந்தரத்தை நோக்கி முறைத்தபடியே தெருவில் இறங்கி வேகமாக நடக்கலானான் ரகு.

சுந்தரம் ஒரு விநாடி திகைத்து நின்றான். அவனுடைய அருமைத் தமையன் ஏன் இப்படி நடந்து கொள்ள வேண்டும்! அது அவனுக்குப் புரியவில்லை. ஒருவேளை அவன் மனைவி ஊருக்குப் போயிருப்பதினால்... இப்படிச் சோர்வாக இருக்கிறானோ? ஏன், என் மனைவியும் பிறந்த வீடு சென்றிருக்கிறாள். நான் என்ன அவளையேயா நினைத்துக் கொண்டு உருகுகிறேன்? அன்புக்கும் மேலாகக் கடமை ஒன்று இருக்கிறதல்லவா?

இவ்வாறு எண்ணமிட்டபடியே உள்ளே நுழைந்த சுந்தரம் நாற்காலியில் உட்கார்ந்து பூட்ஸைக் கழற்றலானான்.

எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த லட்சுமியம்மாள் ''என்னமோ அப்பா, பெரியவன் போக்கு எனக்குப் புரியவில்லை. இரண்டு மாசமாகவே அவன் ஒரு மாதிரியாக இருக்கிறான். அவன் மட்டும் என்ன, சாரதா கூடத்தான் முன் போல என்னோடு சரியாகப் பழகுவதில்லை...பாவம்! கர்ப்பிணியாயிற்றே என்று எவ்வளவோ பொறுமையுடன்தான் இருந்தேன்......'' என்றாள்.

''இப்படிப்பட்ட வேற்றுமை எப்படி ஏற்பட்டது அண்ணாவின் மனத்தில்? முன்பெல்லாம் 'சுந்தா, சுந்தா' என்று என்னிடம் எவ்வளவு பிரியமாக இருப்பான்!

''அது என்ன கேடு காலமோ அப்பா! முந்தாநாள் ஜிலேபி செய்திருந்தேன், பார். அவனுக்குத்தான் ஆசையுடன் செய்தேன். இலையில் இரண்டு எடுத்துக் கொண்டு போய்க் கொடுத்தேன். என்ன சொன்னான், தெரியுமா? 'நான் ஏழை; நெய்யிலும் சர்க்கரையிலும் விளையாடிய பண்டம் எனக்கு ஜெரிக்காது. ஏதாவது அரிசி உப்புமாவோ புளித்த தோசையோ இருந்தால் கொடு' என்றான்.'' தாயின் குரல் தழுதழுத்தது. சுந்தரம் இதைக் கேட்டதும் ஒரு மாதிரியாகச் சிரித்துக் கொண்டே மற்றொரு பூட்ஸையும் கழற்றி, மேசையின் அடியில் தள்ளிவிட்டு, ''பிறகு?'' என்றான்.

''பிறகு என்ன? இன்று நீதான் கண்ணால் பார்த்தாயே. இதோ காப்பி கூடச் சாப்பிடவில்லை. அவன் போய் விட்டான். இது வரையிலும் அவன் இப்படி இருந்ததே இல்லை. அவர் போனபின் உங்கள் இருவரையும் ஒரு குறைவும் இல்லாமல்தான் வளர்த்தேன். இரண்டு பேருக்கும் ஒன்றுபோலத்தான் எல்லாம் செய்தேன்! ஏதோ என் கண் எதிரில் இரண்டு பேரும் சண்டை சச்சரவு ஒன்றுமில்லாமல் நன்றாக இருந்தால் சரி......அதிருக்கட்டும், எழுந்திருந்து உள்ளே வா; வந்தவனுக்குக் காப்பிக் கூடக் கொடுக்காமல் என்னென்னவோ பேசிக்கொண்டிருக்கிறேனே!'' என்றபடி லட்சுமி அம்மாள் உள்ளே சென்றாள். சுந்தரமும்அவளைப் பின்தொடர்ந்தான்.

தொழிற்சாலைக்குள் சென்ற ரகுநாதனுக்குச் சிறிது நேரம் வேலையே ஓடவில்லை. அவனுக்கு மித்ரா டிரான்ஸ்போர்ட் கம்பெனியில் பிட்டர் வேலை.

தன்னைச் சுற்றுமுற்றும் பார்த்தான் ரகுநாதன். கிரீஸ் நாற்றமும் பெட்ரோல் எண்ணெயின் வாடையும் நிறைந்த அந்த இடத்தில் அவனுக்கு வேலை செய்யவேபிடிக்கவில்லை. 'லிப்டி'ன் மீது ஒரு கார் நின்று கொண்டிருந்தது. இரண்டு பெரிய லாரிகள் வாயைப் பிளந்தபடி இருந்தன. மறுநாள் காலை ஐந்து மணிக்குக் கிளம்ப வேண்டிய பஸ்களைச் சரி பார்த்து வைக்க வேண்டும்! அன்று அவனுக்கு இரவு வேலை.

'' அந்தப் பிளக்கை எடு. இங்கே கிரீஸைத் தடவு. பான்பெல்டைக் கழற்று!'' என்று அதிகாரம் செலுத்திக் கொண்டிருந்தார் அவனது மேல் அதிகாரி.

ரகுநாதனின் கைகள் அவரது ஆணைக்குக் கட்டுப்பட்டுச் சுறுசுறுப்பாக வேலை செய்தன. ஆனால் மனமோ? பொறாமையால் கொதித்துக் கொண்டிருந்தது.

பொறாமை என்பது கெட்ட குணம் என்று பள்ளிப் பாடங்களிலே சொல்லிக் கொடுக்கப் படுகிறது. ஆனால் வாழ்க்கையில் பொறாமை என்பது தவிர்க்க முடியாத ஒரு உணர்ச்சியாகிவிட்டது. பொறாமை கொண்டவர்கள் அதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். தங்கள் உணர்ச்சி எத்தகையது என்பதை அவர்கள் அறிவதே இல்லை. அவர்களுக்கு எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் தங்கள் கட்சியில் நியாயம் இருக்கிறதாகத் தோன்றும். பொறாமை கொண்டு அழிந்தவர்கள் அநேகம்! அதன் வேகத்தில் ரத்தபாசம் கூடத் தெரிவதில்லை.



' கார் மரை ' ஒன்றை வெகு சிரமத்துடன் கழற்றிக் கொண்டிருந்தான் ரகு.

''ரகு! சர்க்கிள் ஞானஇக்கமும் சப்-இன்ஸ்பெக்டர் சுந்தரமும் இன்று இரவு தவளமலைப் பக்கம் போகப் போகிறார்களாம். சர்க்கிளின் கார் கம்பெனிக்கு வந்திருக்கிறது. ஏதோ சில்லறை ரிப்பேராம்...உன்னை மெக்கானிக் சேனய்யா கூப்பிடுகிறார்...நீ அங்கே போ! நான் இதைக் கவனித்துக் கொள்கிறேன்'' என்றான் சக தொழிலாளி சங்கரன்.

ரகுவின் மனத்தில் ஏதோ ஒரு உணர்வு விஷப் பூச்சி போல அரித்தது. ''சரி, சங்கர்! நான் அங்கே போகிறேன்'' என்று கையை அழுத்தமாகத் துணியில் துடைத்தபடியே அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டான்.

பளபளவென்று கறுப்பு நிறத்தில் ரதம் போல நின்று கொண்டிருந்தது சர்க்கிளின் வண்டி. இன்னும் சற்று நேரத்தில் அதில் அவனது தம்பியும் சர்க்கிளும் ஏறிக்கொண்டு போகப் போகிறார்கள்.

'உம்' என்று ஒரு இகழ்ச்சியுடன் ரகு அந்தக் காரைப் பார்வையிட்டான். அதில் அதிகம் ஒன்றும் வேலை இல்லை. முன் சக்கரத்து டயரை மட்டும் கழற்றி விட்டுப் புதியது மாட்ட வேண்டும்; அவ்வளவுதான்.

மெக்கானிக்சேனய்யா வேலையை அவனிடம் ஒப்படைத்து விட்டு இயந்திரச் சாமான் அறைக்குள் நுழைந்தார். பொருள் பாதுகாப்பாளரிடம் சில நிமிஷங்கள் அரட்டையடித்து விட்டு, அவரிடமிருந்து ஒசிப் புகையிலை வாங்கிப் போட்டுக்கொண்டால்தான் அந்த இரவை அவரால் சமாளிக்க முடியும்.

'பானட்'டைத் திறந்தான் ரகு. எதையோ துடைத்தான், முடுக்கினான், கழற்றிப் பூட்டினான். பிறகு அதை மூடிவிட்டு முன் சக்கரத்தின் பிடிப்பு ஆணிகளைக் கையிலிருக்கும் வில் முடுக்கியால் கழற்ற ஆரம்பித்தான்.

டயரைக் கழற்றி ஒரு புறமாக நகர்த்தி வைத்து விட்டு, சக்கரத்தின் அடியில் ஜாக்கியைப் பொருத்திக் காரின் முன் பாகத்தை உயர்த்தினான். பிறகு காரின் அடியில் படுத்துக் கொண்டு உட்புறம் கவனித்தான். கைகள் வேலை செய்து கொண்டிருந்தபோது பொல்லாத மனம் ஒரு குரூரமான எண்ண விதையைத் தூவியது. 'ஸ்ப்ளிட் பின்னை'ச் செருகாமலேயே பூட்டிவிட்டான்.

'பெரிய சப் இன்ஸ்பெக்டர்! ராஜ்யமே தன் அதிகாரத்தில் நடக்கிறது என்று இறுமாந்து நிற்கும் கர்வி. சுந்தரம் தான் இப்படி என்றால் அவன் மனைவியோ அவனுக்கும் மேலே ஒரு படி உயரத்தில் நிற்பவள்! அவள் அடிக்கும் கொம்மாளம்! ஏழை வீட்டுப் பெண்ணாகிய சாரதாவைத் துளியாவது மதித்தாளா அந்த ராங்கிக்காரி......அப்பப்பா! எவ்வளவு பேச்சுக்கள்! சாரதாவின் குழந்தை தன் அருகில் வந்தால்கூட, 'பீடை! முதலில் போய்க் குளித்து விட்டு வேறு சட்டையும் நிஜாரும் போட்டுக் கொண்டு வா!' என்று அதிகாரம் செய்வாளே! எல்லாம் சுந்தரம் கொடுக்கும் இடம்! பெற்ற தாயும் அவன் கட்சி. இளைய பிள்ளை கௌரவமான அரசாங்க உத்தியோகஸ்தன். மூத்த பிள்ளை இரும்பு பிடிக்கும் தொழிலாளிதானே! அந்த வேற்றுமையோடு தானே அவனும் பழகி வருகிறான்! இருக்கட்டும்! சுந்தரத்துக்கு எப்படியாவது கை கால் உடைய வேண்டும்! அவன் கட்டிலோடு கட்டிலாய்க் கிடக்க வேண்டும்!'

மறுவிநாடி 'ஐயோ!' என்று அலறினான் ரகு.

ஆள் உள்ளே இருப்பதைக் கவனியாமல், ஜாக்கியைத் தளர்த்திவிட்டான், எவனோ ஒரு அனுபவமில்லாத அவசரக் குடுக்கை.

* * *

ரகுவுக்கு நினைவு திரும்பியது. படிப்படியாக அவன் தன் வலியையும் சூழ்நிலையையும் உணர ஆரம்பித்தான். தான் ஆஸ்பத்திரிக் கட்டிலில் படுத்திருப்பதையும் உணர்ந்தான். வலது தோள் நகங்கிவிட்டாற் போல வலி. அச்சடித்தது போல் பதிந்து விட்டது காயம்! அந்தப் பக்கம் இந்தப் பக்கம் அவனால் திரும்ப முடியவில்லை.

கண்ணை மட்டும் மெதுவாகத் திறந்தான்.

அவன் கட்டிலைச் சுற்றிலும் அவன் தாயார் அவன் தம்பி சுந்தரம், இன்னும் டாக்டர்கள் போர்மேன், மெக்கானிக், சர்க்கிள் ஞானஇக்கம் எல்லோரும் கூடியிருந்தனர்.

தாயின் முகத்தையும் தம்பியின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தான் ரகுநாதன் அவற்றில் காணப்பட்ட கலக்கமான சோகம்

இடம் கிடைத்தது!



விம்மி வெடித்து எழும் சோகத்தை அடக்கிக் கொண்டு அவர்கள் அமர்ந்திருந்த நிலை...... அப்பப்பா, ரகுவின் இதயம் அவனையறியாமலேயே சுந்தரத்தின் இதயத்தில் ஒன்றியது. ஆமாம்! அவன் ஏன் இன்னும் போகவில்லை?

ரகுவுக்குப் புரியவில்லை.

''அண்ணா!'' என்று அன்புடன் அழைத்து அவன் கையைப் பற்றினான் சுந்தரம். சுந்தரம் தடவிக் கொடுத்தது ரகுவுக்கு இப்பொழுது இதமாக இருந்தது......

ஞானலிக்கம் ரகுவுக்கு விவரங்களைப் புரிய வைத்தார். ஒரு மூலையில் நடுங்கிக் கொண்டு நின்றிருந்த கந்தசாமியை அருகில் வருமாறு சைகை செய்தார்.

''இவனைத் தெரிகிறதா, ரகுநாதன்?''

''தெரியும்! என்னோடு வேலை செய்பவன். பெயர் கந்தசாமி.''

''ரொம்ப சரி! உங்களுக்கும் இவனுக்கும் ஏதாவது விரோதம் உண்டா?''

''இல்லை, சார்! அவன் மிகவும் நல்லவன்.''

''அப்படியா? பின் ஏன் அவன் அந்தமாதிரி செய்தான்? நாங்கள் எதையும் தீர விசாரித்துவிட வேண்டிய கடமை இருக்கிறது, மிஸ்டர் ரகுநாதன். மனிதனின் எண்ணங்களே அவனுக்குச் சத்துருக்கள். கந்தசாமிக்கு உங்கள்மேல் ஏதாவது கோபம் இருந்திருக்கக் கூடாது என்பதற்கு என்ன சாட்சி?''

''அவன் தொழிலில் அனுபவமற்றவன். மற்றப்படி எங்களுக்குள் ஒரு விதமான சண்டை சச்சரவும் இல்லை என்பதற்கு எங்கள் தொழிற்சாலையில் நீங்கள் யாரை வேண்டுமானாலும் விசாரித்துக் கொள்ளலாம்.''

''நிச்சயமாகத்தானே?''

''ஆம்!''

''சரி! அப்படியே எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுங்கள் இந்த வாக்குமூலத்தில்!'' என்று ஞானலிக்கம் தாளை நீட்டினார். அவர் காட்டிய இடத்தில் வெகு சிரமத்துடன் கையெழுத்துப் போட்டான் ரகு. அப்படிச் செய்கையில் அவன் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. அவன் உள்ளத்து அழுக்காறு எல்லாம் கரைந்து ஒழுகுவது போலிருந்தது அக்காட்சி. சம்பிரதாயமாகச் சாட்சி கையெழுத்துக்களும் வாங்கிக்கொண்டு ஞானலிக்கம் கிளம்பினார்.

எல்லோரும் நகர்ந்த பிறகு ரகுவின் தலைமாட்டில் வந்து அமர்ந்த லக்ஷ்மியம்மாள் அன்புடன் அவன் தலையை வருடினாள்.

''அண்ணா! அண்ணா! எப்படியோ நீ பிழைத்தாயே!'' என்று கண்ணீர் பெருக்கினான் சுந்தரம்.

''சுந்தரம்!...நான் உன் அன்புக்குத் தகுதியற்றவன். உனக்குத் துரோகம் செய்ய...''

''அண்ணா! மனிதன் தவறுவது சகஜம்!...''

ரகு வாயைத் திறக்கவேயில்லை. கண்கள் மட்டும் நீரைப் பெருக்கின.

அவன் செய்யத் துணிந்தது எத்தனை பாபகரமான செயல்! ஐயோ! அதை மட்டும் அவன் நிறைவேற்றியிருந்தால்...

ஒரு வயிற்றில் பிறந்து ஒரு கலத்தில் உண்டு வளர்ந்த ஆருயிர்த் தம்பியின் கதி என்னவாயிருக்கும்! அது மட்டுமா? அதோடு அவன் கதியும் முடிந்திருக்கும். ஒரே சமயத்தில் தாய் தன் இரு பிள்ளைகளையும் பறிகொடுத்திருக்க வேண்டியிருக்குமே!

கந்தசாமி மூலம் ஈசன் அதைத் தடுத்து விட்டார். ரகுவுக்கு நல்ல சூடும் கொடுத்து விட்டார். அந்தச் சூட்டில் பொறாமைத் தீ பொசுங்கி, இயல்பான பாசம் மீண்டும் சுரக்க ஆரம்பித்தது.

அருமைத் தம்பியின் கரங்களைப் பிடித்துத் தன் கண்களில் ஒற்றிக் கொள்வதற்கு முயன்றான் ரகு. கையை அசைக்கக்கூட அவனால் முடியவில்லை......

கண்கள் மட்டும் பனித்திரையிட்டன.

5 பொன்னி எங்கே



கோயிலிலிருந்து வெளியே வரும்போது ஒருகணம் அவர்கள் இருவரும் வெளிக் கோபுர வாசலின் அருகில் தயங்கி நின்றார்கள்.

மலர்விழி மெதுவாகப் பெருமூச்சு விட்டாள். கையை நீட்டி இளங்கோவனின் கையுடன் தன்னுடைய கைகளையும் சேர்த்துக் கொண்டாள். இளங்கோவன் தன்னுடைய துல்லியமான வெள்ளை நிற ஜிப்பாவின் மார்பிலே ஒரு ரோஜா மலரைச் செருகியிருந்தான். மலர்விழி தன்னுடைய கருங்குழலிலே ஒரு கட்டு முல்லை மலரைச் சூடியிருந்தாள்

கோயிலுக்குள்ளே நாதஸ்வரம் முழங்கிக் கொண்டிருந்தது. அந்த நாதஸ்வர இசையைப் பருகிக் கொண்டே இருவரும் கையைக் கோத்துக் கொண்டு கோபுர வாசலில் யாரையோ ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு நின்றார்கள். அவர்கள் முகங்களிலே மகிழ்ச்சி பொங்கிக் கொண்டிருந்தது.

தமிழ் ஆசிரியரும் அவர் மனைவியும் கோயிலிலிருந்து வந்தவுடன் அவர்களுடனே வீடு நோக்கிக் கிளம்பினார்கள்.

ஆமாம். அவர்கள் மெதுவாகத்தான் நடந்தார்கள். என்ன அவசரம்? எங்கு போக அவசரம்? அதிலும் புது மணம் புரிந்து கொண்ட காதல் தம்பதிகள் அல்லவா? சிந்தனையில் ஆழ்ந்த வண்ணம் நடந்தார்கள். இந்த இளம் தம்பதிகளைப் பார்த்து அகமும் முகமும் மலர, தமிழ் ஆசிரியரும் அவர் மனைவியும் அவர்கள் பின்னால் நடந்து சென்றார்கள். ஆகாயம் நிர்மலமாயிருந்தது. வெய்யில் காய்ந்து கொண்டிருந்தது. பறவைகள் அங்குமிங்கும் பறந்து திரிந்து கொண்டிருந்தன. இளந் தென்றல் ஜிலு ஜிலு வென்று அடித்துக் கொண்டிருந்தது. இதையெல்லாம் அனுபவித்துக் கொண்டிருந்த இளங்கோவன்—மலர்விழி இதயங்களிலே இன்பம் ஊற்றுப் பெருக்கெடுத்து ஓடியது. தேனருவி சலசலத்துக் கொண்டு ஓடுவதுபோல இருந்தது. அவர்கள் உள்ளங்களிலும், உடலிலும். கள்ளங் கபடமற்ற குழந்தை மனத்துடன் இந்தப் புதிய இன்ப உணர்ச்சியை அனுபவித்து மகிழ்ந்து கொண்டிருந்தான் இளங்கோவன். மலர்விழி இந்த உலகையே மறந்து விட்டாள். எங்கோ வான வீதியில் மிதந்து மேலே, மேலே, மேலே சென்று கொண்டிருப்பதுபோலிருந்தது அவளுக்கு. அவள் காதின் அருகில் யாரோ இன்பகீதம் பொழிவதுபோலிருந்தது.


தெரு மூலை திரும்பியதும் நின்று தமிழ் ஆசிரியரையும் அவர் மனைவியையும் பார்த்தான் இளங்கோவன். அந்தத் தம்பதிகள் இருவரும் ஏதோ பேசிக்கொண்டே வந்தார்கள். தெய்வத்தின் சந்நிதியில் ஆடம்பரமில்லாமல், ஆள் கூட்டம் இல்லாமல், இளங்கோவனுக்கும் மலர்விழிக்கும் திருமணம்நடத்தி வைத்ததில் தமிழ் ஆசிரியருக்குப் பரம திருப்தி. இளங்கோவனுக்குத் தாமே முன் நின்று திருமணம் செய்து வைத்ததில் அவருக்கு ஒரே ஆனந்தம்.

தமிழ் ஆசிரியர் ஒருதரம் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். அவர் மனைவி ஒருதரம் கண்களைச் சிமிட்டிக்கொண்டு இளங்கோவனையும் மலர் விழியையும் பார்த்தாள்.

இளங்கோவனைப் பார்த்துத் தமிழ் ஆசிரியர் சொன்னார்: ''சரி, திருமணம் எல்லாம் முடிந்து விட்டது. இனிமேல் நீ எல்லாவற்றையும் சொல்லலாம் அல்லவா?''

இளங்கோவன் தமிழ் ஆசிரியரைப் பார்த்துச் சிரித்தான். ''வீட்டுக்குச் சென்றவுடன் பூங்குளத்திலிருந்து புறப்பட்ட கதையைச் சொல்லத்தான் போகிறேன்'' என்றான்.

பகீரதன்



இதற்குள் ''கடவுள்'' என்று ஏதோ சொல்வதற்கு வாயெடுத்தாள் தமிழ் ஆசிரியரின் அருமை மனைவி.

மலர்விழி குறுக்கிட்டாள். ''எங்களுக்கு நீங்கள் இருவரும்தான் தெய்வம். நீங்கள் மிகவும் இரக்க குணமுள்ளவர்கள். உங்களுக்குக் கடவுள் எல்லா உதவிகளையும் செய்வார்'' என்றாள். அவள் சொன்ன வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் நன்றி உணர்ச்சி பொங்கித் ததும்பியது.

அவர்கள் எல்லாரும் இப்பொழுது தமிழ் ஆசிரியர் வீட்டுக்குள் வந்து விட்டனர். வீட்டுக்குள் வந்ததும் வராததுமாகத் தமிழ் ஆசிரியர் மனைவி கலியாண விருந்து சமைக்கச் சமையலறைக்குச் சென்று விட்டாள். சூரியன் உச்சிக்கு வந்து விட்டான். வெய்யிலின் கொடுமை தெரியாமல் மெதுவாகத் தென்றல் அடித்துக் கொண்டிருந்தது. தமிழ் ஆசிரியர் வீட்டுக்குள் இருந்த பொருள்களெல்லாம் சலசலத்துக் கொண்டிருந்தன.

தமிழ் ஆசிரியர் நாற்காலியில் அமர்ந்திருந்தார். மலர்விழியும் இளங்கோவனும் அவருக்கு எதிரில் உட்கார்ந்திருந்தனர். ஆசிரியர் விருப்பத்துக்கு இணங்க, தான் பூங்குளத்திலிருந்து மலர்விழியுடன் வந்த கதையைச் சொல்லிக்கொண்டிருந்தான் இளங்கோவன்.

*** *** ***

வாழ்க்கையில் நம்முடைய தைரியத்தைச் சோதிக்கக் கூடிய சில சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. அந்தச் சந்தர்ப்பங்களில் தீரத்துடன் நடந்து கொள்ளத் தவறிவிடுகிறோம். பிறகு வாழ்நாள் முழுவதும் அதை எண்ணி எண்ணி வேதனைப்படுகிறோம்.

வீரப்பன் சேதுவைப் பயமுறுத்தியபோது, ''உன்னால் ஆனதைப் பார்த்துக் கொள்'' என்று பதில் சொல்லியிருக்க வேண்டும். அப்படிச் சொல்லாமல் சேது மௌனம் சாதித்து விட்டான். கோழை போல இருந்து விட்டான். ''இளங்கோவன் தாய் யாரு, தகப்பன் யாரு, என்ன சாதியைச் சேர்ந்தவன் என்றெல்லாம் தெரியுமா உனக்கு? அப்படிப்பட்டவனுக்கா நம் மலர்விழியைக் கல்யாணம் செய்து கொடுப்பதற்கு உதவி செய்யப் போகிறாய்?'' என்று வீரப்பன் கேட்டபோது அவன் சொல்லுவதை ஆமோதிப்பதுபோல் அல்லவா சேது வாய் பேசாமல் இருந்துவிட்டான்? அதுமட்டுமா? அங்கிருந்து வீட்டுக்குப் போவதற்காக, வீரப்பன் பிடியிலிருந்து தப்புவதற்காக, ''நான் இனி மலர்விழி - இளங்கோவன் விஷயத்தில் தலையிடவில்லை'' என்று வீரப்பனிடம் சத்தியம் வேறு அல்லவா செய்து கொடுத்தான்? அப்படி அவன் செய்து கொடுத்ததும் ஒரு விஷயத்தில் நல்லதாகவே போய் விட்டது. இனி சேது நம் விஷயத்தில் தலையிடமாட்டான் என்று வீரப்பனும் அவன் ஆட்களும் பரிபூரணமாக நம்பி விட்டனர்.

ஆனால் வீரப்பனும் அவன் ஆட்களும் அங்கிருந்து சென்றதும் சேது இளங்கோவனைப் பற்றி எண்ணிப் பார்த்தான். அவனுடைய மன உறுதியையும் தன்னம்பிக்கையையும் நினைத்துப் பார்த்தான். ஒருநாள் அவன் வாழ்க்கையைப்பற்றியும் மனிதர்களைப்பற்றியும் சொன்னது நினைவுக்கு வந்தது. 'மனிதர்கள் வாழ்வில் பல பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறார்கள். நாம் பொதுவாக எல்லாரையும் நேசிக்கவே விரும்புகிறோம். ஆனால் அது எப்படி முடியும்? நமக்குள் ஜீவனாக விளங்கும் ஒரு ஆன்மா இருப்பதை மறந்து நம் முகத்திலேயே எட்டி உதைப்பவர்களை நாம் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? நாம் இதை மன்னிக்கவே கூடாது. என் சொந்த நன்மைக்காக நான் சொல்லவில்லை. என் சம்பந்தம் பட்டவரை நான் எல்லா அவமானங்களையும் தாங்கிக் கொண்டேன்; தாங்கிக் கொள்வதற்கும் தயாராக இருக்கிறேன். என்னைப் போல மற்றவர்களையும் அவமானப்படுத்த ஆதரவு தரமாட்டேன். அவமானகரமான எதையும் நாம் மன்னிக்கக் கூடாது. இன்று நம்மை அவமானப்படுத்த இடம் கொடுத்தால் நாளை மற்றவர்களையும் அவமானப் படுத்துவார்கள். இதனால்தான் மனிதர்களுக்குள் வித்தியாசம் பார்க்கவேண்டியிருக்கிறது. நமக்கு வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்று மனித சமூகத்தைப் பாகுபடுத்த வேண்டியிருக்கிறது' என்று இளங்கோவன் சொன்ன வாசகத்தைப் பொன் எழுத்தால் எழுத வேண்டும். இந்த வாசகத்தை ஒரு முறைக்கு இருமுறை சேது மனத்துக்குள் சொல்லிக் கொண்டான். அவனுக்கு எங்கிருந்தோ ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டு விட்டது. அவன் புது மனிதன் ஆகி விட்டான். அவனையும் அறியாமல் ஒரு பெரிய ஒற்றனாக மாறினான். மிகுந்த மன தைரியத்துடன் வீரப்பனும் அவன் ஆட்களும் செய்யும் சதிகளை யெல்லாம் கவனிக்கத் தொடங்கினான். வீரப்பனும் அவன் ஆட்களும் வகுத்த திட்டங்கள் முழுவதையும் சேது கண்டு பிடித்துத் தமிழ் பொடிபாக்கியத்தை விளக்கிக் கூறு



வதைவிடப் பின்னால் நடந்த சம்பவங்களை விவரித்து விட்டாலே வீரப்பன் சதித் திட்டங்களை ஒருவாறு புரிந்து கொள்ளலாம்.

பூங்குளம் கிராமத்தில் ஆண்டு தோறும் காமன் பண்டிகை கொண்டாடுவார்கள். மாசி மாதத்தில் பௌர்ணமி யன்று இந்த விழா நடக்கும். அன்றைய தினம் பூங்குளம் கிராமம் சௌந்தர்யலோகம் போலக் காட்சி யளிக்கும். பூரண சந்திரனின் மோகன நிலவு பூங்குளம் கிராமத்தைச் சௌந்தர்ய பூமி யாக்கி விடும். குச்சுவீடு, குட்டிச் சுவர், குப்பை மேடு எல்லாமே பௌர்ணமி நிலவில் புதுமை பெற்று விளங்கும். தொண்டு கிழவர் முதல் சின்னக் குழந்தைகள் வரை இரவு முழுவதும் காமன் பண்டிகையில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு மெய்மறந்திருப்பார்கள்.

இரண்டு சிறுவர்களுக்கு மன்மதன் வேஷமும் ரதி வேஷமும் போடப்பட்டிருக்கும். இந்த மன்மதனும் ரதியும் கிராமத்து வீதிகளில் மன்மத பாணத்தை விட்டுக் கொண்டு வருவார்கள். ஊர்வலம் மன்மதன் கோவிலுக்கு வந்ததும் மன்மததகனம் நடைபெறும்.

மன்மத தகனம் நடைபெற்ற அன்றுதான் பூங்குளம் கிராமத்தின் வேறொரு பக்கத்தில் மன்மதனின் சக்தி வேலை செய்து கொண்டிருந்தது. பூங்குளம் கிராமத்துக்குக் கிழக்கே அரைமைல் தூரத்துக்கு அப்பால்தான் பட்டணத்துக்குச் செல்லும் பெரிய சாலை போகிறது. இந்தப் பெரிய சாலைக்குக் கிராமத்தில் இருந்து செல்லும் சாலை ஒன்று இருக்கிறது. இந்தக் கிராமத்துச் சாலையில் மரங்கள் அடர்த்தியாக இருக்கின்றன. கிராமத்துச் சாலை பெரிய சாலையில் சேரும் இடத்தில் ஒரு மோட்டார்கார் நின்றுகொண்டிருந்தது. அந்தக் காரில் வீரப்பன் உட்கார்ந்து கொண்டிருந்தான். கிராமத்துச் சாலையை அவன் அடிக்கடி நோக்கிக் கொண்டிருந்தான்.

கிராமத்துச் சாலையில் இரண்டு உருவங்கள் மெதுவாக வந்து கொண்டிருந்தன,



அவை அருகில் நெருங்கியதும் பெரியசாமியும் மலர்விழியும்தான் என்று தெரிந்து கொள்ள முடிந்தது. சந்திரன் ஒளியில் மலர்விழியின் முகம் நன்றாகத் தெரிந்து விட்டது. அவள் இதழ்களில் சோகம் நெளிந்து கொண்டிருந்தது. கண்களில் நீர்த் துளிகள் உதிர்ந்து கொண்டிருந்தன. பௌர்ணமி நிலவில் அந்த நீர்த் துளிகள் முத்துப்போல் பிரகாசித்தன.

"அப்பா! கடைசியில் என்னை அந்த வீரப்பனுக்குத்தான் கொடுக்கப் போகிறீர்களா? நான் இளங்கோவனை மறந்து விட வேண்டியதுதானா?" என்று விக்கலுக்கும் விம்மலுக்கும் இடையே கேட்டாள் மலர்விழி.

"அம்மா! நான் என்ன செய்வேன்? மனப்பூர்வமாக நான் இதற்குச் சம்மதிக்கவில்லை. வீரப்பனிடம் நான் பட்டிருக்கும் கடனாலும், அவனிடம் நான் கொண்டிருந்த தகாத நட்பு முறையினாலும் இந்தப் பாவத்தைச் செய்கிறேன்" என்றார் பெரியசாமி. அவர் கண்களிலும் நீர் கசிந்தது.

"இதிலிருந்து தப்ப வழி கிடையாதா? இளங்கோவனுக்கு இதெல்லாம் ஒன்றுமே தெரியாதா? அவர் சென்னைக்குச் சென்று விட்டு இரண்டு தினங்களில் வந்து விடுவதாகச் சொல்லியிருந்தாரே! அவர் வரும் வரையிலாவது பொறுத்திருக்கக் கூடாதா?" என்றாள்.



"நம் வாத்தியார் சேது, நம்மை இதிலிருந்து மீட்பதாகச் சொல்லியிருந்தார். அவரையும் காணவில்லை. இனி மேல் இதைப்பற்றிப் பேசிப் பயனில்லை. கடவுளின் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு மன நிம்மதியுடன் இரு. 'நடப்பது நடந்தே தீரும்' என்ற உறுதியுடன் இருக்க வேண்டியதுதான்" என்றார் பெரியசாமி. இந்த வார்த்தைகளைச் சொல்லுவதற்குள் அவர் இரண்டு முறை விம்மி அழுதே விட்டார். பாவம் அப்பாவி பெரியசாமியால் அதற்கு மேல் ஏதும் செய்ய இயலவில்லை.

இந்தச் சமயத்தில் "பெரியசாமி!" என்று குரல் கேட்டது. பெரியசாமியும் மலர்விழியும் திரும்பிப் பார்த்தனர். சேது ஒரு இளம் பெண்ணுடன் அங்கு வந்து நின்றான்.

"பெரியசாமி! யோசிப்பதற்கு ஒன்றும் நேரமில்லை. மலர்விழியை இங்கேயே விட்டு விட்டு நீங்கள் இந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு வீரப்பனிடம் செல்லுங்கள். மலர்விழியை இளங்கோவனிடம் கொண்டு சேர்ப்பது என் பொறுப்பு" என்றான்.

"ஐயோ, என்ன கொடுமை! யார் இந்தப் பைங்கிளி?" என்றார் பெரியசாமி.

"நான் ஒன்றும் தவறாக நடக்க மாட்டேன். இந்தச் சமயத்தில் மலர்விழியின் வாழ்க்கைக்கு மட்டும் வாழ்வளிக்க வில்லை. இந்தப் பெண்ணின் வாழ்க்கைக்கும் வழி காட்டுகிறேன். என்னை நம்புங்கள்" என்று கூறிப் பெரியசாமியைப் பார்த்தான் சேது.

பெரியசாமி அந்தப் பெண்மணியைப் பார்த்தார். "ஐயா! நீங்கள் ஒன்றும் யோசனை செய்ய வேண்டாம். நானும் உங்களுக்கு மகள்போல்தான். என்னைக் கொண்டு போய் வீரப்பனிடம் விடுங்கள்" என்றாள்.

இந்தச் சொற்களைக் கேட்கக் கேட்க இன்பத் தேன் வந்து காதில் சொரிவது போலிருந்தது மலர்விழிக்கு.

பெரியசாமி ஒன்றும் பதில் சொல்லவில்லை. மலர்விழியைச் சேதுவிடம் ஒப்படைத்துவிட்டு அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு வேகமாக மோட்டார் அருகில் சென்றார். பெரியசாமி மோட்டார் அருகில் வந்ததும் வீரப்பன் இறங்கிக் கதவைத் திறந்தான். பெரியசாமிக்கு அருகில் நின்ற அந்தப் பெண் முகத்தை மறைத்துக் கொண்டு நின்றாள். சந்திரன் ஒளியிருந்தாலும் மரங்களின் அடர்த்தியான நிழலில் ஒன்றும் தெரியவில்லை.

பெரியசாமி அந்தப் பெண்ணைப் பார்த்து, "காரில் ஏறிக்கொள் அம்மா!" என்றார்.

அந்தப் பெண்மணியும் வாய் திறவாமல் மோட்டார் காரின் பின் ஆசனத்தில் ஏறி அமர்ந்தாள். அவளுக்கு அருகில் வீரப்பனும் உட்கார்ந்தான். மோட்டார்கார் கிளம்பி விட்டது. பெரியசாமி ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டுவிட்டு அங்கிருந்து திரும்பி விட்டார்.

அதே சமயத்தில் சேதுவின் முன்னேற்பாட்டின்படி சென்னைக்குச் செல்வதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளுடன் இளங்கோவன் அதே சாலையில் வேறு ஒரு இடத்தில் காத்துக் கொண்டிருந்தான். அடிக்கடி கிராமத்துக் குறுக்குப் பாதை வழியாக யாராவது வருகிறார்களா என்று பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு ஒவ்வொரு நிமிஷமும் செல்வதும் ஒரு யுகம் செல்வதுபோல் இருந்தது. அமைதியில்லாமல் அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருந்தான். பயத்தால் அவன் கைகள் இலேசாக நடுங்கத்தான் செய்தன. அவன் நெஞ்சு 'திக்' 'திக்' கென்று துரித காலத்தில் அடித்துக் கொண்டிருந்தது.

"ஏதாவது வழி தவறிப் போயிருப்பார்களோ!" என்று இளங்கோவன் வாய்விட்டே சொல்லிக் கொண்டான்.

"வழி தவறுகிற காரியமா இது?" என்று சொல்லிக் கொண்டே சேது அவன் முன்னால் தோன்றினான். சேதுவைக் கண்டதும் இளங்கோவனின் முகம் மலர்ந்தது.

அடுத்த கணமே "மலர்விழி எங்கே?" என்று ஆவலுடன் கேட்டான்.

"அதோ, காருக்கு முன்னால் இருக்கிறாள்" என்று கையைக் காட்டினான் சேது.

சேதுவுக்குத் தன்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டே மலர்விழியிடம் ஓடினான் இளங்கோவன். "மலர்விழி!" என்று பொங்கிவரும் உணர்ச்சியுடன் கூப்பிட்டான். "இளங்கோவே!" என்றாள் அன்பும் ஆதரவும் துள்ள அவள். "நீங்கள் எப்படியும் என்னைக் காப்பாற்ற வருவீர்கள் என்று நம்பினேன். அப்படி நீங்கள் வரவில்லையானால் என்னுடைய உயிரையே விட்டு விடுவதாக எண்ணியிருந்தேன்" என்றாள் மலர்விழி, தன்னுடைய மலர்க் கரங்களால் இளங்கோவன் அன்புக் கைகளை இறுகப் பிடித்துக்கொண்டு.

"நம்பினோர் கெடுவதில்லை நான்கு மறை தீர்ப்பு! என்ற அமுத மொழியை நீ படித்ததில்லையா, மலர்விழி?" என்றான் இளங்கோவன்.

"படிக்க வேறு வேண்டுமா? என் வாழ்க்கையிலேயே இப்போதுதான் நிதர்சனமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறேனே!" என்றாள்.



இளங்கோவன் ஒன்றும் பதில் சொல்லவில்லை. திரும்பிச் சேதுவைப் பார்த்தான். சேதுவும் அவர்களைப் பார்த்தான். அவன் முகத்தில் மகிழ்ச்சி துள்ளிக் கொண்டிருந்தது.

"பெரியசாமியை எப்படியாவது அழைத்து வந்தால் நல்லது. அவர் எங்களை மனப்பூர்வமாக வாழ்த்தி வழி அனுப்பிவைக்கவேணும்" என்று சொன்னான் இளங்கோவன்.

"இதோ அழைத்து வருகிறேன்" என்று சொல்லிச் சென்றான் சேது.

சேது சென்றவுடன் மலர்விழி இளங்கோவன் பக்கமாகச் சாய்ந்தாள். அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் இளங்கோவன். மலர்விழி இளங்கோவன் அருகில் சற்று நெருங்கிக் குனிந்தாள். இளங்கோவனின் கைகளுக்குள் மலர்விழியின் கைகள் என்னென்னவோ இரகசியங்கள் பேசின. அவளுடைய கைவிரல்கள் இலேசாகத் துடித்தன. அவள் கன்னங்கள் இளங்கோவன் தோள்களில் மெதுவாக உராய்ந்தன. அது அவைகளில் இருந்த கண்ணீர்த் துளிகளைத் துடைப்பதைப் போல் இருந்தது. அப்படியே மௌனமாகப் பல நிமிஷங்கள் இருந்தாள். இருவருக்கும் பேசுவதற்கு ஒன்றுமில்லை என்று தோன்றியது. ஆனாலும் அதுவே அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது. யாரோ வரும் காலடி ஓசை கேட்டு இருவரும் திரும்பிப் பார்த்தனர். பெரியசாமியும் சேதுவும் வேகமாக வந்து கொண்டிருந்தனர்.

பெரியசாமியைப் பார்த்ததும், "அப்பா!" என்று கூவிக் கொண்டே போய் அவரைத் தழுவிக் கொண்டாள் மலர்விழி. இரு கைகளாலும் அவளை அணைத்துக் கொண்டார் பெரியசாமி. மலர்விழியின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அவளுடைய இதயத் துடிப்பு பெரியசாமியின் நெஞ்சின் ஆழத்திலே சென்று தாக்கும் சம்மட்டியின் ஓசையைப் போல் தோன்றியது. இப்பொழுது பிரிந்து விட்டால் இனிமேல் அவரால் அவளைப் பார்க்கவே முடியாதோ என்று தோன்றியது. அவருடைய பார்வை எதிரில் உள்ள பொருள்களை யெல்லாம் தாண்டி எதையோ கூர்ந்து பார்ப்பது போல் தோன்றியது. சந்திர வெளிச்சம் அவர் கண்களில் பட்டுப் பளபளத்தது. கண்ணீர்த் துளிகள், நட்சத்திரங்கள் விழுவதைப் போல் அவருடைய நடுங்கும் கைகளில் விழுந்து மறைந்தன.

சட்டென்று மலர்விழியின் கையைப் பற்றினார். அதை இளங்கோவனின் கைகளில் வைத்தார். "இனி மலர்விழி உன்னுடையவள்" என்றார். இதுவரை சலனமற்று இருந்த ஆகாயத்தில் ஒரு மின்னல் மின்னியது. 'கிடுகிடு' 'கிடுகிடு' என்று இடி இடித்தது. அது தேவர்களே இந்தக் காதல் தம்பதிகளுக்குக் கைகொட்டி ஆசி கூறுவது போலிருந்தது. இளங்கோவனும் மலர்விழியும் பெரியசாமியின் பாதங்களில் விழுந்து வணங்கினர். பெரியசாமி அவர்களை மனமார வாழ்த்தினார்.

"நாழியாகி விட்டது. புறப்படுங்கள்" என்று சேது அவசரப்படுத்திய போதுதான் அவர்கள் மூவரும் இந்த உலகத்துக்கு வந்தனர். தங்கள் நிலையை உணர்ந்தனர்.

இளங்கோவனும் மலர்விழியும் நன்றி பொங்கச் சேதுவைப் பார்த்தனர். இளங்கோவன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். "வெள்ளையம்மாள் பாட்டிக்கு இதெல்லாம் தெரியும். அவரை அழைத்துக் கொண்டு நானும் பெரியசாமியும் பட்டணம் வருகிறோம்" என்றான் சேது. மோட்டாரின் கதவைத் திறந்து இளங்கோவனையும் மலர்விழியையும் ஏற்றி விட்டான். டிரைவரைக் கூப்பிட்டு, "பார்த்து ஓட்டிக் கொண்டு போ!" என்றான். கார் புறப்பட்டது.

கிராம கிராமாந்தரங்களை யெல்லாம் கடந்து கார் சென்னையை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. மத்தியானம் சுமார் பன்னிரண்டு மணிக்குக் கார் சென்னை நகரை நெருங்கியது. கார் சென்னை நகருக்குள் புகுந்து மயிலாப்பூர் தமிழ் ஆசிரியர் வீட்டுக்கு நேரே சென்று நின்றது. வீட்டு வாசலில் கார் நிற்கும் சத்தத்தைக் கேட்டுத் தமிழ் ஆசிரியரும் அவருடைய மனைவியும் வாசலுக்கு வந்தனர். இளங்கோவன் கார் டிரைவருக்கு வேண்டிய சத்தத்தைக் கொடுத்து அவரை அனுப்பிவிட்டு மலர்விழியுடன் உள்ளே சென்


கி.ராஜேந்திரன்
எழுதும்
பொங்கிவரும்
எப்ரல் 13
கல்கி
புத்தாண்டு மலரில்


பெருநிலவு
புதியதொடர்கதை
ஆரம்பமாகிறது

னான். தமிழ் ஆசிரியருக்கும் அவர் மனைவிக்கும் மலர்விழியை அறிமுகப்படுத்தினான். மலர்விழி ஒரு அனாதை யென்றும், தன்னுடைய கிராமத்தில் கண்டெடுத்த மாணிக்கம் என்றும், அவள் பெற்றோர்கள் சம்மதத்துடன் அவளைத் திருமணம் செய்து கொள்வதற்கு அழைத்து வந்ததாயும், நாளைக்கே தன்னுடைய திருமணத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் இளங்கோவன் மூச்சு விடாமல் சொல்லிக்கொண்டே போனான்.

தமிழ் ஆசிரியருக்கு இளங்கோவனை நன்றாகத் தெரியும். அவன் கண்ணியமானவன், உயர்ந்த பண்புடையவன் என்று தெரியும். அத்துடன் தமிழ் இலக்கியங்களில் வரும் காதலர்களைப் பற்றி நன்கு அனுபவித்து அறிந்தவர். ஆகையால் 'ஆகட்டும், அப்படியே செய்கிறேன்' என்றார்.



மலர்விழியும் இளங்கோவனும் தமிழ் ஆசிரியர் திருப் பாதத்தில் விழுந்து வணங்கினார்கள்.

இந்தக் கதையைச் சொல்லும்போது இளங்கோவன் சில சமயம் உணர்ச்சி வசமானான். சில சமயம் கண்ணீர் விட்டான். சில சமயம் கோபத்தால் துடி துடித்தான். சில சமயம் நன்றி பொங்கப் பார்த்தான். இதே உணர்ச்சிகளைத் தமிழ் ஆசிரியரும் மலர்விழியும் அடைந்தனர். சமையல் அறையிலிருந்து இந்தக் கதையைக் கேட்டுக் கொண்டிருந்த தமிழ் ஆசிரியர் மனைவியும் இதே உணர்ச்சிகளை அனுபவித்தாள்.

எப்படியோ சமையலை ஒருவாறு முடித்துக் கொண்டு இளங்கோவனையும் மலர்விழியையும் சாப்பாட்டுக்கு அழைத்தாள், தமிழ் ஆசிரியர் மனைவி. புதுமணம் புரிந்து கொண்ட இளந்தம்பதிகளுடன் தமிழ் ஆசிரியரும் அவர் மனைவியும் சேர்ந்து உட்கார்ந்து சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டே சாப்பிட்டனர். அவர்களும் அன்றுதான் புதிதாகக் கல்யாணம் செய்து கொண்டவர்கள் போல இளமைத் துடிப்புடன் விளங்கினர்.

சாப்பாடு முடிந்ததும் தமிழ் ஆசிரியர் தங்களுடைய திருமணத்தைப் பற்றியும், திருமணத்துக்குப் பின் தொடர்ந்து ஒருமாதம் நடைபெற்ற விருந்துகளைப் பற்றியும் கூறினார். வடை,பாயசத்துடன் தொடர்ந்து சாப்பிட்டதால் ஏற்பட்ட அலுப்பில் யாராவது ஒரு நாளைக்கு வற்றல் குழம்பு போட மாட்டார்களா என்று ஏங்கியதைப் பற்றியும் சொல்லிக் கொண்டிருந்தார்.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. இளங்கோவன் மலர்விழிக்குச் சென்னைப் பட்டணம் முழுவதையும் சுற்றிக் காட்டிக் கொண்டிருந்தான். கடற்கரையைப் பார்த்து மலர்விழி ஆச்சரியப்பட்டுப் போனாள். மிருகக் காட்சிச் சாலை, தொல் பொருள் கலைக் கூடம், கலங்கரை விளக்கம் ஒவ்வொன்றையும் பார்த்து வியந்து போனாள். ஒவ்வொரு நாளும் தன்னுடைய வாழ்க்கையை நன்கு அனுபவித்து மகிழ்ந்து கொண்டிருந்தாள் மலர்விழி.

ஒரு வாரம், ஏழு நாட்கள் கழிந்தன. ஒரு நாள் மாலை தமிழ் ஆசிரியர், அவர் மனைவி, இளங்கோவன், மலர்விழி எல்லாரும் உட்கார்ந்து பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். இளங்கோவனும் தமிழ் ஆசிரியரும் மனித வர்க்கத்தைப் பற்றித் தீவிரமாக விவாதித்துக் கொண்டிருந்தனர்.

'' நிச்சயமாக மனிதர்கள் உயர்ந்தவர்கள்; நாமெல்லாரும் மனிதத்தன்மையின் சக்தியை உணரத் தலைப்பட்டோமானால் மேலான எண்ணங்களுக்காகப் பாடுபட்டோமானால் நாமே கடவுளாக ஆகிவிடலாம். ஆனால் அது நடக்கப் போவதில்லை. மனித சமூகம் சீரழிந்து கொண்டு வருகிறது. விரைவில் விவேகம் உள்ள மனிதர்களே இல்லாமல் போய் விடுவார்களோ என்று பயப்பட வேண்டியிருக்கிறது '' என்று கூறினார் தமிழ் ஆசிரியர்.

'' நீங்கள் சொல்லுவது சரிதான். மக்கள் அத்தனை பேரும் ஒன்று இரண்டு உண்மையாகவே நடந்து கொள்வது என்று தீர்மானித்து விட்டால் போதும். சமுதாயத்தில் எல்லாக் காரியங்களுமே மிகவும் சுலபமாகி விடும் '' என்றான் இளங்கோவன்.

இவர்களுடைய பேச்சில் சிரத்தை காட்டாமல் மலர்விழியும் தமிழ் ஆசிரியர் மனைவியும் தங்கள் சொந்த விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

'' சேது எங்களை வழி அனுப்பும்போது என் அப்பாவை அழைத்துக் கொண்டு வருவதாகச் சொல்லியிருந்தார். வரவில்லை. அன்று என்ன நடந்ததோ. வீரப்பன் ஏதாவது தகராறு செய்து விட்டானோ என்னவோ தெரியவில்லை '' என்றாள் மலர்விழி.

'' அதையெல்லாம் பற்றி ஏன் கவலைப்படுகிறாய் ? '' என்றாள் தமிழ் ஆசிரியர் மனைவி.

இந்தச் சமயத்தில் வாசலில் குதிரை வண்டி ஒன்று வந்து நின்ற சத்தம் கேட்டது. எல்லாரும் ஒரே சமயத்தில் வாசலைப்பார்த்தனர்.

'' அப்பா வருகிறார்கள் ! '' என்று சொல்லிக் கொண்டே மலர்விழி எழுந்து ஓடினாள்.

'' மாமாவா ! வாருங்கள் ! வாருங்கள் ! '' என்று வரவேற்புக் கூறினான் இளங்கோவன். '' நீங்கள் மட்டுமா வருகிறீர்கள்? சேது வரவில்லையா ? '' என்று கேட்டான். சேது கையில் ஒரு பையுடன் உள்ளே வந்தான். பையைக் கீழே வைத்துவிட்டு எல்லாருக்கும் கையெடுத்துக் கும்பிட்டான். '' உன்னைப் பற்றித்தான் ஒருவாரமாகப் பேசிக் கொண்டிருக்கிறோம், சேது '' என்று சொன்னான் இளங்கோவன். மலர்விழி அவனைப் பார்த்து நன்றி பொங்கச் சிரித்தாள். அவர்கள் இருவருக்கும் தன்னை ஆதரித்து வரும் தமிழ் ஆசிரியரையும் அவர் மனைவியையும் அறிமுகப்படுத்தி வைத்தான் இளங்கோவன்.

'' ஒவ்வொரு நாளும் உங்கள் வரவைத்தான் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் '' என்றார் தமிழ் ஆசிரியர். பெரியசாமியையும் சேதுவையும் பார்த்து.

'' மலர்விழி ஒரு வாரத்திலேயே எவ்வளவோ மாறிவிட்டாளே. அடையாளமே தெரியவில்லை '' என்றார் பெரியசாமி.

'' போங்கள் அப்பா! '' என்று சொல்லித் தலையைத் திருப்பிக் கொண்டாள் மலர்விழி.

'' வெள்ளையம்மாளைப் பார்த்தீர்களா ?'' என்று கேட்டான் இளங்கோவன்.

'' அதனால்தான் ஒரு வாரம் ஆகிவிட்டது. இல்லாவிட்டால் மறுநாளே வந்திருப்போம் '' என்றான் சேது. அவன் முகத்திலே 'சட்'டென்று ஒரு சோகம் படர்ந்தது.

'' வெள்ளையம்மாளுக்கு என்ன? '' என்று படபடப்போடு கேட்டான் இளங்கோவன்.

சேது வெள்ளையம்மாளைத் தான் போய்ப் பார்த்த விவரங்களையெல்லாம் சொன்னான் :

'' உங்களை அனுப்பி வைத்துவிட்டு முதலில் வெள்ளையம்மாளைப் பார்க்கத்தான் சென்றேன். வீட்டுக்குள் சென்றதும் பாட்டி வழக்கமாக உட்கார்ந்திருக்கும் இடத்தில் இல்லை. எனக்குத் 'திக்'கென்றது. கூடத்துக்குச் சென்றேன். அங்கே வெள்ளையம்மாள் படுத்துக் கிடந்தாள். என்னைப் பார்த்ததும் 'இளங்கோவும், மலர்விழியும் சௌக்கியமாகப் போய்விட்டார்களா?' என்று கேட்டாள். 'ஆமாம், சுகமாகப் போய்ச் சேர்ந்து விட்டார்கள். பெரியசாமி அவர்கள் இருவரையும் வாழ்த்தி அனுப்பினார்' என்றேன். இதைக் கேட்டவுடன் வெள்ளையம்மாள் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. அவள் கண்களில் ஒரு புது ஒளி வீசியது. 'அப்பா! இப்பொழுதுதான் என் மனம் சமாதானம் அடைந்தது. இனி நான் கவலையில்லாமல் சாவேன்' என்றாள். இதைச்சொல்லி முடித்ததும் வெள்ளையம்மாள் களைத்துப் போய் விட்டாள். அவள் தலை சுழல ஆரம்பித்து விட்டது. சரி! வெள்ளையம்மாளுடைய வாழ்க்கை நாடகம் சீக்கிரம் முடிந்துவிடப் போகிறது என்று எண்ணி விட்டேன். 'உனக்குத்தான் தெரியுமே, அவள் உடல் நிலை. ஏற்கனவே மோசமாகி விட்டது! ரொம்ப மோசமாகி விட்டது!' என்று. கடைசியில் அவள் மரண வேதனையில் இருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டேன். என் கையைப் பிடித்தாள். 'சேது! இளங்கோவனைக் கவனமாகப் பார்த்துக் கொள்கிறாயா? இந்தச் சமயத்தில் நீ அவனுக்குத் துணையாக இருப்பது எனக்கு எவ்வளவோ சந்தோஷமாக இருக்கிறது' என்றாள். இதைச் சொல்லும் போது வெள்ளையம்மாளின் முகமும், கண்களும் துருதுருப்பாக இருந்தன. அதைப் பார்ப்பதே எனக்கு இன்பமாக இருந்தது. ஏதோ சொல்ல வாயைத் திறந்தாள். வார்த்தைகள் ஒன்றும் வரவில்லை. தலையை மெதுவாகத் தூக்கி ஒரு கையை முன்னால் நீட்டினாள். அந்தக் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன். 'இளங்கோவனுக்குத் துணையாக இருக்கிறேன் என்று சத்தியம் செய்து கொடு' என்றாள். அவள் கையைப் பிடித்துச் சத்தியம் செய்தேன். வெள்ளையம்மாளின் கை திடீர் என்று கனமாகத் தெரிந்தது. 'என் கண்ணே' என்றாள். அவள் உடல் முழுவதும் ஒரு துணுக்கம் உண்டாயிற்று. அவள் தலை தோளில் தொங்கி விட்டது. வெள்ளையம்மாள் இறந்து விட்டாள். யாதொரு குறையும் இல்லாமல் அமைதியுடன் இறந்து போனாள் '' என்று சொன்னான் சேது.



இளங்கோவன் கைகளில் முகத்தை மறைத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதான். மலர்விழி உடல் குலுங்கக் குலுங்க அழுதாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் அவர்களே சமாதானம் அடைந்தார்கள். ''பழுத்த பழம், மரத்திலிருந்து தானே விழுவது போல, காய்ந்த சருகு உதிர்வது போல வெள்ளையம்மாள் உதிர்ந்து போனாள்'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் இளங்கோவன்.

'' நான் இந்த நிலைமைக்கு வந்ததற்கு வெள்ளையம்மாள் பாட்டியும் ஒரு காரணம். அவள் இல்லாவிட்டால் நான் எப்பொழுதோ மடிந்து போயிருப்பேன். அவள்தான் எனக்குவாழ்க்கையைப் பற்றி யெல்லாம் சொல்லிக் கொடுத்தாள். தமது அறுபது ஆண்டு அனுபவத்தை அப்படியே எனக்கு அள்ளிக் கொடுத்தாள். கதைகள் மூலமாக என் மனத்திலே எத்தனையோ கருத்துக்களைப் பதியவைத்தாள். ஆஹா! அவள் கதை சொல்ல ஆரம்பித்து விட்டால் நாளெல்லாம் கேட்டுக் கொண்டே இருக்கலாம். இன்றைக்கு எனக்குக்கதைகள் எழுதுவதிலே, கவிதைகள் புனைவதிலே, நாடகம் இயற்றுவதிலே ஏதாவது திறமை இருக்கிறது என்றால் அதற்கு ஓரளவு காரணம் வெள்ளையம்மாள் பாட்டிதான்'' என்றான் இளங்கோவன். அமைதியாகச் சில நிமிஷங்கள் இருந்தான். அது வெள்ளையம்மாள் ஆத்மா சாந்தியடைய அவன் பிரார்த்திப்பது போல் இருந்தது.

இளங்கோவன் முகத்திலே எத்தனையோ உணர்ச்சிகள் தோன்றிக் கொண்டிருந்தன.

''வருத்தப்பட வேண்டிய விஷயம் இல்லை. நல்ல சாவுதான்'' என்று கூறிச் சோகத்தை மாற்றினார் தமிழ் ஆசிரியர். இந்தச் சமயத்தில் ''இளங்கோவன் இருக்கிறாரா?'' என்று கேட்டுக் கொண்டே ஒரு போலீஸ்காரர் மிடுக்குடன் உள்ளே நுழைந்தார். எல்லாரும் திடுக்கிட்டுத் திகைத்தனர். (தொடரும்)



பலே பதில்

பிரகலாதன் கதையை வெகு சுவாரஸ்யமாகப் படித்துக்கொண்டிருந்தான் பரசுராமன்.

கர்வத்தினால் தன்னையே கடவுளின் நிலைக்கு உயர்த்திக்கொண்டு விட்ட ஹிரண்யகசிபுவுக்குத் தன் மகன் பிரகலாதன் ஸ்ரீமந் நாராயணனைத் தியானிப்பதும், பக்தி புரிவதும் பிடிக்கவில்லை. 'உன் நாராயணன் எங்கே இருக்கிறான்?' என்று ஆத்திரத்தோடு கேட்கிறான். பிரகலாதன் சாந்தமாகப் பதில் சொல்கிறான், 'இந்தத் தூணிலும் உளன், துரும்பிலும் உளன்' என்று.

இந்தக் கட்டத்தைப் படித்துக் கொண்டிருந்த பரசுராமனுக்கு இந்தக் காலத்தவர்களைப் போல், 'சாமியாவது, பூதமாவது? அப்படி ஒன்று இருந்தால், ஏன் என் கண்களுக்குத் தெரியவில்லை?' என்ற சந்தேகம் வந்து விட்டது.

சந்தேகம் வந்து விட்டால், பின்னோடு அவனுக்குப் பாட்டியின் நினைவும் வந்து விடும். "ஏன், பாட்டி? தூணிலும் உளன், துரும்பிலும் உளன்' என்று போட்டிருக்கிறதே. ஆனால் என்னால் அந்தச் சாமியைப் பார்க்க முடியவில்லையே!" என்றான்.

பாகீரதிப் பாட்டி அவன் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு, "அப்படித்தான் அவனும் சந்தேகப்பட்டான்!" என்று ஆரம்பித்தாள்.

"யார் சந்தேகப்பட்டது?" என்று கேட்டான் பரசுராமன்.

"பங்கய நாட்டுப் பார்த்திபேந்திரன். அவன் ஆரம்பத்திலே நல்ல அரசனாகத்தான் இருந்தான். ஆண்டவனிடத்திலே அபார நம்பிக்கை பூண்டவனாகத் திகழ்ந்தான். உலகம் முழுவதும் உள்ளுறை பொருளாக வியாபித்திருப்பவர் கடவுள் என்ற நம்பிக்கை அவனுக்குப் பரிபூரணமாக இருந்தது. அதனால் தனது நாடு முழுவதும் பல கோயில்கள் எழுப்பி, பார்க்கும் இடங்களிலெல்லாம் ஆண்டவனின் ஆலயங்களாகவே நிர்மாணித்திருந்தான். அவன் மனத்தைக் கெடுக்கவென்று ஒரு தோழன் வந்துசேர்ந்தான்!"

"அவன் பெயர் என்ன, பாட்டி?"

"மன்னனின் மனத்தைக் கெடுக்க வந்த அந்தப் பாவியின் பெயர் என்னவாயிருந்தால் என்ன? மலைவிழுங்கி மகாதேவன் என்று வைத்துக் கொள்ளேன்!"

அக்ஷயம்

" என்ன செய்தான் அவன்?"

"கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்பார்களே, அப்படி அரசனின் மனத்தைக் கலைத்து விட்டான் அவன். கடவுள் பக்தி நிறைந்திருந்த அரசனின் மனத்திலே கடவுள் இல்லை என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தான். அந்த விஷவித்துவேரோடி, கிளைவிட்டுப் பெரு மரமாகி விட்டது. அந்தத் துஷ்டனோடு சேர்ந்து கொண்டு, அரசனும் கடவுள் இல்லை என்று கூறத் தொடங்கி விட்டான். அத்தனை பாடுபட்டுக் கட்டிய கோவில்களை இடிக்கக் கூடத் தொடங்கி விட்டான். செங்கோல் ஓங்கிய அரசன் கொடுங்கோலனாகி விடவே, நாடு முழுவதும் அமளிதுமளிப்பட்டது.

மலைவிழுங்கியால் மதிமயங்கிய மன்னன், ஹிரண்யகசிபுவைப் போலவே, கடவுளின் பெயரைச் சொல்பவர்களைச் சிறை வைக்கத் தலைப்பட்டான். 'கடவுள் உண்டு என்று சொல்லிக் கொண்டு வருபவர்கள், கடவுளை நேருக்கு நேர் காட்ட வேண்டும். அப்படிக் காட்டாவிட்டால் சிரச்சேதம் செய்துவிடுவோம்' என்றும் தண்டோரா போட்டான்.

நீண்ட நெடுநாட்களாகக் கடவுளின் நம்பிக்கையிலேயே ஊறிப் போன மக்களால் கடவுளை மறக்க முடியவில்லை. இருந்தாலும் மன்னனுக்குப் பயந்து மனத்துக்குள்ளே, 'அட ஆண்டவனே! இதுவும் உன் லீலையா?' எனக் கூறிக்கொண்டனர்."

"பிரகலாதனைப் போல் துணிந்து கடவுள் பெயரைச் சொல்ல அந்த நாட்டிலே யாருமே முன் வரவில்லையா, பாட்டி?"

"முன் வராமல் என்ன! ஒரு நாமம் ஒருருவம் இல்லாத ஆண்டவனைத் துதித்துக் கொண்டே அந்த அரசனின் ராஜதானிக்கு ஒரு கிழவர் வந்து சேர்ந்தார்.

இன்றோடு இந்த மனிதருக்கு வாழ்வு முடிந்தது என்று மக்கள் முடிவு கட்டி விட்டனர். பாவம், இப்படி அரச கட்டளையை மீறித் தம் உயிரைக் கொடுக்கப் போகிறாரே



இந்த மனிதர் என்று அநுதாபமும் பட்டனர். எதற்காக இவர் வீணில் தம் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும் என்று இரங்கிய ஒருவன், அக்கம் பக்கம் நாற்புறமும் ஒரு தடவை பார்த்து விட்டு அவரை அணுகி, 'சுவாமி' என்று அழைத்தான். 'சுவாமி' என்ற சொல்லைச் சொல்லும் பொழுது அவன் உள்ளம் குலுங்கியது; உடல் தூக்கிப் போட்டது.

'என்ன, அப்பா ?' என்று அன்புடன் கேட்டார் அம்முதியவர். 'அரசரது கட்டளை உங்களுக்குத் தெரியாதா ? ஆண்டவனின் பெயரை யாரும் சொல்லக்கூடாது. அப்படித் துணிந்து சொல்கிறவர்கள் ஆண்டவனைக் காட்ட வேண்டும். அப்படிக் காட்டாவிட்டால், அவர்களுக்குச் சிரச் சேதம்தான்!' என்றான்.

அதைக் கேட்ட பின்னராவது அம் முதியவர் வாயைப் பொத்திக் கொண்டு பேசாமல் போக வேண்டாமோ ? இன்னும் உரத்த குரலில், 'அரங்கா உன் மகிமையை அறிந்தவர் யார் ?' என்று பரமன் புகழ் பாடிக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

இந்தக் கிழத்துக்குத் தமக்காகவும் தெரிய வில்லை, சொன்னாலும் கேட்கத் தோன்ற வில்லையே என்று அலுத்துக் கொண்டு அவன் நகர்ந்து விட்டான்.

அடுத்த கணம் அரசாங்கக் காவலர்கள் அந்தக் கிழவரைச் சிறைப்படுத்தி அரசன் முன்னிலையில் கொண்டு போய் நிறுத்தினார்கள். அவ்வளவு தான்; அந்தக் கிழவரது தலைவிதியைக் கண்களால் காணக் கூட்டம் ஏகமாகக் கூடி விட்டது.

கிழவரைக் கூண்டில் ஏற்றி வைத்து அரசன் கேட்டான்:

'கடவுள் ஒருவர் உண்டு என்றால் அவரை உங்களால் காட்ட முடியுமா ?'

'காட்ட முடியும். ஆனால் தங்களால் அவரைப் பார்க்க முடியுமா?'

'காட்ட முடியும் என்றால் பார்க்க முடியாதோ ? வீணில் வார்த்தையை வளர்த்த வேண்டாம். காட்ட முடியுமானால், இப்பொழுதே இந்த இடத்திலேயே காட்டும், பார்ப்போம் !' அரசனது சொற்களிலே சூடு தெறித்தது.

'ஒரு கோப்பையில் கறந்த பால் கொண்டு வரச் சொல்ல முடியுமா, மகாராஜா ?' என்று தாழ்மையுடன் கேட்டார் கிழவர்.

அரசன் வாய் அசைப்பதற்குமுன் கோப்பையில் பால் வந்து விட்டது. 'மகாராஜா ! இதில் என்ன இருக்கிறது, தெரியுமா ?'

'இது தெரியாதா ? பச்சைக் குழந்தை கூடச் சொல்லுமே, பால் இருக்கிறதென்று!'

'இந்தப் பாலில் வெண்ணெய் இருக்கிறது. இதுவும் மன்னருக்குத் தெரிந்த விஷயம்தானே?'

'தாராளமாக. இதென்ன பிள்ளைத்தனமான கேள்விகள் கேட்கிறீர்களே !'

'குழந்தைகளின் நெஞ்சிலே தானே கடவுள் வாழ்கிறான் ! அதனால் கேள்வியும் குழந்தைத்தனமாக இருக்கிறது. ஆனால் குழந்தைத்தனமான இந்தக் கேள்வியிலும் பொருள் பொதிந்திருக்கிறது என்பதை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்!' என்றார் கிழவர்.

'சரி, சொல்வதைச் சீக்கிரம் சொல்லும்!'

'இந்தப் பால் முழுவதும் வெண்ணெய் வியாபித்திருக்கிறது. வெண்ணெய் பாலின் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் இல்லை, பால் முழுவதிலுமே அது பரவி நிற்கிறது. அதேபோல ஆண்டவனும் வெண்ணெயாக இந்த உலகம் முழுவதும் பரவி நிற்கிறான் ! பாலைக் காண்பது போல் உலகத்தைக் காண்கிறோம். பாலில் இருக்கும் வெண்ணெயைக் காண முடியாதது போல் ஆண்டவனைக் காண முடியவில்லை. ஆனால் பாலில் வெண்ணெய் இருப்பதை உணர்வது போல், ஆண்டவன் இருப்பதை இந்த உலகத்தின் நிலையிலிருந்து உணரலாம் !'

'கடைந்தெடுத்தால் பாலில் இருக்கும் வெண்ணெயைப் பார்க்கவும் முடிகிறதே ! ஆனால் ஆண்டவனைக் காண வழி தோன்ற வில்லையே !' என்றான் அரசன்.

'அரசே ! தங்கள் கேள்வியிலேயே விடையும் இருக்கிறது. உள்ளத்தைப் பண் படுத்திக் கொண்டு, பாலிலிருந்து வெண்ணெய் எடுப்பது போல், பக்குவமாகக் கடைந்தால் கடவுளைக் காணவும் செய்யலாம். அதற்கு இந்த உலகத்தைப் போல் பரந்த உள்ளம் வேண்டும்! நமது ஆன்றோர்கள் போல் எங்கும் பரவி நிற்கும் கடவுளுக்குக் கோயில்கள் எடுத்தீர்களானால் கோயில் கண்ட விடமெல்லாம் அவன் காட்சி தருவான் !' என்றார் கிழவர்.

அரசனது பாசி படர்ந்த மனத்திலே ஒரு தெளிவு ஏற்பட்டது. கிழவரைக் கடவுள் எனக் கைகூப்பித் தொழுதான். அன்று முதல் அவன் இடித்த கோயில்கள் ஒன்றுக்குப் பத்தாக எழும்பின.''

பாகீரதிப் பாட்டியின் கதையைக் கேட்ட பரசுராமன், பிரகலாதனாக உருமாறினான். 'தூணிலும் உளன், துரும்பிலும் உளன்' என்ற சொற்களை அர்த்தபுஷ்டியுடன் படிக்கலானான். பிரகலாதனைப் போலவே, அவன் உள்ளத்திலும் கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறான் என்ற எண்ணம் நிறைந்து வழிந்து நின்றது.




இந்தியா என் வீடு
ஸிந்த்தியா பௌலஸ்
75 நயே பைஸே
கட்டுரைகள்
.50 நயே பைஸே
வீதியில் ஒரு விடுதி
காட்ப்ரே ப்ளண்டன்
75 நயே பைஸே
என் கதை
ஹெலன் கெல்லர்
75 நயே பைஸே
இந்தியா புக் ஹௌஸ்
193, மவுண்ட் ரோட், மதராஸ்-2.
கிடைக்கும்

விசித்திரச் சலங்கை

– கதை –
வாண்டு மாமா
படம் .... பாபு

15




உங்களுடன் நானும் வருகிறேன். சற்று இருங்கள், பிரயாணத்துக்கு வேண்டியவைகளைச் சித்தமாக்கிக் கொண்டு வருகிறேன்.
நான் இப்போதே காளிங்கனை அழைத்தாக வேண்டும். மோதிரத்தைத் தேய்க்கிறேன்.....
இளவரசியாரே! என்னை அழைத்த காரணம் என்ன?
தேவதத்தனை அழைத்து வர அப்பா ஆள் அனுப்பி இருக்கிறார். சலங்கைகள் கட்டிய மந்திரத் திவ்யபாதுகையைத் தேவதத்தன் அணிந்தால் எவ்வித துன்பமும் நேரக்கூடாது. நான் அவரைக் காதலிக்கிறேன்!
இவ்வளவுதானே! அவனும் உன்னை உன்னுடன் சேர்ப்பானாலும் அவனுக்கு எவ்விதமான ஆபத்தும் நேராது. நினைத்ததைக் கொடுக்கும் சக்தி வாய்ந்தது அந்த மாயத் திவ்யபாதுகை. ஆனால் அவனிடம் திவ்யபாதுகையைப் பற்றி நீ எதுவும் சொல்லாதே....
சொல்ல மாட்டேன்... உங்கள் உதவி எனக்கு இருக்கும் போது இனி நான் எதற்கும் பயப்படப் போவதில்லை. விரைவில் உங்களை அரண்மனையில் சந்திக்கிறேன்....
காளிங்கனின் வார்த்தைகளில் கபடம் எதுவும் இருக்காது! என் பொருட்டுத் தேவதத்தன் பாதாளச் சிறைக்குப் போக நேர்ந்தால் அந்த நிமிஷமே என் உயிர் போய் விடும்.
தொடரும்

கல்கியின் கட்டுரைகள்

தெய்வ தரிசனம்

ஆமாம்! கல்கி அவர்கள் தெய்வத்தைத் தான் தரிசித்து விட்டு வந்தார்கள். ராமனையோ சிவபெருமானையோ அல்லது நாம் வழக்கமாகக் கோவிலில் வழிபடும் தெய்வங்களில் ஒன்றினையோ அல்ல. கல்கி அவர்கள் தரிசித்தது. நாம் வழிபட்டு வந்த தமிழ்த் தெய்வத்தை. பக்தி ஆவேசம் கொண்ட அறுபதினாயிரம் மக்களிடையே ஒருவராக இருந்து தமிழ்த் தெய்வத்தைத்தரிசித்தார். அவர் அடைந்த அந்தப் பெறற்கரிய பாக்கியத்தை அவருடைய அற்புதமான எழுத்து வன்மையால் நாமும் பெற்று விடுகிறோம்! நாம் பாக்கியசாலிகள்தான்!

ஈழ நாட்டிலே, தூய தமிழ் பேசும் யாழ்ப்பாணத்திலே நடைபெற்ற தமிழ் விழாவில் கல்கி அவர்களும் பங்கு கொண்டார்கள். மூன்று தினங்கள் யாழ்ப்பாணத்தில் நடந்த அந்தத் தெய்வத் தமிழ் விழாவினைப் பற்றி மிக மிக சுவாரஸ்யமாக, தமக்கே உரிய நகைச்சுவை பொங்கும் நடையில் இப்பத்திரிகையில் தொடர்ந்து எழுதினார்கள். அதுவே புத்தக உருவில் வெளி வந்திருக்கிறது. விலை ரூ. 1.

இசை விருந்து

கல்கி அவர்களுடைய எழுத்து வன்மையால் எத்தனையோ இளம் பாடகர்கள் முன்னுக்கு வந்தார்கள். எத்தனையோ முன்னணிப் பாடகர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் தமது எழுத்தின் மூலம் அளித்து வந்தார்கள். கச்சேரியைக் கேட்காதவர்கள்கூட ''கச்சேரியைக் கேட்காவிட்டால் பரவாயில்லை. கல்கி அவர்களுடைய விமர்சனத்தைக் கண்டிப்பாகப் படித்தே தீருவோம்'' என்று சொல்லிப் படிப்பார்கள். காரணம் கல்கி அவர்களுடைய நகைச்சுவையும், சரளமான தமிழ் நடையுமே சங்கீதக் கச்சேரியைக் கேட்டு அனுபவிப்பது போல இனிமையாக இருந்து வந்ததுதான்.

சங்கீதத் துறையில் கல்கி அவர்களுடைய தொண்டு இத்துடன் நின்றுவிடவில்லை. தமிழ் இசையின் வளர்ச்சிக்காக அரும் பாடுபட்ட கல்கி அவர்கள் பிற்காலத்தில் கர்நாடக சங்கீதத்தின் வளர்ச்சியை எண்ணி வேதனைப் பட்டார்கள். 'டப்பா சங்கீதம் தோன்றித் தமிழ்நாட்டில் சங்கீதத்தின் பண்பே பாதிக்கப்பட்டு விடுமோ என்று ஐயப்படும்படியான நிலை ஏற்பட்டு விட்டது!

பண வருவாயே பிரதான நோக்கமாகக் கொண்ட தமது படாதிபதிகள் ஸ்பானிஷ் சங்கீதம், மெக்ஸிகோ சங்கீதம், ஹாவாய் சங்கீதம் முதலிய பல சங்கீதங்களை ஒன்றுசேரக் கலப்படம் செய்து பயங்கரமான உருத்தெரியாத ஆபாசக் களஞ்சியமாகச் செய்து வந்தார்கள். சினிமா ரஸிகர்களும் ஏதோ புது விஷயமாக இருக்கவே அதில் ஓரளவுக்கு மயங்கிப் போனார்கள். அபாயம் நெருங்குவதை உணர்ந்த கல்கி அவர்கள் படாதிபதிகளுக்கு அவர்களுடைய கடமையை எடுத்துக் கூறவேண்டிய நிலை ஏற்பட்டது. ''பொது மக்கள் இதைத்தான் விரும்புகிறார்கள்'' என்று சொல்வது தவறு ''பொது மக்கள் எதனை விரும்ப வேண்டுமோ அதனையே திரைப் படத்திலும் அமைப்போம்'' என்று உறுதி கொள்ளுங்கள். மக்களுக்கு வழிகாட்டியாக அமைய வேண்டியவர்கள் படாதிபதிகள் என்றெல்லாம் எழுதினார்கள்.

டப்பா சங்கீதத்தை எதிர்த்துப் போராடி அவர் எழுதிய கட்டுரைகள் சிலவற்றையும் சங்கீத விமர்சனங்கள் சிலவற்றையும் ஒன்று சேர்த்து 'இசை விருந்து' என்ற தலைப்பில் வெளியிட்டிருக்கிறார்கள். விலை ரூ. 1—50.

கண்கொள்ளாக் காட்சி

பேராசிரியர் 'கல்கி' அவர்கள் தலைமை தாங்கி நடத்தி வைத்த விழாக்கள் எத்தனையோ. அவர் பங்கு பற்றிய மகாநாடுகள் கணக்கிலடங்கா. அவர் சென்று பார்த்து வந்த பொது நல ஸ்தாபனங்கள் பலப் பல. அவர் கண்டுகளித்த கல்வி ஸ்தாபனங்கள் எண்ணிலடங்கா. அவர் பார்க்காத ஊர் கிடையாது. நெருங்கிப் பழகாத எழுத்தாளர் இல்லை. இவ்வாறெல்லாம் அவர் சென்று பார்த்துப் பேசி அறிந்து வந்த விஷயங்களைத் தமது எழுத்து மூலமாக அரிய கட்டுரைகளாக வடித்து வாசகர்களுடன் பங்கிட்டுக் கொண்டார். அவர் கண்டு களித்த இந்தக் கண்கொள்ளாக் காட்சிகளையெல்லாம் ஒன்று சேர்த்துப் புத்தக வடிவில் பார்க்கும்போது பிரமிப்பே ஏற்படுகிறது. 'அடாடா! ஒரு தனி மனிதரின் சாதனையா இத்தனையும்?' என்று எண்ணி வியப்பில் ஆழ்ந்து விடுகிறோம். ஒரு கட்டுரையில் திருநெல்வேலியில் ஒரு திருவிழாவுக்கு நம்மை அழைத்துச் செல்லும் 'கல்கி' அவர்கள், இன்னொரு கட்டுரையில் புது டில்லியில் ராஜாஜி அவர்கள் கவர்னர் ஜெனரல் பதவி ஏற்கும் வைபவத்தைப் பார்க்கவும் அழைத்துச் செல்கிறார்! இன்னும் ஏராளமான விழாக்களுக்கும் மகாநாடுகளுக்கும், அணைக்கட்டுகளுக்கும் விவசாயப் பண்ணைகளுக்கும், ஆலயப் பிரவேசத்துக்கும் கலைக் கண்காட்சிகளுக்கும் 'கல்கி' அவர்கள் செல்கிறார்கள். நாமும் கூடவே சென்று பார்த்து அறிந்து மகிழ்கிறோம். நாமாக நேரில் சென்று பார்த்து மகிழ்வதை விடக் 'கல்கி' அவர்கள் எழுதியிருப்பதைப் படிப்பதன் மூலம் சற்று அதிகமாகவே வியப்பும் மகிழ்ச்சியும் அடைகிறோம். இவ்வாறு அவர் எழுதிய பல்வேறு விழாக் கட்டுரைகளைத்தான் 'கண்கொள்ளாக் காட்சி' என்ற தலைப்பில் புத்தகமாக்கி யிருக்கிறது. விலை ரூ 3-75

இந்த மூன்று அருமையான புத்தகங்களும் கிடைக்குமிடம்: பாரதி பதிப்பகம், தியாகராயநகரம், சென்னை—17.

பண்டிட் P.S. ராமசர்மாவின்

சக்தி சஞ்சீவி

குழந்தைகளின்

ஈரல், குலைக்கட்டிகளுக்கு.

எமது வைத்தியர் பிரதி ஆங்கில மாதம் கீழே குறிப்பிட்ட ஊர்களில் அவற்றிற்கு எதிரில் கண்டுள்ள தேதி, நேரங்களில் தங்கி இலவச ஆலோசனை யளிப்பார். தங்கும் இடங்கள் வழக்கம்போல். மற்ற விவரங்களுக்கு எழுதவும்.

ஊர்	தேதி	நேரம்
தாராபுரம்	1	காலை 8½ to 9½
பழனி	1	காலை 10½ to 11½
உடுமலைப்பேட்டை	1	மாலை 3 to 4
பொள்ளாச்சி	1	மாலை 5 to 6
பாலக்காடு	2	காலை 9 to 11
"	2	மாலை 3 to 5
கோயமுத்தூர்	3	காலை 9 to 11
"	3	மாலை 2 to 4
மேட்டுப்பாளையம்	3	மாலை 5 to 6
சத்தியமங்கலம்	4	காலை 8 to 9
கோபி	4	காலை 10 to 11
பவானி	4	மாலை 2 to 3
மேட்டூர் அணை	4	மாலை 4½ to 5½
ஈரோடு	5	காலை 9 to 11
திருப்பூர்	5	மாலை 4 to 5½
திருச்சி	6	காலை 11 to மாலை 6
தஞ்சாவூர்	7	காலை 7 to 9
கும்பகோணம்	7, 17, 27	காலை 10 to மாலை 5
சீகாழி	8	காலை 7 to 8½
மாயூரம்	8	காலை 9 to 11
நன்னிலம்	8	மாலை 2 to 3
நாகப்பட்டினம்	8	மாலை 5 to 6½
திருவாரூர்	9	காலை 7½ to 9½
விஜயபுரம்	9	காலை 10 to 11
திருத்துறைப்பூண்டி	9	மாலை 2 to 3½
பட்டுக்கோட்டை	9	மாலை 4½ to 6½
புதுக்கோட்டை	10	காலை 8 to 11
தேவகோட்டை	10	மாலை 2½ to 3½
காரைக்குடி	10	மாலை 4½ to 6
பரமக்குடி	11	காலை 8 to 10
ராமனாதபுரம்	11	மாலை 3½ to 4½
சிவகங்கை	11	காலை 8½ to 10
மதுரை	11	காலை 11 to 12½
மதுரை	11	மாலை 3 to 6
கோவில்பட்டி	12	காலை 8 to 9
திருநெல்வேலி ஜங்	12	மாலை 3 to 5
திருநெல்வேலிடவுன்	12	மாலை 5 to 6
அம்பாசமுத்திரம்	13	காலை 8 to 9½
தென்காசி	13	மாலை 3 to 5
ராஜபாளையம்	14	காலை 9 to 10
ஸ்ரீவில்லிபுத்தூர்	14	காலை 10½ to 11½
பெரியகுளம்	14	மாலை 3 to 4½
திண்டுக்கல்	15	காலை 8 to 9½
நாமக்கல்	15	மாலை 3 to 4½
ராசிபுரம்	15	மாலை 5½ to 6½
சேலம்	16	காலை 9 to 11
"	16	மாலை 3 to 5
தருமபுரி	17	காலை 9 to 10½
கிருஷ்ணகிரி	17	மாலை 3½ to 5
மல்லேஸ்வரம்	18	காலை 9 to 11
பெங்களூர் - 3		மாலை 3 to 5
திருப்பத்தூர் N A.	19	காலை 8½ to 10
வேலூர் N. A.	19	மாலை 3 to 5
சென்னை	20	காலை 9 to 11
"	20	மாலை 3 to 5
செங்கற்பட்டு	21	காலை 9 to 10½
திண்டிவனம்	21	மாலை 2½ to 4
விழுப்புரம்	21	மாலை 5 to 6
திருவண்ணாமலை	22	காலை 8½ to 10
திருக்கோவிலூர்	22	காலை 11 to 12
கடலூர் N T.	22	மாலை 4 to 5½
சிதம்பரம்	23	காலை 9 to 10½
விருத்தாசலம்	23	மாலை 3½ to 5
கள்ளக்குறிச்சி	24	காலை 8½ to 9½
ஆத்தூர்	24	காலை 11 to 12
துறையூர்	24	மாலை 3½ to 5

ஸ்ரீ சக்தி விலாஸ வைத்தியசாலை, கரூர்

பிராஞ்சு: 94, டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்

குறிப்பு: எங்களிடம் குழந்தைகளுக்குக் கட்டி வராமல் தடுக்கவும், கக்குவான் இருமலைக் குணப்படுத்துவதற்கும், தொண்டை சதை வளர்ச்சியை (TONSILS) ஆபரேஷன் இல்லாமல் குணப்படுத்துவதற்கும் நல்ல மருந்துகள் கிடைக்கும்.



குட்டைக்கரையில் இருந்த டீக்கடையிலிருந்து [illegible] மணம் 'கம்' மென்று எழுந்தது. [illegible] விளக்கின் ஒளியில் 'ஸ்பெஷல் டீ' யில் [illegible] சர்க்கரை போட்டு ஆற்றிக் கொண்டிருந்தாள் நப்பின்னை. அந்த அதிகாலையில் பூக்கடைக் கதம்பம் சூடி, பிறை போன்ற நெற்றியில் குங்குமப் பொட்டுடன் அவள் [illegible] ஆற்றும் அழகைப் பார்த்துக் கொண்டே அவள் எதிரில் உட்கார்ந்திருந்தான் துரைவேலு. பதமான சூட்டுடன் கண்ணாடி டம்ளரில் தேநீரை ஊற்றித் தன் கணவனிடம் கொடுத்தாள் நப்பின்னை.

''நீ சாப்பிடவில்லையா?'' என்று விசாரித்தான் துரைவேலு.

''நீங்க முதல்லே சாப்பிடுங்க. அப்படித் தானே தினமும் இங்கே நடக்குது. இன்னைக்கு மட்டும் எனக்கு முதல்லே சாப்பிட மனம் வருமா?'' நப்பின்னை அவனைக் கடைக் கண்ணால் பார்த்தவாறு கூறினாள்.

துரைவேலு அவள் கொடுத்த தேநீரை வாங்கி உறிஞ்சிக் குடித்தான். அதன் இனிமையிலே அவனுக்குப் பழைய நினைவுகள் இனித்துக் கொண்டு எழுந்தன. அப்படியே அந்த இன்ப நினைவில் ஆழ்ந்து போனான் துரைவேலு.

முதல் மின்சார வண்டி ''குய்ங்'' என்ற சத்தத்துடன் பரங்கிமலை ரயில் நிலையத்தை விட்டுக் கிளம்பியது. விடியற்காலம் மணி சுமார் நாலரை இருக்கும். பனிப்படலம் ரயில் நிலையத்தையும், அண்மையில் இருந்த வேப்ப மரங்களையும் இலேசாகத் திரை போட்டாற் போல் மறைத்துக் கொண்டிருந்தது. 'லெவல் கிராஸிங் கேட்' அருகில் இருந்த குட்டைத் தண்ணீர் சலனமற்றுத் தேங்கிக் கிடந்தது. அதைச் சுற்றிக் கோரைப் புற்கள் புதர்போல் வளர்ந்திருந்தன. அடுத்து நெருப்பு மேடைக்கருகில் ஊராரின் எருமை மாடுகளில் பல கட்டப் பட்டிருந்தன. குட்டைக் கரையைச் சுற்றித் தெற்கு பார்த்தாற் போல் ஒரு வெற்றிலைக் கடை, உலைக் கூடம், தையற் கடைகள் இரண்டு, மெத்தை தைக்கும் சாயபுவின் கடை ஆகியவை இருந்தன. இப்படி ஒரு சிறு கடைத் தெரு அங்கு பத்து வருஷங்களாக எழும்பி இருந்தது. காலை நேரத்தில், அந்தக்


கடைக்காரர்களின் பசியைத் தணிப்பதற்கு ஒரு பலகாரக் கடையை யாரும் போடாமல் இருந்தது. அந்தக் குட்டைக்கரைக் கடைத் தெரு வியாபாரிகளுக்குப் பெருத்த ஏமாற்றமாக இருந்தது.

அப்பொழுதுதான் முனியம்மாளின் மகள் நப்பின்னைக்குத் தானே சம்பாதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. முனியம்மாள் அரிசிக்கடை ஒன்றில் அரிசி அளந்து போட்டுத் தினம் எட்டணாவும் இரண்டு படி அரிசியும் சம்பாதித்து வந்தாள். மூட்டைக் கணக்கில், குனிந்த இடுப்பை நிமிர்த்தாமல் அரிசி அளந்து போட்டு அவளுக்கு இடுப்பே வளைந்து விட்டது. தாயும், மகளும் அந்த வருமானத்தில் வயிறாரச் சாப்பிட்டு, சீட்டுக் கட்டி, ஒரு எருமை மாட்டையும் வாங்கிப் பால் வியாபாரம் செய்து வந்தார்கள். நப்பின்னை மாட்டைத் தேய்த்துக் கழுவி (குட்டையில்தான்!) ஆலந்தூர் ஹோட்டல் ஒன்றில் பாலைக் கறந்து விட்டு, துட்டு வாங்கித் தவிடும் பிண்ணாக்கும் வாங்கி வருவாள். அரிசிக்கடையில் வேலை செய்து களைத்து வரும் தாய்க்கு மீதிப் பாலில் காப்பி போட்டு வைத்து விட்டு, சமைத்தும் வைத்து விடுவாள். உழைப்பாளியின் மகளாக இராமல், சுத்தமாகத் தோய்த்து உடுத்திய சிற்றாடையும், தலை சீவிப் பின்னிப் பூச்சூட்டியும் 'பளிச்' சென்று இருப்பாள் நப்பின்னை. பூ என்றால் அவளுக்கு உயிர். தவிடு, பிண்ணாக்கு வாங்கும்போது தினமும் ஒரு அணாவுக்குப் பூ வாங்கத் தவற மாட்டாள். அந்த வட்டாரத்தில் இருந்த வாலிபர்களுக்கு அவள் மீது ஒரு கண்.

சுறுசுறுப்பாக முதல் வண்டி போகும் போது எழுந்து மாட்டுக்குத் தீனி வைத்து, கிழக்கு வெளுப்பதற்கு முன் ரயில் தண்டவாளத்தைத் தாண்டி ஆலந்தூருக்குப் போகும் அவள் மீது எல்லோருக்கும் ஒருவித அன்பு ஏற்பட்டிருந்தது. பெரியவர்கள் அவள் திறமையை மெச்சிக் கொண்டார்கள். பெண்கள் அவளைப் போலத் தங்களால் இருக்க முடியவில்லையே என்று அசூயைப் பட்டார்கள். வாலிபர்களின் மனத்தில் பல கனவுகள் எழுந்தன.

ஒரு நாள் முனியம்மாள் பொழுது விடிந்த பிறகும் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. நப்பின்னை கடைத்தெருவிலிருந்து திரும்பி வந்த பிறகுதான் தாய்க்கு உடம்பு சரியில்லை என்பதைத் தெரிந்து கொண்டாள். அடுத்த சில நாட்களுக்கு எப்படி ஜீவனம் நடத்துவது என்று யோசியாமல் இருந்து விட்டாள் அவள். பதினைந்து தினங்களுக்கு அப்புறம் தான் வீட்டில் உப்பிலிருந்து அரிசி வரையில் தட்டிப் போயிருப்பது தெரிந்தது. முனியம்மாளுக்குப் பாரிச வாயு நோய் வந்து படுக்கையில் கிடந்தாள். மகளை அரிசிக்கடை வேலைக்கு அனுப்ப அவள் இசையவில்லை. பால் வியாபாரத்தில் ஒரு நாளைக்கு எட்டணா லாபத்துக்கு மேல் வரவில்லை.

நப்பின்னை யோசித்தாள். கடைசியில் இட்டிலிக்கடை போடுவது என்று தீர்மானம்



ஆயிற்று. அண்டை அயலாரிடம் சொல்லாமல் கொள்ளாமல், முதல் நாளே மாவரைத்துப் பண்டங்கள் சேர்த்து, அடுத்த நாள் கருக்கலில் குடிசை வாசலில் பலகாரக்கடை போட்டாள் நப்பின்னை. விடிவதற்கு முந்தியே பலகாரக்கடையின் பிரதாபம் ஊர் முழுவதும் பரவி விட்டது. பஞ்சு போன்ற தோசைகளும் பூப்போன்ற இட்டிலிகளும், 'கமகம' வென்று மணக்கும் வடைகளும், அவைகளுக்கு வேண்டிய உபகரணங்களுடன் வியாபாரத்துக்குத் தயாராகத் தட்டுகளில் அடுக்கி வைத்தாள் நப்பின்னை. வியாதிக்காரியான தாய்க்குத் தன் கையால் செய்த இட்டிலியைக் காலை ஆகாரமாகக் கொடுத்த போது முனியம்மாளே மகளின் கை வண்ணத்தைக் கண்டு அதிசயப்பட்டாள். 'கமகம' வென்று அத்தனை மணம் அந்த இட்டிலிகளுக்கு எங்கிருந்துதான் வந்ததோ?

கடை வாசலில் கூட்டம் சேர்ந்தது. காலை ஒன்பது மணிக்குள் பலகாரத் தட்டுகள் காலி ஆகிவிட்டன. போட்ட முதலுக்கு லாபம் அதிகமாகத்தான் இருந்தது.

''குழந்தை! கொஞ்சம் சூடாகக் காப்பித் தண்ணியும் காய்ச்சி வைச்சுடு. பறந்து போகும்'' என்றார் மெத்தைக்கடை சாயபு. அங்கிருந்த வியாபாரிகளுக்கு மிகவும் சந்தோஷம். நடந்து சென்று பலகாரம் சாப்பிட்டு வராமல், சுடச்சுட நப்பின்னை சுட்டுக் கொடுக்கும் பலகாரம் அவர்களுக்கு அமுதமாக இருந்தது.

வியாபாரம் செழித்து நப்பின்னை லாபம் சம்பாதித்து நகையும் நட்டுமாக விளங்கும் சமயம், இடைத் தெருவில் புதிதாக வெளியூரிலிருந்து ஒரு ஆசாமி கையில் ரொக்கத்துடன் வந்து சேர்ந்தான். துரைவேலு ஒரு தினுசான பேர்வழி. மல் ஜிப்பாவும் மைனர் செயினும் கைக் கடிகாரமும், விரல்களில் பளிச்சிடும் மோதிரங்களும் தான் பவிசு வாழ்க்கைக்கு இன்றியமையாதவை என்று கருதுபவன். அது மாத்திரமல்ல; தன்னைச் சுற்றி நாலு சகாக்கள் வளைய வர வேண்டும் என்பதும் அவன் விருப்பம். வெல்லத்தை ஈ மொய்ப்பது போல நாலு நண்பர் குழாம் அவனைச் சுற்றி வந்தது.

ஒரு நாள் அதிகாலையில் அவன் வீட்டை விட்டுக் கிளம்பிக் குட்டைக்கரைப் பக்கமாக வந்து கொண்டிருந்தான்.

நப்பின்னை தெருவில் கோலம் போட்டு விட்டு, பலகாரக்கடையின் பொருள்களை எடுத்து வந்து ஒவ்வொன்றாக வாசலில் வைக்க ஆரம்பித்தாள். அப்பொழுது புதிதாக மார்க்கெட்டில் விற்பனையான வாயில் புடவையை உடுத்தி, கைத்தறி ரவிக்கை போட்டிருந்தாள் அவள். தலையில் ரோஜாக் கதம்பம் மணத்தது. நெற்றியில் தற்கால நாகரிகப்படி திலகம் இட்டிருந்தாள். காலையில் குளத்தில் மலர்ந்த செந்தாமரையைப் போல இருந்தது அவள் தோற்றம்.


அந்த அதிகாலைப் பொழுதில் அவளுடைய தோற்றம் துரைவேலுவைக் கவர்ந்தது. பரபரவென்று பலகாரங்களைச் சுட்டு வைக்கும் அவள் திறமையை வியந்தவாறு கடை அருகில் வந்து அங்கிருந்த குத்துக்கல் ஒன்றின் மீது உட்கார்ந்து கொண்டான் அவன். தன் வேலையில் கருத்தைச் செலுத்திய நப்பின்னை தலை நிமிராமல் ''என்ன ஐயா வேணும் உங்களுக்கு?'' என்று கேட்டாள்.

''சூடாக இரண்டு தோசை கொடு...''

புதுக் குரலாக இருக்கவே தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள் அவள். கிழக்கு வெளுக்காத நேரத்தில் தெருவில் சந்தடி இல்லாத போது ஒரு வாலிபன் தனக்கு வெகு சமீபத்தில் உட்கார்ந்து பலகாரம் சாப்பிடுவதை அவள் விரும்பவில்லை. மந்தாரை இலையில் இட்டிலிகளை வைத்துக் கட்டி, ''இந்தாங்க, இட்டிலிதான் இருக்கு. இதை எடுத்துக்கிட்டு எந்திரிச்சுப் போய் எதிர்வீட்டுத் திண்ணையிலே உட்கார்ந்து சாப்பிடுங்க'' என்றாள்.

கண்டிப்பும், கருரும் நிறைந்த அவள் அதிகாரத்துக்குப் பயந்து துரைவேலு எதிர்வீட்டுத் திண்ணையில் போய் உட்கார்ந்தான்.

கிழவி முனியம்மாள் உடம்பாகப் படுத்த பிறகு மகளைப் பற்றிய கவலையில் மூழ்கிப் போனாள். அவள் இட்டிலிக் கடை போட்டு வியாபாரம் செய்வது, கடைத் தெருவுக்குப் போய்ப் பால் ஊற்றுவது எதுவுமே அவளுக்குப் பிடிக்கவில்லை. தகுந்த இடமாக வந்தால் அவளைக் கட்டிக் கொடுத்து விட்டு அவளுடன் தானும் போய் நிம்மதியாக இருக்க விரும்பினாள் அந்தக் கிழவி. அப்படிப்பட்ட இடமாக வாய்க்க வேண்டும் என்பது தான் அவள் கவலை. அவளுக்குத் தூரத்து உறவினர் நான்கு மாதங்களுக்கு முன் ஆரணியிலிருந்து நப்பின்னையைப் பெண் கேட்கவந்தார்கள். கல்யாணப் பிள்ளை அவர்களுடன் வரவில்லை. பெண்ணை அவர்களுக்குப் பிடித்துப் போயிற்று. பரிசம் போடத் தயாராக இருந்தார்கள். கிழவி தன் விருப்





அம்பி: அப்பா! கை ரேகை பட்ட அடையாளங்களை வைத்துக் கொண்டு பல திருட்டுகளைக் கண்டு பிடித்து விடுகிறார்களே, அது மாதிரி என் புஸ்தகங்களை வைத்துக் கொண்டு என்னைக் கண்டு பிடித்து விட முடியுமோ?

அப்பா: அதான் முடியாது!

அம்பி: ஏன் அப்பா?

அப்பா: உன் புஸ்தகத்தை நீ தான் விரலால் தொட்டதே கிடையாதே!

பத்தை அவர்களிடம் தெரிவித்தாள். மகனுக்குக் கல்யாணம் ஆன பிறகு அவனுடன் தான் வந்து இருக்கப் போவதாக அறிவித்தாள். நப்பின்னைக்கும் வயது சென்ற தன் தாயைத் தனியாக விட்டுப் போக விருப்பமில்லை. பிள்ளை வீட்டார் தயங்கினார்கள். நப்பின்னையின் அழகு அவர்களைக் கவர்ந்து விடவே, சீர்சிறப்பில் சற்றுக் குறைவாக இருந்தாலும் பரவாயில்லை என்று கல்யாணத்துக்கு அவர்கள் இசைந்தார்கள். ஆனால் வயது சென்ற கிழவி ஒருத்தியைத் தங்கள் குடும்பத்துக்குப் பாரமாகச் சேர்த்துக் கொள்ள அவர்கள் விரும்பவில்லை. சீரும் சிறப்புடனும் மருமகள் வருவது ஒன்றைத் தான் அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

பிள்ளை வீட்டார் தட்டிக் கழித்துவிட்டுப் போனதும் கிழவி மகளை அழைத்தாள். "குழந்தை! நான் எப்படியோ இங்கே இருந்து சமாளித்துக் கொள்கிறேன். நல்ல பசையுள்ள குடும்பம். உன்னைக் கட்டிக் கொடுத்து விட்டால் போதும்" என்று கூறினாள்.

நப்பின்னையின் கண்களில் நீர் சுரந்தது. பெற்ற தாயை, அவளைத் தவிர வேறு நாதி இல்லாதவளை, வயது சென்றவளைத் தனியாக விட்டு விட்டு அப்படிக் கல்யாணம் செய்து கொண்டு பிரிந்து போக வேண்டியதில்லை; முடிந்த வரையில் பார்த்துக் கொள்ளலாம் என்கிற எண்ணம் தான் மேலோங்கி இருந்தது அவளிடம்.

"கிடக்கிறது போ அம்மா. என் கல்யாணத்துக்கு என்ன அவசரம் இப்போ?" என்று கூறி விட்டுப் போய் விட்டாள். நாளடைவில் பலகாரக்கடையில் வியாபாரம் வலுக்கவே தேநீர்க் கடை ஒன்று வைத்தால் வருமானம் அதிகமாகும் என்கிற நம்பிக்கை அவளுக்கு உண்டாயிற்று. அதற்காக அவள் தெரிந்த ஒரு இடத்தில் மாதச் சீட்டு கட்டி வந்தாள்.

ஆரணியில் கல்யாணப் பிள்ளை இந்தப் பெண்ணைப் பற்றிக் கேள்விப்பட்டான். அவன் செட்டும், கட்டுமாகக் குடும்பம் நடத்துவதைப் பற்றியும், பலகாரக் கடை வைத்துச் சம்பாதிப்பதைப் பற்றியும் அவன் உறவினர் அவனிடம் அளந்தார்கள். "அந்தக் கிழவி இல்லாவிட்டால் ராசாத்தி மாதிரி இருக்கிற அந்தப் பெண்ணை நாங்கள் விடுவோமா?" என்று வேறு கூறி அங்கலாய்த்தார்கள். வீட்டாருக்குத் தெரியாமல் அவன் அவளைக் காண வந்து விட்டான்.

★

தினம் அதிகாலையில் நப்பின்னையின் கடைக்கு வந்து துரைவேலு பலகாரம் வாங்கிச் சாப்பிடுவான். பகல் வேளைக்கும் வாங்கிக் கட்டிக்கொண்டு போவான். அவன் மூலமாக எப்படியும் அவள் கடைக்கு தினம் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் வியாபாரம் நடந்து கொண்டு வந்தது.

நல்ல வியாபாரம் நடக்கவே கடையை விஸ்தரிக்க ஆசைப்பட்டாள் நப்பின்னை. எதிரில் இருக்கும் காலி மனையை வாடகைக்கு எடுத்துக் கொண்டு, அதில் கீற்றுக் கொட்டகை போட்டு நடத்தும் படி எல்லோரும் சொன்னார்கள். நாளின் ஆரம்ப காலம் வரையில் அவள் ஓர் ஆண்பிள்ளையைப் போலப் பாடுபட ஆசைப்பட்டாள். சீட்டுக் கட்டி வந்த இடத்தில் அந்த மாதம் சீட்டெடுத்துக் கடை போடுவதென்று ஏற்பாடாயிற்று.

"மாட்டை விற்று விடேன்" என்றான் முனியப்பன் அவளிடம்.

"என்னய்யா இது? நல்ல கறவை மாடு. கள்ளிச்சொட்டு போல் இருக்கும் பால். படிக்குப் படி கன்னுக்குட்டி மாதிரி கட்டி வரும். அதோடு, ஆசையாக வளர்த்து வந்திருந்து தான் வளர்த்தேன்........" என்று மறுத்து விட்டாள் நப்பின்னை.

"ஏலம் அதிகமாய்ப் போனால் வந்துவிடு. அடுத்த மாசம் பார்த்துக் கொள்ளலாம்!" முனியப்பன் இவ்விதம் கூறி நப்பின்னையைச் சீட்டுக்காரர் வீட்டுக்கு அழைத்துப் போனான்.

பலகாரம் விற்று சேர்த்து வைத்த பச்சை ஜாடையாகக் கவனித்த துரைவேலு சீட்டுக்காரர் வீட்டில் அவளுக்கு முன்பாகப் போய் உட்கார்ந்திருந்தான். நப்பின்னை அங்கு போய்ச் சேர்ந்ததும் சீட்டுக்காரர் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

"என்ன ஆரம்பிக்கலாமா! ஏலம் ஆரம்பிக்கலாமா?" என்று கேட்டார்.

"ஆரம்பியுங்க அண்ணே!" என்றான் துரைவேலு, நப்பின்னையைக் குறிப்பாகப் பார்த்துக் கொண்டு.

சீட்டுக்காரர் கைகளைக் கவிழ்த்துக் கட்டைவிரலைக் கடித்துக் கொண்டு, "ஏலம் ஒரு ரூபாய். ஒரு ரூபாய். ஒரு ரூபாய்" என்று மூன்று தடவைகள் கூறினார்.

படிப்படியாக உயர்ந்து கூறுவதற்கு பத்துப் போகவும் இருபது ரூபாய் வரையில் மாதிரம் மேல் கேட்டார்கள். இருபதுக்கு மேல் துரைவேலு. "இருபத்தொன்று" என்று ஆரம்பித்தான். நப்பின்னை "இருபத்திரண்டு" என்றாள். அதற்கு மேல் யாரோ இருபத்தைந்து வரை ஏற்றி விட்டார்கள். மறுபடியும் துரைவேலு "இருபத்தியாறு" என்றான். நப்பின்னை

நன்றாக நித்திரை செய்து
உங்கள் சக்தியை புதுப்பியுங்கள்



நல்ல ஆழ்ந்த நித்திரை உங்கள் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது. ஏனெனில், நித்திரை செய்யும்போது உங்கள் தேகம் மற்றும் மூளை இவைகள் புத்துயிர் பெற்று பலமூட்டப்படுகிறது. உறங்குமுன் ஒரு கப் 'ஓவல்டின்' பருகுவது சரியான தூக்கத்தை அளிக்க உதவுகிறது. இது நரம்புகளுக்கு இதமளிக்கிறது. அத்துடன் சுலபமாக ஜீரணிக்கும் உருவில் தேவையான ஜீவசக்தி அளிக்கும் போஷாக்கை சப்ளை செய்கிறது.

இந்தப் போஷாக்கு, மிகச் சிறந்த உணவுப் பொருள்களுடன் அதிகப்படி வைட்டமின்களின் சேர்க்கையிலும் கிடைக்கிறது. 'ஓவல்டின்'னில் அடங்கியுள்ள வைட்டமின் பொருள்கள் விசேஷ முக்கியத்வம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. ருசிமிக்க 'ஓவல்டின்'னை உறங்குமுன் - பருகும் - பானமாகத் தவறாமல் கொள்ளவும்.

பிரதியொரு டின்னிலும் ஆரோக்கிய மயமான

ஓவல்டின்



விநியோகஸ்தர்கள்:

ஜெஹாம்ஸ் ட்ரேடிங் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.

IV. 499

முகத்தை ஒரு திருப்புத் திருப்பி 'இருபத்தேழு' என்றாள். தொடர்ந்து நாற்பத்தைந்து வரையில் இருவரும் போட்டி போட்டார்கள்.

''சீட்டுக்கார ஐயா! இவர் என்ன ஏழைகள் வாயிலே மண்ணைப்போடவா சீட்டிலே சேர்ந்தாரு? நூற்றி ஐம்பது ரூபாய் சீட்டுக்கு ஐம்பது ரூபாய் தள்ளி எடுப்பதா? அநியாயங்க......'' என்றாள் நப்பின்னை துரைவேலுவைக் கோபத்துடன் விழித்துப் பார்த்து.

''ஏலச்சீட்டு என்றால் அப்படித்தான் இருக்கும்னு சொல்லுங்க, அண்ணே!'' என்றான் துரைவேலு.

கடைசியாக முனியம்மாளுக்குப் பயந்து சீட்டைத் துரைவேலுவுக்கு விட்டுக்கொடுத்து விட்டுக் கோபத்துடனும் துயரத்துடனும் நப்பின்னை வீடு திரும்பினாள்.

தாயிடம் அங்கு நடந்தவைகளைக் கூறி, ''அந்த மனுசன் ஏதோ முடைக்கு வந்து அப்படிக் கேட்கவில்லை, அம்மா! வேண்டுமென்றே போட்டியில் ஏலத்தை எடுத்திட்டாரு'' என்றாள்.

''இடக்குது விடு. அடுத்த மாசம் பார்த்துக்கலாம்'' என்றாள் கிழவி.

''விடவாவது? பெண்பிள்ளை கடை வைத்துச் சம்பாதிப்பதா என்று அந்த மனுசனுக்கு ஆத்திரம். அதுக்கு நான் பணிய மாட்டேன். மாட்டை நாளைக்குப் பல்லாவரம் சந்தையிலே வித்துவிடப் போகிறேன்......''

படுக்கையில் கிடக்கும் கிழவியால் மகளை அதட்ட முடியவில்லை. அதட்டினாலும் அவள் பணிந்து போகமாட்டாள் என்பதும் தெரியும்.

அன்று விளக்கு வைத்த பிறகு, நப்பின்னை மாட்டுக்குத் தவிடும், பிண்ணாக்கும் பிசிறி வைத்தாள். கையிருப்பில் இருந்த நாலு வைக்கோல் பிரிகளில் இரண்டை இரவுக்காக வைத்துக்கொண்டு அண்டையில் மாடு வைத்திருக்கும் ஒருவரிடம் மீதி இரண்டு பிரிகளையும் கொடுத்து விட்டாள் நப்பின்னை.

''என்ன இது?'' என்று அதிசயித்தாள் அந்த வீட்டுக்காரி.

''அப்படித்தான் அண்ணி! விடியற்காலம் சந்தையிலே மாட்டை விற்றுவிடப் போகிறேன்......'' என்றாள் நப்பின்னை.

''தே......சும்மா கதை விடாதே......''

''இல்லை, அண்ணி! நிசமாத்தான் விற்கப் போகிறேன். அந்த ஆரணிக்காரரு என்ன இந்தப் பரங்கிமலைக்கே ராசாவா!''

அடுத்த வீட்டுக்காரிக்கு விஷயம் புரிந்து விட்டது. நப்பின்னை சென்ற பிறகு அவள் தன் கணவன் கலத்தில் குழம்பை ஊற்றிக் கொண்டே இந்தச் செய்தியை அவன் காதில் போட்டு வைத்தாள். அந்தச் செய்தி காற்றினும் கடிய வேகத்தில் துரைவேலுவுக்கு ஒலி பரப்பப்பட்டது.

★

பல்லாவரம் சந்தையில் ஒரு புளிய மரத்தடியில் எருமையைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தாள் நப்பின்னை. அவள் கண்கள் கலங்கியிருந்தன. நொடிக்கொருதரம் அதன் முகத்தையும், கழுத்தையும் பரிவுடன் தடவிக் கொடுத்தாள் அவள். அதன் கண்களிலிருந்தும் கண்ணீர் பெருகிக் கொண்டேயிருந்தது.

சந்தை ஆரம்பித்து இரண்டு மணி நேரம் வரையில் யார் யாரோ வந்து விலை கேட்டார்கள். சிலர் நியாயமாகக் கேட்டார்கள். சிலர் அநியாயமாகப் பேரம் பேசினார்கள். நப்பின்னை, அத்தனை சடுதியில் பிரிய மனமில்லாமல் பொழுதைக் கடத்திக் கொண்டே வந்தாள்.

கதிரவன் உச்சி வானத்துக்கு வந்து கொண்டிருந்தான். மைதானத்தில் அனல் காற்று வீசத் தொடங்கியது. இனிமேல் பொழுதை ஓட்டக் கூடாதென்று நப்பின்னை சுற்று முற்றும் பார்த்தாள்.

''என்ன தங்கச்சி? மாட்டை விற்க வந்துட்டாயாமே?'' என்று கேட்டுக் கொண்டே பரங்கிமலைக் கதிரேசன் அவள் எதிரில் நின்றான். அந்த ஊரில் யாரும் அவனுக்குத் தெரியாமல் மாடு பிடிக்கவோ, விற்கவோ மாட்டார்கள். வாரம் தவறாமல் சந்தைக்கு வருவான் கதிரேசன்.

''ஆமாம், அண்ணாத்தை! விற்கத்தான்.''

''நல்ல கறவை மாடாச்சே! எதற்கு அம்மா அதை விற்கணும் இப்போ?''

''அப்படித்தான், அண்ணாத்தை! அதை விற்றுத்தான் ஆகணும்!''

''சரி! இந்தா படி நூற்றைம்பது ரூபாய், மாட்டை நான் வாங்கிக்கிறேன்......''

''நீயா வாங்கிக்கறே? உன் வீட்டிலே யாரு இதைக் கவனிப்பாங்க?''

கதிரேசன் ஒண்டி ஆள். 'சத்திரத்திலே சாப்பாடும் மடத்திலே தூக்கமும்' என்று கூறுவது போல் ஓட்டலில் சாப்பாடும் ரயில் நிலையத்தில் வாசமும் வைத்துக் கொண்டிருந்தான்.

''ஏன் தங்கச்சி! நான் மாடு வாங்கக் கூடாதா?'' என்று கேட்டான் அவன்.

''அப்படிச் சொல்லலேயே நான்? உனக்கு மாடும் கன்றும் என்னத்துக்கு அண்ணாத்தை? உனக்கு ஒரு வேளை கல்யாணம் ஆவப் போவுதோன்னு சந்தேகம் எனக்கு......''

கதிரேசன் சிரித்துக் கொண்டே பணத்தை எண்ணி அவள் கையில் கொடுத்து விட்டு, மாட்டை வாங்கிக் கொண்டான்.

தூரத்திலே மாடும் கதிரேசனும் போவதைப் பார்த்துக் கொண்டே ஒரு பெருமூச்சு விட்டாள் நப்பின்னை.

அன்று, அவள் வீட்டை அடைந்தபிறகு வேறு வேலை ஒன்றும் செய்யத் தோன்றவில்லை. அவசரத்தில், ரோசப் பட்டுக் கொண்டு, பல வருஷங்களாக ஊட்டி வளர்த்த மாட்டை விற்றது அவளுக்குச் சரியாகத் தோன்றவில்லை. பிரமை பிடித்தவள் போல் அடுப்படியில் உட்கார்ந்திருந்தாள்.

''இட்டிலிக்கு மாவு அரைக்கலியா?'' என்று முனியம்மாள் மகளைக் கேட்டாள்.

''க்கு......'' என்று சூள் கொட்டினாள் நப்பின்னை. கொல்லைப்புறம் திரும்பிப் பார்த்த பொழுது மாட்டுக் கொட்டில் 'வெறிச்' சென்று கிடந்தது. நப்பின்னையைக் கண்டால் தன் தலையை ஆட்டி வரவேற்கும் அந்த மாடு இல்லாமல் வாழ்க்கையே வெறிச்சோடிப் போன மாதிரி இருந்தது அவளுக்கு. எருமையாக இருந்தாலும் அதற்கு அறிவு அதிகம். நப்பின்னை தன் தோழி ஒருத்தியுடன் பேசுவது போல, அதன் கழுத்தைக் கட்டிக் கொண்டு பல செய்திகளைப் பேசியிருக்கிறாள்.

அடுப்பிலே இருந்த கஞ்சித் தண்ணீரை இறுத்து வெல்லம் போட்டுத் தாய்க்குக் கொடுத்துத் தானும் சாப்பிட்டாள் அவள். தன்னால் அன்று மாவு அரைக்க முடியவில்லை என்கிற பொய்யைச் சொல்லி விட்டு விளக்கு ஏற்றியதும் படுத்து விட்டாள் அவள்.

கீழ்வானம் வெளுத்துக்கொண்டு வந்தது. அன்று காலையில் எழுந்து செய்ய எந்த வேலையும் அவளுக்கு இல்லை. மாட்டுக்குத் தீனி வைக்க வேண்டாம். பலகாரக் கடையும் வைக்க மாவு அரைக்கவில்லை. கனத்த இதயத்துடன் மெதுவாக எழுந்து நப்பின்னை கொல்லைப் பக்கம் சென்றாள்.

அங்கே அவள் மாடு கொட்டிலில் கட்டப் பட்டிருந்தது. துரைவேலு அதற்கு வைக்கோலை உதறிப் போட்டுக் கொண்டிருந்தான். அவள் அதிசயத்தால் கண்களை மலர்த்தி அவனைப் பார்த்தாள்.

''என்ன பார்க்கிறாய்?'' என்று குறும்புத்தனமாகக் கேட்டான் துரைவேலு.



மணி: டேய்! வெளியில் போய் விளையாடலாம், வர்றியா?

குஞ்சு: வரத்துக்கு இல்லேடா! எனக்கு ரொம்ப ஜோலி இருக்கு. இதெல்லாத்தையும் உடைச்சாகணும். வருகிறதுக்கு இல்லேடா!

''இந்த மாடு இங்கே......''

''இது என் மாடு. நான்தான் கதிரேசனை உன்னிடம் விலை பேசி வாங்கச் சொன்னேன்.''

''சொன்னீங்க! மாடு வாங்க மூன்றாவது ஆள் தேவையா உங்களுக்கு! நீங்களே வருகிறதுக்கு என்ன?''

''வந்தால் நீ கல்லை விட்டு அடிப்பியே...... ஆமாம்........இன்னிக்குச் சூடா ஒன்றும் இல்லையா?...''

''இருக்கு...இருக்கு...'' — நப்பின்னை ஆத்திரத்துடன் பற்களைக் கடித்தாள்.

உள்ளேயிருந்து கிழவி குரல் கொடுத்தாள்.

''ஏ பொண்ணே! விடிஞ்சதும் யாருகிட்டே சண்டை?''

''நீ சும்மா இரு அம்மா! இவரு விவகாரத்தைத் தீர்த்துப்பிடணும்......''

''நானும் அதுக்காகத்தான் ஆரணியிலிருந்து வந்து நாலுமாசமா ஓட்டலிலே சாப்பிட்டுக்கிட்டு இருக்கேன். விஷயம் இன்னிக்குத் தீர்ந்து போகணும்......''

துரைவேலு சிரித்தான்.

கிழவி மறுபடியும் பேசினாள்.

''யாரு தம்பீ! இப்படி வாயேன்...ஆரணி பெரியசாமி வீட்டுப் பிள்ளையா நீ?...''

''ஆமாம், அத்தை! பரிசம் போடவந்தால் உங்கள் மகள் கல்லை விட்டு எறியுது...''

''அது ஒரு பைத்தியம்! நீ உள்ளே வா தம்பி!'' வியாதிக்காரியான முனியம்மாள் மகிழ்ச்சியே வடிவாக உரக்கக் கூப்பிட்டாள்.

''அத்தை கூப்பிடறாங்க, நீ வா உள்ளே...'' என்றவாறு துரைவேலு உள்ளே நுழைந்தான்.

நப்பின்னையின் முகம் காலைக் கதிரவனின் ஒளியில் செழிக்கும் செந்தாமரை போல் சிவந்து காணப்பட்டது.

அன்பின் ஆழம்



அன்றிரவு ''வீணு! உன்னோடு கொஞ்சம் பேச வேணும், அம்மா!'' என்றார் மாமா இருந்தாற் போலிருந்து.

''பீடிகை எதற்கு, மாமா! கூடை கூடையாகப் பேசுங்கள்! நான் கேட்கத் தயார்!'' என்று சிரித்தேன்.

மாமா மௌனம் சாதித்தார்.

''என்ன மாமா இது! ஏன் வாயை இறுக மூடிக் கொண்டு விட்டீர்கள்?''

''ஒண்ணுமில்லே, வீணு! காலையில் பார்த்துக் கொள்வோம்!'' மாமா அங்கிருந்து போய் விட்டார்!

மாமா ஆரம்பித்து விட்டு ஒத்திப் போட்டு விட்ட அந்த விஷயம் என்னவாயிருக்கும் என்று வியப்புடன் நெடுநேரம் சிந்தித்துப் பார்த்தேன். ஒன்றும்பிடிபடவில்லே.

மறுநாள் காலையில் மாமா காப்பி சாப்பிட்டு விட்டுக் கூடத்துக்கு வந்தார். ''என்னமோ காலையில் சொல்கிறேன் என்றீர்களே, இப்பொழுது சொல்லுங்கள்!'' என்று ஆரம்பித்தேன்.

'ஒண்ணுமில்லே, அம்மா! அப்புறம் ஆகட்டும்'' என்றார் அவர்.

நான் விடவில்லே. ''எதற்காக இப்படி மென்று விழுங்குகிறீர்கள்? எதுவா யிருந்தாலும் இப்போது சொல்லி விடுங்கள்! சொல்லித்தான் ஆகணும்!'' என்று அவரை நச்சரித்தேன்.

மாமா தயங்கித் தயங்கிக் கூறினார்: ''வீணு! உனக்கு விவாகப் பிராயம் வந்து விட்டதல்லவா! சீக்கிரம் கல்யாணத்தை முடிக்க வேண்டாமா?''

நான் வெட்கத்துடன், ''போங்கள், மாமா! இதுதானு விஷயம்! என்னவோ பிரமாதமான சமாசாரமாக்கும் என்று எண்ணினேன்!'' என்றேன்.

''இன்னும் எத்தனே நாளேக்கு உன் கல்யாணத்தைத் தள்ளிப்போட முடியும்? உனக்குப் பதினெட்டு வயது ஆகிவிட்டது!'' என்றார் மாமா.

''சரி, உங்கள் விருப்பப்படி செய்யுங்களேன்! இதற்கு என்னுடைய உத்தரவு வேணுமா என்ன?''

''என் விருப்பப்படி செய்ய உன் அனுமதி கிடைக்குமா, அம்மா? நீ சம்மதிப்பாயா?'' அவர் ஏக்கப் பெருமூச்செறிந்தார்.

''இது என்ன கேள்வி, மாமா! உங்கள் போக்கே வரவர வேடிக்கையா யிருக்கிறதே! உங்கள் சொல்லே மீறி நடப்பேனு நான்?''

எஸ். வைத்தியநாதன்



"நீ குணசாலி என்பதை நன்கு அறிந்திருப்பதனால்தான் இதைப்பற்றித் துணிவாக ஆரம்பித்தேன், குழந்தாய்!"

"'துணிவாக'வா? என்ன மாமா, பெரிய பெரிய வார்த்தைகளெல்லாம் போடுகிறீர்கள்!" என்றேன் வியப்புடன்.

மீண்டும் தயக்கத்துடன் மாமா கூறினார்:

"நான் சொல்வதைத் தப்பாக எடுத்துக் கொள்ளமாட்டாயே, வீணா! நம்ப கப்புணியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு விடேன் நீ!"

யாரோ என்னைச் செங்குத்தான மலை உச்சியிலிருந்து திடுமென பள்ளத்தில் உருட்டி விட்டமாதிரி இருந்தது எனக்கு! ஸ்தம்பித்துப் பேசும் சக்தியை இழந்து நின்றேன்.

"வீணா! நீ இதை எதிர்பார்த்திருக்க மாட்டாய் என்பது எனக்குத் தெரியும்... உனக்கு அவன் தகுந்தவன் இல்லை என்பதும் எனக்குத் தெரியாததல்ல. என்றாலும் அவன் நிலைமைக்கு இரங்கி இதற்கு உடன்படுவாய் என்ற நம்பிக்கையில் பிறந்ததுதான் என் கோரிக்கை!" மாமாவின் குரல் பரிதாபமும் உணர்ச்சியும் கலந்ததாயிருந்தது.



நான் திக்பிரமையிலிருந்து இன்னும் விடுபடவில்லை. பேசவும் முடியவில்லை. ஒன்றும் தோன்றாமல் மௌனமாக அவரை ஏறிட்டு நோக்கிக் கொண்டிருந்தேன்.

மாமா மீண்டும் கூறலுற்றார்: "குழந்தாய்! எனக்கோ வரவரப் பலஹீனமும் தள்ளாமையும் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. உன் மாமியோ நித்திய வியாதிக்காரி! எங்கள் இருவரின் மிச்ச வாழ்நாட்கள் விரல்விட்டு எண்ணக்கூடியவை. எந்த நிமிஷமும் நாங்கள் திடீரென்று கண்ணை மூடிவிடலாம். அப்புறம் கப்புணியின் கதியை எண்ணிப்பார்! அவனுக்கு யார் ஆதரவு? இதை எண்ணுகையில் என் நெஞ்சு துடிக்கிறது. நீ அவனைக் கல்யாணம் செய்து கொண்டு விட்டால் நாங்கள் அமைதியாகச் சாவோம்!"

'கப்புணியை நான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமாமே! என்ன நெஞ்சழுத்தம் இவருக்கு!' என்று ஆத்திரத்துடன் குமுறிக் கொந்தளித்தது என் உள்ளம். கூடவே சமாதானமும் எழுந்தது. 'பாவம்! அவர்மேல் கோபப்படலாமா! பெற்ற மனம் அப்படிப் பேசச் செய்கிறது! அவர் சொல்வதும் ஒரு விதத்தில் கப்புணியின் எதிர்காலத்தைப் பொறுத்த வரையில் நியாயந்தானல்லவா!'

ஆயினும் அவனை நான் கல்யாணம் செய்து கொள்ள முடியுமா, என்ன! எந்தப் பெண்தான் அவனை மணக்கச் சம்மதிப்பாள்?

"என்ன அம்மா பதிலே சொல்லவில்லை! இந்த வரத்தை எனக்குக் கொடுக்கமாட்டாயா? உன்னை யாசிக்கிறேன், அம்மா! பெரிய மனசு பண்ணு!" என்று கெஞ்சும் குரலில் மாமா கூறினார்.

சற்றுத் தள்ளி நின்றவாறு இதுவரையில் மௌனம் சாதித்துக் கொண்டிருந்த மாமி இப்போது வாயைத் திறந்தாள்: "விஷயத்தைச் சொல்லி விட்டு அடுத்த நிமிஷமே 'முடிவு சொல்லு, முடிவு சொல்லு' என்று அரித்தெடுத்தால் குழந்தைக்குக் குழப்பமாயிராதா? அவளுக்கு யோசிக்க அவகாசம் கொடுங்கள்! கப்புணிமேல் நம்மைக் காட்டிலும் அவளுக்குப் பிரியம் அதிகம்! அமைதியாகச் சிந்தித்தால் நாம் சொல்வதை ஒப்புக் கொள்ளாமல் போகமாட்டாள்!" மாமாவும் மாமியும் கூட்டு ஆலோசனை செய்துதான் இந்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள்!

தாற்காலிகமாகவாவது தப்பித்துக்கொள்ள ஒரு வழி கிடைத்ததே என்ற மகிழ்ச்சியுடன், "மாமா! மாமி சொல்கிறபடி இரண்டு மூன்று நாட்கள் அவகாசம் கொடுங்கள்!... பிறகு......" என்று இழுத்தேன்.

"செய், குழந்தாய்! நன்றாக யோசனை பண்ணு! கப்புணியின் கதியைப்பற்றி அலசி ஆராய்ந்து பார்!" என்றார் மாமா.

• •

ஐந்து வயதிலேயே பெற்றோர் இருவரையும் இழந்து விட்டேன் நான். அப்போதிலிருந்து மாமாவும் மாமியும்தான் என்னை ஆதரித்து அரவணைத்து வருகிறார்கள். ஏதோ கொஞ்சம் சொத்து வைத்துவிட்டுத்தான் போனார் என் அப்பா. என்றாலும் கடனுக்காக வளர்ப்பது போல் பாசாங்கு செய்து சொத்தைக் கபளீகரம் பண்ணுகிறவர்கள் எத்தனை பேர் இல்லை? மாமாவையும், மாமியையும் அந்த ரகத்தில் சேர்க்க முடியாது. அவர்களுக்குப் பெண் குழந்தை இல்லாத குறையைத் தீர்க்க வந்தவளாகவே கருதிப் பாசத்தை வர்ஷித்தார்கள் என்மேல்.

அவர்களுக்கு ஒரே பிள்ளையைத் தான் ஆண்டவன் அருளினார். அந்தப் பிள்ளையை அவர்களுக்குக் கொடுத்ததைவிட பேசாமலேயே இருந்திருக்கலாம் கடவுள். கப்புணி என்ற படைப்பே அவசியமில்லாதது. என் மாமா—மாமிக்கும் பிள்ளை இல்லையே என்ற ஒரே குறையோடு போயிருக்கும்.

கப்புணி என்னைவிட மூன்று வயது பெரியவன். ஆனால், என்ன துர்ப்பாக்கியம்! மூன்று வயதுக் குழந்தைக்குள்ள அறிவுத்திறனே,

சிந்தனை சக்தியோகூட இன்னும் அவனுக்குக் கிடையாது! முதலிலெல்லாம் 'குழந்தை கொஞ்சம் மந்தம்! இரண்டொரு வருஷங்கள் போனால் சூடிகை ஏற்பட்டு விடும்' என்று பெற்றோர் நம்பினார்கள்; ஆசையுடன் எதிர் பார்த்தார்கள்! ஆனால் சுப்புணியின் உருவம் வளர்ந்ததே ஒழிய அவன் அறிவு வளர்ச்சி யடையவில்லை. ஆள் செக்கச் சிவக்க வாட்ட சாட்டமாக வளர்ந்தானே தவிர, மூளை சம்பந்தப்பட்ட வரையில் அவன் பச்சைக் குழந்தை யிலும் கீழானவன்; ஏமாந்தி! பித்துகுளி, பைத்தியம் என்று சொல்வது பொருத்தமாயிராது என்றாலும் ஊரார் அவனை அப்படித் தான் அழைத்தார்கள். மொத்தத்தில் போதிய பகுத்தறிவு இல்லாத அசடு அவன்.

ஊர்வம்பர்களுக்கெல்லாம் அவனைக் கிண்டி விட்டு ஹாஸ்ய ரஸத்தை நுகர்வது ஒரு பொழுதுபோக்கு! அவனைப் பாடச் சொல் வார்கள்; நாட்டியம் ஆடச் சொல்வார்கள்!

இவ்வளவு அசடாயிருந்தாலும் என்னிடம் அவனுக்கு அசாத்தியப் பாசம். சின்ன வயதிலிருந்தே 'வீணு, வீணு' என்று என்னைச் சுற்றிச் சுற்றி வருவான். என்னோடு தான் சாப்பிடுவான். அவனுடைய அன்பின் ஆழத்தைப் புலப்படுத்த இரண்டு மூன்று சம்பவங்களைக் கூறினால் போதும்.

ஒரு சமயம் நான் ஜுரமாய்ப் படுத்து விட்டேன். அன்று கஞ்சிதான் ஆகாரம். நான் சாப்பிட்டால்தான் தானும் சாப்பிடுவேன் என்று சுப்புணி பிடிவாதம் பிடித்தான். அவனுடைய பெற்றோர்கள் நிலைமையை விளக்கி அவனைச் சாப்பிடும்படி வற்புறுத்த எவ்வளவோ முயன்றும் அவன் 'வீணு சாப்பிட்டால்தான் சாப்பிடுவேன்' என்று பிடிவாதமாக மறுத்து விட்டான். அன்று அவனுக்கும் கஞ்சிதான் ஆகாரம்! மறுநாள் நான் சாப்பிட்டபோதுதான் அவனும் சாப்பிட்டான்.

இன்னொரு நாள் நாங்கள் நாலைந்து பேர்களாக விளையாடிக் கொண்டிருக்கையில் எதிர் வீட்டுச் சீனு என்னை ஏதோ திட்ட, நான் அழ ஆரம்பித்து விட்டேன். என் கண்ணீரைச் சகியாத சுப்புணி சீனுமேல் பாய்ந்து அவனை நொறுக்கி விட்டான். சுப்புணிக்கு அவ்வளவு கோபம் எங்கிருந்து வந்தது என்பதை இன்று நினைத்துப் பார்த்தாலும் எனக்கு வியப்பாயிருக்கிறது!

எட்டு வருஷங்களுக்குமுந்தி ஒருநாள் கிணற்றில் சோப்புப் பெட்டியைத் தவறிப் போட்டு விட்டு அழுது கொண்டு நின்றேன் நான். சுப்புணி அகஸ்மாத்தாகக் கொல்லையில் வந்தவன் ''என் வீணு அழுறே!'' என்றான் பதற்றத்துடன். நான் விஷயத்தைச் சொன்னதும் சோப்புப் பெட்டியை எடுத்துக் கொடுப்பதற்காக, என் கண்ணீரைத் துடைப்பதற்காகக் கிணற்றில் குதித்து விட்டான் திடீரென்று! அதைக் கண்டு பதறி நான் பெரிதாகக் கூச்சலிட அக்கம் பக்கத்தாரெல்லாம் ஓடி வந்து அவனைக் கிணற்றிலிருந்து மீட்டார்கள்!

* * *

சுப்புணியின் மூளை முழுவதையும் அறியாமை என்னும் இருள் கப்பிக் கொண்டிருந்தாலும் அந்த அந்தகாரத்திடையே என் மீது இணையற்ற பாசம் என்ற ஒரு சிறு பொறி மாத்திரம் ஒளி விட்டு ஜ்வலித்துக் கொண்டிருந்தது என்பதை நான் நன்கு அறிவேன். அவன் பெற்றோர் மீதுகூட அவனுக்கு அவ்வளவு பாசம் கிடையாது என்பதும் நான் அறியாததல்ல. என்றாலும் அவனை மனமொப்பி நான் கணவனாக ஏற்றுக் கொள்வது எப்படி? மாமா என்னிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதை நினைத்தால் எனக்கு ரொம்பப் பரிதாபமாகத்தான் இருந்தது. மகனைப் பற்றிய கவலை மாமாவையும் மாமியையும் உருக்கி நடைப்பிணம் ஆக்கி விட்டது என்பதையும் நான் உணர்ந்தே இருந்தேன். ஆனாலும் சுப்புணிக்கு மாலையிடத் துணியும் அளவுக்குத் தியாக புத்தி எனக்கு ஏற்படவில்லையே, நான் என்ன செய்வது?

'கடவுளே! சிறிதளவு விவேகத்தையாவது அவனுக்குக் கொடுத்துத் தொலைத்திருந்தால் போனால் போகிறதென்று அவனை மணந்து கொண்டு விடுவேனே! இவ்வளவு பரப்பிரும்மமாக இருப்பவனைக் கட்டிக் கொண்டு அழ முடியுமா?' என்று மானசீகமாகக் கடவுளைச் சபித்துக் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தேன். என் தீர்மானத்தை மாமா மாமியிடம் வெளியிடுவதற்குத் துணிவு வரவில்லை. அவனைப் பெற்றவர்களின் மனம் என்ன பாடுபடும்!

இடையிடையே இரண்டு மூன்று தடவை



சுப்புணி என்னிடம் வந்து பல்லை இளித்துக் கொண்டு அசடு வழிய, ''ஏன் வீணு, என்னைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாயாமே நீ? நெஜமாவா? கல்யாணத்துலே புது வேஷ்டி மாலை, ஊர்கோலம் எல்லாம் உண்டோ இல்லியோ? ரொம்ப ரொம்ப ஜோராயிருக்கும் இல்லையா?'' என்று நச்சரித்தான். அவனைப் பார்த்து இரங்கத் தான் முடிந்தது என்னால்.

பதினைந்து நாட்கள் ஆகியும் நான் முடிவு சொல்லாமற் போகவே, மாமா மீண்டும் அது விஷயமாக அன்று ஆரம்பித்தார்:

''என்ன அம்மா குழந்தாய்! அதைப்பற்றி யோசித்தாயா?''

எனக்குப் பரிதாபமாகத்தான் இருந்தது. பதில் சொல்லவும் தயக்கமாகத்தான் இருந்தது; என்றாலும் எத்தனை நாட்கள்தான் மழுப்பிக் கொண்டிருக்க முடியும்? எனவே மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு,

''மாமா! தப்பாக நினைத்துக் கொள்ளாதீர்கள். என்னை மன்னியுங்கள்! வந்து...'' என்று ஆரம்பித்த வாக்கியத்தை முடிக்க முடியாமல் திணறினேன்.

என் முடிவை மாமா புரிந்து கொண்டு விட்டார். அதை ஓரளவாவது அவர் எதிர் பார்த்திராமல் இருக்க முடியாது. எனினும் என் முடிவு அவரை நிலைகுலைய வைத்து விட்டது. உலகத்தில் உள்ள சோகம் முழுவதும் கிளம்பி வந்து அவர் முகத்தில் குடி புகுந்து விட்ட மாதிரி இருந்தது அவர் தோற்றம். அவர் இதயம் விம்மி விம்மித் தணிந்தது. அவர் உள்ளம் படும் பாட்டை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

திடீரென்று ஒரு விசும்பல் ஒலி. அதைத் தொடர்ந்து மேலும் பல. திரும்பினேன். மாமிதான் கண் கலங்க நின்றாள்.

''கடைசியில் என் குழந்தையைக் கைவிடத் துணிந்து விட்டாயா, விஜு?''

விம்மி விம்மிக் கண்ணீர் பெருக்கியழுதாள் மாமி.

அந்தப் பெற்றோர் படும் பாட்டைக் கண்டு வேதனை தாளாமல் திணறினேன் நான். 'கடவுளே! இந்தச் சுப்புணி என்ற பிரகிருதியை எதன் பொருட்டுச் சிருஷ்டித்தாய்? அதனால் எத்தனை பேருக்குத் துன்பம், பார்!' என்று மானசிகமாக அலறினேன்.

''மாமி! அழாதீர்கள். சுப்புணியிடம் எனக்குப் பாசமில்லையா? அவனைப் பற்றிய கவலை எனக்கு மாத்திரம் இல்லையா? கல்யாணம் பண்ணிக் கொள்ள எனக்குத் துணிவு வராவிட்டாலும் அவனை ஆயுசு வரையில் கைவிட மாட்டேன். இதை உறுதியாக நம்பலாம் நீங்கள்...'' என்றேன்.

''அது எப்படியம்மா முடியும்? அவனைத் தான் கல்யாணம் செய்து கொள்ள முடியாது என்று சொல்லி விட்டாய். பிறகு வேறொருவனை மணந்து கொண்டு அவன் வீட்டில் போய்க் குடித்தனம் பண்ண வேண்டியவள் தானே நீ? அவனை அழைத்துப் போவாயா?'' என்றார் மாமா.

''ஆம், அப்படித்தான் எண்ணம். உங்கள் இருவருக்கும் பிற்காலம் அவனைப் பராமரிக்கும் பொறுப்பு என்னுடையது!'' என்றேன்.

மாமி, ''இதெல்லாம் நடக்காத காரியம்! உனக்கு மணமாகி விட்டால் உன் கணவனோ புக்ககத்தாரோ அவனை வைத்துக் கொள்ளச் சம்மதிப்பார்களா? மாட்டவே மாட்டார்கள்...'' என்றாள்.

''என்னால் சம்மதிக்க வைக்க முடியும், மாமி! அதற்குத் தைரியம் இருக்கிறது எனக்கு......''

''இதெல்லாம் என்ன பேச்சு! கண் துடைக்கும் பேச்சு! இந்த வார்த்தை ஜாலத்தில் எல்லாம் நாங்கள் ஏமாந்து விடுவோம் என்று நினைக்கிறாய்? உண்மையிலேயே அவன் மேல் உனக்குப் பிரியமிருந்தால் அவனை மணக்க ஏன் மறுக்க வேண்டும்? முன்புக்கு அவன் இப்பொழுது எவ்வளவோ தேவலை! நாளடைவில் எல்லாரையும் போல் அவன் ஆகிவிட மாட்டானா?'' என்றாள் மாமி.

பெற்ற மனம் இப்படித்தான் பேசும் என்பதை ஏனோ மறந்து நான் படபடப்புடன், ''மாமி! இது என்ன பேச்சு! நான் உங்கள் பெண்ணாயிருந்து சுப்புணி உங்கள் தாத்தனார்

மார்ச் மாதச் சிறுகதைப் போட்டி

1. மாதந்தோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் எழுத்தாளர்கள் எல்லோரும் கலந்து கொள்ளலாம்.

2. எழுத்தாளர்கள் சொந்தமாகவே கதைகள் புனைந்து அனுப்ப வேண்டும். கதைகள் கல்கியில் ஆறு பக்கத்திலிருந்து பத்து பக்கம் வரையில் வெளியிடக் கூடியதாக இருக்கலாம்.

3. ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதப் போட்டிக்கு வந்த கதைகளில் சிறந்ததற்கு நூறு ரூபாய் பரிசு வழங்கப்படும்.

4. மார்ச் மாதப் போட்டிக்கு மார்ச் 1-ந் தேதியிலிருந்து 31-ந் தேதி வரை கதைகள் எழுதியனுப்பலாம். மார்ச் மாதப் போட்டிக்கு வந்த கதைகள் ஏப்ரல் மாதம் முழுதும் பரிசீலனை செய்யப்படும். பரிசு பெற்ற கதை மே மாதத்தில் பிரசுரமாகும். அதேபோல் அந்தந்த மாதக் கதைகள் அடுத்த மாதத்தில் பரிசீலனை செய்யப்பட்டு, அதற்கடுத்த மாதத்தில் பிரசுரமாகும்.


5. கதைகளை நல்ல காகிதத்தில் இடைவிடுகள் விட்டு ஒரே பக்கத்தில் எழுத வேண்டும். காகிதத்தின் மறு பக்கத்தில் எழுதக் கூடாது.

6. தேர்ந்தெடுக்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் அவற்றுடனேயே போதிய தபால் பில்லைகள் வைத்து அனுப்ப வேண்டும். தபால் பில்லைகள் வைத்து அனுப்பாதவற்றைத் திருப்பியனுப்புவதற்கில்லை.

7. போட்டிக் கதை சம்பந்தமாக எந்தவிதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்வதற்கில்லை.

8. தேர்ந்தெடுத்த கதைகளைத் திருத்துவதற்கும் குறைத்து வெளியிடுவதற்கும் ஆசிரியருக்குப் பூரண உரிமை உண்டு.

—ஆசிரியர், கல்கி



சாம்பியன்
(ரெஜிஸ்டர்டு)
அனைவரும் விரும்புவது
குஜராத் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்



LICHENSA
படை சிரங்கு
(ECZEMA)
முதலிய சர்ம வியாதிகளுக்கு
லிச்சென்ஸா
உபயோகியுங்கள்
ஜெர்மனியில் தயாரிக்கப்பட்டது
எங்கும் கிடைக்கும்
சிலோன் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:
மகாராஜா டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் லிமிடெட்
54, பேங்க்ஷல் தெரு, கொழும்பு

பிள்ளையாகப் பிறந்திருந்தால் என்னை அவனுக்குக் கொடுப்பதற்குச் சம்மதிப்பீர்களா நீங்கள்? என்னைப் பார்த்துப் பதில் சொல்லுங்கள்!'' என்றேன். தாங்க முடியாத துக்கத்தில் எனது வார்த்தைகள் கொடூரமாக வந்து விழுந்தன.

''என்ன பிரமாதமாகச் சட்டக் கல்வியெல்லாம் பேசுகிறாய்? நீ இப்படிப்பட்ட துரோகியாய் நடந்து கொள்வாய் என்று நினைக்கவே இல்லை நான். அநாதையாக நடுத் தெருவில் நின்று திண்டாட வேண்டியவனை அழைத்துக் கொண்டு வந்து வீட்டில் வைத்து வளர்த்ததற்கு நல்ல பரிசு கிடைத்து விட்டது!''

மகனைப் பற்றிய துயரத்தில் அவள் தன்னை மறந்து பேசிய பேச்சு அது என்பதை உணரும் விவேகம் அந்தச் சமயத்தில் ஆத்திரம் மிகுந்திருந்த என் உள்ளத்திலிருந்து விடைபெற்றிருந்தது. எனவே அந்தச் சொல்லம்புகளைத் தாள முடியாமல் கொல்லைப்புறத்து அறையில் போய்ப் படுத்துக் கொண்டு அழுதேன்.

எவ்வளவு நேரம் அழுதேனோ, தெரியாது. ''வீணா! எதுக்கு வீணாக அழுறே? யார் என்ன செய்தா உன்னை?'' என்ற குரல் கேட்டு நிமிர்ந்தேன். கப்புணி பரிதவித்தவாறு என் எதிரில் வந்து நின்றான்.

அவனைக் கண்டதுமே வெறுப்புடன், ''எல்லாம் உன்னால் வந்ததுதான். முதலில் இங்கிருந்து தொலைந்துவிடு!'' என்று சீறினேன். கோபத்தில் நிலைதடுமாறிப் பெரிதாகக் கத்தி விட்டேன். கோபம் எவ்வளவு பொல்லாதது! அது எவ்வளவு பெரிய விபத்துக்கு அடிகோலி விட்டது என்பதைப் பின்னால் அல்லவா தெரிந்து கொள்ள முடிந்தது?

அவன் பரக்கப் பரக்க விழித்தான். கவலையுடன், ''என்னால் வந்ததா? நான் உன்னைத் திட்டினேனா? அடிச்சேனா? என்ன செய்தேன்?'' என்று கேட்டான். அவன் குரலிலே பரிவும் பாசமும் போட்டியிட்டன.

''நீ ஒன்றும் செய்ய வில்லை! இங்கிருந்து போ, முதலில்!''

''சரி, போய் விடுகிறேன். நீ அழாமல் இருக்கிறாயா சொல்லு! அழுகிறதை நிறுத்தி விட்டுக் கண்ணைத் துடைத்துக் கொள் முதலில்!'' என்று என்னைச் சமாதானப் படுத்தினான் கப்புணி.

''நீ போயேன், போய்த் தொலை! நான் அழுவதை நிறுத்த முடியாது. ஒன்று நான் சாகணும், அல்லது நீ சாகணும். அப்போது தான் என் அழுகை நிற்கும். எனக்கு விமோசனமும் அன்றுதான்!'' என்று வெறி பிடித்தவள் போல் கத்தினேன்.

சற்று நேரம் என்னை வெறித்துப் பார்த்துக் கொண்டே நின்ற அவன் மௌனமாக அவ்விடத்தை விட்டு அகன்றான்.

என் அழுகை மீண்டும் குமுறிக் கொண்டு தொடங்கியது.


அன்று என் உள்ளத்தில் குடிகொண்டிருந்த சோகத்தைப் போலவே அந்த அறை இருளில் மூடியிருந்தது. இரவு ஏழரை எட்டு மணியிருக்கும். அப்பொழுது பேரிடி போல் ஒரு செய்தி எங்கள் உள்ளத்தைக் கலக்கி விட்டது. பெருமாள் கோவில் குளத்தில் ஒரு பிரேதம் மிதந்ததாகவும், அதைக் கரையில் எடுத்துப் போட்டிருப்பதாகவும், அது கப்புணியின் உடல் போல் தோன்றுவதாகவும் கோவில் காவற்காரன் எங்கள் வீட்டுக்கு வந்து செய்தி தெரிவித்தான். எல்லோரும் அலறிக் கொண்டு குளத்தங்கரைக்கு ஓடினோம். அது கப்புணியின் சடலம்தான்.

மாமாவும் மாமியும் அழுததைவிட நான், ''ஐயோ, கப்புணி, கப்புணி!'' என்று அவன் சடலத்தின் மீது விழுந்து கதறிய கதறல்கள் திக்கு திகந்தங்களை யெல்லாம் பிளந்து கொண்டு எதிரொலித்தன.

குளத்தில் தவறி விழுந்து அகஸ்மாத்தாக ஏற்பட்ட மரணம் அது என்றுதான் எல்லாரும் அபிப்பிராயப்பட்டார்கள்.

உண்மை அதுவல்ல என்று எனக்கு மட்டும் தான் தெரியும். என்னுடைய சுடுசொற்கள் தான் அவனை விரட்டிக் கொண்டு போய்க் குளத்தில் தள்ளி விட்டன. இல்லை, அதுவும் உண்மையல்ல. என்னுடைய விமோசனத்துக்காக என் அருமைக் கப்புணி செய்து விட்ட மகா தியாகம் அது. என் கண்ணீர் நிற்பதற்காக அவன் கொடுத்துக் கொண்ட ஆத்ம பலி. அறியாமை இருள் சூழ்ந்ததாகிய அவன் மூளையில் ஒரு அன்புப் பொறி சுடர் விட்டுக் கொண்டிருந்தது என்று கூறினேன் அல்லவா? அந்தப் பொறி செய்து விட்ட வேலைதான் இது.

கப்புணி, என் அருமைக் கப்புணி! உன்னைப் போன்ற ஒரு அன்புக் களஞ்சியத்தை என்று காணப் போகிறேன் மீண்டும் நான்? எப் பிறவியில் அந்தப் பாக்கியம் கிட்டும்?



இருபத்தேழாம் அத்தியாயம்

சாமியாரின் சங்கடம்

தருமலிங்கத்தின் வீட்டுத் திண்ணையில் மாலை சுமார் ஆறு மணி வரையில் சீட்டுக்கச்சேரி சுவாரஸ்யமாக நடந்தது. அது வரையில் தருமலிங்கத்துக்குக் கந்தசாமியைப் பற்றிய நினைவே இல்லை. திண்ணையைவிட்டு எழுந்து உள்ளே சென்றதும், "அத்தான் எங்கே போயிருக்குது?" என்று முனியம்மாள் கேட்ட பிறகுதான் நீராடப் போன பேர்வழி இன்னும் திரும்பவில்லை என்று தெரிந்தது.

அவரது மனத்தில் திடீரென்று ஒரு பயங்கரமான சந்தேகம் தோன்றியது.

"முனியம்மா! அவனுக்கு நீச்சல் தெரியுமா?" அவரது கேள்வியின் தாத்பரியம் புரியாமல் அவள் விழித்துக் கொண்டிருக்கையிலேயே சுப்பையாப் பிள்ளை தருமலிங்கத்தைத் தேடிக்கொண்டு வந்தார்.

"தருமலிங்கம்! உங்க கந்தசாமி வந்துவிட்டானா?" என்று கேட்டார்.

"அவனைப் பற்றித்தான் நானும் நினைச்சுக்கிட்டேயிருக்கேன். நாம்ப சீட்டாடிக்கிட்டிருக்கப்போ குளிக்கப் போனான் பாரு, அவ்வளவுதான். இன்னும் காணோம்!"

"சரிதான்! சொடலைமுத்து சொன்னது சரிதான் போலிருக்குது!" என்று ஒரு குண்டைப் போட்டார் அவர்.

"சொடலை முத்துவா?.........என்ன சொன்னான்?"

கந்தசாமி குடியானவன் சொடலை முத்துவை மிரட்டியது முதல் அவனைச் சாமியார் வந்து தப்புவித்த வரையில் சுருங்கக் கூறினார் சுப்பையாப் பிள்ளை.

"குளிச்சுக்கிட்டே இருக்கையில் அந்தச் சாமியார் அவனுடைய போலீஸ் உடுப்பை மாட்டிக்கிட்டு ஓட்டம் பிடிச்சாராம். சொடலைமுத்து தூரத்திலிருந்து கவனிச்சுக்கிட்டிருந்தானாம்!"

"ஐயையோ, அப்புறம்?"

"அப்புறம் என்ன? இவன் கரையேறி வந்து பார்க்கிறதுக்குள்ளே அவன் ரொம்பத் தூரம் போயிட்டான். அவனைத் துரத்திக்கிட்டு உங்க ஆசாமி ஓடியிருக்கிறான். நான் சொல்கிறேன்னு கோவிச்சுக்காதிங்க, தருமலிங்கம்! நாட்டுப்புறத்துக்கு வரும்போது இவன் எதற்காகப் போலீஸ் உடையை மாட்டிக்கிடணும்! சேச்சே! சுத்த அசட்டுப் பிள்ளை!" என்று கூறிக் கொண்டே வெளியேறினார் அவர்.

தர்மலிங்கத்துக்குத் தலை இறக்கமாக இருந்தது. அந்த வயிற்றெரிச்சலைக் கேட்டு அழுவதா சிரிப்பதா என்று அவருக்குத் தோன்றவில்லை.

முனியம்மாளுக்கோ அத்தான் மீது அளவற்ற இரக்கம் ஏற்பட்டது. எப்படியும் அத்தான் அந்தச் சாமியாரை உதைத்து உடுப்பைப் பிடுங்கிக்கொண்டு வெற்றியோடு வந்து விடுவார் என்று நம்பினாள் அவள். ஆனால் காலையிலும் கூட அவன் வராமற் போகவே அவளுக்குக் கவலை பிடித்துக் கொண்டது.

"அத்தானைக் காணுமே அப்பா, நீங்களாவது போய் அவரைத் தேடிப் பார்க்கக் கூடாதா?"

"உங்க அத்தான் என்ன சின்னக் குழந்தையா? எல்லாம் தானே வருவான். தொந்தரவு பண்ணாதே. எனக்கு அவசரமாக வேலூருக்குப் போகணும்!" என்றார் அவர்.

தருமலிங்கத்துக்கு நிலங்கள் சம்பந்தமாக வேலூர் கோர்ட்டில் ஒரு வழக்கு இருந்தது. ஒரு மணிக்கெல்லாம் போனால்தான் பஸ்ஸைப் பிடித்து ஒன்பது மணி சுமாருக்கு வேலூரை அடைய முடியும்.

சலவை செய்து வைத்திருந்த சட்டையையும் கட்டம் போட்ட சிவப்பு நிற லுங்கி போன்ற வேட்டியையும் பட்டு வெள்ளை அங்கவஸ்திரத்தை

யும் தரித்துக் கொண்டு வேலூருக்குத் தருமலிங்கம் புறப்பட்டு விட்டார்.

* * *

மோட்டார் காரின் பின்புறத்தில் ஒளிந்துகொண்ட கந்தசாமியினால் அதிக நேரம் கதவை மூடி வைத்திருக்க முடியவில்லை. மூச்சுத் திணற ஆரம்பித்தது. இலேசாகத் திறந்து கொண்டான். முதலில் வளைத்து வளைத்துச் செலுத்தப்பட்ட வண்டி வெகு சீக்கிரத்திலேயே அந்தத் தோட்டத்தை விட்டு வெளிப்பட்டு நேரான சாலையில் கனவேகமாகச் செல்ல ஆரம்பித்தது.

ஆனால் அது யாருடைய வண்டி, எங்கே செல்லுகிறது என்று அவனுக்குப் புரியவில்லை. நேரம் ஆகஆக முன் பின் யோசியாமல் அதில் ஏறிக்கொண்ட தனது முட்டாள்தனத்தை அவன் நொந்து கொண்டான். எங்கு போய் நிற்குமோ, என்ன ஆபத்து நேரிடுமோ என்று பொறியில் அகப்பட்ட எலியைப் போல் அவன் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தான்.

ஒருகால் அந்த 'எசமானர்' என்பவரின் காராக இருக்கலாம். அப்படியானால் இதில் செல்வதின் மூலம் அந்த ஆசாமியின் இருப்பிடத்தைத் தெரிந்து கொள்ள முடியும். அதைக் கொண்டு இந்த முந்திரித் தோப்புக் கட்டடத்தின் மர்மத்தையும் கண்டுபிடிப்பதற்கு மார்க்கம் ஏற்படலாம்!

அடுத்த கணமே அவனது அந்தராத்மா சிரித்தது. 'இது என்ன மனக் கோட்டை! சாயபுரம் ஸ்டேஷனில் மாட்டிக் கொண்டு பட்டதெல்லாம் போதாதா? ராமசாமி அண்ணன் என்ன சொன்னான்? 'உன்னுடைய எல்லையை விட்டு வேறொரு எல்லையில் அநாவசியமாகக் கேஸைப் பிடிக்கிறேன், இன்னொன்றைப் பண்ணுகிறேன் என்று போகாதே!' என்று அவன் புத்திமதி சொல்லவில்லையா? நமக்கும் கேஸுக்கும் ரொம்ப தூரம். உடுப்பு போனால் போகிறது என்று பேசாமல் இறங்கி விட வேண்டியதுதான்' என்று கூறியது அவனுடைய உள்ளுணர்வு.

'ஆனால் எப்படி இறங்க முடியும்? ஓடுகிற வண்டியிலிருந்து குதித்தால் எலும்புகள் நொறுங்கி விடாதா!'

சுமார் ஒரு மணி நேரம் ஓடிய பிறகு மோட்டார் தட்டென்று நின்றது.

''கனகசுந்தரம்! அந்த டின்னிலிருக்கும் தண்ணீரை எடு. 'ரேடிபேட்டர்' சூடாகி விட்டது'' என்றான் மோட்டாரைச் செலுத்தி வந்தவன். முன்புறக் கதவு திறந்து மூடப்படும் ஓசை தெளிவாகக் கேட்டது.

பாதையில் வெளிச்சமேயில்லை. மங்கிய பிறை மதியும் மேகத் திரையில் பதுங்கிக் கிடந்தது. சாலையிலும் ஜன சந்தடியில்லை. கந்தசாமி ஓசைப்படாமல் கதவைத் திறந்து கொண்டு மெதுவாகக் கீழே இறங்கி வண்டிக்குப் பின்னால் ரோட்டிலேயே முடக்கிக் கொண்டு உட்கார்ந்தான்.

இரண்டே நிமிஷங்களுக்குப் பின் வண்டி மீண்டும் புறப்பட்ட பிறகுதான் அவனுக்குச் சரியாக மூச்சு வந்தது.

எங்கே இருக்கிறோம், அந்தப் பாதை எங்கே போகிறது என்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருக்கையிலேயே சாலையோரத்தில் புதிதாகச் சுண்ணாம்பு தீட்டப்பட்டுக் கம்பீரமாக நின்ற மைல் கல் அவனது திருஷ்டியில் பட்டது. தீக்குச்சியைக் கிழித்துப் பார்த்தான். 'வேலூர் இரண்டு மைல்' என்றிருந்ததைக் கண்டதும் மனத்துக்கு நிம்மதி ஏற்பட்டது. எங்கேயாவது நடுக் காட்டில் இறங்காமல் வேலூருக்கு அருகில் இறங்கியதும் அதிர்ஷ்டம்தான் என்று ஆறுதல் அடைந்தான்.

இரவு முழுதும் உணவோ, உறக்கமோ இல்லாமையால் மிகவும் களைப்பாக இருந்தது. இன்னும் பொழுது புலர வெகுநேரம் இருந்தது. 'பேசாமல் சாலையோரத்திலேயே படுத்து உறங்கி விட்டுக் காலையில் எழுந்து சட்டைப் பையில் இருந்த சில்லறைக்கு வயிற்றை நிரப்பிக் கொண்டு டிக்கட்டில்லாமலேயே பட்டணத்துக்கு வண்டியேற வேண்டியது தான்' என்று தீர்மானித்துக் கொண்டான் கந்தசாமி. 'சாமியார்களுக்கு



டிக்கட் எதற்கு?' என்று முடிவுக்கு வந்த வனாய் ஓரத்திலிருந்த மரத்தடியில் துண்டை விரித்துப் படுத்தான்.

உடல் என்னவோ களைத்திருந்தது. ஆனால் பசியின் காரணமாக நிம்மதி யாக நித்திரை வரவில்லை. கண்களை மூடுவதும் திறப்பதும்; ஐந்து நிமிஷம் தூங்குவதும் பிறகு விழித்துக் கொள் வதுமாகப் படுத்திருந்தான்.

சுமார் இரண்டு மணி நேரம் கழிந் திருக்கும். சேவல் கூவியது. கிழ்த்திசை யில் பொழுது விடிவதற்கான அறி குறிகள் தோன்றத் தொடங்கின. உடனே எழுந்திருக்கலாமா அல்லது இன்னும் கொஞ்சம் வெளிச்சமாகட் டுமா என்று இலேசாக இமைகளை மூடிய வண்ணம் யோசித்துக் கொண்டிருந்த கந்தசாமி தலைமாட்டில் ஏதோ சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

ஒரு கூலிக்காரன் பெரிய டிரங்குப் பெட்டி யொன்றை அவனது தலைமாட் டுக்கு அருகில் இறக்கி வைத்து விட்டு வெகு வேகமாகத் திரும்பிப் போய்க் கொண்டிருந்தான்.

கந்தசாமி எழுந்து உட்கார்ந்து தலை யில் அவசரமாகத் துணியை முண்டா சாகக் கட்டிக் கொண்டு தாடியையும் சரிப்படுத்திக் கொண்டான்.

''ஏய்! இந்தாப்பா, பெட்டியை வைத்துவிட்டு எங்கே போறே?''

அவன் திரும்பிப் பார்த்தான். ''பையைக் கொண்டு வர மறந்து விட் டேனுங்க சாமி! பஸ் ஸ்டாண்டுக்குப் போகணும். நீங்கதான் கொஞ்சம் பார்த்துக்குங்க. இதோ பையை எடுத் துக்கிட்டு ஓடி வந்து விடுகிறேன். இதோ அஞ்சே நிமிஷம்'' என்று சொல்லிவிட்டு ஓடினான் அவன்.

அவன் 'சாமி சாமி' என்று கூப் பிட்டது கந்தசாமிக்குச் சந்தோஷத்தை யளித்தது. ''நல்ல தமாஷ்! இந்த வேஷத்துக்குக்கூட நல்ல மதிப்புத் தான்'' என்று எண்ணித் தனக்குள் சிரித்துக் கொண்டான் கந்தசாமி.

ஐந்து நிமிஷத்தில் வருகிறேன் என்று போனவன் அரைமணியாகியும் வர வில்லை. பொழுது புலர்ந்து விட்டது. சாலையில் கொஞ்சம் கொஞ்சமாக ஜனசஞ்சாரம் ஏற்பட்டது. பஸ்கள் 'பூம் பூம்' என்று ஊதிய வண்ணம் புழுதியை வாரி இறைத்துக் கொண்டு வேகமாக ஓடின.

கந்தசாமி அருகிலிருந்த வேப்பமரத்தி லிருந்து குச்சி ஒடித்துப் பல் துலக்கிய வண்ணம் கூலிக்காரனை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தான்.

கிழ் வானத்தில் உதயமான சூரியன் திறு திறுவென்று மேலெழும்பி உலகத் தைத் தனது ஒளிப் பிரவாகத்தில் மூழ் கடிக்கத் தலைப்பட்டான். மணி ஏழுக்கு மேலிருக்கும். ஜனசந்தடி அதிகமாகி விட்டது. கந்தசாமிக்குப் பசி பொறுக்க வில்லை. 'பெட்டியைப் பற்றி நமக்கேன் கவலை? பேசாமல் எழுந்து போய் விட லாம்' என்று நினைத்தான். இன்னும் அரை மணி நேரம் பார்ப்பது, அவன் வந்துசேராவிடில் அப்படித்தான் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்துடன் அந்தக் கூலிக்காரனைச் சபித்த வண்ணம் பெட்டியின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

வழியே போகிறவர்கள் சாமியாரை யும் பெட்டியையும் மாறி மாறிப் பார்த்



துக் கொண்டே சென்றனர். ஒருவன் குறும்பாக ''சூட் கேஸ் சாமியார் டோய்!'' என்றான் கந்தசாமிக்குத் தருமசங்கடமாக இருந்தது. மேலும் ஒரு மணி நேரம் கழிந்தும் அவன் வராமையால் பொறுமையை இழந் தான். ஆனால் பெட்டியை அநாதரவாக அங்கே விட்டு விட்டுப் போக அவன் மனம் இடந் தரவில்லை. வழியில் அந்தத் துர்ப்பாக்கியசாலிக்கு என்ன அசந்தர்ப் பம் நேரிட்டு விட்டதோ? இல்லாவிடில் இவ்வளவு நேரம் பெட்டியை இங்கே விட்டு விட்டு வராமலா இருப்பான்? பேசாமல் இதைப் போலீஸ் ஸ்டேஷனில் கொண்டு போய் ஒப்படைத்து விட வேண்டியதுதான் சரியான முறை என்று கூறியது அவனது போலீஸ் உள்ளம்.

பெட்டியைத் தூக்கிப் பார்த்தான். ஒரே கனமாகக் கனத்தது. வழிப்போக்கன் ஒருவனை உதவிக்கு அழைத்தான்.

அவன் ''என்ன சாமி, இப்படிக் கனக்குதே! இதுக்குள்ளே என்ன வைச்சிருக்கே!'' என்று கேட்டுக் கொண்டே அதைக் கந்தசாமியின் தலையில் தூக்கி வைத்து விட்டான்.

பாரம் ஒரேயடியாகத் தலையை அழுத்தியது. கந்தசாமியார் தள்ளாடித் தள்ளாடி மெதுவாக வேலூரை நோக்கி நடந்து கொண்டிருந்தார்.

அவன் வேலூரை நெருங்கிய போது மணி கிட்டத்தட்ட பத்து இருக்கும். வீதியோரத்திலிருந்த டீக் கடையைக் கண்டதும் அவன் மனம் ஏங்கியது. முதலில் நாஸ்தாவை முடித்துக் கொண்டால் கொஞ்சம் உடம்பில் தெம்பு ஏற்படும் என்று தோன்றியது.



பெட்டியை, டீக்கடையினுள் கொண்டு போய் இறக்கி வைத்தான். அங்கிருந்தவர்கள் அனைவரும் இந்த விநோதச் சாமியாரை வேடிக்கை பார்த்தார்கள்.

கந்தசாமி பலகாரத்தைத் தின்று கொண்டே யோசித்தான். பெட்டியின் தோற்றத்திலிருந்து அது அந்தக் கூலிக்காரனுடையதாக இருக்க முடியாது என்று தோன்றியது. அவன் பஸ் ஸ்டாண்டுக்குப் போக வேண்டுமென்றான். பெட்டியின் சொந்தக்காரர்கள் பஸ் ஸ்டாண்டில் இருக்கலாம். ஒருகால் இந்தக் கூலிக்காரன் அவன் புறப்பட்ட பிறகு அந்த மரத்தடியில் வந்து தேடி விட்டுப் போயிருந்தால்? எதற்கும் முதலில் பஸ் ஸ்டாண்டுக்குப் போய்ப் பார்த்து விட்டு, பிறகு போலீஸுக்குப் போவது நல்லது. அப்படிச் செய்வதற்கு இந்தப் பளுவை வேறு தலைமேல் தூக்கிக் கொண்டு ஏன் திரிய வேண்டும்? இதை இங்கேயே வைத்து விட்டுப் போனால் தான் நல்லது என்று நினைத்தான்.

நாஸ்தா முடிந்ததும் கந்தசாமி டீக் கடைமுதலாளியிடம் காசைக்கொடுத்து விட்டு, ''இதோ பாருங்க, இந்தப் பெட்டி இங்கேயே இருக்கட்டும். நான் இதோ அஞ்சு நிமிஷத்திலே வந்து எடுத்துக்கிட்டுப் போறேன்!'' என்றான்.

முதலாளி ஒரு முறை அவனை ஏற இறங்கப் பார்த்தார்.

''இதோ இப்பவே வந்துடுவேனுங்க'' என்றான் கந்தசாமி மறுபடியும்.

''சீக்கிரம் வந்துடுங்க சாமி! காலம் கெட்டுக் கிடக்குது; இதுக்குள்ளே கஞ்சா, அபினி ஏதாவது இருந்துவிட்டுக் கடையிலே நான் போலீசிலே மாட்டிக்கிட்டுத் தவிக்கும்படியாக ஆயிடப் போகுதுங்க'' என்றார் முதலாளி.

கந்தசாமி ஒரு அசட்டுச் சிரிப்புடன் பஸ் ஸ்டாண்டுக்குப் போகும் வழியை விசாரித்துக் கொண்டு புறப்பட்டான். அவனது மனத்தில் ஒரு புதிய பயம் புகுந்து கொண்டது. 'இந்தப் பெட்டிக்குள் என்னதான் இருக்கிறது? ஏன் இப்படிக் கனக்கிறது? டீக்கடைக்காரன் கூறியதுபோல 'அபினி' ஏதாவது இருக்குமோ! இத்தனை ஆபத்துக்கள் வந்தது போதாதென்று, இதன் மூலமாக ஏதாவது தொல்லை வந்து சேராதிருக்க வேண்டுமே?' என்று யோசித்த வண்ணம் அவன்விரைவாக நடந்தான்.

பஸ் ஸ்டாண்டில் ஜனத்திரள் நிறைந்திருந்தது. வெளியூர் பஸ்கள் சில புறப்பட்டுக் கொண்டிருந்தன. பஸ்ஸில் இடம் கிடைக்காமல் நின்றிருப்பவர்களும் இனிமேல் வரப் போகும் பஸ்ஸுக்காகக் காத்துக் கிடப்பவர்களுமாக அந்த இடம் கலகலப்பாக இருந்தது. எங்கு தேடியும் அந்தக் கூலிக்காரனை அங்கு காணவில்லை. அங்கங்கே சிறு சிறு கும்பல்களாக நின்று பேசிக் கொண்டிருந்தவர்களருகே சென்று கவனித்துப் பார்த்தான். ஆனால் பெட்டி விஷயமாக ஒருவரும் பேசிக் கொள்ளவில்லை. சிறிது நேரம் நின்று யோசித்தான். மேற்கொண்டு எந்தத் தகராறிலும் ஈடுபடாமல் பெட்டியை டீக்கடையிலேயே கிடக்கட்டுமென்று விட்டு விட்டு ஊருக்குத் திரும்பி விடுவதுதான் உசிதம் என்று பட்டது அவனுக்கு. சென்னைக்கு வண்டி

எப்போது புறப்படுகிறது" என்று விசாரித்தான். காலை பத்தேமுக்காலுக்கு ஒன்று, இரவு ஒன்பது மணிக்கு ஒன்று என்று தெரிய வந்தது.

அப்போது கிட்டத்தட்ட பன்னிரண்டு மணியாகி விட்டது. இரவு ஏழு மணி சுமாருக்கு ரயில்வே ஸ்டேஷனை அடைந்தால் போதுமானது. அதுவரையில் என்ன செய்வதென்று தோன்றாமல் அவன் சாவகாசமாகக் கடை வீதிகளைச் சுற்றி வந்தான்.

பகல் மூன்று மணி சுமாருக்குப் பையில் மிச்சமிருந்த சில்லறையில் ஒரு அணாவுக்கு வெற்றிலை பாக்கு வாங்கினான். கடைக்காரன் ஒரு மாதிரியாக அவனைக் கூர்ந்து கவனித்து விட்டு, ''சாமிக்கு எந்த ஊருங்க?'' என்று கேட்டான்.

''எல்லா ஊரும் நம்ம ஊருதானே!'' என்று வேஷத்துக்குப் பொருத்தமாகப் பதிலளித்தான் கந்தசாமி.

கடைக்காரன் சிரித்துக் கொண்டே, ''அதுக்கில்லைங்க சாமி, உங்களைப் பார்த்தால் ரொம்ப சாதுவாகத் தோணுது. ஜாக்கிரதையாக இருங்க. போலீஸ்காரனுங்க ஏதோ கொலை வழக்கு விஷயமா சந்தேகத்தின் பேரிலே பஸ் ஸ்டாண்டில் நின்னுக்கிட்டிருந்த நாலைஞ்சு சாமியார்களை அரஸ்ட்டு பண்ணினாங்களாம்!'' என்றான்.

கந்தசாமிக்கு அடிவயிற்றைக் கலக்கியது. ''கொலை வழக்கா? சிவசிவா ... சாமியாருங்களா கொலை பண்ணிட்டாங்க? என்ன விவரமுங்க அது?''

''இன்னும் சரியா விவரம் தெரியலைங்க. ஆரணி ரோட்டிலே ஏதோ நடந்திருக்குதுன்னு சொல்லிக்கிறாங்க. சாயந்திரம் பேப்பர்லே பார்த்தால் தெரியும்! ஜாக்கிரதையாக இருங்க!''

''ஆண்டவன் இருக்கானுங்க! மடியிலே கனமிருந்தாலல்ல வழியிலே பயம்!'' என்று கூறிக் கொண்டே அங்கிருந்து நகர்ந்தார் கந்தசாமியார்.

என்ன அக்கிரமம்! இந்தச் சாமியார் வேஷக்காரங்க எல்லோருமே இப்படித் தானா? அப்படியானால் சந்தேகத்தின் பேரில் அவனை யாராவது 'அரஸ்ட்டு' பண்ணி விட்டால்? அவன் உண்மையான சாமியாரில்லை என்பதை அந்தப் பொய்த் தாடி ஒன்றே நிரூபித்து விடுமே! ஏன் இந்த வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறாய் என்று கேட்டால் எப்படி உண்மையைச் சொல்வது? உண்மையைச் சொல்லாதிருந்தால் உடனே சந்தேகம் பலப்பட்டு விடும். எல்லாம் பொல்லாத காலமாக அல்லவா இருக்கிறது! வேஷத்தை மாற்றி விடலாமென்றால் வேறு துணி கிடையாது. நேராக இப்பொழுதே ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகவும் கூடாது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அங்கு போலீஸார் அதிகக்கண்ணோட்டம் வைத்திருப்பார்கள் என்று போலீஸ்காரனான அவன் நன்கு அறிவான். தெருக்களில் திரிவதும் ஆபத்து. சத்திரம் சாவடிகளில் போய்த் தங்குவதும் உசிதமல்ல. வேறு எங்கேயாவது பந்தோபஸ்தான இடத்தில் தங்கி விட்டு இருட்டிய பிறகு ரயில்வே ஸ்டேஷனுக்குப் போவதுதான் நல்லது என்று தோன்றியது.

இவ்வித சிந்தனையால் அலைக்கப்பட்டவனாகை ஜனசந்தடியுள்ள அந்தப் பெரிய வீதியில் நடமாடப் பயந்து ஒரு சிறிய சந்தில் திரும்பி நடந்தான். பத்துப் பதினைந்து அடி வைத்திருப்பான். மறு கோடியில் பூட்ஸ் ஒலி கேட்டது.

''அதோ! அந்தச் சாமியார்தான்!''

கந்தசாமி நிமிர்ந்து பார்த்தான்...... எதிரே ஒரு போலீஸ்காரனும், காலையில் தான் பெட்டியை வைத்து விட்டு வந்த டீக்கடை ஆசாமியும் அவனை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்தனர்.

இருபத்தெட்டாம் அத்தியாயம்

பயங்கரச் செய்தி

கந்தசாமிக்கு யோசிக்க நேரமில்லை. திரும்பி ஓடினால் வீதியிலுள்ளவர்களே பிடித்து அமுக்கி விடுவார்கள். வலப் புறம் ஒரு குறுக்குச் சந்து காணப் பட்டது. சடக்கென்று அதில் புகுந்து விரைவாக ஓடினான். மீண்டும் இடப்பக்கத்துச் சந்தொன்றில் நுழைந்தான். இது போல் சிறியதும் பெரியதுமாக எதிர்ப் பட்ட இரண்டு குறுக்குத் தெருக்களில் புகுந்து விடுவிடென்று நடந்து சற்றே விசாலமானதும் ஜன சந்தடி குறைவானதுமான வீதியை அடைந்தான். அதன் வலது சாரியில் பெரிய பெரிய மரங்கள் இருந்தன. இடது பக்கத்தில் காலி மனைகள். அவற்றின் இடையே ஒரே ஒரு சிறிய மாடி வீடு. அந்த வீட்டின் கதவு பூட்டப்பட்டிருந்ததைக் கவனித்தான். கந்தசாமி சட்டென்று அவ்வீட்டின் காம்பவுண்டுக்குள் நுழைந்து ஓரமாக ஒளிந்து கொண்டான்.

போலீஸ்காரன் அவனைத் தொடர்ந்து வந்ததாகத் தெரியவில்லை. எவனோ ஒரு



வயோதிகன் மட்டும் தலை குனிந்தவண்ணம் வந்து கொண்டிருந்தான். இடது காலைச் சிறிது நொண்டிக் கொண்டு வலது கையை வீசி வீசி நடந்த அந்த ஆசாமியைக் கந்தசாமி ஊன்றிக் கவனித்தான். அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவன் அந்த வீட்டைத் தாண்டிச் செல்லுவதற்குள் அவரை மெதுவாகக் கூப்பிட்டான்: ''மாமா!''

கோர்ட்டு வேலை முடிந்து பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்து கொண்டிருந்த தருமலிங்கம் அக்குரலைக் கேட்டவுடன் திரும்பினார். காம்பவுண்டுக்கருகில் ஒரு பரதேசி நின்றுகொண்டு தம்மைக் கையினால் சைகை காட்டி அழைப்பதைக் கண்டு, ''என்ன சாமி? என்ன வேண்டும்?'' என்றார்.

''நான் சாமியாரில்லை மாமா! நான் தான் கந்தசாமி'' என்றான்.

தமது மருமகனைத் தெரிந்துகொள்ள அவருக்கு அதிக நேரம் ஆகவில்லை. அவனை அந்தக் கோலத்தில் காண அவருக்கு ஒரே திகைப்பாக இருந்தது.

''இது என்ன கந்தசாமி! இங்கே என்ன பண்ணறே! உன் உடுப்பை யாரோ?......''

கந்தசாமி அவரை எச்சரிக்கை செய்தான். ''சும்மா அங்கே பேசிக்கிட்டு நிக்காதீங்க. கொஞ்சம் இங்கே என் பக்கத்திலே வாங்க'' என்றான்.

அவர் உள்ளே நுழைந்தார். கந்தசாமி தணிவான குரலில் அவசரமாகப் பேசினான்.

''மாமா, இங்கே ஒரு பெரிய கேஸ்! இதோ எதிர்பங்களாவைச் சாமியார் வேஷத்திலே துப்பறிஞ்சுக் கிட்டிருக்கேன். அவர்களுக்குத் தெரிஞ்சு போச்சு. வேறே வேஷம் மாத்திக்கணும்....... கொஞ்சம் உங்க வேஷ்டியையும் துண்டையும் அவிழ்த்துக் கொடுத்துவிட்டு இந்த உடையை மாத்திக்குங்க...''

''என்ன பேசறே, கந்தசாமி! நான் வேறே ஏதோ கேள்விப்பட்டேன்...''

''எல்லாம் இப்போது பேச நேரமில்லை. காலையிலே ஊருக்கு வந்து சொல்லுகிறேன். கேஸைப் பாதிக்கு மேல் கண்டு பிடிச்சுட்டேன், இன்னும் ஒரே ஒரு தடயம்தான் பாக்கி மாமா! கொஞ்சம் ஒத்தாசை பண்ணுங்க. உம் சீக்கிரம், சீக்கிரம்!'' என்று கெஞ்சித் துரிதப்படுத்தினான். இருவரும் உடைகளை மாற்றிக் கொண்டார்கள்.

''இந்தக் காவியை மாட்டிக்கிட்டு ஊருக்குப் போனால் சிரிப்பாங்களே!''

''நீங்க ஊருக்குப் போகிறபோது பாதி ராத்திரியாயிடும். யாரும் பார்க்க மாட்டார்கள்'' என்றான் கநதசாமி.

சாமியார் கோலத்துடன் தருமலிங்கம் தலைவிதியே என்று சுவர் மறைவிலிருந்து வெளியே வந்ததுதான் தாமதம், தன்னை ஏமாற்றிவிட்டு வந்த கந்தசாமியாரைத் தேடிக் கொண்டு வந்த போலீஸ்காரர் அவரை 'லபக்' என்று பாய்ந்து பிடித்துக்கொண்டார்.

''திருட்டுச்சாமி குடுகுடுன்னு ஓடி வந்து இங்கேயா பதுங்கிக்கிட்டிருந்தே! நட ஸ்டேஷனுக்கு'' என்று இழுத்தான்.

போலீஸ்காரரோடு இருந்த டீக்கடைக்காரன், ''சாமிக்குத் தாடியைக் காணோமே!'' என்றான்.

உதறலோடு உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருந்த கந்தசாமி தாடியை அவிழ்த்துக் கொடுக்க மறந்து போனதை அப்போதுதான் உணர்ந்து கொண்டான்.



''உண்மையான தாடியானால் அப்படியே இருக்கும்! பொய்த்தாடி. ஓடுகிறபோது, கழண்டு விழுந்திருக்கும்......... நடவுங்க ஸ்டேஷனுக்கு.''

தருமலிங்கத்துக்குக் கந்தசாமியின் மீது அசாத்தியமான கோபம் வந்தது. 'எனக்கு ஒன்றும் தெரியாது, அந்த அயோக்கியப் பயல் இங்கே ஒளிந்திருக்கிறான்!' என்று

காட்டிக் கொடுத்துவிட வேண்டுமென்று கூட நினைத்தார். ''போலீஸ்காரரையா! விஷயத்தைக் கேளுங்க!'' என்று அவர் ஏதோ சொல்ல ஆரம்பித்தார்.

போலீஸ்காரர், அவரைப் பேசவே விடவில்லை. ''அடசி! பேசினால் மண்டை மேலே போடுவேன். உன் பஞ்சாயத்தெல்லாம் ஸ்டேஷனிலே வந்து வைச்சுக்கோ!'' என்று கழுத்தில் கையைக் கொடுத்துப் பலவந்தமாகத் தள்ளிக் கொண்டு போய் விட்டார்.

* * *

சுந்தசாமி சென்னையைவிட்டுப் புறப்படும் போது முத்தம்மாளிடம் ஒரு செய்தி சொல்லி விட்டுப் போனான்.

''அக்கா! காளிங்கராயன் தெருவு பதினாலாம் நம்பர் வீட்டிலே கண்ணம்மான்னு ஒருத்தி இருக்காங்க. ரொம்பத் தங்கமானவங்க. அவங்க புருஷர் முத்துப்பிள்ளை பெரிய உத்தியோகத்தில் இருந்தவர். சொந்த வீடு. நல்ல பணக்காரங்க. அவுங்க பணத்தைத்தான் இந்தத் தங்கவேலு திருடி விட்டான். விசாரணைக்குப் போனபோதுதான் நான் அவர்களைப் பார்த்தேன். உன்னைப் பற்றி அந்த அம்மா முன்னேயே கேள்விப்பட்டிருக்காங்களாம். உன்னைப் பார்க்கணும்னு துடிச்சுக்கிட்டிருக்காங்க. ஒரு நாளைக்கு நீ போய் அவங்களைப் பார்த்துட்டு வா'' என்றான்.

தன்னைப் பற்றி முன்னேயே கேள்விப்பட்டுத் தன்னைக் காணத் துடிக்கும் கண்ணம்மாளைப் பார்க்க வேண்டும் என்று முத்தம்மாளுக்கும் ஆவல் எழுந்தது.

முத்தம்மாள் காளிங்கராயன் தெருவில் அவ் வீட்டின் எதிரே நின்றுகொண்டு பதினாலாம் நம்பர் அதுதானா அல்லது பக்கத்து வீடோ என்று கவனித்துக் கொண்டிருந்தாள்.

முன்பக்கத்துத் தோட்டத்தில் புஷ்பச் செடிகளுக்குத் தண்ணீர் விட்டுக்கொண்டிருந்த சிங்காரி, தன்னெதிரே பட்டுச் சேலை உடுத்திய யாரோ ஒரு அம்மாள் நின்று உற்றுக் கவனிப்பதைக் கண்டு நிமிர்ந்து பார்த்தாள். மூத்தம்மாளை அவள் ஏற்கனவே ஆஸ்பத்திரியில் பார்த்திருந்தமையால் அப்போது பார்த்தவுடனே நன்றாக அடையாளம் புரிந்து விட்டது.

''வாங்க, வாங்க! உள்ளே வாங்க!'' என்று முகமலர்ச்சியுடன் ஓடிப் போய்த் தோட்டத்துக் கதவைத் திறந்தாள்.

வீட்டருகில் பார்த்ததும் பாராததுமாகக் கிடைத்த குதூகல வரவேற்பைக் கண்டு முத்தம்மாளின் உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பி விட்டது.

''கண்ணம்மா இந்த வீட்டிலேதானே இருக்காங்க?'' என்று அவள் வாக்கியத்தை முடிப்பதற்குமுன் சிங்காரி, ''ஆமாம். உள்ளே வாங்க. என் சின்னம்மாதான் அவங்க'' என்று அவளை அழைத்துக் கொண்டு உள்ளே ஓடினான்.


''சின்னம்மா! உங்களைத் தேடிக்கிட்டு யார் வந்திருக்காங்க பார்!'' சிங்காரி முத்தம்மாளை அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

''ஓஹோ, நீங்களா! வாங்க வாங்க. உட்காருங்க, எத்தனையோ நாட்களாகப் பார்க்கணும்னு இருந்தேன். ஏன் சிங்காரி, நிக்கறியே!'' என்றாள். சிங்காரி விஷயத்தைப் புரிந்து கொண்டவள் போல்சமையலறையைநோக்கிஓடினாள்.

சிங்காரி கொண்டு வந்த காப்பியைக் குடித்து விட்டுக் கண்ணம்மாளும் முத்தம்மாளும் வெற்றிலைப் பெட்டியைக் காலி செய்து கொண்டே சம்பாஷணையைத் தொடங்கினர்.

இதே சமயம் வீதியில் பத்திரிகைக் காரச் சிறுவன், ''சென்னை கான்ஸ்டபிள் கோரக் கொலை! தினப் பத்திரிகை ஓரணா!'' என்று உரக்கக் கூவிக் கொண்டே சென்றான்.

முத்தம்மாள் திடுக்கிட்டாள். அறையில் உட்கார்ந்து தமது பழைய





முதல் காக்கை: எனக்கு ரொம்ப அலுப்பா இருக்கு. நம்பர் இரண்டு, குண்டப்பையர் தெருவுக்குப் போய் நீ சுத்திகிட்டு வந்து விடு. அவர்கள் வீட்டுக்கு நாளைக்கு விருந்தாளி யாரோ வரப் போகிறாங்க!

இரண்டாவது காக்கை: ஐயையோ! நான் போகமாட்டேன். அந்த வீட்டுக் காரர் 'காக்காய் பிடிக்கிறவர்'ன்னு ஊரெல்லாம் பேசிக்கறு!

கவிதைப் புத்தகங்களில் ஒட்டிக் கொண்டிருந்த கரையானைத் தட்டிக் கொண்டிருந்தார் முத்துப் புலவர். பையனின் சத்தத்தைக் கேட்டு அவர் வெளியே எழுந்து ஓடிப் போய் ஒரு தினப் பத்திரிகையை வாங்கிக் கொண்டு வந்தார். பிறகு "சிங்காரி! ஒரணா வாங்கிக் கொண்டு போய்க் கொடு" என்றார்.

"என்ன போட்டிருக்குதுங்க பேப்பர்லே?" என்றாள் முத்தம்மாள்.

பேப்பரைப் பிரித்து மௌனமாகப் படிக்கத் தொடங்கிய புலவரின் முகம் வெளிறியது. மனத்தில் எழுந்த பீதியினால்பேசமாட்டாமல் ஏதோ உளறினார். முத்தம்மாளின் ஆவல் அதிகரித்தது.

"என்ன சிங்காரி, அது! நீதான் படித்துப் பாரேன்" என்றாள் கண்ணம்மாள். சிங்காரி பத்திரிகையை வாங்கி அதில் கொட்டை எழுத்தில் பிரசுரிக்கப் பட்டிருந்த செய்தியைப் படித்தாள்.

"வேலூரில் கோரக் கொலை. சென்னை கான்ஸ்டபிள் கொலையுண்டார்.

"இன்று காலை வேலூர் ஆரணி ரோட்டிலுள்ள மடைப்பில் அடையாளம் தெரியாத சாமியார் ஒருவர் விட்டுச் சென்ற பெரிய டிரங்குப் பெட்டியில் ஒரு போலீஸ்காரனின் பிரேதம் காணப் பட்டது. பெட்டியை வைத்து விட்டு ஐந்து நிமிடத்தில் வருவதாகச் சொல்லிச் சென்ற சாமியார் வெகு நேரம் வரையில் வராமற் போகவே மேற்படி பெட்டி போலீஸாரிடம் ஒப்படைக்கப் பட்டது. சந்தேகத்தின் பேரில் போலீஸார் பெட்டியைத் திறந்து பார்த்ததில் அதில் கழுத்தை நெரித்துக் கொலை செய்யப்பட்ட கான்ஸ்டபிளின் சடலம் கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இறந்தவரின் உடையிலிருந்தும் நம்பரிலிருந்தும் அவர் சென்னையைச் சேர்ந்த கான்ஸ்டபிள் கந்தசாமி என்று தெரிய வருகிறது......"

"ஐயோ தம்பி!" என்று அலறினாள் முத்தம்மாள். கண்ணம்மாள் திடுக்கிட்டாள். சிங்காரியின் இதயம் வெடித்து விடும் போலிருந்தது. கையில் இருந்த பத்திரிகையை வீசி எறிந்துவிட்டு, தாங்க மாட்டாத துக்கத்துடன் தன் அறைக்கு ஓடிப் படுக்கையின் மீது விழுந்தாள்.

இதே சமயம் தோட்டத்தில் காலடிச் சத்தம் கேட்டது. கான்ஸ்டபிள் முருகேசன் அவசரமாக வந்தான். அவனது முகம் பேயறைந்தது போலிருந்தது. அவனைக் கண்டதும் முத்தம்மாள் கண்ணீர்ப் பெருக்கத்தோடு அழுதாள்.

"ஒரு மணி நேரத்துக்கு முன்னாலே தான் டெலிபோனில் சமாசாரம் வந்தது. இன்ஸ்பெக்டர் உடனே காரில் புறப்பட்டுப் போயிருக்கிறார். அவன் வேலூருக்கு எதற்காகப் போனான், அக்கா?" என்று முருகேசன் கேட்டான்.

கண்ணம்மாள் குற்றவாளியைப் போல் தவித்தாள். தன் வழக்கு விஷயமாகத் தங்கவேலுவைத் தேடிக் கொண்டு போன இடத்தில்தான் கந்தசாமிக்கு இந்தக் கதி நேர்ந்து விட்டது என்று நினைத்தாள் அவள்.

"'இரண்டு மூன்று நாளிலே வந்துடறேன் அக்கா' என்று சொல்லிவிட்டுப் போனானே, முருகேசா. இன்னிக்கோ நாளைக்கோ வந்துடுவான் என்று நினைச்சேன்! என்னென்ன கோட்டை கட்டினேனடா தம்பி!" என்று பிரலாபித்த முத்தம்மாளை முருகேசன் தேற்றினான்.

"என் மனசு சரியாவே இல்லே. இதோ நான் வேலூருக்குப் புறப் பட்டுக்கிட்டிருக்கேன். வீட்டண்டை போனேன். நீங்க இங்கே வந்திருப்பதாகக் கேள்விப்பட்டு உடனே ஓடி வந்தேன்!" என்றான் முருகேசன்.

"இந்தப் பாவியையும் கூட்டிக்கிட்டுப் போ, தம்பி!" என்று புறப்பட்டாள் முத்தம்மாள். "நானும் வருகிறேன், அக்கா!" என்று கூடவே கிளம்பினாள் கண்ணம்மாள். இவர்களது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த சிங்காரி கண்ணீரும் கம்பலையுமாகத் தன் அறையிலிருந்து எட்டிப் பார்த்தாள்.

"சின்னம்மா...என்னையும்..." என்று மேலே பேச மாட்டாமல் விம்மிய அவளை, "அப்பா தனியாக இருக்கிறாரம்மா. நீ இங்கேயே இரு. நாளைக்கே திரும்பிவிடுவோம்" என்று சமாதானப் படுத்தினாள் கண்ணம்மாள்.

மூவரும் வெளியே செல்வதை ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள் பேதைப் பெண் சிங்காரி. **(தொடரும்)**

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10 for the Proprietors Messrs Bharathan Publication Private Limited
Managing Editor: T. Sadasivam

லட்சோபலட்சம் ஜனங்கள்

'அனஸின்'

தலைவலி, ஜலதோஷம், ஜுரம் மற்றும் தசைவலிகளிலிருந்து

துரித நிவாரணமளிப்பதில் சிறந்தது என்பதை அறிவார்கள். ஏனெனில் அதில் **நான்கு மருந்துகள்** சேர்ந்துள்ளன.



ஒரு பாக்கட்டின் விலை 12 நயா பைசா

வைத்திய விஞ்ஞானிகள், 'அனஸின்' என்பது வலியை அகற்றும் தீவிர சக்திவாய்ந்த அநேக மருந்துகளின் சரியான விகிதாச்சார கலவை என்று கூறுகிறார்கள். அது மேல்சிறந்த ஒரே மருந்து கலவையைவிட அதி துரிதமாயும், அபாயமின்றியும் நிச்சயமாயும் நிவாரணமளிக்கிறது என்று ஞாபகத்தில் வையுங்கள்! 'அனஸின்' ஒரு டாக்டரின் குறிப்பிற்கு ஒப்பான விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலவையாகும். ஆகவே 'அனஸின்', தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைவலியிலிருந்து துரிதமாயும், முற்றிலும் குணமளிப்பதில் சிறந்தது. எப்பொழுதும் வீட்டில் 'அனஸின்' வைத்திருங்கள்.

GEOFFREY MANNERS & CO. PRIVATE LTD. REGISTERED USER

K. 67

No. M. 4392
Registered as a Newspaper in Ceylon